

தேவியின்
கண்மணி
கண்ணம்மாள் ஸ்ரீதர்
15-09-2021
ரூ.20
பொதிகைப் பூங்காற்றே!



பெண்மணி
எஸ்.பர்வின்பானு
செப்டம்பர் - 2021
நீ இரவு... நான் விண்மீன்!
-முழு நாவல்
ஆன்மிகம்:
நல்லருள் தரும் நாமம்!
சின்னத்திரை:
நல்லவர்களுடன் பழகப் பிடிக்கும்!
-கேப்ரெலா
கோவில்:
திருமணத்தடைநீக்கும் புளியரை சதாசிவமூர்த்தி லிஸ்கேஸ்வரர்!
சுற்றுலா:
இந்தியாவின் சர்க்கரைக் கிண்ணம் கோல்காப்பூர்!
இசை:
நாட்டியம், சங்கீதத்தில் மூன்று தலைமுறை!
-ஜெயஸ்ரீ நாயர்
சுவையான மூலிகை வகை தொக்குகள்!
ரூ.1000/- பரிசு அறிவுத்திறன் போட்டி
விலை ரூ.28/-



# என்னை வழிநடத்தும் நம்பிக்கை!

–சமந்தா

திருமணத்திற்கு பிறகும் இளம் ஹீரோக்களுடன் ஜோடி போட்டு நடிக்கும் சமந்தா, சூப்பர் டீலக்ஸ், சர்ச்சையைக் கிளப்பிய 'பேமிலி மேன் 2' இந்தி வெப் சீரிஸ்களில் படுகவர்ச்சியாக நடித்து ரசிகர்களை திக்குமுக்காட வைத்தார். குறிப்பாக 'பேமிலிமேன் 2' சீரிஸ் வெளிவந்த பிறகு சமந்தாவுக்கும், அவரது கணவருக்கும் சண்டை என்று சோஷியல் மீடியாவில் பெரிய காஸிப் கிளம்பியது. இந்நிலையில் அவருடன் கியூட்டான உரையாடல்.

**இ உங்க டுவிட்டர் கணக்கில் கணவரின் குடும்பத்து பெயரான அக்கினேனியை டெலிட் பண்ணிட்டீங்க... ஏன்?**

தேவையில்லாத வதந்திகள் பரவிட்டிருக்கு. பொதுவா நான் அந்த மாதிரி காஸிப்ஸ் எதையும் கண்டுக்குறது இல்ல. என்னைப் பத்தி மக்கள் பேசும் போது அதைப் பத்தி நான் பேச மாட்டேன். எப்போ எனக்கு வதந்திகளுக்கு பதில் கொடுக்கணும்'னு தோணுதோ அப்போ தான் அதைப் பத்தி பேசுவேன். இப்போதைக்கு கோவாவில் ஒரு பண்ணை வீடு கட்டிட்டு இருக்கோம். அடுத்த வருஷம் சம்மரில் அந்த வீடு ரெடியாகும்'னு சொல்லியிருக்காங்க. வேற எதைப் பத்தியும் நான் யோசிக்கல. ( கடைசிவரை டெலிட் பண்ணதுக்கு காரணம் சொல்லவே இல்லையே?)



சகுந்தலம்...

**இ சமீபத்தில் மெல்போர்ன் நகரில் நடந்த விழாவில் அவார்டு வாங்கியிருக்கீங்களே?**

வெப் சீரிஸ்'க்காக முதல்முறையா அவார்டு வாங்கினேன். புதுசா ஒரு களத்தில் பயணிச்சு, அதுக்காக விருதும் வாங்கினது எதிர்பாராதது. அது வொர்க்



அவுட் ஆனதில் சந்தோஷம்.

**இ பேமிலி மேன் 2-வில் சர்ச்சையான அந்த கேரக்டரை எப்படி ஓகே பண்ணீங்க?**

பொதுவா ஒரு நடிகையா எனக்கு பேராசை அதிகம். என் திறமையை நிரூபிக்கக் கூடிய கேரக்டர்களில் நடிக்க விரும்புவேன். பேமிலி மேன் 2 சீரிஸ் ரிலீசான பிறகு இதுவரை நான் அதை பார்க்கல. நான் நடிச்சதை நானே பார்க்கும் போது கொஞ்சம் அசவுகரியாக இருக்கும், அதான்.

**இ திடீர்னு, சகுந்தலையா நடிக்க ரெடி ஆகிட்டீங்களே?**

நான் டிஸ்னி படங்களை நிறைய பார்த்திருக்கேன். குறிப்பாக எனக்கு அனிமேஷன் படங்கள்'னா ரொம்ப இஷ்டம். அதுல வர்ற இளவரசி, இளவரசன், மாய உலகம், மந்திரக் கோட்டை இதெல்லாம் பார்க்கும் போதே அவ்ளோ அழகா இருக்கும். மனிதர்கள் வெளிப்படுத்துற உணர்ச்சிகளை விட ஒரு அனிமேஷன் கார்ட்டூன் கேரக்டர் அவ்ளோ தத்ரூபமா உணர்சிகளை வெளிக்காட்டும்.

நடிப்புல எனக்கு யார் ரோல் மாடல்'னு பலமுறை கேட்டிருக்காங்க.





உண்மையைச் சொல்லணும்'னா அனிமேஷன் கேரக்டர்களைத் தான் நான் பாலோ பண்றேன் (சிரிக்கிறார்). அந்த மாதிரி ஒரு கனவு வேடம் தான் 'சகுந்தலம்' படத்தில் எனக்கு அமைஞ்சிருக்கு. என்னை ஒரு இளவரசி போல உணர்ந்து நடிக்கப் போறேன்.

**இ சினிமாத்துறையில் 11 வருஷம் கடந்துட்டீங்க, இன்னும் என்ன சாதிக்கணும்'னு ஆசைப்படுறீங்க?**

பெண் இயக்குனர்கள், பெண்ணிய தொழில்நுட்பக் கலைஞர்கள் கூட வொர்க் பண்ணனும்'னு ஆசைப்படுறேன். வாய்ப்பு கொடுத்தா நிறைய பெண் கலைஞர்களை நாம அடையாளம் காண முடியும்.

இந்த காலத்துல நமக்கு நாமே உதவி செஞ்சிக்கிட்டா தான் உண்டு. சரியான கதைகளை தேர்வு செஞ்சு நடிக்குறது ரொம்ப முக்கியம். பெண் இயக்குனர், எழுத்தாளர்கள் நல்ல கதையோட என்கிட்டே வருவாங்கன்னு நம்புறேன். அப்படி வொர்க் பண்ற படங்கள் கமர்ஷியலா கிளிக் ஆகி பாக்ஸ் ஆபீஸ் ஹிட் அடிக்கணும், அது தான்

முக்கியம்.

**இ நீங்க நடிப்புக்கு கொஞ்ச நாள் லீவு விடுறதா கேள்விப்பட்டோமே?**

இன்னும் அதைப் பத்தி நான் முடிவு பண்ணல. 11 வருசமா இடைவெளியே இல்லாம நடிச்சிட்டிருக்கேன். எந்த நடிகருக்கும் ஒரு சின்ன இடைவெளி அவசியம். அது இல்லாம தொடர்ச்சியா வொர்க் பண்ணா என்ன ஆகுமோ'ங்கிற ஒருவித பயம் எனக்கு உண்டு.

**இ உங்க சோஷியல் மீடியா ஸ்டேடசில் நம்பிக்கை பத்தி நிறைய போஸ்ட் போட்டிருக்கீங்க?**

என்னோட வாழ்க்கையே ஒரு விசித்திரமான கதை தான். சாதாரண ஒரு பின்புலத்தில் இருந்து சினிமாவுக்கு வந்தேன். நடிப்புத்துறையில் எனக்கு காட்பாதர்'லாம் யாரும் இல்ல. நானே எனக்கான படங்களை தேர்வு செஞ்சு நடிச்சேன். எதை பண்ணனும், பண்ணக் கூடாதுன்னு முடிவெடுக்கக் கூடிய கட்ஸ் எனக்கு இருந்தது. அதுக்கு எனக்குள்ள இருக்குற அசைக்க முடியாத நம்பிக்கை தான் காரணம். அந்த நம்பிக்கை தான் ஒவ்வொரு விஷயத்திலும் என்னை வழிநடத்திட்டு இருக்கு. நடிகையா மட்டும் இல்ல, ஒட்டுமொத்தமா என் வாழ்க்கை நம்பிக்கையை மையமா வச்சுத் தான் இயங்குது.

**இ பெரிய திரையுலக பின்னணி கொண்ட குடும்பத்து மருமகள் நீங்க, வீட்டுலயும் சினிமா பேச்சு தானா?**

நிச்சயமா கிடையாது, சினிமாவைத் தவிர மத்ததெல்லாம் பேசுவோம். எல்லாரையும் போல நாங்களும் ஒரு சாதாரண குடும்ப வாழ்க்கைக்குத் தான் ஆசைப்படுறோம். (புன்னகையுடன் பேட்டியை முடிக்கிறார்).

–தவா.



# வலையில் வசீகரித்தது

மயக்குநன்@LAKSHMANAN_KL
எல்லைகளில் சவால்கள் நிறைந்திருந்தாலும், நாட்டின் பாதுகாப்பில் சமரசம் இல்லை!- அமைச்சர் ராஜ்நாத் சிங். #உ.பி., பஞ்சாப் தேர்தல்களுக்குதான் இன்னும் நாள் இருக்கே..?!



செங்காந்தள்@kumarfaculty
ஸ்மார்ட் போன்கள் வந்த பிறகு மனிதர்களின் விழித்திருக்கும் நேரத்தின் வேலிடிட்டி அதிகமாகி விட்டது...!!!

கோழியின் கிறுக்கல்!!@Kozhiyaar
இன்பச் சுற்றுலா முடிந்து திரும்பும் குழந்தையின் மனநிலையிலேயே திங்களன்று வேலைக்கு தயாராகிறது நம் மனம்!!

மயக்குநன்@LAKSHMANAN_KL
சட்டவிரோதமாக பொருத்திய மின்வேலியில் சிக்கி, 6 ஆண்டுகளில் 474 யானைகள் உயிரிழப்பு!- ஆர்டிஐ மனுவுக்கு மத்திய அரசு பதில். #மனிதனை விட கொடிய விலங்கு உலகத்தில் எதுவும் கிடையாது போல..?!

amudu@amuduarattai
நன்றாக வாயை மூடிக் கொள்வதும், இரண்டு மீட்டர் இடைவெளி விடுவதும், கொரோனாவிலிருந்து மட்டுமல்ல, கோபமாக இருக்கும் மனைவியிடமிருந்தும் நம்மை பாதுகாக்கும்.



ஜோக்கர்...@ItsJokker
குழந்தை புருஷன் ஜாடையில
இருக்கிறது பிடிக்கல, அதை
அடிச்சாதான் கல்யாணம்
பண்ணுவேன்னு சொன்னானாம்
கள்ளக்காதலன்.ஏண்டா அவனுக்கு
பிறந்தது அவன மாதிரிதானேடா
இருக்கும்?! கள்ளக்காதலா
இருந்தாலும் ஒரு நியாயம்
வேண்டாமாடா..



மயக்குநன்@LAKSMANAN_KL
தேர்தல் கூட்டணி என்பது
'அந்த நிமிடத்தில்' அமையும்
கூட்டணியாக இருக்கும்!-கமல்.
ஹூம்... சட்டப்பேரவைத்
தேர்தலில் தான் 'நொந்த'
நிமிடத்தில் அமைஞ்ச கூட்டணியா
போயிடுச்சு..!

Dove of peace@Subbumeil
கெட்டவனை மேலும்
கெட்டவனாக்கும் இந்த
சமூகம் தான் நல்லவனையும்
மேலும் நல்லவனாகவே இருக்க
விடுவதில்லை..

நெல்லை அண்ணாச்சி@drkvm
சிங்கப்பூரின் தந்தை லீ குவான்
யூவை விட சிறந்த ஆட்சியை
அன்புமணி தருவார் - ராமதாஸ்
# மருத்துவர் அய்யாவிடம்...
பிடித்ததே...அவருடைய sense of
humor தான் ...!!!

மயக்குநன்@LAKSHMANAN_KL
பொள்ளாச்சி பகுதியில் 17 வயது
சிறுவனை கட்டாயப்படுத்தி
திருமணம் செய்த 19 வயது
இளம்பெண் போக்சோ சட்டத்தில்
கைது!-
செய்தி.



#90ஸ்
கிட்ஸை
வயிறெரிய
வைக்கிறதே
வேலையா
போச்சு..!

பாலசுப்ரமணி@balasubramni1
அப்போது பிரபலங்களிடம்
ஆசையாய் வாங்கிய
'ஆட்டோகிராப்' கொடுத்த
மகிழ்ச்சியை இப்போது
பிரபலங்களுடன் எடுக்கும்
'செல்ஃபிகள்' தருவதில்லை.

இதயவன்@itz_idhayavan
பொருளாதார மீட்சிக்கான
அறிகுறிகள் தென்படுகின்றன -
ரிசர்வ் வங்கி ஆளுநர் சக்கிகாந்த
தாஸ்
#ஆமா ஆமா கேஸ் விலை 25ரூ
கூட்டி இருக்காங்களே?!



**Mannar & company™ @RajaAnvar_Offic**

சேன்ச் இல்லங்கறதுல மட்டும் எந்த சேன்ச்சும் இல்ல,பஸ் கண்டக்டர்களிடம்!



**இரா.மூவன்வேந்தன் @Dharanishraja**

சம்ஸ்கிருதம் அறிவை வளர்க்கவும்; தேசிய ஒருமைப்பாட்டை வலுப்படுத்தவும் உதவுகிறது: மன் கி பாத் நிகழ்ச்சியில் பிரதமர் மோடி..# உலகத்தில இருக்கும் 6000 மொழிகள்ல வளராத அறிவு தம்மாதுண்டு சமஸ்கிருதல எப்படிங்க..... வளந்துடும்



Insta @ iswarya.menon

கண்ணோடு கண்... ஐஸ்வர்யா மேனன்



**மயக்குநன் @LAKSHMANAN_KL**

திராவிட மண்ணில் வேறு கட்சிகள் நுழைய முடியாது!- முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன். # ஆமாமா... தோளில் சுமந்துட்டுப் போவீங்க..!

**Mannar & company™ @RajaAnvar_Offic**

ஹெட்போனை கழட்டிட்டு பேசுறது தான் இந்த தலைமுறையினரின் ஆகச் சிறந்த மரியாதையாக இருக்கிறது!



**கிரீஸ் டப்பாவை எப்படி உதைச்ச..? @GreeseDabba2**

ஒருவரின் அனுமதி இல்லாமல் படம் பிடிப்பது சமூக குற்றம், அநாகரீகம்.-சீமான் # ஒரு வீடியோவால பாதிக்கப்பட்டவனோட மனசு இன்னொரு வீடியோவால பாதிக்கப்படவனுக்கு தான் நல்லா புரியும்னு பெரியவங்க சும்மாவா சொன்னாங்க..!



சரவணன். @saravankavi

வலிமை என்ற பெயரில் சிமெண்ட் அறிமுகம் - அமைச்சர் தங்கம் தென்னரசு அறிவிப்பு! #அப்படியே பீஸ்ட் ன்னு விஜய் படத்தின் பெயரில் எப்போ சிமெண்ட் அறிமுகம் செய்வாங்கன்னு கேளு கேளு...

மயக்குநன்@LAKSHMANAN_KL sarvanan

நமது கட்சி இப்போது 'உருமாறிய' மக்கள் நீதி மய்யமாக இருக்கிறது!- கமல். # இனியாவது கொரோனா மாதிரி மக்களிடம் வேகமா பரவுதான்னு பார்ப்போம்..!

ச ப் பா ணி@manipmp

முறைத்துப் பார்த்தாலே ஒருத்தரை பழிவாங்கி விட்டதாக நினைத்து கொள்கின்றனர் வாகன ஓட்டிகள்.!

amudu@amuduarattai

தவ வாழ்க்கை என்பது யாதெனில், ஆன்ராய்டு மொபைல் இருந்தும், அதை நோண்டாமல், சும்மா இருப்பது.

செல்லக்குழந்தை @selva_twitz

'புதையல்' மண்ணில் கிடைப்பது அதிஷ்டம் 'புரிதலோடு' மனிதர்கள் கிடைப்பது பேரதிஷ்டம்

Mannar & company™ @RajaAnvar_Offic

சீரியல் பார்க்கும் மனைவியின் அலப்பறைகளுக்கு கொஞ்சமும் குறைவில்லாதது, வெப் சீரீஸ் பார்க்கும் கணவனின் அட்டகாசங்கள்!

கிரீஸ் டப்பாவை எப்படி உதைச்ச..?@GreeseDabba2

Window shopping னா நியாயப்படி window வழியா பார்க்க மட்டும் தானே செய்யனும்? அதென்ன கடைக்குள்ள போயி பார்த்துட்டு எதுவும் வாங்காம வர்றது? எப்படியும் மனசு மாறி எதாவது வாங்குவாங்கன்னு யோசிச்ச கிரிமனல் மைனட் கடைக்காரன் கண்டுபுடிச்ச கான்செப்டா தான் இருக்கனும்..




தொகுப்பு: ஊர்க்காத்தான்

# அரசியல்ல... இது சாதாரணமப்பா



டெல்லி முதல்வர் அரவிந்த் கேஜ்ரிவால், விபாசனா எனும் தியானத்தில் 10 நாட்கள் பங்கேற்பதற்காக ராஜஸ்தானில் உள்ள ஜெய்பூருக்குச் சென்றார். விபாசனா தியான முறை புத்த மதம் சார்ந்ததாகும். அலைபாயும் மனத்தை செம்மைப்படுத்த விபாசனா தியானம் உதவுகிறது.

அரவிந்த் கேஜ்ரிவால் ஜெய்பூரில் தங்கியிருந்த போது டெல்லி முதல்வர் பொறுப்பை துணை முதல்வர் மனீஷ் சிசோடியா கவனித்து கொண்டார்.

---

அரியானாவில் பா.ஜ.க - ஜனநாயக ஜனதா கட்சி கூட்டணி ஆட்சி நடைபெற்று வருகிறது. பா.ஜ.க.வைச் சேர்ந்த மனோகர் லால் கட்டார் முதல்வராகவும். ஜனநாயக ஜனதா கட்சியைச் சேர்ந்த துஷ்யந்த் சவுதாலா துணை முதல்வராகவும் உள்ளனர். கர்னாலில் விவசாயிகள் மீது போலீசார் தடியடி நடத்தியதை துணை முதல்வர் துஷ்யந்த் சவுதாலா சாடியுள்ளார். இதையடுத்து கட்டாருக்கும் சவுதாலாவுக்கும் இடையே உள்ள உரசல் உக்கிரமடைந்துள்ளது.

---

முன்னாள் பிரதமர் பி.வி.நரசிம்ம ராவின் மகள் சுரபி வாணி தேவி, தெலுங்கானா சட்டமேலவைக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார்.



மெஹபூப் நகர் -ரெங்கா -ரெட்டி -ஐதராபாத் பட்டதாரிகள் தொகுதியில் தெலுங்கு தேசம் வேட்பாளராக போட்டியிட்ட அவர் பா.ஜ.க. வேட்பாளர் ராம்சந்தர் ராவை 36,580 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்தார்.

**–விறலேந்தல்**



# கல்யாண வலை....

# கதற விடும் மோசடி !

ஆயிரம் காலத்து பயிரான திருமணம் நடத்த ஆயிரம் பொய் சொல்லலாம் என்றார்கள். அது நம்மாட்களுக்கு வசதியாக போய்விட்டது. பொய்யால் தோரணம் கட்டி, போலியாக மணவாழ்க்கை அமைத்து, நகை, பொருட்களை அபகரித்துக்கொண்டு பறந்துவிடுவது இப்போது அதிகரித்து வருகிறது. அதிலும், இணையம் மூலம் இணை தேடும்போது ஏமாற்றுவதற்காகவே பலர் தயாராக காத்திருக்கின்றனர்.



பேக்கரி ஆசை காட்டி ஒரு வீரபாகுவை மனைவியோடு சேர்ந்து ஏமாற்றி மோசடி செய்த சம்பவம் திண்டுக்கல்லில் நடந்துள்ளது.

திண்டுக்கல் மாவட்டம் செம்பட்டியைச் சேர்ந்த கார்த்திக் ராஜா (25)வுக்கு திருமணமாகிஇரு குழந்தைகளும் உள்ளனர். கார்த்திக் ராஜா தான் சேமித்த பணத்தைக் கொண்டு 3 பேருடன் கூட்டாக தேனி பகுதியில் பேக்கரி கடை ஒன்றை நடத்தி வருகிறார்.

இந்நிலையில், கடந்த வருடம் டிசம்பர் மாதம் இன்ஸ்டாகிராமில் பல்லடம் பகுதியை சேர்ந்த சத்யா என்ற பெண்ணுடன் இவருக்கு தொடர்பு ஏற்பட்டுள்ளது. இன்ஸ்டாகிராம் மூலம் இன்ஸ்டண்ட் காதலை ஏற்படுத்திய நிலையில், சத்யாவின் சகோதரர் என்று டேவிட் பிரசாந்த் அறிமுகமாகியிருக்கிறார். தங்களது பகுதியில் பேக்கரி ஒன்று குத்தகைக்கு இருப்பதாகவும் அதனை


கார்த்திக் ராஜா


இருவரும் சேர்ந்து எடுத்து நடத்தினால் லட்சக்கணக்கில் லாபம் கொட்டும் என்று டேவிட் கூறியுள்ளார். பேக்கரியோடு தனது தங்கையையும் தாரை வார்ப்பதாக ஆசை காட்டியுள்ளார் டேவிட் பிரசாந்த்.

அதை நம்பி கடந்த சில மாதங்களாக டேவிட் பிரசாந்தின் வங்கிக் கணக்கிற்கு ரூ 7 லட்சத்து 65 ஆயிரம் வரை பணத்தை அனுப்பி வைத்துள்ளார். பலமுறை பணம் அனுப்பிய நிலையில்... எந்த ஒரு ஆவணங்களும் கொடுக்கப்படாததால் சந்தேகமடைந்த கார்த்திக் ராஜா, டேவிட் பிரசாந்துக்கு சொல்லாமல் பல்லடம் சென்று பார்த்தபோது அவர்கள் சொன்ன கடையில் வியாபாரம் நடைபெற்று வந்துள்ளது கண்டு அதிர்ச்சியில் உறைந்து போனார். இதுகுறித்து டேவிட்டிடம் கார்த்திக் ராஜா விசாரித்தபோது, ‘கவலைப்பட வேண்டாம்.

மேலும் ஒரு 3 லட்சம் ரூபாய் கொடுத்தால் கடை நமக்கே சொந்தமாகிவிடும்’ என்று ஆசை வார்த்தை கூறி அனுப்பியுள்ளார்.

அடுத்தடுத்த நாட்களில்

கார்த்திக் ராஜா தொடர்பு கொள்ள முயன்றும் முடியாமல் போனதால் நேரடியாக பல்லடம் வந்து பார்த்துள்ளார். அப்போது சத்யா, டேவிட் பிரசாந்த் ஆகிய இருவரும் இருந்த வீடு பூட்டி இருந்துள்ளது. அருகில் இருந்தவர்களிடம் விசாரித்த போது அவர்கள் இருவரும் அண்ணன் தங்கை அல்ல, கணவன் மனைவி என்று தெரியவந்தது.


கீதா

இதுகுறித்து கார்த்திக் ராஜாவின் மனைவி கூறுகையில், 'என் கணவருக்கும் சத்யாவுக்கு முகநூல் நட்பு இருப்பது எனக்கு தெரியும். இந்த நட்பின் அடிப்படையில் பேக்கரி கடையை வாங்க பணம் கொடுத்தோம். தற்போது பேக்கரி வேண்டாம், கொடுத்த பணத்தை திருப்பி கொடுங்கள் என கேட்டதற்கு எனது கணவரால் சத்யா கர்ப்பமாக இருப்பதாகவும் அதற்கு அந்த பணம் சரியாகிவிட்டதாகவும் டேவிட் கூறுகிறார். ஆனால் ச த்யாவை எனது கணவர் நேரில் கூட பார்த்ததில்லை'' என்றார்.

இப்படி கணவருக்கு வக்காலத்து வாங்கும் மனைவி இருக்கும் வரை பல பெண்களை காதலித்து ஏமாறலாம் போலும்.

மனைவியை சகோதரியாக காட்டி டேவிட் மோசடி செய்ததை போல, தூத்துக்குடியில் திருமணமான பெண், தன்னை கன்னி என்று கூறி கல்யாண வலை விரித்து பலரை ஏமாற்றியுள்ளார்.

ஆந்திர மாநிலம், செகுந்தராபாத் பகுதியைச் சேர்ந்த மென்பொருள் பொறியாளரான வாசுதேவன் (34) இணையதளம் ஒன்றில் தனக்கு பெண் தேடியுள்ளார். அதில் அறிமுகமான திவ்யா (28) என்பவரை கைபேசியில் தொடர்புகொண்டுள்ளார். பல நாட்களாக இருவரும் பேசிவந்த நிலையில், அந்தப் பெண் தனது தோழிக்கு அவசரமாக பணம் தேவைப்படுகிறது எனக் கூறி 2 முறை தலா ரூ. 40 ஆயிரம் பெற்றுள்ளார்.

இடையே, அந்தப் பெண் அளித்த தூத்துக்குடி முகவரிக்குச் சென்று பார்த்தபோது... திவ்யா என்ற பெயரில் யாரும் இல்லையென




அறிந்த வாசுதேவன், தான் ஏமாற்றப்பட்டதை உணர்ந்து தூத்துக்குடி மாவட்ட காவல் கண்காணிப்பாளாரிடம் புகார் அளித்தார்.

போலீசார் , வாசுதேவன் பணம் அனுப்பிய வங்கிக் கணக்கு முகவரியை பார்த்ததில், தூத்துக்குடி மாவட்டம், நாலுமாவடியை சேர்ந்த தங்கவேலு மனைவி கீதா (36) பெயரில் இருப்பது தெரியவந்தது. விசாரணையில், அவர் திவ்யா என்ற பெயரில் திருமண இணையதளத்தில் வேறொரு பெண்ணின் படத்தைப் பதிவேற்றி ஏமாற்றி பணமோசடி செய்துள்ளார். வாசுதேவனை போல 20க்கும் மேற்பட்டோரை அவர் ஏமாற்றியுள்ளார்.

இதாவது பரவாயில்லை. பணம் சம்பாதிக்க வேறு வழியின்றி... தாலி கட்டிய தனது மனைவியை, கணவனே வேறொருவருக்குத் திருமணம் செய்து வைத்து மோசடியில் ஈடுபட்ட சம்பவமும் அரங்கேறியுள்ளது.

ராஜஸ்தான் மாநிலம் கோட்டா என்னும் பகுதியைச் சேர்ந்த சோனு - கோமல் இருவரும் காதலித்து கடந்த சில ஆண்டு களுக்கு முன்பு திருமணம் செய்துள்ளனர். கடந்த 2 ஆண்டு களாக போதிய வருமானம் இல்லாமல் இருவரும் கஷ்டப்பட்டனர்.

இந்நிலையில் ,சுமன் என்ற திருமண தரகருடன் சேர்ந்து, மனைவிகோமலை தனது, தங்கை என்று சோனு அறிமுகம் செய்துகொண்டு, ரவி என்பவருக்கு திருமணம் பேசிமுடித்தார். முதலிரவு முடிந்து காலையில் கண்விழித்த ரவி, மனைவி கோமலை காணாமல் தவித்தார். கோமலுக்கு மாப்பிள்ளை வீட்டார் சார்பில் போடப்பட்ட நகைகள் மற்றும் பல லட்சம் ரூபாய் பணம் , பொருட்கள் மாயமாகியிருந்தன. போலீஸ் விசாரணையில், சோனு - கோமல் தம்பதிகள் திருமண தரகருடன் சேர்ந்து மோசடியில் ஈடுபட்டது கண்டுபிடிக்கப்பட்டது.

ஆந்திரா - திருப்பதியில் தனியார் நிறுவனத்தில் வேலை பார்த்த சுகாசினி(26)க்கும் அதே நிறுவனத்தில் மார்க்கெட்டிங் பிரிவில் வேலை செய்து வந்த சுனிலுக்கு இவருக்கும் இடையே

**திண்டுக்கல்லை சேர்ந்த இரு சக்கர வாகன மெக்கானிக் செல்லப்பாண்டி. மேட்ரிமோனியல் மூலம் பெண் தேடியபோது புதுச்சேரி நேரு தெருவைச் சேர்ந்த ஷோபிகா என்ற பெண் பிடித்துப்போக, திருமணப் பேச்சு நடத்தியுள்ளார்.**



**வரதட்சனை எதுவும் கேட்காமல், ஒன்றரை பவுன் தங்க சங்கிலி, பட்டுப்புடவை, 25000 ரூபாய் ரொக்கம் ஆகியவற்றை ஷோபிகாவிடம் கொடுத்து நிச்சயதார்த்தம் செய்துள்ளார். அதன்பிறகு ஷோபிகாவிடமிருந்து எவ்விதமான தகவலும் வராததால் செல்லப்பாண்டி ஷோபிகாவின் வீட்டிற்கு சென்றுள்ளார்.**


**அங்கு , 'வீடு வாடகைக்கு விடப்படும்' எனப் பலகை இருந்துள்ளது. போலீஸ் விசாரணையில் 40 வயதான ஷோபிகா 'போட்டோஷாப்' செய்யப்பட்ட போட்டோ மூலம் தன்னை இளம் பெண்ணாக காட்டிக் கொண்டு பல மாப்பிள்ளைகளை வலையில் வீழ்த்தியது தெரியவந்தது.**

பழக்கம் ஏற்பட்டு முறைப்படி திருமணம் செய்து கொண்டனர்.

காதலிக்கும் போது சுனிலிடம் இரண்டு லட்சம் ரூபாய் வாங்கியிருந்த சுகாசினி, திருமணத்திற்குப் பின்னர் சுனிலுக்கு தெரியாமல் சுனிலின் தந்தையிடம், தன்னை வளர்த்த தாய் மாமா அவரது மருத்துவ செலவுக்கு என்று இரண்டு லட்சம் வாங்கியுள்ளார். 'எனக்கு தெரியாமல் ஏன் அப்பாவிடம் பணம் வாங்கினாய்'... என்று கேட்டு சுனில் சண்டை போட, சுகாசினி வீட்டில் இருந்த பணம், நகை களை எடுத்து கொண்டு எஸ்கேப் ஆகிவிட்டார்.

அவரின் முகவரியை தேடிச் சென்றபோது சுனிலுக்கு அதிர்ச்சி. ஏற்கனவே நெல்லூர் மாவட்டத்தைச் சேர்ந்த ஒருவருடன் திருமணம் ஆகி அவருக்கு ஒரு பெண் குழந்தை இருப்பது தெரியவந்துள்ளது. இதையடுத்து தான் ஏமாற்றப்பட்டு விட்டதாக உணர்ந்த சுனில், அலிபிரி காவல் நிலையத்திற்கு சென்று புகார் அளித்தார். அப்போது தான் அதே பெண்ணின் பெயரில் மனைவியை காணவில்லை என்று வினய் என்பவர் ஒரு புகார் அளித்திருப்பது தெரியவந்துள்ளது.

மேட்ரிமோனி மூலம் மாப்பிள்ளை தேடும் பெண்களை டார்கெட் செய்து, பெண் கேட்பது போல் சென்று நகை பணம் பறித்து விட்டு, அந்தப் பெண்களிடம் உல்லாசமாக இருந்துவிட்டால்... மோசடியை வெளியே சொல்ல மாட்டார்கள் என்ற நம்பிக்கையில் திருச்சி, கோவை, செங்கல்பட்டு, சென்னை, பாண்டிச்சேரி உள்ளிட்ட ஊர்களில் 50க்கும் மேற்பட்ட பெண்களை ஏமாற்றியிருக்கிறார் பெங்களூரு உளவுத்துறை அதிகாரியின் மகன் சூர்யா.


சுகாசினி

பொறியியல் பட்டதாரியான சூர்யா, சென்னையை அடுத்த கானாத்தூரைச் சேர்ந்த 24 வயது இளம் பெண்ணை பற்றி மேட்ரிமோனியல் இணையதளத்தில் பார்த்து நேரில் வீட்டுக்கு சென்றுள்ளார். தனது பெற்றோர் வெளிநாட்டில் இருப்பதாகவும் தான் மத்திய மனித உரிமை ஆணையத்தில் விசாரணை அதிகாரியாக இருப்பதாகவும் பெண் வீட்டாரிடம் பொய் சொல்லியிருக்கிறார். திருமணம் உறுதியானால் வெளிநாட்டிலிருந்து பெற்றோர் வந்துவிடுவார்கள் என்று சொன்னதை நம்பி குடும்பத்தாரும் இளம் பெண்ணும் திருமணத்துக்கு சம்மதித்துள்ளனர்.

தொடர்ந்து அந்த இளம்பெண்ணுடனும் குடும்பத்தினரிடமும் பேசி பழகி வந்திருக்கிறார். ஒரு கட்டத்தில் அந்த பெண்ணை மயக்கி தனியார் விடுதியில் உல்லாசம் அனுபவித்திருக்கிறார். அந்தப் பெண்ணுக்கே தெரியாமல் அதை வீடியோவும் எடுத்துள்ளார். பின்னர் அந்த குடும்பத்தினர் நிலம் வாங்குவதற்காக வைத்திருந்த 7 லட்சம் ரூபாய் பணத்தையும் சாதுரியமாக அபகரித்திருக்கிறார்.

சூர்யாவும் நடத்தையில் சந்தேகம் கொண்ட அந்த பெண் அவரிடம் கேட்டபோது, ' உல்லாசமாக இருந்ததை வீடியோ எடுத்து வைத்திருக்கிறேன்' என்று சொல்லி மிரட்டி இருக்கிறார். ஆனாலும் கானாத்தூர் போலீசில் இளம்பெண் புகார் அளித்திருக்கிறார். சூர்யாவின் செல்போன் சிக்னலை வைத்து தேடி கோவையில் உள்ள ஒரு தனியார் விடுதிக்கு போலீசார் சென்றுள்ளனர். அங்கே ஒரு இளம் பெண்ணுடன் உல்லாசமாக இருந்திருக்கிறார்

சூர்யா.

**பெ**ங்களூரு ஒயிட்பீல்டு பகுதியில் வசித்து வரும் 30 வயது இளம்பெண் ஒருவர், சமீபத்தில் ஒயிட்பீல்டு பொருளாதார குற்றப்பிரிவு போலீஸ் நிலையத்தில்...


சூர்யா

''திருமண இணையதளத்தில் எனது விபரங்களை அறிந்து என்னிடம் பேசிய ஒருவர் திருமணம் செய்து கொள்வதாக கூறி என்னிடம் ரூ.7.70 லட்சம் வாங்கி மோசடி செய்து விட்டார். அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என்று புகார்கூறி இருந்தார்.

போலீஸ் விசாரணையில் அப்பெண்ணை ஏமாற்றியவர், மைசூரு மாவட்டம் பிரியப்பட்டணா தாலுகா பைலகுப்பே கிராமத்தை சேர்ந்த சித்தார்த் (33) என்பது தெரியவந்தது. இவர்பெண்களிடம் தான் மைசூரு மன்னர் குடும்பத்தை சேர்ந்தவன் என்றும், சாப்ட்வேர் என்ஜினீயராக பணியாற்றி வருவதாகவும் கூறுவார். திருமண ஆசை காட்டி பேசிவிட்டு , ஏதாவது காரணங்களை சொல்லி லட்சக்கணக்கில் பணம் பெற்று மோசடி செய்வார். இதுவரை கல்லூரி பேராசிரியை உள்பட ஏராளமான பெண்களிடம் ரூ.42 லட்சத்தை சித்தார்த் மோசடி செய்துள்ளார்.

**தி**ருமண மோசடியில் திருமண தகவல் நிலையம் முக்கிய இடம் வகிக்கிறது, பதிவுக்கட்டணத்தோடு, ஜாதகத்துக்கு நூறு, இருநூறு என்று வசூலிக்கிறது. எப்போதோ பதிந்த, மணம் முடிந்த வரன்கள் ஜாதகங்களையும் கொடுத்து கல்லா கட்டுகின்றனர். மணமக்கள் விபரங்களை ஆராயாமல் அப்படியே பதிவு செய்து வெளியிடுகின்றன.

திருமண மோசடி செய்வோரும் சில வழிமுறைகளை கையாளுகிறார்கள். இவர்கள் அனுப்பும் மணமகன், மணமகள் படம் பெரும்பாலும், அதிக அறிமுகம் இல்லாத மாடல்கள், செல்ஃபி மோகத்தில் படமெடுத்து தள்ளும் குடும்ப பெண்களின் படங்களாகும். தங்கள் சுய விவரக் குறிப்பில் டாக்டர், வக்கீல், தொழிலதிபர் என்று பிடித்த தொழில்களை போட்டு அறிமுகமாகிறார்கள். போலி ஐடியில் வரும் அவர்களை யார் தான் கண்டுபிடிக்க முடியும்?

மணமகள் தேவை என்று விளம்பரப்படுத்தப்படும்

**சென்னையைச் சேர்ந்த விவாகரத்தான பெண் ஒருவர், மறுமணத்திற்காக திருமண இணையதளம் ஒன்றில் பதிவு செய்து வைத்திருந்தார். இதனை பார்த்து, ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த 45 வயதான மனோகரன் என்பவர், அந்த பெண்ணை தொடர்பு கொண்டு பேசியுள்ளார். தமக்கு திருமணமாகி விவாகரத்தாகி விட்டது என்றும், தாம் பைப் லைன் காண்ட்ராக்டராக பணியாற்றி வருவதாகவும் தெரிவித்துள்ளார். மாதம் 3 லட்சம் ரூபாய் வருமானம் வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.**

**இதையடுத்து, மனோகரனை திருமணம் செய்து கொள்ள அந்த பெண் முடிவு செய்த நிலையில், தமக்கு விபத்து நடந்துள்ளதாகவும் சிகிச்சைக்காக பணம் தேவை என்றும் கூறி, சிறுக, சிறுக 10 லட்சம் ரூபாய் வரை அந்த பெண்ணிடம் மனோகரன் வாங்கிக் கொண்டு ஏமாற்றி விட்டதாகக் கூறப்படுகிறது. பின்னர், அந்த பெண், விசாரித்த போது, மனோகரன் ஏற்கனவே திருமணமாகி மனைவி குழந்தைகளுடன் வசித்து வந்தது தெரியவந்தது.**





இணையதளங்களை அடிக்கடி நோட்டமிட்டு, பெரும்பலும், வயது கூடி திருமணமாகாமல் இருப்பவர்கள், விதவைகளிடம் தொடர்பு கொண்டு அவர்களது விருப்பத்தை தெரிந்து கொள்கின்றனர். அவர்களிடம் அழகாகவும், ஆர்வத்துக்கேற்ப ஆபாசமாகவும் பேச்சு கொடுத்து ஆசையை தூண்டுகின்றனர். பின்னர் வாட்ஸ்-அப், பேஸ்புக் போன்றவற்றில் பதிவிடப்பட்டு இருக்கும் அழகான குடும்ப பெண்களின் படங்களை தேர்வு செய்து வைத்து, அதில் மிகவும் அழகாக இருக்கும் பெண்களின் புகைப்படங்களை வாட்ஸ்- அப் மூலம் அனுப்பி ஏமாற்றுகின்றனர். கானல் நீரான இணைய தகவல்கள் மூலம் தங்கள் ஆர்வத் தாகத்தை தீர்த்துக்கொள்வோர் எளிதில் ஏமாறுகிறார்கள். கண்ணால் காண்பதும்பொய், காதால் கேட்பதும் பொய் என்ற சந்தேக மனப்பான்மையுடன் தான் இப்போதெல்லாம் வரன்களை தேட வேண்டும் போலும்.

**–பரிதிபாலன்**





நல்லெண்ணெய், தேங்காய் எண்ணெய், பசு நெய், கடலை எண்ணெய் உள்ளிட்டவை உடல் நலத்துக்கு உகந்தவை. ஆனால் சொந்தக் காசில் சூனியம் வைப்பதை நினைவுபடுத்தும் வகையில் பாமாயிலின் பயன்பாடு வலுத்து வருகிறது. இதை அரசும் ஊக்குவித்து வருகிறது.

# விவசாயிகளை அழிக்கும்



# பாமாயில் மரம்!









பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் மத்திய அமைச்சரவைக் கூட்டம் ஆகஸ்ட் மாதம் 18-ந் தேதி நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளை வேளாண்மைத் துறை அமைச்சர் நரேந்திர சிங் தோமர், விளையாட்டுத்துறை அமைச்சர் அனுராக் தாக்குர் ஆகியோர் எடுத்துரைத்தனர்.

''அடுத்த 5 ஆண்டுகளில் பாமாயில் உற்பத்தியை ஊக்குவிப்பதற்கும் வெளிநாடுகளில் இருந்து அதை இறக்குமதி செய்வதைக் குறைப்பதற்கும் தேசிய அளவிலான திட்டத்துக்கு


அகதா சங்மா

மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

நாடு முழுவதும் தற்சமயம், 3.70 லட்சம் ஹெக்டேரில் பாமாயில் சாகுபடி செய்யப்படுகிறது. வரும் 2025-26 ஆம் ஆண்டுக்குள் மேலும் 6.5 லட்சம் ஹெக்டேர் அளவுக்கு சாகுபடி பரப்பை அதிகரிக்க அரசு திட்டமிட்டுள்ளது.

இதன் மூலம், வரும் 2025-26 ஆம் ஆண்டுக்குள் உள்நாட்டு பாமாயில் உற்பத்தி 11.20 லட்சம் டன்னாகவும்

**மீண்டும்**

**மீண்டும் சூடுபடுத்தி பாமாயிலை தொடர்ந்து பயன்படுத்தும்போது அதன் நச்சுத்தன்மை உக்கிரம் அடைந்து கொண்டே செல்கிறது. ஆனால் இதுபற்றிய விழிப்புணர்வு இல்லாததால் இத்தகைய நிகழ்வுகள் சற்றும் குறையவில்லை. புற்றுநோய் போன்ற வியாதிகள் அதிகரித்து வருவதற்கு இதுவும் ஒரு காரணம் என்று கூறப்படுகிறது.**



2029-30 ஆம் ஆண்டுக்குள் 28 லட்சம் டன்னாகவும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பாமாயில் உற்பத்தியை ஊக்குவிக்க, அதனை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு தேசிய பாமாயில் உற்பத்தித் திட்டத் தின் கீழ் நிதியுதவி அளிக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இதேபோன்று விவசாயிகளுக்கு முதல்முறையாக விலை உத்தரவாதமும் அளிக்கப்பட உள்ளது'' என்று அவர்கள் தெரிவித்தனர்.



நரேந்திர சிங் தோமர்



அனுராக் தாகூர்

உணவில் பன்மைத்தன்மைக்கு இடமிருக்க வேண்டும். இது சமையல் எண்ணெய்க்கும் பொருந்தக்கூடியதே. ஆனால் இப்போது ஏறத்தாழ மூன்றில் இரு பங்கு என்ற அளவுக்கு பாமாயில்தான் சமையல் எண்ணெயாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. பாமாயிலைத் தொடர்ந்து பயன்படுத்தி வந்தால் கொழுப்புச்சத்து அதிகரிக்கும். இதய நோய், நரம்புக் கோளாறு உள்ளிட் டவை ஏற்பட வாய்ப்புள்ளது என்று மருத்துவர்கள் எச்சரித்துள்ளனர்.


ஆனால் இதற்குப் பிறகும் பாமாயில் உற்பத்தியையும் பயன்பாட்டையும் ஊக்குவிக்க மோடி தலைமையிலான அரசு முன்வந்துள்ளதைப் பார்க்கும்போது, மக்களின் மீதும் விவசாயிகளின் மீதும் அக்கறையற்ற அணுகுமுறையையே அது கொண்டுள்ளது என்பதே துல்லியமாகப் புலனாகிறது.

**சிறிய விவசாயிகளால் பாமாயில் மரச் சாகுபடியில் ஈடுபட முடியாது. கார்ப்பரேட் நிறுவனங்களே இதில் ஈடுபட முடியும். இன்னும் சொல்லப்போனால் கவுதம் அதானிக்கும் பாபா ராம்தேவுக்கும் சாதகமாகவே பாமாயில் ஊக்குவிப்பு திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது என்று பொருளியல் வல்லுநர்கள் விமர்சித்து வருவதை புறந்தள்ளிவிட முடியாது.**

தற்போதைய நிலவரப்படி இந்தியாவில் ஆந்திரா, தெலுங்கானா, கர்நாடகா, ஒடிசா, மிசோரம், அசாம், அருணாசலப் பிரதேசம், சத்தீஸ்கர், தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் பாமாயில் மரங்கள் குறிப்பிட்டு சொல்லத்தக்க அளவுக்கு வளர்க்கப்பட்டு வருகின்றன. பாமாயில் மர வளர்ப்புக்கு அளிக்கப்படும் ஊக்கம் சிறு விவசாயிகளின் வாழ்வுக்கு அடிக்கப்படும் சாவு மணி என்று கருதப்படுகிறது.



கவுதம் அதானி



பாபா ராம்தேவ்

அதுமட்டுமல்லாமல், இது சுற்றுச்சூழலை கடுமையாக பாதிக்கும். இதை பொதுநல ஆர்வலர்கள் பலர் சுட்டிக்காட்டி உள்ளனர்.

முன்னாள் மத்திய மந்திரியும் மேகாலயாவைச் சேர்ந்த துரா தொகுதி எம்.பி.யுமான அகதா சங்மா இதுகுறித்து பிரதமர் நரேந்திர மோடிக்கு எழுதியுள்ள கடிதத்தில்,

**தென்னிந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே சீதோஷ்ண நிலையிலோ அல்லது மண்ணின் இயல்பிலோ பெருமளவு வித்தியாசம் இல்லை. பாமாயில் மரச் சாகுபடிக்கு இலங்கை சில மாதங்களுக்கு முன்பே தடைவிதித்து விட்டது. அதுமட்டுமல்லாமல், பாமாயில் இறக்குமதிக்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளது. மேலும், ஏற்கனவே உள்ள பாமாயில் மரங்களை வெட்டி அப்புறப்படுத்த வேண்டும் எனவும் இலங்கை அரசு கட்டளையிட்டுள்ளது.**

**இலங்கையில் வறட்சி உக்கிரம் அடைந்ததற்கு பாமாயில் மரம்தான் காரணம் என்று கண்டறியப்பட்டுள்ளது. சுற்றுச்சூழல் சீர்கேட்டிற்கு வழிவகுத்துள்ள பாமாயில் மரச் சாகுபடியை முற்றிலுமாக ஒழிக்க வேண்டும் என்ற இலங்கை அரசின் நிலைப்பாட்டை சுற்றுச்சூழல் வல்லுநர்கள் வரவேற்றுள்ளனர்.**

# நாவல் போட்டி அறிவிப்பு

அன்பு படைப்பாளர்களுக்கு வணக்கம்.
ஐயா.பா.இராமச்சந்திர ஆதித்தனார் நினைவு நாவல் போட்டி அறிவிப்பு கண்டு, அதனை வரவேற்று பங்கு கொள்ள ஆர்வம் கொண்டவர்கள் அதிகம் என்பது எங்களுக்கு வரும் படைப்புகள் உறுதி செய்கின்றன.

அதே நேரம் புதிய எழுத்தாளர்கள் தங்கள் படைப்புகளை செம்மையாக சீர்படுத்தி போட்டியில் பங்கு கொள்ள, கால அவகாசம் இன்னும் கிடைத்தால் நல்வாய்ப்பாக அமையும் என்ற வேண்டுகோள் எங்களுக்கு வந்து சேர்கிறது.

ஆகையினால் அவர்களது கருத்துகளை ஏற்று நாவல் போட்டிக்கு நாவல் அனுப்பி வைக்க வேண்டிய கடைசி தேதி 11.10.2021 என்று மாற்றி அமைத்து உள்ளோம்.

**நன்றி**

**- அன்புடன் ஆசிரியர்**

''பாமாயில் மர ஊக்குவிப்பு வடகிழக்கு இந்தியாவையும் அந்தமானையும் முற்றிலுமாக அழித்துவிடும்'' என்று குறிப்பிட்டுள்ளார்.

ஒரு பாமாயில் மரத்துக்கு தினந்தோறும் சுமார் 300 லிட்டர் தண்ணீர் தேவை. இதனால் நிலத்தடி நீர் மட்டம் குறைந்துவிடும். பாமாயில் சாகுபடி செய்யப்படும் பகுதி பாலைவனமாக மாறிவிடும் என்பதையும் சுற்றுச்சூழல் வல்லுநர்கள் எடுத்துரைத்துள்ளனர்.

சீமைக்கருவேல மரத்தால் தமிழ் நாட்டிற்கு எத்தகைய பாதிப்பு ஏற்பட்டுள்ளதோ, அதைக் காட்டிலும் பலமடங்கு அதிக பாதிப்பு பாமாயில் மரத்தால் ஏற்படும். எனவே பாமாயில் மரச் சாகுபடிக்கு இடம் கொடுக்கக் கூடாது என்பதில் தமிழ்நாடு உறுதியாக இருக்க வேண்டும் என்று விவசாயிகள் வலியுறுத்தி வருகின்றனர்.

**- கோப்பெருந்தெழி**

# ஐயா.பா.இராமச்சந்திர ஆதித்தனார்



## நினைவு நாவல் போட்டி

## ரூ.2½ லட்சம் பரிசுடன்

★ என்றென்றும் வாசகர்கள், முகவர்கள் மற்றும் எழுத்தாளர்களிடம் நம்பர் 1 இடத்தைப் பிடித்து இருக்கும் கண்மணி, மீண்டும் ஒரு நாவல் போட்டியை அறிவிப்பதில் பெருமை அடைகிறது.

★ புதுபுது எழுத்தாளர்களை உருவாக்கும் உத்வேகத்துடன் தன் கடைசி காலம் வரை வாழ்ந்த தேவி ஆசிரியர் ஐயா.பா.இராமச்சந்திர ஆதித்தனார் நினைவாக நடத்தும் மெகா நாவல் பரிசுப் போட்டியில் கலந்து கொள்ள படைப்பாளர்களை வரவேற்கிறது கண்மணி.

★ நிகழ்கால சமூகச் சூழலில்... கூட்டுக்குடும்பத்தின் குதூகலம், உறவுகளின் உன்னதம், பெண்மையை போற்றும், பாரம்பரியத்தின் பெருமைகளை எடுத்துரைக்கும் விதத்தில் குடும்ப நாவல்கள், கிரைம், காதல், திகில், சரித்திரம், சஸ்பென்ஸ்... என எந்த வகை நாவல்களையும் போட்டிக்கு அனுப்பலாம்.

★ நாவலில் 12,000-க்கு குறையாமல் வார்த்தைகள் இடம் பெற வேண்டும். காகிதத்தின் ஒரு பக்கம் மட்டுமே எழுத்துகளை டைப் செய்ய வேண்டும்.

| முதல் பரிசு | இரண்டாம் பரிசு | மூன்றாம் பரிசு | ஆறுதல் பரிசு |
|---|---|---|---|
| ரூ. 1 லட்சம் | ரூ. 50 ஆயிரம் | ரூ. 25 ஆயிரம் | 5 பேருக்கு தலா ரூ. 15 ஆயிரம் |

- ★ எதிலும் வெளிவராததாகவும், வேறு எந்த பத்திரிகைக்கும் அனுப்பப்படாததாகவும், சொந்த கற்பனையாகவும், புதிய படைப்பாகவும் இருக்க வேண்டும். அதற்கான உறுதிமொழி கடிதமும் இணைத்து அனுப்ப வேண்டும்.
- ★ பரிசுக்குரிய நாவல் ஒரே தரத்தில் பல இருந்தால் பரிசுகள் பகிர்ந்து அளிக்கப்படும்.
- ★ பரிசு பெற்ற நாவல்கள் மற்றும் தேர்வு செய்யப்பட்ட நாவல்களின் விபரம் கண்மணி, பெண்மணி இதழ்களில் வெளியிடப்படுவதுடன் சம்பந்தப்பட்டவர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு நாவல் பிரசுரிக்கப்படும்.
- ★ தேர்வு பெறாத கதைகள் திருப்பி அனுப்பப்படாது.
- ★ குறுநாவல்கள் போட்டிக்கு ஏற்றுக் கொள்ளப்படாது.
- ★ நாவல் தொடர்பான தொலைபேசி, கடித தொடர்புகளுக்கு நிச்சயம் அனுமதியில்லை.
- ★ நாவல் அனுப்ப வேண்டிய கடைசி தேதி : 11-10-2021

நாவல் அனுப்ப வேண்டிய முகவரி:

# நாவல் போட்டி

தேவியின் கண்மணி

மாலைமுரசு பில்டிங், 246, அண்ணா சாலை, சென்னை - 600 006.

# அரசியல்ல... இது சாதாரணமப்பா



ஆந்திர முதல்வர் ஜெகன் மோகன் ரெட்டி, ஒய்.எஸ்.ஆர். காங்கிரசைச் சேர்ந்த எம்.பி. விஜயசாய் ரெட்டி ஆகியோரின் ஜாமீனை ரத்து செய்ய வேண்டும் என்று தொடுக்கப்பட்ட வழக்கை சி.பி.ஐ. முதன்மை சிறப்பு நீதிபதி வி.ஆர். மதுசூதன ராவ் விசாரித்தார். இந்த வழக்கில் செப்டம்பர் மாதம் 15-ம் தேதி தீர்ப்பளிக்கப்படும் என்று மதுசூதன ராவ் அறிவித்துள்ளார். இது ஆந்திர அரசியலில் திருப்பத்தை ஏற்படுத்துமா ?என்ற கேள்வி ஆந்திராவை உலுக்கத் தொடங்கியுள்ளது.


---

உத்தரகண்டிலும் கர்நாடகாவிலும் பா.ஜ.க முதல்வர்கள் மாற்றப்பட்டுவிட்டனர். இதையடுத்து அடுத்த ஆண்டு சட்டசபைத் தேர்தலை சந்திக்கவிருக்கும் குஜராத்திலும் முதல்வர் விஜய் ரூபானியை மாற்ற வேண்டும் என்று பா.ஜ.க அதிருப்தியாளர்கள் குரல் எழுப்பி வருகின்றனர்.

---



கே.டி.ராகவன்



கேசவ விநாயகம்

பாலியல் அத்துமீறல் வீடியோ சமூக ஊடகத்தில் வெளியானதை அடுத்து மாநில பா.ஜ.க. பொதுச்செயலாளர் பதவியை கே.டி.ராகவன் ராஜினாமா செய்தார். மேலும் பல பாலியல் பிறழ்வு வீடியோக்கள் வெளியிடப்படும் என்று கூறப்படுகிறது.

இதனால் மாநில பா.ஜ.க. அமைப்பு பொதுச்செயலாளர் கேசவ விநாயகத்தின் பதவிக்கு ஆபத்து நெருங்கிவிட்டது என்று சொல்லப்படுகிறது.

–விறலேந்தல்



# வாழ்க்கையை சிறப்பாக்கும் அன்பு!



தமிழில் அறிமுகமாகி தனுஷ், சிம்புவுடன் ஜோடிபோட்ட மேகா ஆகாஷ் தற்போது மையம் கொண்டிருப்பது தெலுங்கு திரையுலகில். தந்தை தெலுங்கு. தாய் மலையாளம். இதனால் மேகாவுக்கு தெலுங்கு, தமிழ், மலையாளம், ஆங்கிலம் அத்துபடி. பொழுதுபோக்கு படங்கள் தான் ரசிகர்களுக்கு பிடிக்கிறது. ஆகவே அத்தகைய படங்களை தேர்வு செய்து வருவதாக கூறும் மேகாவிடம் ஒரு குளு குளு பேட்டி.





-மேகா ஆகாஷ்



## தமிழில நடிக்க ஏன் இடைவெளி?

ஆமாம், சில இடைவெளிகள் இருப்பதை நான் உணர்கிறேன். எந்தவொரு இடைவெளியும் திட்டமிட்டு செய்தது அல்ல. நல்ல ஸ்கிரிப்டுகள் கிடைக்கவில்லை. அதனால்தான் எதுவும் ஏற்கப்படவில்லை. மொழியை அடிப்படையாகக் கொண்ட ஸ்கிரிப்ட்களை ஒருபோதும் நான் ஏற்றுக்கொள்வதில்லை. எந்தமொழி என்றாலும் ஒரு சிறந்த ஸ்கிரிப்ட்டை எதிர்பார்க்கிறேன்.

உண்மையில் நான் எப்படி பணியாற்ற வேண்டும் என்பதில் கவனம் செலுத்தி வருகிறேன். இயக்குனர்களை எப்படி அணுகுவது என்பது எனக்குத் தெரியும். தமிழில் நல்ல ஸ்கிரிப்ட்களைக் கொண்ட படங்களைத் தேர்வு செய்யத் தொடங்கியிருக்கிறேன். பல படங்கள் விவாதத்தில் உள்ளன. வரும் நாட்களில் நான் அதிக திரைப்படங்களில் நடிப்பதை நீங்கள் நிச்சயமாக பார்ப்பீர்கள்.



வந்தா ராஜாவா தான் வருவேன்

**வாழ்க்கையில் எது அவசியம் என்று நினைக்கிறீர்கள்?**

நிஜ வாழ்க்கையில் நான் மிகவும் அமைதியான பெண். மனதுக்குள் நகைச்சுவை அதிகம். ஆனால் அதை வெளியில் காட்டிக்கொள்ள மாட்டேன். அன்பு மட்டுமே நம்மை சிறப்பானவராக ஆக்குகிறது. பெற்றோரின் அன்பு, திருமணத்திற்குப் பிறகு ஒரு கணவனின் அன்பு, பிறகு குழந்தைகளின் அன்பு... இப்படி பல்வேறு வகையான அன்பு நம் வாழ்க்கையின் பல்வேறு கட்டங்களில் நம்மை ஆட்கொள்கிறது. என்னை பொறுத்தவரையில் அன்பு ஒன்று தான் பெரியது. அது ஒன்று தான் சுயநலமில்லாதது.

**நிஜ வாழ்க்கையில்... காதல்?**

என் பார்வையில் காதல் பெரியது.காதல் என்றால் என்ன என்று அறியாத குழந்தை பருவத்திலேயே எனக்கு காதல் ஏற்பட்டது. நான் நான்காம் வகுப்பு படிக்கும் போது என் அருகில் அமர்ந்திருந்த பையனுடன் எனக்கு காதல் ஏற்பட்டது. அது தான் என்னுடைய முதல் காதல்.

பிறகு ஷாருக்கான் மீது காதல். அதற்குப் பிறகு எம்.எஸ்.தோனி மீது காதல். தனிப்பட்ட முறையில், காதல் திருமணத்தைத்தான் நான்



யாதும் ஊரே யாவரும் கேளிர்



எனை நோக்கி பாயும் தோட்டா

விரும்புகிறேன்.

எனக்கு கணவராக வருபவர் இனிமையானவராக இருக்க வேண்டும். என்னை என் போக்கில் விட வேண்டும். நான் நானாக இருக்கவே விரும்புகிறேன்.

**திரையுலகில் எப்படி பயணிக்க விரும்புகிறீர்கள்?**

நான் திரையுலகில் நுழைந்தபோது நிறைய திட்டங்களை யோசித்து வைத்திருந்தேன். ஆனால் என் திட்டத்திற்கு ஏற்ப எதுவும் நடக்காது. எது நடக்குமோ அதுதான் நடக்கும். ஆரம்பத்தில் நான் கேரக்டர் ரோல்களில் நடித்தேன். இது எனக்கு வசதியாகவும் இருந்தது. அதிலிருந்து இப்போது வெளியில் வந்துவிட்டேன். இப்போது எனது சிந்தனை மாறிவிட்டது. எனக்கு வரும் படங்களை ஏற்றுக்கண்டு நடிப்பை தொடர்கிறேன்.

நான் வித்தியாசமான திரைப்படங்களை எதிர்பார்க்கிறேன். நான் நிறைய கதைகள் கேட்கிறேன். எனது திரைப்படத் தேர்வில் அம்மாவும் அப்பாவும் தலையிட மாட்டார்கள்.

–திருமகன்



# உணவு மலர் புரான்ஸ்!



உத்தரகண்டின் மாநில மலரான புரான்ஸ் மலர், ரத்தச் சிவப்பில் ஜொலிக்கும். குளிர்காலத்தில் பூத்துக் குலுங்கும் இவை இளஞ்சிவப்பு, வெள்ளை, ஊதா, நீலம் ஆகிய வண்ணங்களிலும் காணப்படுகிறது.

உத்தரகண்டில் மேற்கொள்ளப்படும் சார்தாம் புனித யாத்திரை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. இதில் பங்கேற்கும் பக்தர்கள் புரான்ஸ் மலர் குவாஷை புனித தீர்த்தமாக கருதி அருந்துகிறார்கள்.

ரிஷிகேஷ் உள்ளிட்ட இடங்களில் 5 லிட்டர் கொண்ட புரான்ஸ் ஸ்குவாஷ் ரூ.360-க்கு விற்பனை செய்யப்படுகிறது.

உத்தரகண்டில் புரான்ஸ் சட்னி ஊறுகாய் உள்ளிட்டவை பிரபலமாக உள்ளன.

எல்லாவற்றிற்கும் மேலாக புரான்ஸ் பக்கோடா மிகவும் சுவையானது. இது உத்தரகண்டில் குதல்கி பக்கோடா என்று குறிப்பிடப் படுகிறது.

புரான்ஸ் பூக்களை உணவில் சேர்த்து கொண்டு வந்தால் இருதய நோய், சிறுநீரக கோளாறு, புற்றுநோய் பாதிப்பு உள்ளிட்டவற்றில் இருந்து நிவாரணம் பெறலாம் என்று மருத்துவர்கள் கூறுகின்றனர்.

புரான்ஸ் தைலத்தை கூந்தலில் தேய்த்து வந்தால் முடி நீளமாகவும் அடர்த்தியாகவும் வளரும்.

இந்த தைலம் மசாஜ் செய்வதற்கும் பயன்படுத்தப்படுகிறது. கடவுளுக்கு காணிக்கையாகவும் இப்பூக்கள் அர்ப்பணிக்கப்படுகின்றன.

-துங்கம்புலரி

பொதிகைப்



அம்பாசமுத்திரத்தின் அழகான ஒரு விடியல் நாள்...மேற்கு தொடர்ச்சி மலையின் குளிர்ந்த காற்று வருடிக் கொடுத்துக் கொண்டிருந்தது....அதனை அனுபவிப்பதற்காகவே மக்கள் பலர் வேலையே இல்லாவிடினும் வெளியே நடமாடிக்கொண்டு இருந்தனர்....பெண்கள் அன்றைய உணவு மெனுவை சிந்தித்த படி வாசல் தெளித்து கோலம் போட்டு விட்டு, விருட்டென்று வீட்டுக்குள் சென்றனர்...டேவிட் வேகமாக வந்து தனது கடையைத் திறந்தான். காலை வியாபாரத்தை விட மனமில்லை.....



# பூங்காற்றே!

–கண்ணம்மாள் ஸ்ரீதர்

குவித்து வைத்து இருந்த பொருட்களை அதனதன் இடத்திற்கு மாற்றி வைத்தான்....வாசலைக் கூட்டி பக்கத்து காலியிடத்தில் குப்பைகளைத் தள்ளி விட்டு, ஒரு வாளித் தண்ணீரை தெளித்தவன் ,உள்ளே வந்து இயேசு பிள்ளையார் படங்களுக்கு பூவைப் போட்டு ஊதுபத்தி கொளுத்தி வைத்தான்...ஒரு சிறுவன் ஓடி வந்தான்...

''அண்ணே ...எங்கம்மா எறும்பு சாக்பீசு வாங்கியாரச் சொன்னாங்க''

என்றபடி பத்து ரூபாயை நீட்டினான்...

''ஏல...விடியாம என்னல எறும்பு சாக்பீசு...இன்னும் யாவாரமே தொடங்கல....கொஞ்சம் பொறுத்து வா...ஓடு'' என்று விரட்டி விட்டான்...

அன்னமாச்சி வந்து பத்து ரூபாய் காபித்தூள் பாக்கெட் வாங்கிப் போனாள்...காலையில் ஒன்பது மணி வரை இப்படித்தான் காபி,பால்,சர்க்கரை, பிஸ்கட் ,சிகரெட்,தேங்காய்,காய்கறிகள், சிறிய அளவில் மசாலாப் பொருட்கள் என்று ஓடும் ...சரி...அந்த காசு மட்டும் என்ன கசக்கவா செய்கிறது...ஆகையால் தூக்கத்தைப் பாராமல் ,அதிகாலையில் எழுந்து மார்க்கெட் போய் காய்கறி தேங்காய் ஆகியவற்றை வாங்கிக் கொண்டு வந்து கடை திறந்து விடுவான்...மதிய உணவுக்குப் பிறகாவது சிறிது ஓய்வு எடுத்துக் கொள்ளலாமென ,படுக்கையை விட மனமின்றிப் போராடும் உடலுக்கும் மனதுக்கும் ஆறுதல் சொல்லிக் கொள்வான்...

லத்தீப் தேங்காய் எண்ணெய் கேட்டு வந்தார்...

''இந்தாங்க அண்ணாச்சி...காசு இருக்கா...நோட்டுல எழுதிகிடவா''

''நோட்டுதான்...ஒண்ணாந்தேதில்லா பணங்காசை கண்ணுல பாக்கணும்...

நேத்து சாயங்காலம் திடீர்னு ஒரு மழை பாத்தியா டேவிட்டு''

''ஆமா....நல்லதுதான...''

''ம்..சித்திரை வெயிலு மண்டையைப் பொளக்குல்லா....நேத்து பூமி கொஞ்சம் குளுந்துட்டு''

''ரெண்டு தெரு தள்ளி ஒரு வீட்டுல திருட்டு போயிட்டாம்லா....கேள்விப்பட்டியா....''

டேவிட் வெங்காயத்தை சொலவில் போட்டுப் புடைத்தவாறே ''ஆமாமா''என்றான்..

''யாராம்...என்ன சேதியாம்''

''கொஞ்சம் வெள்ளிசாமான்கள்தான் களவு போச்சாம்...அதுவும் யாரோ தெரிஞ்சவுகளாத்தான் இருக்கணும்னு ஊருக்குள்ள பேச்சு''

''ஆமா...நானும் அப்பிடித்தான் கணக்கு போட்டேன்....சீமையிலிருந்தா களவாணி வந்திரப்போறான்...''

அதற்குள் பெண்கள் காய்கறி வாங்க பையைத் தூக்கிக் கொண்டு வரவும் லத்தீப் நடையைக் கட்டினார்....காய்கறிகள் எல்லாம் கண்டபடி உடைப்பட்டு நசுக்கப்பட்டன......

''அக்கா....தக்காளியில அமுக்கிப் பார்க்க என்னக்கா இருக்கு'' என டேவிட் பதற....

''சிலது வெம்பிப் போயிருக்கும் டேவிட்டு...அதான்...பார்த்துப் பரிச்சுத்தான காய் வாங்க முடியும்'' என்று பதில் வந்தது..

''நீங்க பொறுக்கி எடுக்கறீங்க...மார்கெட்ல எங்களை என்ன ஏதுன்னு பாக்கவா விடறான்...அப்படியே கைக்கு வந்ததை அள்ளிப் போடுவான்''

என்றான் டேவிட் இயலாமையுடன்...

சிகரெட் கேட்டு வந்தார் அயன்காரர் அருணாசலம்....

அவர் சிகரெட்டை வாயில் வைத்துப் பற்ற வைத்துக் கொண்டு இருக்கையில், பிஸ்கட் வாங்க வந்தாள் எதிர் வீட்டு திஷா....

''அண்ணா..இந்தப் புள்ள ரெட்டைப் புள்ளைகள்ல ஒண்ணுதான....''என்று அருணாசலம் புகை விட்டுக் கொண்டே கேட்க...

''ஆமா...''

''இப்ப இவுக அம்மா நல்ல சுகமா இருக்கா''

''நல்லாயிருக்காக''

''பாவம்....மனுசாளுக்கு கஷ்டம் எப்பிடியெல்லாம் வருது....''

இவர்களின் உரையாடலில் இடம்பெற்ற அந்த குடும்பத்தின் தலைவன் பெயர் ஈஸ்வர மூர்த்தி... ரெட்டைப் பிள்ளைகள் நிஷா,திஷா...ஏழு வயது...அதிபுத்திசாலிப் பிள்ளைகள்...கட்டிக் கொண்டு வரச்சொன்னால் வெட்டிக் கொண்டு வந்து விடுவார்கள்.... அவர்களின் அம்மா சுகந்தி இல்லத்தரசி...வீட்டின் மற்றொரு

அதி முக்கியமானகதாபாத்திரம் தங்கை கிருஷ்ணா....முதிர்கன்னி.... அத்துடன் இளம் தொழிலதிபர்....அம்பையில் கிருஷ்ணா புட்ஸ் என்ற பெயரில் உணவுப்பொருட்கள் தயாரிப்பு நிறுவனம் வைத்து நடத்துகிறாள்....பி .காம் பட்டதாரிதான்....விஷேசமாக வேலை எதுவும் கிடைக்கவில்லை....கிடைத்த வேலையில் மனம் ஒட் டவில்லை...ஆகவே ,சவாலான ஒரு துறையைத் தேர்ந்தெடுத்து நடத்திக் கொண்டு இருக்கிறாள்....வேலையில் மட்டுமல்ல வீட்டிலும்கில்லிதான்அவள்....அண்ணன்மகள்கள்இருவரும்அவள் பொறுப்புதான்....அறிவு,அடக்கம்,ஆளுமை,அன்பு,பண்பு,சுத்தம்,சுகாதாரம்,கடமை ,கண்ணியம் என எதிலும் குறை சொல்லி விட முடியாத ஒரு முழுமைப் பிறப்பு அவள்....கிருஷ்ணாவின் மனம் போல அவளது நிறுவனம் நல்ல முன்னேற்றத்தில் சென்று கொண்டு இருக்கிறது...நிஷா திஷா இருவருக்கும் கூட அத்தைதான் முதல் தேவை...அம்மா கூட இரண்டாம் பட்சம்தான்... அவர்களின் பெறாத தாய் கிருஷ்ணா....பள்ளி ஆண்டுவிழாவிற்காக மருமகள்களை நடனப் போட்டிக்கு தயார் செய்து கொண்டு இருந்தாள் கிருஷ்ணா...

''அழகான பொண்ணு நான்..
அதுக்கேத்த கண்ணுதான்...
என்கிட்டே இருப்பதெல்லாம்
தன்மானம் ஒண்ணுதான்''

பாட்டை ஓடவிட்டு கிருஷ்ணா பானுமதி போலவே அபிநயம் பிடிக்க,குழந்தைகள் அத்தையைப் பார்த்து ஆடிக்கொண்டு இருந்தனர்...

மேலேறி வந்த மூர்த்தி

''கிருஷ்ணா....என்ன நடக்கு இங்க...தை தக்கான்னு குதிச்சி கிட்டு....கீழ மனுஷன் இருக்க முடியல''

''அண்ணா....ஸ்கூல்ல ஆண்டு விழா. வருதுல்லா''

''ச்சரி....வந்தா என்ன...அதுக்கு இப்பிடி ஆட்டம் போடணும்னு சொல்லியிருக்காக்கும்...ஒரு பாரதியார் பாட்டு பாடலாம்லா'' என்றான் மூர்த்தி படியில் நின்றவாறே....

''அதுவும் உண்டுப்பா''---நிஷா

''உண்டா....சரி...சரி... பார்த்து மெதுவா ஆடுங்க....எங்கப்பா

காலத்து வீடு''

என்றபடி அவன் கீழிறங்க....

''அப்பாவுக்கு எங்க டான்சைப் பாக்கணும்னு ஆசையா இருந்திருக்கும்...அதான் வந்துட்டாங்க''----நிஷா

''ஆமாத்தை''

கிருஷ்ணா சிரித்தாள்...

எதையும் தப்பாவே பார்க்கத்தெரியாத குழந்தைகளின் குணம் தான் எவ்வளவு அழகு...

''அத்தை...ஆடலாம்...பாட்டு ஆன் பண்ணுங்க''

''ஓகே...லேட் அஸ் ஸ்டார்ட்....நல்லா வாயைத் திறந்து பாடணும்....பழைய படங்கள் பாத்து இருப்பீங்கள்ல....அதுல நடிகைகள் எப்படிப் பாடுவாங்க''

''ஆமா அத்தை...அன்னிக்கு கூட அம்மா ஒரு படம் பார்த்தாங்க...பேரு....அன்னக்கிளி...அதுல வந்தவங்க நீங்க சொன்னாப்புலதான் பேசினாங்க''

''எஸ்....அப்புறம் கண்ணை நல்லா இந்தப்பக்கம் அந்தப்பக்கம் உருட்டணும்...ஓகேவா...''

''அத்தை...எனக்கு கண்மை,ஐ லைனர் ,காஜல்,மஸ்காரா எல்லாம் போட்டு விடுவீங்களா''

''இன்னும் வேற ஏதாவது இருந்தா சொல்லு...அதையும் போட்டுரலாம்''

''இல்லத்தை...இவ்வளவுதான் எனக்குத் தெரியும்''-நிஷா...

''இதுவே அதிகம்...இதுல இவ்வளவுதான் தெரியும்னு கவலைவேற''என்று மருமகள்களை செல்லமாக கோபித்துக் கொண்டாள் கிருஷ்ணா...

''அத்தை ...டிரஸ் என்ன போடறது''

''தாவணி''

''ஐயோ...தாவணியா..நம்மகிட்ட இல்லியே''

''ஒரு நாள் திருநெல்வேலி போயி,உங்க ரெண்டு பேருக்கும் பாவாடை சட்டை தாவணி எடுத்துடலாம்''

''அத்தை..எங்க சைசுக்கு இருக்குமா''

''காசு குடுத்தா எல்லாம் கிடைக்கும்''

ஆண்டு விழா நாள் குறித்த ஏற்பாடுகளை பேசி முடிவு

செய்து விட்டு சாப்பிட கீழே வந்தார்கள் மூவரும்....மூர்த்தி தொலைக்காட்சியில் செய்திகள் பார்த்தவாறு சாப்பிட்டுக் கொண்டு இருந்தான்...இறங்கி வந்த மூவரையும் பார்த்து முறைத்தாள் சுகந்தி...

''எப்ப டான்ஸ் ஆடப் போனீங்க....ஹோம் வொர்க் செய்யணும்னு கொஞ்சமாவது அக்கறை இருக்கா''

''அண்ணி....விடுங்க...பார்த்துக்கலாம்...வருஷம் பூராம் பாடம்தான்...படிப்புதான்...நாலு நாளைக்கு ரிலாக்ஸ் பண்ணட்டுமே''

என்று பதில் சொன்ன கிருஷ்ணாவிடம் ,சுகந்தி ஏதோ சொல்ல வாயெடுக்க,அதற்குள்

''மலர்களிடம் கேட்டதற்கு
மரங்கள் வந்து பதிலைச் சொன்னால்
மனசுக்குள்ளே தோன்றுவது...கசப்பு''

என்று தொலைக்காட்சி பாட... ''கரெக்ட்....'' என்று சொல்லிய சுகந்தி தோசை திருப்பியுடன் உள்ளே செல்ல....கிருஷ்ணா அண் ணனை முறைத்தாள்...

''என்னண்ணா இது''

சிரித்தான் மூர்த்தி..

''நான் என்னம்மா செய்யட்டும்...ஓல்ட் இஸ் கோல்ட் போடறான்'

''அவன் போடறது இருக்கட்டும்...நீ நியுஸ் தானே பார்த்துட்டு இருந்தே...ஏன் மாத்துனே''

''நம்ம வீட்டு நியுஸ் வெளியே போகக்கூடாதுன்னுதான் சத்தமா பாட்டு வச்சேன்''

இப்பொழுது கிருஷ்ணாவும் அண்ணனுடன் சேர்ந்து சிரித்தாள்...

அடுத்த தோசையுடன் வந்த சுகந்தி,

''பூப்பூவா பூத்திருக்கு பூமியிலே ஆயிரம் பூ..
பூவிலே சிறந்த பூ என்ன பூ..''

''அன்பு''

என சரோஜா தேவியுடன் சேர்ந்து பாடி விட்டுப் போக,

உதடு சுழித்தாள் கிருஷ்ணா...

''ஒரே ஜாலி மூடு போல'' என்றாள் கண்களால் சமையலறையை

ஜாடை செய்தவாறு...

''ஆமா...இன்னிக்குப் பொழுது நல்லா விடிஞ்சிருக்கு... அவ்ளோதான் சொல்ல முடியும்....போங்க....எல்லாரும் சாப்பிடுங்க''

என்று எழுந்து கை கழுவப் போனான் மூர்த்தி...

''எனக்கு நெய் ரோஸ்ட்''

''எனக்கு ஸ்டார் தோசை''

என்று வாண்டுகள் ஆர்டர் போட...

''எல்லாம் வரும்...முதல்ல கை கழுவிட்டு தட்டை எடுத்துகிட்டு உக்காருங்க''

காட்டமான பதில் வந்தது சுகந்தியிடமிருந்து....

அம்மாக்கள் எல்லாம் கறாரான ஆசிரியைகள் ஆகிப்போனார்கள்.... பிள்ளைகளின் சிறு குறும்புகளைக் கூட ரசிக்கும் மனநிலையில் அவர்களில்லை...ஆனால், அவர்களிடம் கேட்டால், அதெல்லாம் பிள்ளைகளை பெற்று வளர்த்தால்தான் தெரியும் என்று பதில் வருமென்பதும் அவளுக்குத் தெரியும்...மற்றவர்களின் பலவீனங்களைக் கிளறுவது மனிதர்க்குப் பிடித்தமான விளையாட்டாயிற்றே என மனதுக்குள் குறை பட்டுக் கொண்டவள், தானும் சாப்பிட அமர்ந்தாள்....

## 2

**கி**ருஷ்ணா புட்ஸ்....நிறுவனம்...அம்பை ஆர்ட்ஸ் காலேஜ் தெருவில் ...ஒரு நீளமான காம்ப்ளக்சின் நடுவில் அமைந்துள்ளது அவள் நிறுவனம்...ஒரு ஹால், சிறிய அலுவலக அறை கொண்டது....அதில் ஒரு மேசை, நாற்காலி, ஒரு கணினி, சிறிய ஷோகேஸ் ஆகியவை இருக்கும்....அதில், தனது தயாரிப்புகளில், வகைக்கொன்றாய் அடுக்கி வைத்திருப்பாள்...ஹாலில், இடிக்க, வறுக்க, மாவு கிளற என மூன்று மிஷின்கள் உண்டு.........சீக்கிரம் சூடாகாது.... கிருஷ்ணாவின் விற்பனை ரகசியங்களில் அதுவும் ஒன்று. கல் அரவை மிஷின்கள். ஒரு ஓரமாய் மிளகாய் வற்றல், மல்லி, அரிசி வகைகள், சிறு தானியங்கள், வெல்லம் ஏலம் முதலான

மூலப்பொருட்கள்...அங்கேயே வைத்து பொருட்கள் பாக்கெட் போடப்பட்டு,பெட்டிகளில் அடுக்கப்பட்டு,கடைகளுக்கு டெலிவரி செய்யப்படும்...வேலைக்கு பவானி என்ற மாற்றுத் திறனாளிப் பெண்ணையும்,ஆர்டர் எடுக்க,பணம் வசூல் செய்ய போன்ற வேலைகளுக்கு,சங்கர் என்ற பையனையும் வேலைக்கு வைத்து இருக்கிறாள்...காலை ஒன்பது மணிக்கு சரியாக கடை திறக்கப்பட்டு,மாலை ஆறு மணிக்கு அடைக்கப்படும்...ஞாயிறு அன்று விடுமுறை...அதுவும் குழந்தைகளுடன் நேரம் செலவிட வேண்டும் என்பதற்காகத்தான்.....அன்று பவர் கட் என்பதால் அரவை வேலைகள் இல்லை...இருப்புச் சரக்கு வெளியேறத் தயாராகிக் கொண்டு இருந்தது...

''பவானி...அதிரசம் மாவுல இனிப்பு கூடிருச்சா''----கிருஷ்ணா...

''ஆமாக்கா''

''எப்படி...அளந்து போடலியா''

''வெல்லம் கடைசி ஆயிட்டுது...ஒரு கண் அளவாப் போட்டேன்...சரியா இருக்கும்னுட்டு....''

''ஆனா சரியா இல்ல...அப்பிடித்தானே''

''ஆமாக்கா'' என்றாள் பவானி உதடு சுழித்தபடி...

''ம்ம்...சமையல் புலி....கண் அளவு கை அளவுன்னு கதை சொல்லிக்கிட்டு...பிசு பிசுன்னு ஆகி சீக்கிரம் கெட்டுப் போயிரும்... கொஞ்சம் அரிசி மாவு சேர்த்துரு....சரியா''

''ஆமாக்கா....மிஷின் ஓடும்போதே நான் சொன்னேன்...''

என்றான் சங்கர் அவசரமாக....

''வாங்க....உங்களைத்தான் தேடிகிட்டு இருந்தோம்....தவறுவது மனித இயல்பு.....அதெல்லாம் நடக்கும்தான்...அப்புறம் சரி பண்ணத்தான் வேணும் நீங்க உங்க வேலையை ஒழுங்காப் பாருங்க சார்....புதுசா ஒரு சூப்பர் மார்க்கெட் வந்திருக்கே....''

''மாதா....மாதா சூப்பர் மார்கெட்''

''ஆமா.. அங்க போயி ஆர்டர் எடுக்க சொன்னேனே என்னாச்சு''

''போனேன்கா....அதெல்லாம் ஒரு வாரம் கழிச்சி வாங்க... இப்பதான் பொருட்களை இடம் பார்த்து வச்சிக்கிட்டு இருக்கோம்னு சொல்லிட்டாங்க...''

''ஓடுன்னு துரத்தி விட்டுட்டாங்களா''----பவானி சிரிக்க....

''பவானி...கைவேலையில கவனம் செலுத்து....சங்கர் அடுத்த முறை சாம்பிள் பாக்கெட் கூட ரெண்டு எடுத்துட்டுப் போ.... ஓகேயா...திரும்பத்திரும்பப் போகணும்...நமக்குத்தானே காரியம்....''

''சரிக்கா''

''சரி....சாமான் சொல்லியிருக்கேன்....வரும்....பார்த்து செக் பண்ணி வாங்கி வையி...எல்லாருக்கும் டீ வாங்கிட்டு வா''

''அக்கா...ரெண்டு வடையும்....வீட்டுல சாப்பிடாம வந்துட்டேன்....''

''அட கழுதை....அப்பவே சொன்னா என்ன...சங்கர் நாலு இட்லி வாங்கிட்டு வந்து அவளுக்கு குடு...சீக்கிரம் போ''

அவன் செல்லவும் பவானியைக் கடிந்து கொண்டாள் கிருஷ்ணா...

''பவானி....பட்டினியா கிடந்தெல்லாம் நீ வேலை பார்க்க வேணாம்....ஏன் சாப்பிடாம வந்தே''

''இட்லி மாவு இல்லக்கா...அம்மா உப்புமா கிண்டித் தரேன்னாங்க....நேரமாயிரும்னு வந்துட்டேன்''

''முகூர்த்தமா கெட்டுப் போகுது.இருந்து சாப்பிட்டு வர வேண்டியதுதான...இன்னிக்கு கரண்ட் கட் வேற என்ன அவசரம்.....பெட்ரோல் போடாம எப்பிடி வண்டி ஓடும்....லூசுப் பிள்ளை...முக்கியமா காலை சாப்பாடை விடவே கூடாது....சரியா....இதோ சங்கர் டிபன் வாங்கிட்டு வந்துட்டான்... சாப்ட்டு டீ குடி....வேலையெல்லாம் அப்புறம்'' என்றாள் தாய்மை உணர்வுடன்...ஏனெனில் அவள் இயல்பிலேயே அப்படித்தான்.... பெரிய தொழிலதிபராகி கோடிகளில் புரள வேண்டுமென்பது கிருஷ்ணாவின் எண்ணமுமல்ல....எதிர்பார்ப்புமல்ல....

நியாயமாகத் தொழில் செய்து,நேர்மையாக சம்பாதித்து ,பகிர்ந்துண்டுவாழ வேண்டுமென்பதேஅவளது கொள்கை...மதியம் வரை அட்டைப் பெட்டிகளை ஒட்டி ,ரேப்பர் சுற்றி ,சீல் வைத்து முடித்தார்கள்...ஒரு ரேப்பரில் புட்டு மாவு என்பதற்குப் பதில் பட்டு மாவு என்று அச்சடித்து வந்து இருந்தது...அட்டையில் ஒட்டிய பிறகே கவனித்தாள் கிருஷ்ணா...

''சங்கர்...மக்குப் பயலே...என்னடா கண்றாவி இது....'' என்று கை காண்பிக்க,சங்கர் தலை சொரிய பவானிக்கு தாள மாட்டாத சிரிப்பு....

''அக்கா....இது வழக்கமா நடக்கற கூத்துதான...உங்களுக்கு நெனைவிருக்கா....முந்தி ஒருநாளு, கம்பு தோசைக்கு,கொம்பு தோசைன்னு நோட்டீஸ் அடிச்சி வாங்கியாந்துட்டான்லா''

கிருஷ்ணாவும் அடக்க மாட்டாமல் சிரித்து விட்டாள்...சங்கரின் முகம் மாறுவதைக் கண்டு பாவமாகி விட்டது....

''ஏண்டா....கவனிக்கலியா நீ''

''இல்லக்கா...வாசிச்சுப் பார்த்தேன்....''

''அவன் பத்தாங்கிளாஸ் பெயிலு....பெறவு....எப்பிடி வாசிப்பான்...நீங்களே பாத்துகிடுங்களேன்''----மீண்டும் பவானி...

''க்கா....இவ தேவையில்லாம என் லைன்ல அடிக்கடி க்ராஸ் பண்ணுதா...சொல்லி வைங்க....அப்பறம் நல்லாயிருக்காது''

''நோடீசு நல்லாயில்லைன்னுதான் இப்பவும் சொல்லுதோம்'' என்று சிரித்த பவானியைக் கண்டு சங்கர் முறைக்க,கிருஷ்ணா நடுவில் புகுந்தாள்....

''சரி...சரி....பவானி....மணி நாலாகப்போகுதுல்லா....நீ சாமான்களை எல்லாம் ஓரமா ஒதுங்க வச்சிப் பெருக்கு...இதை நாங்க பாத்துகிடுதோம்....சங்கர்...ஒரு வேலை செய்யி....இப்ப எத்தனை பெட்டின்னு எண்ணு''

''சரி..பேனாவை எடுத்துட்டு வந்து,பட்டுமாவை புட்டு மாவா ஆக்கு....ம்ம்...குயிக்''

''அக்கா....நம்ம மாவு பட்டு மாதிரி மென்மையா இருக்கும்னு சொல்லிகிரலாம்லா'' என்றான் பேனாவைக் கையில் எடுத்த சங்கர்....

''சொல்லிக்கிரலாம்....டப்பா வெளிய போகாது....மக்கள் சிரிச்சுருவாங்க... பரவாயில்லையா.....வேலையைப் பாரு...நான் கொஞ்சம் வெளிய போயிட்டு வாரேன்'' என்று சொன்னவள் தனது இரு சக்கர வாகனத்தைக் கிளப்பிக் கொண்டு போனாள்..

3

சுகந்தியின் அம்மா அருணாவும்,அவள் தங்கை சரிகாவும் வீட்டிற்கு வந்து இரண்டு நாட்களாயிற்று.... திஷா,நிஷா வின் நடனத்தைப் பார்க்க வந்திருந்தனர்..... சனிக்கிழமை ஆண்டுவிழா....பிள்ளைகளுக்கு அலங்காரம் செய்து விடுவதற்காக ,மாலையில் முன்னதாகவே பள்ளிக்கூடம் சென்று விட்டாள் கிருஷ்ணா....வீட்டில் மற்றவர்கள் சரியாக நிகழ்வுகள் தொடங்கும் நேரத்திற்கு வந்து ,இணைந்து கொண்டார்கள்.... வரவேற் புரை,ஆண்டறிக்கை வாசிப்பு,விருந்தினர்களை கவுரவித்தல் ஆகியவை முடிந்தபிறகு,நடன நிகழ்ச்சி கள்......நாலாவதாக நிஷா திஷாவின் நடன நிகழ்ச்சி.....பிள்ளைகள் இருவரும் ஏற்கெனவே அழகு....அதில் பாவாடை சட்டை தாவணி, நீல குஞ்சம் வைத்த பின்னல்....பொருத்தமான காது மற்றும் கழு த்தணிகள்....ஆளும் அழகும்,பாட்டும்,அதற்குப் பொருத்தமான நடனமும் நிகழ்ச்சி மேடையை வேறு ஒரு லெவலுக்கு கொண்டு செல்ல....விசில் பறந்தது....பல மாணவிகள் பார்வையாளர்கள் இடத்தில் இருந்தபடியே ஆடத்துவங்க....

கிருஷ்ணாவுக்கு பெருமை பிடிபடவில்லை....மாணவர்கள் ஒன்ஸ் மோர் கேட்க....மீண்டும் ஒரு முறை பாட்டு ஒலிபரப்பாக,பிள்ளைகள் நடனம் ஆடினார்கள்....விழாவின் இறுதியில்,பரிசு வழங்கும் போது,சிறப்பு விருந்தினர் பிள்ளைகளிடம்,

''உங்களுக்கு டான்ஸ் சொல்லிகுடுத்தது யாரு'' என்று கேட்க... கிருஷ்ணா மேடையேற வேண்டியதாயிற்று... அவர் தன சார்பில் கிருஷ்ணாவுக்கு சிறப்புப் பரிசு ஒன்று அளித்ததுடன் மைக்கில்

''பசியும் ருசியும் இணையும் போதுதான் அது ஒரு நல் விருந்தா அமையும்...அதுபோல....இந்த பாட்டு சூப்பர் பாட்டு.... பர்சனலாவும் கூட எனக்கு ரொம்பப் பிடிச்ச பாட்டு...அதுக்கேத்த டான்சும் அற்புதம்....குழந்தைகளுக்குப் பொறுமையா டான்ஸ் சொல்லிக்குடுத்து,

நமக்கு ஒரு அருமையான விருந்து அளித்த கிருஷ்ண வேணி

அவர்களைப் பாராட்டறோம்....உறவுகள் அருகி வர்ற இந்த காலத்துல அத்தை மருமகள்கள் உறவு அழகு....குழந்தைகள் கல்வி,கேள்வியில் சிறக்க வாழ்த்துகள்....'' என்று சிறப்பு விருந்தினர் நடனத்தையும்,கிருஷ்ணாவையும், ஓஹோவெனப் புகழ......அதன் விளைவு அன்றிரவு வீட்டில் வெடித்தது....

''எ பிள்ளைகளா ...அதென்னடி ஸ்கூல்ல உங்க அத்தை பேரை சொல்றீங்க''

என்று குழந்தைகளிடம் பாய்ந்தாள் ஆச்சி அருணா.... அசதியிலும்,தூக்கத்திலும் இருந்த பிள்ளைகள்,

''அத்தைதான ஆச்சி டான்ஸ் சொல்லிக் குடுத்தாங்க....அப்போ அவங்களைத்தான சொல்லணும்'' என்று பதிலுக்கு வெடித்தனர்...

''ஆமா...அரிச்சந்திரனுக்கு அண்ணன் பிள்ளக...பொய்யே சொல்ல மாட்டாக....எல்லாம் தெரியும்....''

உடை மாற்றி சாப்பிட அமர்ந்த மூர்த்தி,நிலைமை மோசமாவதைத் தடுக்கும் பொருட்டு,

''சுகந்தி.....'' என்று அழுத்தமாக குரல் குடுத்தான்....அதன் பொருள் உன் அம்மாவை அடக்கு என்பதாகும்....ஆனால் அது அவ்வளவு சுலபமா என்ன... அதன் பின்னர்தான் சத்தம் கூடியது....

''பள்ளிக்கூடத்துல,நாலு பேரு கூடுற இடத்துல,பெத்தவுகளை பெருமைப்படுத்துவாங்கன்னு கண்டுருக்கோம்....அத்தை சொத்தைனுட்டு,இவளைத்தூக்கி தலையில வச்சிக் கொண்டாடிகிட்டு...''

''ம்மா.....கொஞ்சம் பேசாமத்தான் இரேன்....இப்ப... இதுல என்ன வந்திட்டு...பிள்ளைகள் கிருஷ்ணா பேரைச் சொன்னதால,அவங்க அவளைக் கூப்பிட்டுப் பாராட்டுனாங்க... இதுல எனக்கு கிரீடம் ஒண்ணும் இறங்கிடலை''என்றாள் சுகந்தி காட்டமாக....

''இறங்கிதாண்டி போச்சு...பெத்தவ நீ இருக்கறப்ப,எவளோ ஒருத்தி பேரைத்தட்டிட்டுப் போவாளா''

சாதத்தில் சாம்பாரை விட்டுப் பிசைந்து ஒரு கவளம் கையில் எடுத்த மூர்த்தி

''அது யாரோ எவளோ இல்ல...என் தங்கச்சி'' என்று மாமியாருக்கு

பதில் சொல்லி விட்டு வாயில் போட்டுக் கொண்டான்...

''ம்ம்ம்...தொங்கச்சி....அது தெரியும்...அதுக்காக எம்புள்ள எல்லா எடத்துலயும் அசிங்கப்பட்டு நிக்கணுமா''

''சுகந்தி....கத்தி கூப்பாடு போட்டு அசிங்கப்படுத்தறாங்க உங்கம்மாதான்''

''அத்தான் ...அம்மாவுக்கு தன் பொண்ணு இப்பிடி ஏமாளியா இருக்காளேன்னு ஒரு ஆதங்கம்....அதத்தான் சொல்றா...கொஞ்சம் சத்தமா சொல்றா ..அவ்வளவுதான்....'' என்று பெற்றவளுக்குப் பரிந்து வந்தாள் சரிகா....

''உங்க அக்கா என்ன ஏமாந்துட்டா....உனக்கும் அக்கா பிள்ளைகதான....ஒரு நா உக்காந்து ஏ பி சி டீ சொல்லிகுடுத்துருப்பியா....எந்தங்கச்சி மருமக்க மார் ரெண்டு பேரையும் உயிரைக் குடுத்து வளர்த்துகிட்டு இருக்கா...உங்க அக்கா நிலைமை தெரிஞ்சும் நீயே இப்பிடிப் பேசலாமா....படிச்ச பிள்ள உங்க அம்மாவுக்கு நல்லது கேட்டது எடுத்து சொல்லுவியா....நீயும் சேர்ந்துகிட்டு எரியிற கொள்ளியில எண்ணையை எடுத்து ஊத்தற''என கொழுந்தியாளிடம்,விளக்கம் பாதியும் விளாசல் பாதியுமாய் பதில் சொன்னான் மூர்த்தி....

''ம்ம்ம் ..இது ஒண்ணை சொல்லியே எங்க வாயை அடைக்காதீங்க...மனுஷாளா இருந்தா நோய் நொடி வாரதுதான்.... அதுக்காக தாய் இல்லேன்னு ஆயிருமா? பிள்ளைக அருமையும் பெருமையும் பெத்தவளுக்குத்தான தெரியும்....''என ஆவேசமாகக் கத்தினாள் அருணா...

''அம்மா....நீ இப்ப வாயை மூடப் போறியா இல்லியா.... நீ சொல்றபடி என் வீட்டுல எனக்கு மரியாதையும் இல்லேன்னே வச்சிக்க.....அது என் பிரச்சினை....நான் பாத்துகிடுதேன்....நீ இந்த வீட்டுக்கு விருந்தாட வந்தவ...வந்தியா இருந்தியா போனியான்னு இருக்கணும்....சிண்டு முடியற வேலையெல்லாம் செய்யாத..... எனக்குப் பிடிக்கலை...'' என்று சுகந்தி கடுமை காட்ட.... அருணாவின் ஆத்திரம் மகள் மீது திரும்பியது....

''ஏண்டி சொல்லமாட்ட....நீ இருமுனா தும்முனாக் கூட அங்க இருப்புக் கொள்ளாம,அலறி அடிச்சிகிட்டு ஓடியாந்து

உனக்கு செய்யறேன் பாரு....எல்லாம் பேசுவ...புருஷன் பிள்ளைன்னு உன் குடும்பத்தைக் காப்பாத்தி வச்சிக்கடின்னு புத்தி சொன்னா,என்னையவே திருப்பறியா நீ''

''காப்பாத்தி வச்சிக்கிற அளவுக்கு இப்ப என் குடும்பம் ஒண்ணும் கொள்ளை போயிரலை....நீ சாப்பிட வா''

''ஒண்ணும் வேண்டாம்....சோத்துக்கு அலைஞ்சு போயி நாங்க உன் வீட்டு நடையேறலை...''

''சரிகா நீ வாடி...சாப்பிடுவோம்'' என்று தங்கையை அழைத்து சாப்பிட அமர்ந்தாள் சுகந்தி....

இனி,நமக்கு வேலை இல்லை.... அம்மாவும் பெண்ணும் பார்த்துக் கொள்வார்கள் என்ற நிம்மதியில் ,பிள்ளைகளை அழைத்துக் கொண்டு தூங்க சென்றான் மூர்த்தி....

கீழே நடந்த ஆர்ப்பாட்டங்கள் அத்தனையும் கிருஷ்ணாவின் கவனத்துக்கு வரவே செய்தது....வசனங்கள் கூட தெளிவாகக் கேட்டது....ஆனால்,அவள் கீழிறங்கி வர விரும்பவில்லை...புதிது ஒன்றுமில்லை....சுகந்தியின் அம்மா அருணா இங்கு வரும்போதெல்லாம் இத்தகைய அலப்பறைகள் சகஜமே....மறுநாள் செய்ய வேண்டிய கம்பெனி வேலைகள் குறித்து ஒரு டு டு லிஸ்ட் தயார் செய்து தனது பர்சுக்குள் வைத்தாள்.....கீழிருந்து உணவுண்ண அழைப்பு வந்தது.... பசியில்லை என்று சொல்லி விட்டாள்....பால் வந்தது...மறுக்கவில்லை... சாப்பிட மனமில்லாத போது.வயிறு நிறைந்த ஒரு உணர்வைத் தருவது பால்தானே....படுக்கையைத் தட்டி விரித்துவிட்டு பாலைக் கையில் எடுத்தவாறு அப்படியே மொட்டை மாடிக்குப் போனாள்.... சில்லென்ற காற்றும்,திறந்த ஆகாய வெளியும்,அமைதிக்கு வந்து கொண்டிருந்த ஊரும்,இதமான சூட்டில் இருந்த பாலும் அவள் மன நிலையை ரொம்பவே அமைதிப் படுத்தியது.....கைப்பிடி சுவரில் அமர்ந்தாள்.....ஆகாயத்தைப் பார்த்ததும் அம்மா அப்பாவின் நினைப்பு...இறந்தவர்கள் வானத்துக்குப் போகிறார்கள் என்ற கூற்றை எத்தனை வயதானாலும் மனம் உண்மை என்றே நம்புகிறது....மேகங்களுக்கு நடுவில் அவளது பெற்றோரின்

முகங்கள் சிவன் பார்வதி போல ஒட்டித் தெரிந்தது போலிருந்தது அவளுக்கு..புன்னகைத்தாள்.....அப்பா மெஜுரா கோட்சில் வேலை பார்த்தார்....அனாதையாய் வளர்ந்து,கிடைத்த கிளையைப் பிடித்துக் கொண்டு மேலேறி வந்தவர்,,,அம்மா உறவுக்காரப் பெண்தான்....எந்த எதிர்பார்ப்புமின்றி ஏற்றுக் கொண்டார்.... சிறுவயதிலேயே கஷ்டங்களைப் பார்த்து விட்டதால்,எதற்கும் அச ராதவர் அப்பா...எளிமையாகவும்,இனிமையாகவும் வாழ்ந்தவர்.... அம்மா அப்பாவி.....சமையல்,குழந்தை வளர்ப்பு இதைத் தவிர ,வேறு வெளிஉலக அனுபவங்கள் எதுவும் இல்லாதவள்.... அதைப்பற்றி அம்மாவோ அப்பாவோ கவலைப்பட்டதுமில்லை.... அப்பாவும் மனைவியை உள்ளபடியே ஏற்றுக் கொண்டார்.... குறை சொன்னதில்லை என்பதுடன் கூட,கூடுதலாக அன்பும் செலுத்தினார்.....அப்பா கம்பெனி தவிர வேறு எங்கு சென்றாலும் மனைவியை உடன் அழைத்துக் கொண்டேதான் செல்வார்...அப்படித்தான் மூர்த்தி கல்யாணத்திற்கு நாள் பார்க்க,ஜோசியரை சந்திக்கும் பொருட்டு தென்காசி வரை போனவர்கள்,திரும்பவேயில்லையே......அது குற்றால சீசன் டைம்....வாகனங்கள் விண்ணில் செல்வது போல்தான் பறக்கும்.... அப்படியான கேரளாவிலிருந்து வந்த மகிழுந்து ஒன்று அப்பா அம்மா பயணம் செய்த இரு சக்கர வாகனத்தை மோதி தூக்கிஎறிந்து விட்டு,நில்லாமல் சென்று விட்டது,,,,நிகழ்விடத்திலேயே இருவரது உயிரும் பிரிந்தன.....கல்யாணத்துக்கு நேரம் பார்க்க சென்றோர்க்கு,கருமாதிக்கான நேரம் வந்து சேர்ந்தது....அந்த நேரம் சேரன்மகாதேவியில் ஒரு ஆடிட்டரிடம் வேலை செய்து வந்தாள் கிருஷ்ணா....அவள் விஷயத்தை ஜீரணிப்பதற்குள் காரியங்கள் நடந்து முடிந்துவிட்டன....ஆணாய்ப் பிறந்ததால் அழும் வாய்ப்பும் இல்லாமல் போனது மூர்த்திக்கு....அடக்கிக் கொண்டு அலைந்தான்....அவன் தன்னைப் பெற்றவர்க்கு ஜோடியாக காரியங்கள் செய்தபோது ஊரே திரண்டு அழுதது....எல்லாம் முடிந்து கிளம்பும்முன் ஓரிரு சொந்தங்கள் தொண்டையைக் கனைத்துக் கொண்டு வாய் திறந்தன...

''அய்யா....மூர்த்தி....பெத்தவுகளை ஒரு சேர பறி குடுத்துட்டு

நிக்கிற.....சங்கடமாத்தான் இருக்கு...இருந்தாலும் பேச வேண்டிய நேரத்துல பேசணுமே....உனக்கு நிச்சயம் பண்ணியிருக்கற பொண்ணு அவ்வளவு ராசியாத்தேரியல''

''வீட்டுக்குள்ள காலெடுத்து வைக்குமுன்னே பெரியவுகளை மேல அனுப்பிட்டா....பொருத்தம் அம்புட்டு விசேஷம் இல்ல போல...''---மற்றொரு சொந்தம் ஒத்துப் பாடியது.....வெந்த புண்ணில் வேல் பாய்ச்சும் வெட்டிக் கூட்டங்களின் மீது ஏற்பட்ட எரிச்சலை ,எச்சில் போல விழுங்கி விட்டு அமைதியாக ஏறிட்டான் மூர்த்தி...

''அதுக்கு?''

''அதுக்கு.....வேற என்ன செய்ய....மனசு வருத்தப்பட்டுதான் இதை சொல்ல வேண்டியிருக்கு....பொண்ணு வீட்டுல இதமா பதமா எடுத்து சொல்லிட்டு,குறிச்ச தேதிக்கு நாம வேற பொண்ணைப் பாத்துரலாம்''

அசால்டாக அக்கினி வீசினார்கள்....

''வேண்டாம் மாமா....ஏதோ பாவம் பண்ணியிருக்கோம்.... அதான்,கல்யாண வயசுல பெத்தவங்களைப் பறிகுடுத்துட்டு நிக்கிறோம் நானும் தங்கச்சியும்....இன்னும் ஒரு பொண்ணு பாவத்தை வேற கையிலேந்தணுமா....அப்பிடி நான் செஞ்சேன்னா,முதல்ல,என்னைப் பெத்தவங்க ஆத்மாவே என்னை மன்னிக்காது'

என்று உறுதியாகவும்,இறுதியாகவும் பேசி சர்ச்சைக்கு முற்றுப் புள்ளி வைத்தான் மூர்த்தி....அந்த சமயங்களில் எல்லாம்,இதே அருணா எத்தனை முறை கிருஷ்ணாவுக்கு போன் போட்டு

''கண்ணு.கிருஷ்ண வேணி,நடக்கக் கூடாதது நடந்திட்டு..... ஊரு உலகத்துல நாலு பேரு வந்து,அதை இதை சொல்லி மனசைக் கலைப்பாங்க....தலை அசைச்சிராதீங்கம்மா.....நிச்சயம் பண்ணிட்டாலே,பாதி கல்யாணம் முடிஞ்சா மாதிரிதான்... ஒரு பொண்ணு புள்ள காரியம்...நீதான் உங்க அண்ணனுக்கு எடுத்து சொல்லணும்'' என்று கிருஷ்ணாவின் காலைக் கழுவி தண்ணீர் குடித்தவள் தான்...இன்று தனக்கு நிகரில்லை என்று பேசுகிறாள்....புத்தி அவ்வளவுதான்....ஆனால்,ஒரே ஆறுதல்....

தாயைப் போல இல்லை பிள்ளை....ஆம்...அண்ணி சுகந்தி எவ்வளவோ தேவலை....தன்னுடைய கல்யாண வேலைகளின் போதுதான் ,மூர்த்தி,கிருஷ்ணாவின் பெற்றோருக்கு இந்த நிலை வந்தது என்று கலங்கி,தார்மீகப் பொறுப்பேற்றுக் கொண்டாள்.... என்றாலும் சமயங்களில்,காரணமில்லாமல் முகம் காட்டுவாள்.... அதையெல்லாம் கிருஷ்ணா பெரிது படுத்துவதில்லை....நமக்கு ஒரு சகோதரி இருந்து அவள் கோபித்தால் கேட்டுக்கொள்ள மாட்டோமா என்று பெருந்தன்மையாகக் கடந்து போய் விடுவாள்....அதே சமயம் சுகந்தியும், தன் குடும்பத்தாரிடமோ,வெளியாட்களிடமோ,நாத்தனாரை விட்டுக் கொடுத்ததில்லை என்பதையும் சொல்லித்தான் ஆக வேண்டும்...இது போல் அந்நிய நபர்களின் கை வரிசையால் கூடு சில சமயம் ஆட்டம் காண்கிறது.....அதனாலென்ன.... விரைவில் இயல்புக்குத் திரும்பி விடும் தந்திரமும் அதற்குத் தெரியும் என்று தன்னை சமாதானம் செய்து கொண்டு தூங்க சென்றாள் கிருஷ்ணா.....சம்பவங்களைப் பின்னோக்குவதில் ஒரு சோகமும்,அதற்குள் ஒரு சுகமும் ஒளிந்துதானே உள்ளது....

## 4

களக்காட்டில் மூர்த்தியின் அத்தை ஒருத்தி இருக்கிறாள்...பெயர் பவளம்.... ஒத்தைகட்டை....மாமா போய் சேர்ந்து ஒரு சில வருடங்களாகிறது...இருந்திருந்தாலும் அவர் ஒன்றும் சாதித்து விடப் போவதில்லை....ஏனெனில் அத்தை சம்மதமில்லாமல் அவர் மூச்சு கூட விட முடியாது...''மூர்த்தி....மாமாவுக்கு சமர்த்து போறாதுடா'' என்பாள்...கழுத்தைப் பிடித்துக் கொண்டு ஒருவர் அருகிலேயே இருந்தால்,சமத்தும்,சாதுர்யமும் எங்கேஇருந்து வரும்....தவறு தன்னுடையதுதான் என்றுணராத,உணர்ந்தாலும் ஒப்புக்கொள்ளாத ஒரு வினோதம்....இப்படிப் பல வினோதங்கள் நாட்டில் உண்டு என்பது ஒரு பேருண்மை...அத்தைக்கு .குழந்தைகளும் இல்லை...கொஞ்சம் நில புலன்கள் உண்டு....பத்து வருடங்களுக்கு முன்பே எல்லாவற்றையும் வந்த விலைக்கு விற்று,வங்கியில் போட்டு வைத்தாயிற்று.எந்தப் புள்ளையை படிக்க வைக்கப் போறோம்...எந்தப் பிள்ளைக்கு நகை போட்டு

அழகு பார்க்கப் போறோம் என்பாள் வேதனையுடன்.......வரும் வட்டியில் ஓடுகிறது வாழ்க்கை வண்டி...மூர்த்தி,கிருஷ்ணா மீது தனிப் பிரியம் பவளம் அத்தைக்கு....அடிக்கடி வீட்டுக்கு அழைப்பாள்....சேர்ந்தாற்போல் மூன்று மாதங்கள் மூர்த்தியைப் பார்க்கவில்லையெனில்,ஆள் அனுப்பி விடுவாள்...மூர்த்தி அலறி அடித்துக் கொண்டு ஓடினால்,

''இந்தக் கட்டை கெடக்கற வரை,மாசத்துக்கொருதரம் வந்து எட்டிப் பார்த்துட்டுப் போய்யா'' என்பாள் அசால்ட்டாய்... அவனுக்கு முதலில் கோபம் தலை தூக்கினாலும்,'சரி....இப்படி அன்போடு நம் வரவை எதிர்பார்க்கவும் தான் யாரிருக்கிறார்கள்... தாயா..தகப்பனா...ஒன்றுமில்லை...இந்த கிழவியின் பாசத்து க்கான பாத்தியதையாவது தனக்கு இருக்கிறதே' என்று தன்னை தேற்றிக் கொள்வான்....ஆகையால், பிள்ளைகளுக்கு மூன்று நாட்கள் விடுமுறை வரவும் குடும்பத்துடன் களக்காடு கிளம்பி விட்டது மூர்த்தி குடும்பம்....கிருஷ்ணா முதலில் வரவில்லை என்று மறுக்கத்தான் செய்தாள்....

''இல்லண்ணா....நீங்கள்லாம் போயிட்டு வாங்க....ஒரு நாள் கம்பெனியை பூட்ட வேண்டியது வரும்''

''வாயேம்மா...வருஷம் பூரா கம்பெனியில கெடந்துதான மண்டையை உடைச்சுகிட்டு இருக்க....''----

''அத்தை ...ப்ளீஸ்...வாங்க அத்தை...அப்பத்தான் ஜாலி''----திஷா

''கிருஷ்ணா...மரியாதையா வந்துடு..இல்ல...உங்க அத்தைக்கு பதில் சொல்ல முடியாது...அவ அவ்ளோ பெரிய ஆளா ஆயிட்டாளான்னு பொருமிப் போவாங்க....ஏன் அவளைத் தனியா விட்டுட்டு வந்தே... நீ போயி அவளை கையோட கூட்டிட்டு வந்தாலே ஆச்சுன்னு உங்க அண்ணனைத் திருப்பி கூட அனுப்பிருவாங்க...''----சுகந்தி...

''அண்ணி சொல்றது வேலிட் பாயின்ட்.....அத்தை அப்படி செய்யக் கூடியவங்கதான்....ஒழுங்கா கிளம்பி வந்துடறேன்'' என்று கிருஷ்ணா சொல்லவும் பிள்ளைகள் ஒரே சந்தோஷக் கூச்சல்.... ஏனெனில் அவர்களுக்கு பொம்மையும் அவள்தான் அம்மையும்

அவள்தான்...ஆப்பம் ,தேங்காய்ப் பால்,கடலைக்கறி என அத்தை வீட்டில் காலை டிபன் அமர்க்களப்பட்டது......அத்தையின் சமையலில் எப்பொழுதுமே நாகர்கோயில் சாயல் அடிக்கும்.... வந்தவர்களிடம் பேசிக்கொண்டு இருந்தது போல்தான் இருக்கும்... ஆனால்,குறித்த நேரத்தில் உணவும் தயாராகிவிடும்....பெரிய வீடு என்பதால்,பிள்ளைகள் அங்குமிங்கும் ஓடிக்கொண்டே ஜாலியாக சாப்பிட்டார்கள்.... உணவு முடிந்து சிறிது நேரம் அனைவரும் ஆசுவாசமாய் அமர்ந்தார்கள்...

''ம்ஹூம்....நேத்து கூட உங்க அப்பா சண்முகத்தை நெனச்சேன் .....கேளு... மூர்த்தி...எங்களுக்குள்ள அப்படி ஒரு பாசம்....எனக்கு காரியம் பண்ணி அனுப்பி வைப்பான்னு இருந்தேன்....அவன் நீ இருந்து இல்லாததையும் பாருன்னு போயிட்டான்.....மாலையும்,மஞ்சளும்,புது துணியும்,முகத்துல சாந்தமும்,கொட்டும்,மேளமும்,உங்க அப்பா அம்மா ஜோடி கட்டிக்கிட்டு,மயானம் போன வயித்தெரிச்சலை வார்த்தையில சொல்ல முடியுமா....'' என்று உண்மையான துயரத்துடன் புலம்பினாள் பவளம்.....மூர்த்தி கிருஷ்ணாவின் முகம் மாறுவதைக் கண்டு பேச்சை மாற்றினாள்....

''குட்டிகளா...எங்க வீட்டுல வெளையாட்டு சாமானெல்லாம் ஒண்ணுமில்லையே....உங்களுக்கு பொழுது போகணுமே....''

''அதெல்லாம் வேண்டாம் அத்தை...நாளைக்கு கார் எடுத்துகிட்டு,பக்கத்துல எங்கியாவது போயிட்டு வரலாம்னு இருக்கோம்''----மூர்த்தி

''தாராளமா போய் வாங்க....நான் புளி சோறு,தயிர் சோறு எல்லாம் கட்டித் தாரேன்.....நல்ல இடங்கள்லாம் இருக்கு... எத்தனை தரம் பார்த்தாலும் சலிக்காத இடங்கள்லா''

''புளி சோறா'' என்று சுகந்தி உள்பட பிள்ளைகள் முகம் சுழித்தார்கள்....ஆனால் மறு நாள்....களக்காடு தலையணை அருவியில் வைத்து அதே புளியோதரையும்,புளிக்காத தயிர் சாதமும்,தொட்டுக் கொள்ள தேங்காய் துவையலும்,கூழ் வடாமும்,அமிர்தமாய் சுவைத்தது....அதுவும் குளியலும், தலை கூட துவட்டாமல்,அங்கேயே அமர்ந்து ஒரு தட்டு சாதமும் .... தெவிட்டாத ஆனந்தமாகவும், ....குழந்தைகளுக்கு புது

அனுபவமாக இருந்தது....அண்ணனும் தங்கையும் ஆளுக்கொரு குழந்தையை தூக்கி வைத்துக் கொண்டு குளிக்க வைத்தனர்.... குரங்குகள் வேறு ஆங்காங்கே நின்று கொண்டு குறும்புகள் செய்து கொண்டிருக்க,ஜில் தண்ணீர்,மூலிகை மரங்களின் வாசம்,எல்லாம் சேர்ந்து அனைவரையும் வேறு உலகத்திற்கு அழைத்து சென்றது....அங்கேயே சிறுவர் பூங்காவும் இருந்தது....அதையும் விடவில்லை....மதியம் களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகத்திற்கு சென்றார்கள்...அங்கு புலிகள் தவிர,மான்வகைகள், சிங்க வால் குரங்கு,கழுதை,காட்டுப் பூனைகள்,யானைகளைப் பார்க்க முடிந்தது...அங்கும் கூட இரண்டு அருவிகள் விழுந்து கொண்டு இருந்தன...சுற்றிலும் காடுகள் நிறைந்த இடம்...

''அண்ணா....இங்க மலையேற்றம் உண்டுதான''

''உண்டும்மா...கெஸ்ட் ஹவுஸ் கூட இருக்கு...ஒரு அவசரத்துக்கு ஸ்டே பண்ணிக்கலாம்''

அங்கிருந்து கொடுமுடியார் நீர்த்தேக்கம்,குத்திர பாஞ்சான் அருவி,வடக்கு பச்சையார் அணை,மாஞ்சோலை என்று ஒரு ரவுண்ட் அடித்தார்கள்,கடைசியாக களக்காடு பெரிய கோவில் சென்று, சத்திய வாக்கீச்வரர்,கோமதி அம்மனை தரிசனம் செய்தார்கள்...

''என்னங்க... இங்கதான சூரிய ஒளி நேரே சுவாமி மேல விழும்''-சுகந்தி

''ஆமா...மார்ச் மாசம்....சூரியன் அப்படியே கை நீட்டித் தொட்டு சாமி தரிசனம் பண்றாப்புல இருக்கும்..''

''ம்ம்...எவ்வளவோ அதிசயங்களும்,அற்புதங்களும் உலகத்துல நடந்துட்டுதான் இருக்கு....நாமதான் எதையும் கண்டுக்காம ஒரு ரொட்டின் வாழ்க்கைக்குள்ள நம்மளை திணிச்சுக்கிறோம்''என்றாள் கிருஷ்ணா...

''இந்த கோபுரம் இருக்குல்ல அண்ணி,அதோட நிழலே பூமியிலே விழாதாம்....ஐயர் சொன்னாரு''

''ஆமாமா...நானும் கேட்டேன்...என்னா அறிவு''

விபூதியை மனைவியிடம் தர வந்த மூர்த்தி,

''என்னையப் பத்தி உனக்கு இப்பதான் தெரிஞ்சுதா''

சுகந்தி புரியாமல் புருவம் சுருக்க,

''என்னா அறிவுன்னு பாராட்டிக்கிட்டு இருந்தியா... அதை

சொன்னேன்''

வாய் பொத்தி சிரித்த கிருஷ்ணா....

''அண்ணா....வந்த இடத்துல வாங்கிக் கட்டாத....மரியாதையா போயி பிரசாதம் ஏதாவது போட்டாங்கன்னா வாங்கிட்டு வா'' என்றாள்...

''ஆமா....அதை செய்யுங்க...இன்னிக்கு என்னவோ ரொம்பப் பசிக்குது''

''அருவித் தண்ணியில குளிச்சா அப்படிதான் அண்ணி இருக்கும்''

''ஆமா....சுகந்தி....அருவிகளோட மகத்துவம் அப்படி....சரி,...பிள்ளைகளைக் கையில பிடிச்சிக்கங்க...''

அப்படியே தாமரைக் குளத்தையும் ஒரு பார்வை பார்த்துவிட்டு,முழு அசதியில்அனைவரும் அத்தை வீடு வந்து விழுந்தனர்....அத்தை சுடச் சுட இட்லியும்,தக்காளி சட்னியும்,செய்திருந்தாள்.... வயிறார உண்டனர்....பிள்ளைகள் உறங்கி விட,உடனே படுக்க மனமில்லாததால் பெரியவர்கள் பேச உட்கார்ந்தனர்....அத்தையும் நாலு இட்லியை தட்டில் எடுத்துக் கொண்டு வந்தாள்...

''பிள்ளைகளுக்கு குடிக்கப் பால் குடுக்கலாம்னு இருந்தேன்....அதுக்குள்ள தூங்கிட்டுதுக....பாவம் ஊர் சுத்துன அலுப்பு''----என்றாள் வாஞ்சையுடன் பவளம்...

''அத்தை...கொஞ்ச ஆட்டமா போட்டுருக்காளுக....நல்லா கால் வலி இருக்கும்''

சிரித்தாள் பவளம்...

''விவரம் தெரிஞ்சு அதுகளை இப்பதான சுத்திப் பாக்க கூட்டிப் போயிருக்க...அதான்,...''

''நீங்க செஞ்சு குடுத்த சாப்பாடும் நல்லா இருந்துச்சு பெரியம்மா''---சுகந்தி...

''ஆமா....இந்த புளி சோறும்,தயிர் சோறும் பிரமாத சாப்பாடு போ'', என்று சொன்னாள் பவளம்,பிள்ளைகளின் பாராட்டை உள் மனதுள் ரசித்தவாறே....

''அத்தை...அந்த அருவி குளியலுக்கும் ,நீங்க தந்த சாப்பாட்டுக்கும்.....சூப்பர் ...இன்னும் எனக்கு நாக்குல

ருசி நிக்குது''----என்று சிலாகித்து சொன்னாள் கிருஷ்ணா....

''எங்க வச்சி சாப்பிட்டீக''---பவளம்..

''தலையணையில வச்சி....என்னம்மா இருக்கு...தண்ணி கண்ணாடிபோல இருக்கு....மூங்கில் தொங்கு பாலத்துல பிள்ளைகள் பயப்படாம நடக்குதுக அத்தை...''

''சிறுசுகளுக்கு பயம் தெரியாதுல்லா....மரக்குடிலும் ஒண்ணு உண்டுல்லா...பிளாஸ்டிக் பை,சோப்பு,இதுகளையெல்லாம் தடை பண்ணிட்டாக...நல்ல பராமரிப்பு''

''ஆமாமா...சும்மா சொல்லக்கூடாது...அப்பிடியே கொடுமுடியார் நீர்த்தேக்கம் போயிட்டோம்....''

''ம்ம்....அதுவும் பார்வைக்கு நல்லாயிருக்கும்....இங்கன கூடி விவசாயத்துக்கு அதுல இருந்துதான் தண்ணி தெறக்காக .... மாஞ்சோலை போனீகளா''

''ஆமாத்தை...அழகழகா மயில்... தோகை விரிச்சி செம ஆட்டம் போட்டுதுங்க....டீ எஸ்டேட்தான் நிறைய இருந்துச்சி...பனி அதிகம்...''என்று சொன்ன கிருஷ்ணாவிடம்.....

''எஸ்டேட் தொழிலாளர்களுக்கு அழகா ஒண்ணு போல வீடு கட்டிக் குடுத்து இருக்காங்க பார்த்தியா''

''ஆமா...பார்த்தோம்'''

''அங்க யானைக நடமாட்டம் உண்டு...அதனால காரு,வேன்லதான் போகணும்னு இப்ப கட்டாயமாக்கிட்டாக''

''குத்திர பாஞ்சான் அருவி,வடக்கு பச்சையார் அணை,பெரிய கோயில் அப்பிடின்னு வரிசையா...''

''ஒண்ணையும் விட்டு வைக்கலை போல''என்று பவளம் சிரிக்க,

''ஆமா...பெரிம்மா....பார்க்க பார்க்க ஆசை வந்திட்டு....''

''ஆமா...அது சரிதான்.சிவன் கோயில்ல இசை தூண்கள் இருக்கு பார்த்தியா....இன்னைக்கெல்லாம் பார்த்துட்டு இருக்கலாம் போல இருக்கும்.....மூர்த்தி நீ எல்லா இடமும் ஏற்கெனவே பார்த்து இருப்பேல்லா'''

''ஆமா....பிரண்ட்ஸ் கூட வந்து போயிருக்கேன்''

''அடிக்கடி இப்படி எங்கேயாவது கூட்டிப் போனாதான்,பிள்ளைகளுக்கு ஒரு சந்தோசமா இருக்கும்....''

''ஆமா பெரிம்மா... உங்களுக்கு பொழுது எப்பிடித்தான் போகும்''---சுகந்தி

''அரிசி ஆழாக்கானாலும்,அடுப்புக் கட்டி மூணு வேணும்பாக.... அது போல பையத்தான் வேலை நடக்கும்....உங்களைப்போல ஓடியாடிஎல்லாம் என்னால செய்ய முடியாது....''

''அத்தை.... காமெடி பண்ணாத...ஓடியாடி வேலை செய்றதா.... அதெல்லாம் உன் காலத்தோட போச்சு....இப்ப ஓட்டம் கிடையாது... ஆட்டம் மட்டும்தான்'' என்று மூர்த்தி சொல்ல...

''நீ சொல்றது வெளங்கலப்பா....''

''கோவம் வந்தா ஆட்டமா ஆடுவாங்கள்ல ...அதை சொன்னேன்''

சுகந்தி கணவனை முறைக்க....பவளம்தனது பானை வயிற்றைப் பிடித்துக் கொண்டு சிரித்து முடித்தாள்....

''நீங்கள்ல்லாம் வரவும் தான் வீடு மாதிரி கலகலப்பா இருக்கு... எப்பவும் நான் ஒருத்திதான் பேய் மாதிரி நடமாடுவேன்''

சிறிது நேர அமைதி....நிஷா தூக்கத்தில் எழுந்து அமர்ந்து தண்ணீர் கேட்க,கிருஷ்ணா அவளை கவனிக்கப் போக...

''கிருஷ்ணாவுக்கும் தாலி கட்டிப் பார்த்துட்டம்னா ,என் கட்டை வெந்துரும்....அதுக்கு அந்த கோமதியம்மா கண் தொறக்க மாட்டேங் காளே''

''கோமதியம்மா கண்ணும் தொறக்கணும்....இல்லேங்கலை... உன் மருமக வாயும் தொறக்கணும்லா ''

''அவ மனசுல என்னதாம்யா இருக்கு....ஏன் கல்யாணம் வேண்டாம்கா...கேட்டுப் பாத்தியா''

''கேக்காமலா....பதில் வர மாட்டேங்குதே...அந்த சம்பவம் அவளை ரொம்ப பாதிச்சிட்டுது''

''என்னதாம்ப்பா நடந்தது....உங்கப்பா லேசு பாசா ஏதோ சொன்னான்....எனக்கு சரியா புரிபடல....'' என்றாள் பவளம் ஆதங்கத்துடன்....

''கடைசியா அவளுக்குப் பார்த்த மாப்ள வீடு....பையனுக்கு சொந்த ஊரு பணகுடி....குடியிருந்தது திருனவேலி டவுன்ல.....சொந்தமா பிரிண்டிங் பிரஸ் வச்சிருந்தான்....

ஜாதகம் பொருந்தியிருந்துச்சு.....மாப்ள,அவன் அப்பா,தங்கச்சி குடும்பம் எல்லாம் வந்து பாத்துட்டு பொண்ணு பிடிச்சிருக்குன்னு சொல்லிட்டுப் போயிட்டாங்க...நாங்களும் மாப்ளையைப் போய்ப் பார்த்தோம்....நல்லாத்தான் இருந்தான்...கழிக்கற மாதிரி இல்ல... அக்கம் பக்கம் விசாரிச்சோம்...பையனைப் பத்தி நல்ல மாதிரிதான் சொன்னாங்க....கல்யாணத்தை எங்க வச்சிக்கிடலாம்,எப்ப நடத்தலாம்னு வரை பேச்சு வந்திட்டு...''

''ஏம்ப்பா...பையனுக்கு அம்மா இல்லியா''

''கதையைக் கேளு அத்தை.....பையனோட அம்மா உடம்பு சரியில்லாம இருந்தாங்களாம்....அதனால,ஆகக் கடைசியா அந்தம்மா பொண்ணு பாக்க வந்திச்சு....கிருஷ்ணாவைப் பாத்துட்டு,''மத்ததெல்லாம் மனசுக்கு திருப்திதான்.... ஆனா,பொண்ணு கருப்பாள்ல இருக்கா.....எம்புள்ள வம்சமே கருப்பாப் போயிருமே''அப்பிடின்னு சிரிச்சுகிட்டே கிருஷ்ணா முன்னாலேயே சொல்லிட்டுப் போயிருச்சி''

''அடப் பாதகத்தி....இப்பிடியா பேசுவா'' என்று மோவாய்க் கட்டையில் கை வைத்து வாய் பிளந்தாள் பவளம்....

''அந்தம்மாவுக்குத் தெரிஞ்சது அவ்ளோதான்.... ஆனா,அவுக வீட்டுல எல்லாருக்கும் சம்மதம்தான்..திருப்பியும் ..ஆளனுப்புனாக.... கிருஷ்ணா முடியாதுனுட்டா....''

''ஏம்ப்பா''

''அந்தம்மாவுக்கு என்னைப் பிடிக்கலை...எனக்கு அந்தம்மாவைப் பத்தி நல்ல அபிப்ராயம் இல்லை....இந்த லட்சணத்துல கல்யாணம் நடந்தா,அது எந்த விதத்துலயும் சிறப்பா இருக்காது...'' அப்பிடினுட்டா....'' என்றான் மூர்த்தி பெருமூச்சுடன்....

''அந்தப் பயலுக்கு குடுத்து வைக்கல....அப்படித்தான் சொல்லணும்....கிருஷ்ணா...நிறம் கொஞ்சம் மட்டுதான்....மத்த படி,அழகும்,அறிவும்,கெட்டிக்காரத்தனமும்,பதமும்,பக்குவமும் யாருக்கு வரும்....''

''ஆமா...பெரிம்மா...அந்த குடும்பத்துக்கு அருகதை இல்லை...'''என்றாள் சுகந்தியும் வருத்தத்துடன்....

''ச்சரிப்பா...அவன் போனா என்ன...ஊரு உலகத்துல வேற

மாப்பிள்ளையா இல்ல''

''இத்தோட எனக்கு மாப்பிள்ள பாக்கறதை நிறுத்துங்கப்பா... ஒவ்வொருத்தர்கிட்டயா என்னால அசிங்கப்பட முடியாது அப்பிடின்னு அப்பாகிட்டயே கறாரா சொல்லிட்டா....அதான் அப்பா,வீட்டுக்கு மருமக வந்தபிறகாவது அவளுக்கு ஒரு நல்லது நடக்கட்டும்னு,எனக்கு பொண்ணு பாத்து நிச்சயம் பண்ணினாங்க''

''மூர்த்தி இப்ப அவளுக்கு வயசு என்னப்பா''

''முப்பத்தெட்டு நடக்கு''

''இன்னிக்கு காலத்துக்கு இது ஒரு பெரிய வயசுன்னு சொல்லமுடியாது....கோமதியம்மா மனசு வச்சு அவளுக்கு ஒரு மாலை கட்டட்டும்....நடக்கும்...நேரம் கூடி வந்தா நிக்காது''

அடுத்த அறையில் பிள்ளைகளுடன் படுத்து இருந்த கிருஷ்ணாவுக்கு எல்லாம் காதில் விழத்தான் செய்தது...அவளைப் பொறுத்த அளவில் கல்யாணம் காட்சி எல்லாம் முடிந்து போன கதை....போகாத ஊருக்கு எப்படிக் கேட்டால் என்ன... யாரிடம் கேட்டால் என்ன.....

## 5

ஒரு மினி சுற்றுலா போய் வந்தது,உடலுக்குத் தெம்பாகவும்,மனம் கழுவி விட்டாற்போல்,பளிச்சென்றும் இருந்தது மூர்த்தி குடும்பத்தாருக்கு... அண்ணனும் தங்கையும் அத்தையைப் பற்றி அடிக்கடிப் பேசிக் கொண்டனர்....

''தைரியம்தான்...இல்லண்ணா....அவ்ளோ பெரிய வீட்டுல அத்தை ஒரு ஆளா சுத்தி வாராளே பயமில்லாம''என்று திஷாவுக்கு தலைப் பின்னிக் கொண்டே சொன்னாள் கிருஷ்ணா....

''ஆமா....அந்த ஊர்ல இன்னிக்கி நேத்தா இருக்கா.... காலகாலமா பழகின ஊரு....அதுவும் தவிர அத்தைகிட்ட ஒருத்தன் வம்பு வச்சிக்கிட முடியுமா....அந்த உருவத்துக்கும்,குரலுக்குமே பயந்து ஓடிருவான்.....''

''அது சரி....இருந்தாலும்...அந்தத் தனிமை...அது ஆளைக் கொல்லாம கொல்லுமே..தப்பிக்க முடியுமா''

''நீ அவளுக்காக கவலைப்படறே....அவ உன்னைய நினைச்சி

உருகித் தவிச்சிப் போறா....''----இதுதான் சாக்கு என கிடைத்த சந்தர்ப்பத்தில் அவள் கல்யாணப் பேச்சை எடுக்க முயற்சித்தான் மூர்த்தி...

''ஏன்...எனக்கென்ன''

''உனக்குள்ள மைனஸ் என்னன்னே மறந்துட்டியா...அல்லது உனக்கு இன்னும் கல்யாணமாகலேங்கறதை நீ மைனசாகவே நினைக்கலியா''

சிரித்தாள் கிருஷ்ணா..

''என்னம்மா சிரிக்கறே''

''நீ ரெண்டாவது சொன்னே பாரு...அதுதான் உண்மை....அது சரி..அத்தை நான் கல்யாணம் பண்ணிக்காம இருக்கேன்னுதான் கவலைப்பட்டாளா....''

''ஆமா...வேறென்ன....''

''செம காமெடி....அத்தை கல்யாணத்தை பண்ணிட்டு என்னத்தை அள்ளிக் கட்டிகிட்டாளாம்....''

''கிருஷ்ணா....வாழ்க்கை எல்லாருக்கும் ஒண்ணு போல இருக்காது....இங்க ஒவ்வொருத்தருக்கும்,தனித் தனி கொஸ்டின் பேப்பர்....ஒருத்தரோட ஒருத்தரை ஒப்பிட முடியாது.....''

''கரெக்ட் அண்ணா...அதத்தான் நானும் சொல்றேன்.... என்னோட கொஸ்டின் பேப்பர் பாதிக்கு மேல ப்ளைனா இருக்கு.... அது என்னோட தப்பில்லையே''

''பரீட்சையே அட்டெண்ட் பண்ணாம கொஸ்டின் பேப்பரை குறை சொன்னா எப்படிம்மா...''----என்றான் மூர்த்தி பரிதாபமாக....

''பிட் அடிச்சாவது பாஸ் பண்ணிடணும்னு நினைக்கலை நான்....கடவுள் எனக்கு ஹால் டிக்கெட்டே தரலை....அதனால நானும் பரீட்சை,படிப்புன்னு எந்த சிந்தனையும் இல்லாம ஜாலியா சுத்திட்டு இருக்கேன்....நீ ஏண்ணா இதையே சிந்திச்சு,உன் மனசைப் புண்ணாக்கிக்கறே.....ப்ரீயா விடு.....''

பெருமூச்சு விட்டான் மூர்த்தி.....இப்போதைக்கு அவனால் அது ஒன்று தான் செய்ய முடிகிறது...

''சரி.....நிஷா உங்கம்மாவை எங்கே....இன்னுமா எழுந்துக்கலை....''

''இல்லப்பா''

மூர்த்தி படுக்கை அறை சென்றான்...

சுகந்தி உருண்டு உருண்டு தூங்க முயற்சித்துக் கொண்டிருந்தாள்....

அருகில் சென்று தொட்டு எழுப்பினான்....

''சுகந்தி....ஏய் ..சுகந்தி....டிபன் பண்ணலியா''

அரைத் தூக்கத்தில் கண்களை லேசாக விரித்து கணவனைப் பார்த்தாள்....அந்தப் பார்வையில் சினேகமோ,கோபமோ ,விருப்போ ,வெறுப்போ எதுவுமின்றி,வெற்றுப் பார்வையாக இருந்து....மூர்த்திக்கு அடிவயிற்றில்,நெருப்புப் பந்து சுழன்று அடித்தது....கடவுளே....என்ன இது....

''கிருஷ்ணா.....இங்க வாயேன்''என்று அவசரமாக இரைந்தான்....

குரலில் இருந்த அவசரத்தைப் புரிந்து கொண்டு ,அவளும் வேகமாக ஓடி வந்தாள்...'' என்னண்ணா''

''அண்ணி பார்வையே சரியில்லையே''

''அப்படியா....அதான் படுத்தே இருக்காங்களா....நான் டூர் போயிட்டு வந்த டயர்டுல இருக்காங்க போலன்னு நினைச்சேன்''

''நேத்து நார்மலா இருந்தாளா கிருஷ்ணா...''

''இல்லண்ணா....கிட்சன் வொர்க்லாம் நான்தான் பாத்துகிட்டேன்''

''களக்காடு போயிருந்தப்போ சுகந்தி மாத்திரை போட்டுகிட்டாளா''

''கரெக்ட் நீ சொல்றது...அதுதான் பிரச்சினையாகி இருக்கணும்... அண்ணியோட மாத்திரை டப்பாவை செக் பண்ணாத் தெரிஞ்சுடும்'' என்று சொன்னவள்,மாத்திரைகளை எண்ணிப் பார்த்தாள்....

''அண்ணா...சரிதான்....நீ முப்பது நாளைக்குத்தான மாத்திரை வாங்குவே....கணக்கு இடிக்குது....தேதிக்கும்,மாத்திரைக்கும்... அண்ணி மாத்திரையை ஊருக்கு எடுத்துட்டே வரல போல''

''ஆமா...கார் ஏறிக் கொஞ்ச தூரம் போனதும் ஐயோ மாத்திரை டப்பாவை மறந்துட்டேனேன்னு அம்மா சொன்னாங்க.. அப்புறம் அப்பாகிட்ட சொல்லிடாத..திட்டுவாங்கன்னும் சொன்னாங்க''-நிஷா.

''ம்ம்...எல்லாம் இப்ப வந்து சொல்லு''-என்றான் எரிச்சலுடன்...

''அண்ணா...அவகிட்ட ஏன் கோவிச்சுக்கறே..... நாமளே கண்டுக்கலை ..குழந்தை என்ன செய்வா'' தலையைப் பிடித்துக் கொண்டு நாற்காலியில் அமர்ந்தான்...

''என்னம்மா செய்றது....'' என்றான் மூர்த்தி இடிந்து போய்...

''சரிண்ணா....விடு....நாம பாக்காததா....சமாளிப்போம்''

''இல்லம்மா.....டாக்டர் திட்டுவாரே....மாத்திரை டெய்லி போடறாங்களா ன்னு கூட பாக்க முடியலியாம்பார்...''

''சொல்லத்தான் செய்வாரு....அதுக்கு மேலயும் கூட கேவலமாத் திட்டத்தான் செய்வாரு.....கேட்டுகிட வேண்டியதுதான்....நம்ம மேல தப்பு இருக்குல்ல''

சுகந்தி எழுந்து அமர்ந்தாள்....

''ஏன் சுகந்தி இப்பிடிப் பண்றே....எத்தனை நாளா மாத்திரை சாப்பிடல''

''எதுக்கு மாத்திரை''-என்றாள்...

''அண்ணி....நீங்கடெய்லிதவறாமமாத்திரைபோட்டுக்கணும்னு டாக்டர் சொல்லியிருக்காருல்ல.....அது தெரியும்ல உங்களுக்கு''

''போ....பெரிசா எனக்கு புத்தி சொல்ல வந்துட்டா''

'சரிதான்....செத்தோம்' என்று நினைத்துக் கொண்டான் மூர்த்தி....ஏனெனில்,இது மாதிரி நேரங்களில்,அவளுக்கு மூர்த்தியும்,கிருஷ்ணாவும் பரம எதிரிகளாகி விடுவார்கள்... வாய்க்கு வந்தபடி திட்டத் தொடங்கி விடுவாள்....

''பசிக்குது'' என்றாள் சுகந்தி பாவமாய்....

ஒன்றும் பேசாமல் கிருஷ்ணா தட்டில் இட்லி சட்னி எடுத்து வந்து கொடுத்தாள்....பல நாள் பட்டினி கிடந்தவள் போல, ஆவலாய் உணவு சாப்பிடும் மனைவியைப் பரிதாபமாய் பார்த்து விட்டு,அறையை விட்டு வெளியேறினான்.... 'திடீரென்று நிலைமை மோசமாகி விட்டதே..எதிர்பார்க்கவேயில்லை' என மனம் குமைந்தான் மூர்த்தி....அதே சமயம் கிருஷ்ணா சூழ்நிலையைப் புரிந்து கொண்டு ,முழு வீட்டு நிர்வாகத்தையும் கையில் எடுத்துக் கொண்டாள்...அவளுக்குப் புதிதில்லையே இது.....பிள்ளைகளுக்கு உணவு கொடுத்து, பள்ளிக்கு அனுப்பி விட்டு,தானும் குளித்துக் கிளம்பி அண்ணனிடம் வந்தாள்

கிருஷ்ணா....

''அண்ணா.... அண்ணியோட டாக்டருக்கு போன் போட்டியா''

''ஆமாம்மா...அவருஊர்ல இல்லியாம்....வர நாலு நாளாகுமாம்....'''என்றான் கவலையுடன்....

''அப்படியா...சரி....சமாளிப்போம்....அண்ணா...சாப்பிட வா....நான் கம்பெனிக்குப் போயிட்டு மதியம் வந்திடறேன்''

''சரி....அப்ப,நான் மதியத்துக்கு மேல கடைக்குப் போறேன்''என்றபடி சாப்பிட அமர்ந்தான் மூர்த்தி....

கம்பெனிக்கு வந்து விட்டாலே ஒழிய,மனம் ஒரு நிலையில் இல்லை கிருஷ்ணாவுக்கு.....வீட்டு நிலையே கண்ணுக்குள் நிழலாடியது....அண்ணனையும், குழந்தைகளையும் நினைத்துப் பார்த்தால் பாவமாக இருந்தது....இரண்டு ஆர்டர்களை டெலிவரி பண்ண வேண்டியது இருந்தது.....ஆர்டர் குறிப்பைப் பார்த்து பொருட்களை பெரிய அட்டைப்பெட்டியில் அடுக்கினாள்... அதற்குள் சங்கர் வந்து விட,மிச்ச வேலையை அவனுக்குக் கை மாற்றினாள்....பவானி அரைப்பு வேலைகளை முடித்து,மிளகாய்த் தூளை பெரிய அலுமினிய ட்ரேயில் தட்டி உலர வைத்தாள்....நாற்காலியில் எங்கோ பார்வை வெறித்தபடி அமர்ந்து இருந்த கிருஷ்ணாவின் அருகில் வந்த பவானி...

''அக்கா....என்னக்கா ஒரு மாதிரியா இருக்கீங்க.....பிள்ளைகளுக்கு உடம்பு சரியில்லையா''

''இல்லியே''

''உங்க முகமே சரியில்லையே...என்னவோ மாதிரி இருக்கீங்க'''

பவானியை ஏறிட்டாள் கிருஷ்ணா....மனதில் அழுத்திக் கொண்டிருந்த பாரம் வெளியேறத்துடித்தது....அதற்கு விடுதலை தந்தாள்..

''எங்க அண்ணி இருக்காங்கள்ல''

''ஆமா....அவங்க கூட சண்டையா அக்கா''

''அப்படி சண்டை போட்டு இருந்தாங்கன்னா கூட அது,ஊரு உலகத்தைப் போல நார்மலா இருந்து இருக்கும்..ஆனா,அவங்க....''

''ஏதாவது நோயா''

''ஆமா....மன நோய்..டிப்ரஷன்....''

''அய்யய்யோ....என்னக்கா....இப்பிடி சொல்றீங்க..எப்படி வந்துச்சு ...எவ்ளோ நாளா இருக்கு''----அதிர்ந்தாள் பவானி

''கல்யாணமாகி வந்ததும் நல்லாத்தான் இருந்தாங்க....எல்லாமே கொஞ்சம் மெதுவாய்த்தான் செய்வாங்க....பேச்சுகூட அப்படித்தான் இருக்கும்...நாங்க அதைப் பெரிசா எடுத்துக்கலை....அவங்களோட இயல்பு அதுன்னு நினைச்சுகிட்டோம்.....பிள்ளைங்க பிறந்தப்புறம்தான் அந்த நோய் வெளிப்பட்டுச்சு...அந்த நேரம் பெண்களுக்கு ஹார்மோனல் இம்பேலன்ஸ் இருக்குமாம்....அப்ப அகோரமா ஆயிடுச்சி''

''அடக் கடவுளே....குழந்தைகளை யார் பாத்துகிட்டா.... அதுவும் ரெட்டைப் புள்ளைங்க....பைத்தியம் புடிச்சுருமே''

''ஆமா...நீ சொல்றது சரிதான்....அண்ணியோட அம்மா வீட்டுக்கு அனுப்பலை.ஆஸ்பத்திரியில் இருந்து வீட்டுக்குக்கு .. கூட்டிட்டு வந்துட்டோம்....அண்ணியோட அம்மா ஒரு மாசம் இருந்துட்டு,அவங்க வீட்டுக்குப் போயிட்டாங்க....நானும் அண்ணனும் தான் பிள்ளைகளைப் பாத்துகிட்டோம்..அண்ணி மனசு இருந்தா பிள்ளைகளுக்குப் பால் குடுப்பாங்க...இல்லன்னா அதுவுமில்ல....பவுடர் பால்தான் கரைச்சுக் குடுப்போம்.... ஒண்ணைத் தூங்க வைக்கிறதுக்குள்ள இன்னொண்ணு முழிச்சுரும்....அதுக்குப் பசி வந்துடும்....

அப்பப்ப்பா....நானும் அண்ணனும் பட்ட பாடு....வார்த்தையில சொல்ல முடியாது....பல நாள் ராத்திரி பட்டினிதான்..சாப்பிட நேரமிருக்காது....எத்தனயோ நாள் மூணு மணிக்கு அப்புறமாத்தான் தூக்கம்....அப்படி பாடு பட்டு வளர்த்தேன்...அதனாலதான் அந்த பிள்ளைங்க என் கூட ஒட்டிக்கிட்டுதுக...எனக்கும் அதுங்க மேல அப்படி ஒரு பாசம்''

என்று கண் கலங்கினாள் கிருஷ்ணா..அவளைப் பார்த்து தானும் மனம் உருகி கண்ணீர் விட்டாள் பவானி....அன்புக்குரியவர்களின் துன்பங்களை நம்மால் உணர முடியுமே....உணர்ந்து வருந்தினாள் பவானி....

முகத்தை கைத்துண்டால் துடைத்துக் கொண்டு தொடர்ந்தாள் கிருஷ்ணா...

''நல்லா இருந்த அண்ணிக்கு என்ன ஆயிட்டுதுன்னு குழம்பிட்டோம்...நாங்க சுதாரிச்சு இது மன நோயா இருக்குமோன்னு கெஸ் பண்ணி,மன நல டாக்டர்கிட்ட போகவே நாலு மாசம் ஆயிட்டுது..அப்புறம் ஒரு மாசம் ஆஸ்பத்திரியில அட்மிட் பண்ணியிருந்தோம்....அப்ப முழுசா குழந்தைகளை நான் பாத்துகிட்டேன்...அண்ணா, அண்ணி கூடயே இருந்து கவனிச்சு ஓரளவு குணப்படுத்தி வீட்டுக்கு கூட்டி வந்தான்.... ஆனா டாக்டர் அவங்களை கம்ப்ளீட் ரெஸ்ட்ல இருக்கணும்னு சொல்லிட்டாங்க... அப்ப குழந்தைங்க குப்புற விழுந்து தவழ ஆரம்பிச்சுட்டாங்க....இன்னும் கஷ்டம்.அண்ணியோட படுத்தல் வேற....குழம்பு விட்ட சாதத்தை அஞ்சு மாசக் குழந்தை வாயில திணிப்பாங்க....நாம பதறிபோயி அவங்களை தள்ளி விட்டா,என் பிள்ளைகளை என்கிட்டே ஒட்ட விட மாட்டேங்கறான்னு கூச்சல் போடுவாங்க...அண்ணனை அடிக்கப் போவாங்க... மாத்திரை போட மாட்டேன்னு அடம் பிடிப்பாங்க....சமாளிச்சு,மாத்திரை குடுத்து அவங்களைத் தூங்க வைக்கணும்..கடவுளே.......எனக்கும் அண்ணனுக்கும் ரத்தக்கண்ணீர் ஒண்ணுதான் வரலை...''ஆயாச த்துடன் தலை உலுப்பினாள் கிருஷ்ணா...

சிறிது நேரம் அமைதி....

''சுகந்திக்காவுக்கு எப்படி இந்த நோய் வந்துச்சாம்...''

''அதான் புரியல பவானி..சின்ன வயசுல இது போல வந்து இருக்கான்னு கேட்டா ..அவங்கம்மா...இல்லவே இல்லன்னு சாதிக்கறாங்க....அண்ணி மவுனமா இருக்காங்க....கல்யாணத்துக்கு முன்னாலஅண்ணிக்கு டிப்ரஷன் வந்து குணமாகியிருக்கலாம்னு டாக்டர் சொல்றாரு...அண்ணா இதுல ஆர்வம் காண்பிக்கலை.... இப்ப அவ என்னோட மனைவி....பார்க்க வேண்டியது என்னோட கடமை...துப்பறிஞ்சு என்ன பண்ணப் போறோம்னு சொல்லிட்டான்...''

''பாவம்...அண்ணனோட மனசுக்கு இப்படி ஒரு கஷ்டம் வேண்டாம்...''

''அவங்க ஒரு நாள் கூட தவறாம மாத்திரைகள் போடணும்னு டாக்டர் சொல்லியிருக்காரு....ஆனா,அவங்களுக்கு மாத்திரை போடவே பிடிக்காது..இதுல ..அவங்கம்மா வேற சீரியஸ்னஸ்

புரியாம ,எதுக்கு தினம் மாத்திரை போட்டு,உடம்பைக் கெடுத்துக்கறே....குணமாயிட்டுதுன்னா விட்டுறேன்னு அட்வைசு...என்ன செய்யிறது...நல்ல சுவராப் பாத்துதான் முட்டிக்கணும்''.என்று சலித்தாள் கிருஷ்ணா...

''இப்பவும் அப்பிடித்தானா''

''ஆமா....ஊருக்குப் போயிருந்தோம்லா.....வசதியா மாத்திரையை மறந்தாச்சு....மாத்திரைகளை எண்ணிப் பார்க்கையிலதான் விஷயம் புரியுது....ரெண்டு நாளாச்சு..., அண்ணி வேற உலகத்துக்குப் போயிட்டாங்க....வீடு புருஷன் பிள்ளைகள் எந்த சிந்தனையும் இருக்காது....சாப்பிடணும்... தூங்கணும்... அதுமட்டும் தவறாம நடக்கும்''

''சுகந்திக்காவோட அம்மாவை உங்களுக்கு உதவிக்கு கூப்பிட்டுகிட்டா என்னக்கா''என்றாள் பவானி கவலையுடன்...

''அவங்க இந்தப்பக்கம் வராம இருக்கறதுதான் பெரிய உதவி....நல்ல ஆளைப் பார்த்தியே உபகாரத்துக்கு.....சரி.... மிச்ச வேலையை நீயும் சங்கரும் பாத்துகிடுங்க....நான் கிளம்பறேன்....போய்தான் சமையல் பண்ணனும்....சங்கர். கதவை ...நல்லா பூட்டிட்டு போ...சரியா'' என்று சொன்னவள் சற்றே ஆறுதலான மனதுடன் வீட்டுக்கு வண்டியைக் கிளப்பினாள்....

## 6

**பி**ரச்சினைகள் வந்த வழியையே யோசித்துகொண்டிருப்பதைக்காட்டிலும்,அதனைத் தீர்க்கும் முறையைப் பார்ப்பதுதானே புத்திசாலித்தனம்...திருநெல்வேலியில் டாக்டர். சகாதேவன் முன்பாக அமர்ந்து இருந்தது மூர்த்தி குடும்பம்....

''சொல்லுங்கோ''

மூர்த்தி சுருக்கமாக சுகந்தியின் கடந்த கால மருத்துவ சரித்திரத்தை சொன்னான்....கால் மேல் கால் போட்டவாறு,மேலே மாட்டியிருந்த பெருமாள் படத்தைப் பார்த்தவாறே கேட்டுக் கொண்டிருந்த சகாதேவன்,கண்ணாடி பாட்டிலைத் திறந்து,தண்ணீரை ஒரு மடக்கு

குடித்து விட்டு வாய் திறந்தார்....

''ஸோ....பல வருஷமா பிரச்சினையை வச்சுண்டு இருக்கேள்... அப்பிடித்தானே''

''வச்சுட்டு இருக்கலை டாக்டர்...ஊர்ல எனக்குத் தெரிஞ்ச டாக்டர்கிட்ட ட்ரீட்மென்ட் குடுத்துட்டுதான் இருக்கோம் '' என்றான் மூர்த்தி பதட்டத்துடன்....

''ரெண்டும் ஒண்ணுதான்....நோய்க்கு,குறிப்பா மனம் சார்ந்த நோய்களுக்கு,சரியான மருத்துவர் கிட்ட,சரியான மருத்துவம் எடுத்துக்கலைன்னா,அதுக்கு அர்த்தம் அதுதான்''

மவுனம் காத்தான் மூர்த்தி....வீரியத்தை விட காரியம் பெரிது... வாதம் பண்ணி அவரைக் கடுப்படிக்க வேண்டாம் என்று பொறுமையாக இருந்தான்...மனிதனுக்கு நோய் வராத வரைதான் பணம் முதல் மானம் வரை எல்லாம் பத்திரமாக இருக்கும்.... தெரிந்ததுதானே....

''இதுவரை எடுத்துண்டு வந்த டேப்லட்ஸ் காமிங்கோ''

பார்த்தார்....

''உங்க பேர் சொல்லுங்கோம்மா''

''சுகந்தி''

''குட்....உடம்புக்கு என்ன''

''ஒண்ணுமில்ல''

''சூப்பர்....''

மூர்த்தி பதறி ஏதோ சொல்ல வாயெடுக்க,அவனைக் கையமர்த்தினார் சகாதேவன்....

''இருங்கோ தம்பி....நான் பேசிக்கிறேன்... நீங்க அமைதியா வேடிக்கை மட்டும் பாருங்கோ...சொல்லுங்கோ சுகந்தி... உடம்புக்கு ஏதானும் படுத்தறதா''

யோசித்தாள்...

''வந்து எனக்கு ரொம்பத் தூக்கம் வருது... சமயத்துல தலை சுத்தறாப்புல இருக்கு...சாப்பிட்டாலும் பசிக்குது...நெஞ்சு படபடங்குது....அவ்ளோதான்...மத்தபடி,நான் நல்லாத்தான் இருக்கேன்....என் ஹஸ்பண்டுதான் என்னென்னவோ சொல்லி

என்னைய இங்க கூட்டிட்டு வந்து இருக்காங்க''

''ஐயோ பாவம்...இந்த ஹஸ்பண்டுங்களே இப்பிடித்தாம்மா... அவரை விடுங்க....பொழச்சிப் போகட்டும்...நீங்க எதையாவது திங் பண்ணிட்டே இருப்பேளா''

''இல்லியே...''

''சரி....நான் கொஞ்சம் பயிற்சிகள் சொல்றேன்....செய்யறீங்களா''

''எனக்கு நேரமாயிட்டுது....பிள்ளைங்கள ஹோம் வொர்க் பண்ண வைக்கணும்....வீட்டுல வேலையிருக்கு''

''இப்ப இல்லம்மா....சொல்லித்தரேன்...வீட்டுல போயி டெய்லி செய்ங்க...ஓகேயா''

தலையாட்டினாள் சுகந்தி...

''கட்டில்ல கைகால் நீட்டிப் படுத்துண்டு ,மூச்சை நல்லா இழுத்து விடணும்....உங்க உடம்பு மேலேயே கவனம் இருக்கணும்....அப்புறம் சாயங்காலமா அமைதியா ஒரு இடத்துல உக்காந்துகிட்டு,உங்க சுவாசத்தையே கவனிக்கணும்...''

''சாயங்காலம் எனக்கு நேரமே இருக்காதே''

''நேரம் அதுவா வராது....நாமதான் நேரம் ஒதுக்கிகிட்டு செய்யணும்....செஞ்சாதான் உங்களுக்கு நல்ல தெம்பா இருக்கும்...சரியா''

எதுவும் பேசாமல் மேசையைப் பார்த்துக் கொண்டு இருந்தாள்....

''சரி...சரி....இதை நினைச்சே டென்சன் ஆயிராதீங்க....முடிஞ்சப்போ செய்ங்க....மூர்த்தி இவங்களை வெளியே பாதுகாப்பா உக்கார வச்சிட்டு,நீங்க வாங்க''

மூர்த்தி தங்கையிடம் மனைவியை விட்டு விட்டு உள்ளே வந்தபோது....

''உக்காருங்க.....சின்ன வயசுல ஏதாவது இது போல பாதிப்பு வந்து இருக்கா இவங்களுக்கு''

''மனைவி சைடுலேர்ந்து சரியான பதில் வரலை....நானும் அதில ரொம்ப ஆர்வம் காட்டிக்கலை''

''ஓகே....இவங்களது நார்மல் பேமிலியா....ஏதானும் ப்ராப்ளம்ஸ் உண்டா''

''இல்ல....எனக்குத் தெரிஞ்சு பெரிய பிரச்சினைகள்னு

எதுவுமில்ல...''

''பரம்பரைத்தன்மை கூட ஒரு காரணமா இருக்கலாம்''

''ஆமா...அவங்க சித்தி இது போல பாதிப்பு உள்ளவங்கன்னு கேள்வி''

''தட்ஸிட்...சரி, இப்ப ஆக வேண்டியதைப் பார்ப்போம்...ரிலாக்சேஷன் பயிற்சி கட்டாயம் செய்ய சொல்லுங்க''

''டாக்டர்...அது எதுக்கு ''

''அதாவது,இந்தப் பயிற்சி இறுகிப் போன தசைகளை இலகுவாக்கும்....ஒரு பத்து பதினஞ்சு நிமிஷம் பண்ணினா நல்லது....அது போல அந்த மூச்சுப் பயிற்சி....அதையும் தவறாம அரைமணி நேரம் செய்யச் சொல்லுங்க.நினைவாற்றலைப் பெருக்கும்...ரத்த ஓட்டத்தை சீராக்கும்...உடம்புக்கும்,மனசுக்கும் அமைதி கிடைக்கும்.....அந்தப் பயிற்சியை நான் அவங்ககிட்ட சொல்லும்போது,சரின்னு சொல்லக்கூட மனசில்லாம,எப்படி சாக்குப்போக்கு சொல்றாங்க பாருங்க....அந்த மனநிலைதான் நோயின் அடையாளம்....''

''கரெக்ட் டாக்டர்....யாரு என்ன சொன்னாலும் கேக்கக் கூடாதுன்னு ஒரு முடிவுல இருக்கா....என்கிட்டே,தங்கச்சி கிட்ட,ரொம்பக் கோபப்படறா.....வீட்டு வேலைகள் எதிலும் ஆர்வமில்ல...படுத்தே இருக்கறா....ரொம்பக் கஷ்டமா இருக்கு'' என்று மன ஆதங்கங்களைக் கொட்டினான் மூர்த்தி...

''ரொம்பப் பிடிச்சவங்களைத்தான் படுத்தி எடுப்பாங்க.... குளிக்கறாங்களா''

''இல்ல டாக்டர்''

''ம்ம்ம்....தன்னோட உடம்பை சுத்தமா வச்சிக்க மாட்டாங்க...நாமதான் சொல்லி செய்ய வைக்கணும்...வேறென்ன மாற்றங்கள்''

''எப்பவும் பிள்ளைகள் படிப்பு ஸ்கூலு மார்க்கு இதே புலம்பல்தான்...பணம் காசு மேல குறியா இருக்கறா....பக்கத்து வீடுகளுக்குப் போயி ஏதோ சம்பந்தமில்லாம பேசிட்டு வர்றா.....நார்மலா அவ இப்பிடி ஒரு கேரக்டர் கிடையாது...

எதனால....என்ன நோய் இது...டிப்ரசன்தானா''

''ம்ம்..இல்ல...மெடிகல் டெர்ம்ல ஸ்கீசொபீனியா அப்படின்னு சொல்வோம்...அதாவது மனச்சிதைவு நோய்...சிவியர் பார்ம் ஆப் மெண்டல் இல்னஸ்.....திங்கிங் டிசார்டர்.....மூளையில ஏற்படற கெமிகல் இம்பாலன்ஸ் காரணமா வருது...இது போல பதினஞ்சு வயசுலேர்ந்து நாப்பது வயசு வரை உள்ளவங்கதான் அதிகமா பாதிக்கப்படறாங்க.....அவங்களுக்கு கற்பனை எது நிஜம் எதுன்னு பிரிச்சிப் பார்க்கத்தெரியாது... ''

''ட்ரீட்மெண்ட் டாக்டர்''

''ம்ம்..இப்ப நிறைய மெடிசின்ஸ் வந்து இருக்கு...ஆண்டி சைக்காடிக் மெடிசின்தான் தரணும்...அதுவும் ரெண்டு மூணு வாரங்களுக்குப் பிறகுதான் வேலை செய்யவே ஆரம்பிக்கும்... சுகர் பேசன்ட்ஸ் மாதிரிதான்....மாத்திரை போடற வரை சுகர் கண்ட்ரோல்ல இருக்கும்...நிறுத்திட்டா திரும்ப சுகர் எறிடும்ல.... அதுபோலதான்...லாங் ட்ரீட்மெண்ட் தான்....பொறுமையா பாலோ பண்ணனும்..வேற வழியில்ல''

மூர்த்தியின் முக வாட்டத்தைக் கண்ட மருத்துவர்,

''ஓகே... கூல்...டோன்ட் வொர்ரி....நீங்க ஸ்டெடியா இருக்க வேண்டியது இந்த நேரத்துல ரொம்ப முக்கியம்....அதைவிட முக்கியம் நீங்க உங்க மனைவிக்கு தர வேண்டிய சப்போர்ட்.... அவங்க உங்களை அடிக்கவே வந்தாலும்,நீங்க அணைக்கத்தான் செய்யணும்....நெகடிவ் வேர்ட்ஸ் எதுவும் பயன்படுத்திறக் கூடாது...கிண்டல் பண்ணி பேசிடக் கூடாது..அவங்க .கெட்ட வார்த்தைகள் பயன்படுத்த வாய்ப்பிருக்கு.தன்னால பேசிப்பாங்க...நீங்கதான் ..புரிஞ்சுண்டு நடந்துக்கணும்'''

''அப்பிடித்தான் டாக்டர் போயிட்டு இருக்கு...''

''குட்....மெயின்டைன் பண்ணுங்க...மாத்திரைகள் ரொம்ப முக்கியம்...ஒரு நாள் கூடத் தவறக்கூடாது....அவங்க எடுத்து சாப்பிடுவாங்கன்னெல்லாம் வெயிட் பண்ணாதீங்க...அந்தந்த நேரத்துக்கு,வாயில போட்டு தண்ணி ஊத்திடுங்கோ சரியா''

தலையாட்டி விட்டு,கைநிறைய மாத்திரைகளுடன்,மனம் நிறைய வருத்தங்களுடன் வெளியே வந்தான் மூர்த்தி....

7

"ஒரு மரத்திலே புஷ்பத்தில் இருந்துதான், காயும், பழமும் உண்டாகின்றன...புஷ்பமாக இருக்கும் போது மூக்குக்கும், பழமாக இருக்கும்போது நாக்குக்கும், ரசமாக இருக்கின்றன....பழம் முன்பு எப்படி இருந்தது.....பூவில் கசப்பாகவும், பிஞ்சில் துவர்ப்பாகவும், காயில் புளிப்பாகவும், கனியில் மதுரமாகவும் இருக்கிறது...மதுரம் என்பதுதான் சாந்தம்...மதுரம் நிரம்பிய பழம் மரத்தை விட்டு கீழே விழுந்து விடுவதைப் போல, மனிதனுக்கும், இருதயத்தில் மதுரம் வந்து விட்டால், தானாகவே எல்லாப் பற்றும் போய் விடும்....

புளிப்பு இருக்கும் வரை, பற்றும் இருக்கும்...அப்போது காயைப் பறித்தால், காம்பிலும், காயிலும் ஜலம் வரும்...அதாவது மரமும் காயும் ஒன்றையொன்று விட்டுவிட மனமில்லை...ஆனால், நிறைந்த மதுரமாக ஆகிவிட்டால், தானாகவே பற்றும் போய் விடும்...பழமும் இற்று விழுந்து விடும்..படிப்படியாக வளர்ந்து, மதுர மயமாகிவிட்ட ஒவ்வொருவனும், இப்படியே ஆனந்தமாக, சம்சார விருட்சத்திலிருந்து, விடுபட்டு விடுவான்...பழமாக ஆவதற்குமுன், ஆரம்ப தசையில், புளிப்பும், துவர்ப்பும் எப்படி வேண்டியிருக்கின்றனவோ, அதைப்போல, காமம், வேகம், துடிப்பு எல்லாம் தேவைப்படுகின்றன...ஆனாலும் அந்தந்த நிலையிலேயே நின்று விடாமல், பிஞ்சு படிப்படியாக பழமாகிக் கொண்டே வருவது போல, நாமும் மேலும் மேலும், மதுரமான அன்பையும், சாந்தத்தையும் நினைத்துக் கொண்டே வந்தால், நாமாகப்போய் மோட்சத்தை தேட வேண்டாம்...எந்தப் பருவத்தில் எப்படி இருக்க வேண்டுமோ, அப்படி இருந்தால், தானாகவே மோட்சம் என்ற மதுர நிலை வந்து விடும்''

தனது அலைபேசியில் வாட்சாப் குழுமத்தில், மகா பெரியவரின் அருளமுதம் என்ற தலைப்பில் வந்திருந்த கருத்தை படித்து முடித்து பெருமூச்சு விட்டான் மூர்த்தி...

நம் மனம் துன்பத்தில் அல்லது குழப்பத்தில் இருக்கையில், எங்கிருந்தோ ஆறுதலும், விழிப்பும், வெளியேறும்

வழியும் நம் கண் முன்பாய் காட்சியளிக்கிறது....அழுத்தத்தில் இருக்கும் மனம்,இவற்றைப் பிடித்துக் கொண்டு மேலெழும்பி ஆசுவாசப் படுகிறது...அப்படித்தானே மனமும் முன்னேற முடியும்...குழந்தையை அடித்து விட்டு,அது அழுகையில்,மடியில் தூக்கி வைத்து, சமாதானம் செய்யும் தாயின் மன நிலையை ஒத்தவர் கடவுள்.....உலகைக் கட்டியாளும் அவரும் ஒரு தாய்தானே.... ஒரு சந்தேகம் இயல்பாய் எழுந்தது மூர்த்திக்கு....தாய் ஏன் தனது குழந்தையை துன்புறுத்த வேண்டும் ? எனது கணக்கு வழக்கு....நான் பாவங்கள் செய்யப்போயிதானே பிறப்பே எடுத்து இருக்கிறேன்.... அதில் கூட்டல் கழித்தல்களை கொடுக்காமல் இருப்பாரா என்ன..... என்று தனக்குத்தானே கேள்வி-பதில் பகுதியை நடத்தி முடித்தான் மூர்த்தி....

அதற்குள் குளியல் அறையிலிருந்து ஒரே சத்தம்....எழுந்து ஓடினான்....அங்கே சுகந்தி திஷாவுடன் மல்லுக் கட்டிக் கொண்டு இருந்தாள்....

''அப்பா...பாருங்கப்பா...அம்மா கோல்ட் வாட்டரை எடுத்து தலையில ஊத்திட்டாங்க''

''ஏன் சுகந்தி இப்பிடி பண்றே''

''இல்லங்க....அவதான் பாத்ரூமிலிருந்து குளிக்க வைங்கன்னு கத்துனா... அதான் வந்தேன்'''

''அத்தை வாங்கன்னு கூப்பிட்டேன்ப்பா....அத்தைன்னா நீயாம்மா''என்றது திஷா....

''ஏன்....யார் குளிக்க வச்சா என்ன''என்று எகிறினாள் சுகந்தி...

''நான் ஸ்கூலுக்குப் போணும்ல....தலைக்கு குளிச்சா எப்படி காயும்....சன்டே அன்னிக்குத்தானே அத்தை தலைக்கு ஊத்துவாங்க''

அதற்குள் வெந்நீர் பாத்திரம்,துண்டுடன் வந்தாள் கிருஷ்ணா....

பார்த்த மாத்திரத்தில் நடந்த கலாட்டாவைப் புரிந்து கொண்டாள்...

''அண்ணி,என்ன பண்ணி வச்சு இருக்கீங்க....''

''எல்லாம் நல்லாத்தான் பண்ணியிருக்கோம்....ஸ்கூலுக்கு நேரமாச்சேன்னு குளிக்க வச்சேன்....அதனால என்ன'' என்று

கிருஷ்ணாவை முறைத்தாள்....

கிருஷ்ணா பதிலேதும் பேசாமல் ,குழந்தையை கவனிக்க உள் செல்ல....மூர்த்தி மனைவியை இழுத்துக்கொண்டு படுக்கை அறை வந்தான்....

''சுகந்தி....உனக்கு எதுக்கு இந்த வேண்டாத வேலை.... கிருஷ்ணாதான் எல்லாம் பாத்துக்கறாளே ! நீ பாட்டுக்கு சாப்பிட்டமா, மாத்திரை போட்டமா,தூங்குனமான்னு இருன்னு சொல்லியிருக்கேன்ல....''

''என் பிள்ளைகளை என்கிட்டே இருந்து பிரிக்காதீங்க'' சொல்லும்போதே,கண்களில் இருந்து இரண்டு சொட்டு கண்ணீர் விழுந்தது....

மூர்த்திக்கு மருத்துவர் சகாதேவன் கண்முன்னே தோன்றி ,விரல் காட்டி மிரட்டினார்..''

''நான் என்ன சொல்லி அனுப்பினேன் உன்னை''

தன்னிலைக்கு வந்தான்....'''சுகந்தி.....நான் எதுக்கு சொல்றேன்னா....நீ நல்லா ரெஸ்ட் எடுத்தாதான்,உனக்கு சீக்கிரம் குணமாகும்....நாம டூர் போகலாம்...சினிமா,கோவில் எல்லா இடமும் போகலாம்...''

''திருப்பதிக்குப் போகலாம்னு சொன்னீங்க''

''கண்டிப்பா போகலாம்...சாப்பிடறியா''

சம்மதித்து தலையாட்டினாள்...எண்ணெய் குறைவாக விட்டு,இரண்டு தோசைகள் சுட்டுக்கொண்டுவந்து மனைவி கையில் தந்தான்....சாப்பிட்டவள் காப்பி கேட்டாள்....அதையும் போட்டுக் கொடுத்து,மாத்திரையும் எடுத்துத்தந்தான்.....அவளது படுக்கையை உதறி விரித்து,படுக்கச் சொன்னான்....படுத்ததும் உறங்கி விட்டாள்....கதவை சாத்தி விட்டு வெளியே வந்தான்...பிள்ளைகள் சீருடையுடன் தயாராய் நின்றனர்.....ஆட்டோவில் ஏற்றி விட்டான்....அண்ணனும் தங்கையும் மிஞ்சி நின்றனர்....

''அண்ணா..சாப்பிடு''

''நீ முதல்ல உக்காரு... காலையில எந்திரிச்ச நேரத்துல இருந்து உனக்குத்தான் தொடர்ச்சியா வேலை'' என்று தங்கைக்கு தோசை சுட்டுப் போட்டு விட்டு,தானும் உணவை முடித்தான்....

''அண்ணி, ஒரு வாரமா மாத்திரை போடறாங்க.... இம்ப்ரூவ்மென்ட் ஒண்ணுமில்லையே....இல்லண்ணா....''

''அதான் அவரு மாத்திரை வேலை செய்யவே ரெண்டு மூணு வாரம் பிடிக்கும்னு சொல்லிட்டாரே''

''ஆமா....நேத்து கடைக்குப் போயி மூணு புடவை எடுத்துட்டு வந்து இருக்காங்க''

''யாரும்மா'

''வேற யாரு...அண்ணிதான்''

''அப்படியா?பணம் ஏது''

''பிள்ளைங்க ஆட்டோவுக்கு குடுக்கறதுக்காக.நீ டீவி ஸ்டாண்ட்ல வச்சே இல்ல...அதை எடுத்துட்டுப் போயி வாங்கி இருக்காங்க....என்கிட்டே,எதிர் வீட்டுக்குப் போறேன்னு சொல்லிட்டு, அப்படியே கடைத்தெருவுக்குப் போயாச்சு''

மூர்த்தியின் முகம் தொங்கிப் போனது....

''நாளாக ஆக மோசமாகுது பாத்தியா....முன்னெல்லாம் வீட்டுக்குள்ளதான் ஏதாவது கலாட்டா பண்ணுவா....இப்ப வெளிய தெருவ சுத்தக் கிளம்பிட்டா...'' என்று வருந்தினான் மூர்த்தி....

''அண்ணியோட வீட்டுக்கு தகவல் சொன்னியா அண்ணா''

''எதுக்கு....இருக்கற பிரச்சினையோட கூட ஒண்ணு.... தெரியாமலே இருக்கட்டும்..எப்படியும் நாமதான் சமாளிக்கப் போறோம்...அவங்களுக்குத் தெரிஞ்சு என்ன ஆகப் போகுது''

இதை எந்த முகூர்த்தத்தில் மூர்த்தி சொன்னானோ.....அன்று மாலையே அலறி அடித்துக் கொண்டு வந்து சேர்ந்தாள் சுகந்தியின் அம்மா அருணா....

''பத்துநாள் ஆச்சு....சுகந்தி போனே எடுக்கலை...அதான் என்னாச்சுன்னு பாத்துட்டுப் போலாம்னு வந்தேன்''

அண்ணனும் தங்கையும் அர்த்த புஷ்டியுடன் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்... 'வந்துட்டியா...ஏற்கெனவே திருவிழா கோலம்....நீ வந்து கூத்து கட்டி ஆடு... விசேசம்'..இது அவர்களது மைன்ட் வாய்ஸ்....வாய் திறந்து சொன்னார்களோ பிழைத்தார்களோ. ..மகளை சாப்பாடு, மாத்திரை கொடுத்துக் கவனித்துக் கொண்டாள் அருணா.... அந்த வேலையாவது நடக்கிறதே என்று நினைத்துக்

கொண்டனர் அண்ணனும் தங்கையும்.... பிள்ளைகள் ஆச்சியிடம் அதிகம் ஒட்டுவதில்லை.... இதற்கு காரணம் கிருஷ்ணாதான் என்ற ஆணித்தரமான நம்பிக்கை அருணாவிற்கு.... அந்த எரிச்சல் அவள் மனதில் அதிகமாகவே மண்டிக் கிடந்தது... அதனை வெளிப்படையாக சொல்லவும் முடியாதென்பதால்,உப்பு புளி காரணத்திற்கெல்லாம் கிருஷ்ணாவிடம் கடுப்படிப்பாள் அருணா....ஆனால்,கிருஷ்ணா அதிகம் காதில் போட்டுக் கொள்ள மாட்டாள்தான்...அதற்காக வீண் பழி சுமத்தினால் பொறுக்க முடியுமா என்ன.... ..அருணாவின் வருகைக்குப் பின்னர்,ஒருநாள் கம்பெனியிலிருந்து பவானி வீட்டுக்கு வந்தாள்....

''வா பவானி....என்ன விஷயம்....வீடு தேடி வந்துட்ட'' என மகிழ்ச்சியுடன் வரவேற்றாள் கிருஷ்ணா....

''ஒண்ணு ரெண்டு விபரங்கள் உங்ககிட்ட கேட்க வேண்டியிருக்கு....போன்ல கூட கேட்டுக்கலாம்...ஆனா,இதை சாக்கு வச்சி உங்களைப் பாத்துட்டுப் போலாம்னு வந்தேன்.... அக்கா..பத்து நாள் போல ஆச்சு...நீங்க கடைப் பக்கம் வரவேயில்ல''

''ஆமா....பவானி...வீட்டை விட்டு நகர முடியல.....ரெண்டு பிள்ளைகளோட சேர்த்து,இப்ப அண்ணியும் மூணாவது குழந்தை ஆயிட்டாங்களா.....ஸோ....நான் வீட்டுல இருந்தே ஆக வேண்டியிருக்கு....சரி...அதை விடு...சாப்பிடேன் பவானி... இடியாப்பமும்,தேங் காய்ப்பாலும் பண்ணியிருக்கேன்''

''ம்ம்...கொஞ்சமா தாங்க அக்கா''

பவானிக்கு சிற்றுண்டி பரிமாறி,காபி போட்டுக் கொடுத்தாள் கிருஷ்ணா....பவானியும் சளைத்தவளில்லை.... வீடு பெருக்கி,பாத்திரங்களைக் கழுவி அடுக்கினாள்....கீரையை கைபார்த்துக் கொடுத்தாள்...மேலும் சிறிது நேரம் கிருஷ்ணாவிடம் பேசிக்கொண்டு இருந்து விட்டுக் கிளம்பினாள்....அவள் தலை மறைந்ததுதான் தாமதம்,அருணா,சமையலறைக்கு வந்து கிருஷ்ணாவை பிலு பிலுவெனப் பிடித்துக் கொண்டாள்...

''உன் மனசுல என்னதான் நினைப்பு...கேக்கறதுக்கு ஆளில்லேன்னு நினைச்சுகிட்டியா...என் பொண்ணுநோய் வந்து படுத்தது உங்களுக்கெல்லாம் தொக்காப் போச்சு....நல்லா ஆட்டம்

போடறீங்க''

குக்கரில் அரிசி அளந்து போட்டு மூடியவள்,திரும்பி

''யாரு... நாங்க ஆட்டம் போடறமா''

''நான் ஆடறேன்னு சொல்றியா....வாய் கூடிப் போச்சு உனக்கு... பெரியவங்கன்னு ஒரு மட்டு மரியாதை கிடையாது''

''அத்தை.....எனக்கு வேலை இருக்கு...விஷயத்தை சொல்லிட்டுக் கத்துங்க''

''கத்தறதுக்கு நான் என்ன கழுதையா....பேசறா பாரு பேச்சு''

''அது எனக்குத் தெரியாது.....என்ன நடந்துச்சுன்னு சொன்னாதான தெரியும்'' என்றாள் எரிச்சலுடன்....

''ஆமா...ஒண்ணுந்தெரியாத பாப்பா...இவளுக்கு எல்லாம் புளி போட்டு விளக்கணும்.....ஏண்டி,இப்ப வந்துட்டுப் போனாளே ஒரு மேனா மினுக்கி அவ யாருடி'' என்றாள் இடுப்பில் கை வைத்து...

உச்சி வரை ஏறிய உஷ்ணத்தை அடக்கிக் கொண்டு பதில் சொன்னாள் கிருஷ்ணா...

''என் கம்பெனியில வேலை பாக்கறவ....''என்றபடி வெண்டைக் காயை கத்தியால் நறுக்கத்தொடங்கினாள் கிருஷ்ணா...

''சரி...கம்பெனியில வேலை பாக்கறவளுக்கு வீட்டுல என்ன சோலி''

''ம்ம்...என்கிட்டே பேசணும்னு வந்தா''

''வந்தமா...பாத்தமா..பேசினமான்னு இல்லாம,அவ என்னவோ குனிஞ்சு நிமிந்து பெருக்கறா....நீ என்னவோ கூடப் பொறந்த பொறப்பு கெட்டுப் போனாப்புல,அவளுக்கு சாப்பாடு போடறே....காபி ஆத்திக் குடுக்கறே...ரெண்டு பேரும் சிரிச்சு சிரிச்சு கூத்தடிக்கிறீங்க''

''அதுல உங்களுக்கு என்ன அத்தை பிரச்சினை...'' கை கத்தியோடும் ,வாய் அத்தையோடும் மல்லு கட்டியது கிருஷ்ணாவுக்கு....

''எனக்கொண்ணுமில்ல....என்புள்ள வாழ்க்கை பிரச்சினை ஆயிரக்கூடாதேன்னுதான் பயப்படுதேன்''

''ஏன் ..அண்ணி வாழ்க்கைக்கு இப்ப என்ன ஆபத்து வந்திருச்சி''

அருகில் வந்த அருணா,குரலை சிறிதாக்கி

''அடப் பைத்தியக்காரி... சுகந்தி உடம்புக்கு முடியாம இருக்கா.... இந்த நேரத்துல வயசுப்பிள்ளைகளை வீட்டுக்குள்ள நடமாட விடறது நல்லாயிருக்கா.... ஆம்பளைக்கு புத்தி எப்ப தடுமாறும்னு சொல்ல முடியாது....அந்த புள்ளையும் கொஞ்சம் கஷ்டப்பட்ட வீட்டுப் பிள்ள மாதிரி தெரியுது....நல்ல ,வசதி, வருமானத்தோட ஆம்பள கிடைச்சுட்டான்னு வளைச்சுப் போட மாட்டான்னு என்ன நிச்சயம்....''

அருணா பேச்சை முடிக்கும் முன் ,கையில் உயர்த்திய கத்தியுடன் கத்தி விட்டாள் கிருஷ்ணா...

''வயசுக்கு ஏத்த மாதிரியா பேசறீங்க...போகுது பாரு புத்தி.... கஷ்டப்பட்ட வீட்டுப் பிள்ளைன்னா, உங்களுக்கு அவ்வளவு இளக்காரமா இருக்கா என்ன....அவ ஒழுக்கமான பொண்ணு.... அது சரி....அதென்ன...மருமகன்னு கூடப் பாக்காம, எங்க அண்ணனை அவ்வளவு கேவலமாப் பேசறீங்க....இப்படி ஒரு மருமகன் கிடைக்கவும், இப்படி ஒரு புருஷன் கிடைக்கவும் நீங்களும் உங்க பொண்ணும் குடுத்து வச்சு இருக்கணும்....வாயில வசம்பை வச்சுத் தேய்க்க....பேச்சைப் பாரு பேச்சை...இனி ஒரு தரம் நீங்க இப்படிப் பேசறதைப் பார்த்தேன்...நடக்கறதே வேற...போங்க அங்கிட்டு'' என்று விரட்ட....

''ஐயோ....இந்த படுபாவி கத்தியை எடுத்துக் குத்த வாராளே....கேக்க ஆளில்லையா'' என்று கூச்சல் போட....

மூர்த்தி தனது மனைவிதான் சமையலறையில் ,ஏதோ கலாட்டா செய்கிறாள் போல என்று ஓடிவந்தவன், அங்கு மாமியாரும், தங்கையும் வாக்கு வாதத்தில் ஈடுபட்டு இருப்பதை அறிந்து ,தங்கையின் கை பிடித்து அழைத்து ஹாலுக்கு வந்தான்....

''அண்ணா...அவங்க என்ன பேச்சு பேசறாங்க தெரியுமா''

''தெரியும்....நல்லதா எதுவும் பேசியிருக்க மாட்டாங்க.... வில்லங்கமா இருக்கும்....நீ அவங்களுக்கு விளக்கம் சொல்றதும் ஒண்ணுதான்...சுவத்துல முட்டுறதும் ஒண்ணுதான்....சமையல் வேலை மெதுவாப் பாத்துக்கலாம்....பேசாம கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடு...நான் கடைக்குப் போயிட்டு வரேன்....ஏதாவது சாமான்கள் வேணும்னா எனக்கு போன் பண்ணு'' என்று

சொல்லிக் கிளம்பிப் போனான் மூர்த்தி....பாட்டிலில் இருந்த தண்ணீரை எடுத்துக் குடித்து விட்டு,சோபாவில் படுத்து விட்டாள் கிருஷ்ணா....தனக்கு மிஞ்சிய வேலைப் பளுவைக் கூட தாங்கி நிற்கும் உடம்பு,மனம் பதட்டம் அடையும் போது,தானாக சோர்ந்து விடுகிறது....அலைபேசியில் பாட்டு கேட்டுக் கொண்டு அப்படியே தூங்கிப் போனாள் கிருஷ்ணா...

''ஆண் கொண்ட தாகம் தீர்க்கின்ற மேகம்
பெண்ணென்ற வானினமோ ....இது யார் பாவம்...
ஆண் செய்த சட்டம்...
அவர் போட்ட வட்டம்..
அதற்கென்று... பெண்ணினமோ ''
இதுயார் சாபம்...நியாயங்களோ பொதுவானது..புரியாமல் போனது''

8

**கா**தல் நமக்கு வந்தாலும் தொல்லைதான்.....நம் நட்பு வட்டத்தில் வந்தாலும் தொல்லைதான்....மூர்த்தி வீடு இருக்கும் அதே தெருவில் தான் ரேவதியும் இருக்கிறாள்....படிப்பை முடித்து விட்டு, தனியார் வங்கி ஒன்றில் பணியாற்றி வருகிறாள்.....வீட்டுக்கு ஒரே பெண்.... உடன் பிறந்த சகோதரர்கள் இருவர்...அதிலொன்றும் பிரச்சினை இல்லை...ஆனால் அவள் காதலுக்கு இடையூறாக இருப்பது அவள் அண்ணன்கள் இருவரும்தான்....ரேவதி தன்னுடன்பள்ளியில் படித்த சந்தோஷ் என்பவனைக் காதலிக்கிறாள்.....ஏறக்குறைய எட்டுவருடக் காதல்....அண்ணன் எதிர்க்கிறான் என்பதற்காக விட்டுவிட முடியுமா என்ன....காரணம்...குறுக்கே நிற்கிறது ஜாதி...பிரச்சினை அப்படி இப்படி சுற்றி வந்து கடைசியில் அடிதடியில் வந்து நிற்கிறது..சந்தோஷ் தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இருந்தான்...அவன் பெற்றோர்,நண்பர்கள் அனைவரும் கொதித்துப் போயிருந்தனர்....

''போலீஸ் ரோந்து அந்த நேரம் வந்ததால,அந்த தடிப்பயலுக

பயந்து விட்டுட்டுப் போயிட்டானுக....இல்ல...இன்னிக்கு உன் மவனை தூக்கித்தான் விடணும்''மருத்துவமனை என்றும் பாராமல் சந்தோஷ் அப்பா மனைவியிடம் கத்திக் கொண்டு இருந்தார்....பிள்ளைகள் பெருமைக்குரிய செயல்களைச் செய்யும் போது,தனது வாரிசாகவும்,அதே மக்கள் பிரச்சினைக்குரிய செயல்களை செய்யும் போது.மனைவியின் அவதாரங்களாகவும் தெரிவது ஆண்களின் சிறப்பு மனோபாவம்....

''அப்படி என்னடா அவகிட்ட கண்டுட்ட....அவங்கதான் உன்னைய குறை சொல்லி வேண்டாம் வேண்டாம்னு சொல்றாங்களே...ஏண்டா மானங்கெட்டு மேல போயி விழறே'' தன் பங்குக்கு சந்தோஷ் அம்மாவும் சத்தம் போட்டாள்....அவளுக்கு மகன் மீது அத்தனை கோபம் இல்லைதான்..இருந்தாலும்.அப்படிப் பேசினால் தான் கணவனிடம் இருந்து தப்பிக்க முடியும்... இவளுக்கும் இதில் உள்கை இருக்கிறதோ என்ற சந்தேகம் வராமலிருக்கும்....

''ம்மா....அவளுக்கு இஷ்டம்தாம்மா...அவ அண்ணன் ரெண்டு பேரும்தான் மல்லுக்கு நிக்கிறானுக''காலில் கட்டுப் போட்ட நிலையில்,உலர்ந்து போன உதடுகளைக் கொண்டு படுத்திருந்த நிலையில்,சிரமத்துடன் பதில் சொன்னான் சந்தோஷ்...

''ரெண்டும் ஒண்ணுதாம்ல....அப்படி அடிவாங்கி அவமானப்பட்டாவது அந்தப் பொண்ணைக் கட்டணுமால....மனுஷன்னா சூடு சொரணை வேணும்...''

''ஆமால....உங்கப்பா சொல்றதும் சரிதான்....உன் மனசுக்கு இதை விட சூப்பர் பொண்ணா அமையும்ல....பேசாமக் கையைக் கழுவிரு''

சந்தோஷ் அமைதி காக்கவும் மற்றவர்கள் குரல் உயர்ந்தது...

''இதெல்லாம் சினிமாவுல பாக்க நல்லா இருக்கும்...பிராக்டிகலா சரி வராது...மாச சம்பளத்தை வாங்கி சாப்பிட்டுகிட்டு,வீட்டு சத்தம் வெளிய வராதபடி காலத்தை ஓட்டிகிட்டு இருக்கோம்....இந்த கூத்தெல்லாம் நமக்குத் தேவையா''

''சாதியும் சாராயமும் சா வுல தொடங்கி சா வுலதான் முடியும்னு'' ....''ஒருவன் வாய்திறக்க...

''வாட்சப்புல படிச்சியாக்கும்''

''ஆமாடா .....நல்லது எங்க இருந்தா என்ன...''

''அடச்சீ வாயை மூடு...''

''சும்மாயிருங்கப்பா....நீங்க வேற எசலிகிட்டு...டேய்....இங்க பார்ரா....அந்தப் பொண்ணு பத்திரமா வீட்டுல உக்காந்துகிட்டா... நீதான் கெடந்து லோல் பட்டுகிட்டு இருக்க'' நண்பர்களில் ஒருவன் சொல்லி வாய் மூடும் முன் வாசலில் வந்து நின்றாள் ரேவதி..... பொங்கிக் கொண்டிருந்த அனைவரும் சட்டென்று நீர் தெளித்த பால் போல அமைதி காத்தனர்....ரேவதி கண்ணால் ஒரு முறை அனைவரையும் அளந்தாள்...அந்த அறையில் நிலவிய இறுக்கமான அலைவரிசை,அங்கு என்ன நடந்திருக்கக்கூடும் என்பதை அவளுக்கு உணர்த்தியது....எச்சில் விழுங்கியவாறு கண்களை உருட்டி படுத்து இருந்த சந்தோசைப் பார்த்தாள்...அவளது நோக்கத்தைப் புரிந்து கொண்டு,மற்றவர்கள் முறைத்தபடி விலக.....படுக்கை அருகில் சென்று எதுவும் பேசாமல் புன்னகைத்தவள்..பையில் இருந்து ஒருடப்பாவையும்,ஸ்பூனையும் எடுத்துக் கொடுத்தாள்....வேகமாக எழுந்து அமர்ந்த சந்தோஷ்,அவள் தந்த இடியாப்பத்தை அள்ளி அள்ளி சாப்பிட்டான்....தண்ணீரும் தந்தாள்..ரேவதி ..கிளம்பத் தயாரானாள்....இந்தக் காட்சியைப் பார்த்து கடுப்பான,சந்தோஷ் நண்பர்களில் ஒருவன்...

''இந்தா....அவன் என்ன சாப்பாட்டுக்கு அலைஞ்சு போயா கெடக்கான்....நாயை அடிச்சாப்புல அடிச்சி போட்டு இருக்கானுக உங்க அண்ணன்மாருக.நீ என்னவோ இடியாப்பம் பரிமாறிகிட்டு இருக்கே.....அதுக்குப் பதிலை சொல்லு''

ரேவதி கண்களை சுழட்டி எல்லோரையும் பார்த்தாள்...அவளது வாயிலிருந்து வரப் போகும் வார்த்தைகளுக்காக சந்தோஷ் உள்பட அனைவரும் ஆவலுடன் உற்று நோக்க,வாய் மலர்ந்தாள் ரேவதி....

''எங்க வீட்டுல அடிதடின்னு இறங்கினது தப்புதான்.... ஆனா,இந்த அளவுக்குக் கூட எதிர்ப்போ,கலாட்டாவோ இல்லாம ஒரு லவ் மேரேஜ் நடக்கும்னு நீங்கள்லாம் எப்படி எதிர்பார்க்கறீங்கன்னு எனக்குப் புரியல...''

அவ்வளவுதான்....வேறு பேச்சில்லை....கீதை சொன்ன

கிருஷ்ணர் ரேஞ்சுக்கு ஒரு பெருமிதத்துடன் வீர நடை போட்டு வந்தது போலவே வெளியேறி விட்டாள் ரேவதி....சந்தோஷுக்கு உற்சாகம் தாங்கவில்லை...காதலி தந்த இடியாப்பம் உடலுக்கு உரமேற்ற,அவளது வார்த்தைகள் அவனுக்கு எல்லையில்லா ஊக்கத்தையும், உற்சாகத்தையும் தந்தது....இரண்டு கை களையும் மேலே தூக்கி,வாய் திறந்து மிக பலமாக ''ஓ'' வென கத்த....மருத்துவர் செவிலியர் அங்கு கூடி விட....

''சும்மா...என் லவ்வர் வந்து என்னைப் பாத்துட்டுப் போனா... அதான்''

மருத்துவர் சிரித்தபடி நகர....

''டேய்....எவனா இருந்தாலும் வரச்சொல்லுடா....மோதிப் பாத்துரலாம்....எதுக்கும் தயார்டா'' என்று சந்தோஷ் கூச்சலிட்டதைப் பார்த்து அனைவரும் அடக்கமாட்டாமல் சிரிக்க ஆரம்பித்து விட்டனர்....

ஆனால்,நடந்தவற்றை ரேவதியின் வாயிலாகக் கேட்ட கிருஷ்ணா சிரிக்க வில்லை....அவர்கள் பல வருடத் தோழிகள்....ரேவதி மதிக்கக் கூடிய ஒரே தெருவாசி,கிருஷ்ணா தான்....எந்த ஒரு விஷயத்துக்கும் நேரே இங்குதான் வருவாள்...

''என்ன ரேவதி இப்படி குழப்பி வச்சு இருக்கே''

''எவ்வளவோ கவனமாத்தான் இருந்தேன்க்கா....என் ஆளு ஒரு குஷியில நண்பர்கள் கிட்ட சொல்ல,அது எப்படியோ எங்க அண்ணன் காதுக்கு எட்டிருச்சி''

''அதெல்லாம் நம்ம தெருவில நல்லாப் பண்ணுவாங்க''

''இப்ப என்னக்கா செய்யலாம்''

''ம்ம்ம்...இப்ப வந்து கேளு.....சரி....அந்தப் பையனுக்கு குணமாகட்டும்,,,கொஞ்சம் ஆறப் போடுங்க....ஓகேயா''

''சரிக்கா''என்று அரைமனதாய் வீட்டுக்கு சென்றாள் ரேவதி....

ஆனால் ,இதையே கிருஷ்ணா அவள் அண்ணனிடம் சொன்னபோது,அவன் அதிகம் ரசிக்கவில்லை....

''உங்க அண்ணி இப்பதான் கலாட்டா பண்ணி முடிச்சு நார்மலா ஆயிட்டு இருக்கா....அடுத்து நீ ஆரம்பிக்கப் போறியா....இது ரேவதி வீட்டு உள் விவகாரம்....அதுல நாம மூக்கை நுழைச்சே

ஆகணுமா''

''நானா போயி தலையைக் குடுக்கலை....அக்கா ஏதாவது செய்ய முடியுமான்னு என்மேல ஏதோ நம்பிக்கை வச்சி கேக்கறா....தட்டி விட முடியல....அண்ணிக்கு முடியாம இருக்கறப்ப எல்லாம் அவ நல்ல ஹெல்ப்பு....என்னோட பேங்க் வேலையை எல்லாம் அவளே பாத்துக்குவா....எனக்கு லோன் வாங்க மும்முரமா நின்னு உதவி பண்ணினதே அவதான்....அவ ஒரு உதவின்னு வர்றப்ப,நாம சுயநலமா கை விரிக்க முடியாதுல்ல....பேசிப் பாக்கறேன்.... விழுந்தா பழம்...போனா கல்லு...அவ்வளவுதானே''

''அப்படியா சொல்றே....சரி....நானும் வரவா''

''வேண்டாம்....அது வேற மாதிரி ஆயிடும்...''

''சரி..கவனம்....ஏதாவதுன்னா என்னை உடனே கூப்பிடு''என்று அரை மனதுடன் அனுமதி தந்தான் மூர்த்தி....அண்ணனின் வார்த்தைகள் மனதில் எதிரொலிக்கத்தான் கிருஷ்ணா ரேவதி வீட்டில் அவள் இல்லாத நேரமாகப் பார்த்து சென்று,பேச்சைத் தொடங்கினாள்....

''கிருஷ்ணா,நீங்க பொறுப்புணர்ந்த பக்குவமான பொண்ணு... நீங்களே இந்த காதல் கன்றாவிக்கெல்லாம் சப்போர்ட் பண்ணிட்டு வரலாமா''என்று பதில் வந்தது அவள் அண்ணன் தரப்பிலிருந்து...

''பக்குவமான பொண்ணு நானே இதுக்கு சப்போர்ட் பண்ணிட்டு வர்றேன்னா,இதுல எவ்வளவு உண்மைத்தன்மை இருக்குன்னு நீங்க புரிஞ்சுக்கணும்'' ரேவதியும் விடவில்லை...

''ஓ....என் வார்த்தையிலிருந்தே நூல் எடுக்கறீங்களா''

''சரி....வார்த்தை ஜாலத்தைஎல்லாம் விடுங்க...நேரடியாவே கேக்கறேன்...ரேவதி அவ விரும்புன பையனைக் கல்யாணம் பண்ணிக்கறதுல உங்களுக்கு என்ன பிரச்சனை....''

''எல்லாமே பிரச்சினைதான்....அவன் எங்க ஆளுக கிடையாது.... பெரிசா வசதி வாய்ப்புகளும் இல்லை...இவ அளவுக்கு அழகும் கிடையாது....முதல்ல,தன்னால மாப்பிள்ள தேடிக்கற அளவுக்கு பெரிய ஆளாயிட்டாளா இவ''

''செம காமெடி....அப்புறமா சிரிக்கிறேன்...அவ கட்டிக்கப் போறவனை அவ செலக்ட் பண்ணினா என்ன தப்பு''

''எங்க குடும்பத்துல அந்த வழக்கம் கிடையாது''

''படிச்ச பிள்ள..நல்லது கெட்டது தெரியாதா அவளுக்கு''

''படிக்க வச்சது தப்பாப் போச்சா....ஒரு அறிவு வளரட்டும்னு நினைச்சோம்....இவ என்னடான்னா,இருக்கறதையும் தொலைச்சுட்டு வந்து நிக்கிறா''

''கடவுளே....உங்க கிட்ட பேசி மீள முடியாது...முடிவா என்னதான் சொல்றீங்க''என்றாள் ரேவதி எரிச்சலுடன்...

''முடிவு என்ன முடிவு...முதல்லேயிருந்தே இது சரியா வராதுன்னுதான் சொல்லிட்டு இருக்கோம்''

''சரி....உங்க பிடிவாதம் உங்க தங்கச்சிக்கு இருக்கும்ல....ஏதாவது தப்பான முடிவு எடுத்துட்டாள்னா....உங்களை உதறிட்டு,சந்தோஷ் பின்னால போயிட்டாள்னா''

''நீங்களே சொல்லிக் குடுத்துருவீங்க போலிருக்கே''

'தேவைப்பட்டா அதுவும் செய்வேன்...' நான் அவ வாழ்க்கை நல்லா இருக்கணும்னு நினைக்கறேன்...''

''அப்போ நாங்க அவ வாழ்க்கை நாசமாப் போகணும்னு நினைக்கறமா''

''பேசறதைப் பார்த்தா அப்படித்தான் தெரியுது''

''கல்யாணம் பண்ணிக்கிட்டு,பிள்ளை குட்டின்னு வாழ்ந்து ஆண்டு அனுபவிச்சவங்க சொன்னா யோசனையாவது பண்ணலாம்''என்று அம்பு வந்து விழுந்தது....அவளது வீக் பாயிண்ட்டை அடிக்கறாங்களாமாம்....சிரித்தாள் கிருஷ்ணா.. அவள் பார்க்காத குத்தல் பேச்சுகளா....

''சொல்றவங்க யாரா இருந்தா என்ன....விஷயம் என்னன்னு பாருங்க''

''ரெண்டுமே சரியில்ல...இடத்தை காலி பண்ணுங்க....உங்களை மதிச்சு இவ்வளவு நேரம் பதில் சொல்லியாச்சு...எங்க வீட்டு விவகாரத்தை நாங்க பாத்துக்கறோம்''

ரேவதிக்கு அவன் விரும்பியவனுடன் கல்யாணம் கண்டிப்பாக நடக்கும் என்ற எண்ணத்தை அந்த இடத்திலேயே ஆழப் பதித்து விட்டு,அங்கிருந்து வெளியேறினாள் கிருஷ்ணா...

9

கிருஷ்ணா அத்துடன் ரேவதி விவகாரத்தை வேண்டுமென்றே மறந்து போனாள்...நம்மால் முடிந்ததை செய்தாயிற்று... இனி விதி வசம் என்று விட்டு விட்டாள்....ரேவதியின் நினைவு வரும் போதெல்லாம்,அவள் விரும்பிய மண வாழ்வு அவளுக்குக் கிடைக்கட்டும்...என்று மனதுக்குள் ஒரு திடமான எண்ணத்தைப் போடுவாள்....நேர்மறை எண்ணங்களை விட சக்தி வாய்ந்தது என்ன இருக்கிறது? பணம் பாதாளம் வரை....எண்ணம் எங்கும் பாயும் என்ற உண்மையை அறிந்தவள் அவள்...மற்றொரு காரணம் அவள் கம்பெனியில் ஆடிட்டிங் ப்ராப்ளம்....அதில் மண்டையை உடைத்துக் கொண்டு இருந்தாள்...

''சங்கர்....வி .கே.புரத்துல சுமங்கலி ஸ்டோர்ஸ்க்கு சரக்கு போட்ட பில் எங்க?''

''ட்ராயர்ல சிவப்பு கலர் ரப்பர் பேண்ட் போட்டு சுத்தி வச்சு இருப்பேன் பாருங்க அக்கா''

''ம்ம்....இருக்கு...இதுல,செட்டில் ஆனது எது''

''என்னக்கா''

''இல்லடா....கடையில மொத்தமா செக் குடுத்துட்டாங்க... அப்பிடித்தான''

''ஆமா''

''ம்ம்...நோமா....அந்த செக்கை வச்சி எந்த பில் செட்டில் ஆகியிருக்குன்னு டிக் பண்ணிட்டுல நீ அதை பேங்க்ல போட்டு இருக்கணும்''

''நினைவு இருக்கும்னு நெனச்சேன்''

''யாருக்கு....உனக்கு?.நல்லா நினைவு இருக்குமே... இடுப்புத் துணி மறந்துட்டு சுத்தறவன் நீ''

பாக்கெட் போட்டுக் கொண்டு இருந்த பவானி வாய் பொத்தி சிரிக்க,சங்கர் அவளை முறைத்தான்...

''என்ன சிரிப்பு...அடுத்து அங்க வாரேன்..இரு... சரி.. தம்பி....பேமென்ட் நோட்டு எடு..''

எடுத்துக் கொடுத்தான்....தூசி அடைந்து கிடந்தது...

இப்போதைக்கு யூஸ் பண்ணாப்புலையே தெரியல''என்றவாறு திறந்து பார்த்தாள்....கடைசியாக இரண்டு மாதங்களுக்கு முன்பாக என்ட்ரி போடப்பட்டு இருந்தது...

''சுத்தம்....இதுலயாவது டீடைல்ஸ் பார்க்கலாம்னு பாத்தேன்.... அதுவுமில்ல..சரி...இந்த மாசம் டெலிவரி பண்ணின கடை பில் எங்க''

''போன வாரம் போனேன்க்கா .கடையில ..கூட்டமா இருந்துச்சு..... மதியம் வா ..பில் போட்டுத் தாரேன்னு சொன்னாங்க''

''உனக்கு இன்னும் மதியம் வரவேயில்ல ..அப்படித்தானே''

தலை சொறிந்தான் சங்கர்...

''டேய்....பில்லுதான் முக்கியம்...அது அவங்களுக்குத்தான் பேப்பர்....நமக்கு அது பணத்துக்கு சமானம்....ஓகேயா...''

தலையாட்டினான்..

''நல்லா மண்டையை ஆட்டு...செம்மறி ஆடு மாதிரி....வீட்டு நிலைமை சரியில்லேன்னு,நான் கொஞ்ச நாளா கடைக்கு சரியா வரல....அந்தால,வேலையைக் காமிச்சிட்டீங்க பாத்தியா.... இன்னும் அந்த மேடம் என்ன கூத்தெல்லாம் பண்ணி வச்சு இருக்காங்களோ....சரி...நீ போயி வேலையை பாரு''என்று நகர்ந்த போது....

ரேவதியிடமிருந்து அலைபேசி அழைப்பு....

''சொல்லுப்பா''

''அக்கா ஒரு குட் நியுஸ்''

''கல்யாணத்துக்கு முன்னமேவா....வேணாம்ப்பா...நல்லாயிருக்காது''

''அக்கா.... நான் பாங்க்லேயிருந்து பேசறேன்....ப்ளீஸ் லொள்ளு பண்ணாமக் கேளுங்க''

''ஓகே...ஓகே...சொல்லு''

''எங்க வீட்டுல கல்யாணத்துக்கு சம்மதிச்சிட்டாங்க''

''கல்யாணத்துக்குத்தான் எப்பவோ சம்மதம் சொல்லிட்டாங்களே....உன்னைய சந்தோஷுக்கு கட்டிக் குடுப்பாங்களா''

''அக்கா...மொக்கை போடாதீங்கக்கா...நான் அழுதுடுவேன்.... எனக்கும் சந்தோஷூக்கும் திருமணம் செய்து வைக்க,என் சகோதரர்கள் சம்மதித்து விட்டார்கள்..போதுமா''

''ஆங்....அப்படி சொல்லு...இதைக் கேக்க எவ்வளவு இனிமையா இருக்கு...அதுவும் போக,என்னையப் போல அப்பாவிகளுக்கு,விளக்கிச் சொன்னாத்தான புரியும்''

''யாரு...நீங்க அப்பாவியா...எங்க அண்ணன் ரெண்டு பேரும் விடாக்கொண்டன்....கொடாக்கொண்டன்...அவங்களையே ரைடு விட்டு வழிக்கு கொணாந்துட்டீங்க ....உங்க வெயிட் என்னன்னு உங்களுக்குத் தெரியலக்கா''

''யா...கரெக்ட்....அப்படி வெள்ளந்தியாவே வளர்ந்துட்டோம் ரேவதி....சரி..அதை விடு...நான் அன்னிக்கு உங்க வீட்டுக்கு வந்து பேசினபோது, சரியான ரெஸ்பான்ஸ் இல்லையே....கிணத்துல போட்ட கல்லு மாதிரி சப்புன்னு இல்ல கிடந்துச்சு''

''ஆமாக்கா....நீங்க பேசிட்டு போனப்புறம்தான் யோசனை பண்ணியிருக்காங்க...எங்க அம்மாச்சி உள்ளே இருந்து நீங்க பேசினதைஎல்லாம் கேட்டுகிட்டே இருந்து இருக்கு...எனக்கென்னமோ அந்த பொண்ணு பேசறது நியாயமாத்தெரியுது அப்பிடின்னு சொல்லவும்,இதுகளுக்கு அல்லு விட்டுருச்சு....அதுவும் போக என் பங்குக்கு நானும் ஒரு காரியம் பண்ணினேன்''

''நீதான் நிறைய பன்றியே,,,எதுன்னு சொல்லு''

சிரித்தாள் ரேவதி....

''ரொம்பப் பாராட்டாதீங்கக்கா...வெக்கமா இருக்கு''

''இதுல பெருமை வேற... விஷயத்தை சொல்லித் தொலை...''

''அண்ணன் கோவத்துல,போன வாரம் மாப்பிள்ளைன்னு சொல்லி எவனோ ஒருத்தனைப் பிடிச்சிக் கூட்டியாந்துருச்சி....''

''அய்யய்யோ...என்ன ஆச்சு''

''வந்தவனுக்கு என்ன ஆச்சுன்னு கேளுங்க''

''ஆமா...நானும் அந்த அர்த்தத்துலதான் கேட்டேன்''

''அவன் போன் நம்பரை வாங்கிகிட்டேன்....மறுநா போன் போட்டு எல்லா விஷயத்தையும் சொல்லிட்டேன்....எதையோ எதிர் பார்த்துக் காத்து இருந்தவனுக்கு இது சப்புன்னு ஆயிட்டு....

அரண்டு போனான்''

''பாவம்...யார் பெத்த புள்ளையோ...உன்கிட்ட சிக்கிருச்சி''

''ஆமா....அவன் கெட்ட நேரம்....இதுவும் எங்க அண்ணன் காதுக்குப் போனதும்,...கூட்டிகழிச்சிப் பாத்துட்டு,கடைசியில இவளை அந்தப் பயலுக்கே கட்டி வச்சிரலாம்னு ஒரு முடிவுக்கு வந்துட்டானுக''

''குட்...நல்லதே நடக்கட்டும்..சரி...சந்தோஷ் எப்பிடியிருக்கான்''

''அதெல்லாம் எப்பவோ தேறிட்டான் ....பொலி காளை மாதிரி சுத்திகிட்டு திரியிறாங்கா''

''கொஞ்சம்... கொஞ்சம் மரியாதை குடுக்கலாமே....என்ன இருந்தாலும் புருசன்னு ஆகப்போறவன்,,''

''அதெல்லாம் தாலி கழுத்துல ஏறின அப்புறம் பாத்துக்கலாம்... அக்கா ஒரு விஷயம் விட்டுப் போச்சு....என் கல்யாணத்துக்கு நம்ம தெருக்காரங்க யாருக்கும் அழைப்பு கிடையாதாம்''

''எனக்குமா''

''முக்கியமா உங்களுக்குத்தான்''

''ஏனாம்''

''மானம் போயிருமாம்''

''இனிமேயா''

''அக்கா....''

''இல்ல.அடிதடி,ஆஸ்பத்திரி அப்பிடின்னெல்லாம் இருந்துதே.. அதை சொன்னேன் ..நான் வராட்டா என்ன....ஐயர் வந்து கல்யாணம் சிறப்பா நடந்தா சரிதான்... எனி ஹவ்....வாழ்த்துகள்... வாழ்க வளமுடன்... நலமுடன்..''

''அக்கா....காமிரா மேன் கிட்ட சொல்லி,யு டியூப் லிங்க் அனுப்பறேன்... அதுல பாத்து கண்டு களியுங்கள்....வச்சிடறேன் அக்கா''.

அலைபேசியை வைத்த கிருஷ்ணாவுக்கு பெருமை பிடிபடவில்லை...நான் எடுத்த ஒரு முயற்சி இன்று நல்ல பலனைத் தந்து இருக்கிறது....

மறுநாள் வீட்டில்வைத்து அண்ணனுடன் பேசிக்கொண்டு இருக்கையில் கிருஷ்ணா, ரேவதி திருமண செய்தியை சொல்லவும்

வியந்தான் மூர்த்தி..

''பரவாயில்லையே....எப்பிடியோ நல்லது நடந்தா சரி....அப்ப ரேவதி கல்யாணத்துல நீதான் சிறப்பு விருந்தாளின்னு சொல்லு''

''அங்கதான் ஒரு ட்விஸ்ட் வைக்கறாங்க ரேவதி வீட்டுல...நாம உள்பட தெருக்காரங்க யாருக்கும் அழைப்பு கிடையாதாம் ''

''அப்பிடி போடு அருவாளை....ம்ம்ம்...''

''என்னங்க...இப்பிடி பண்றாங்க...நம்ம கிருஷ்ணா இந்த கல்யாணத்துக்கு எவ்வளவு மெனக்கெட்டுச்சு ....அவளைக் கூட மதிக்கலை...என்ன பிறவிகளோ''என்று தலை வாரிக்கொண்டே காட்சிக்குள் நுழைந்தாள் சுகந்தி....

''இன்னிக்கு வாட்சப்ல ஒரு சூப்பர் ஸ்டோரி...சுகந்தி நீயும் கேளு...திஷாக்குட்டி வா...நிஷா எங்க''

''அண்ணா...ஓவராப் பண்ணாத...நீ கதை சொல்றதுக்காக மாநாடா கூட்ட முடியும்..டக்குன்னு சொல்லு''

''ஆங்...கேளுங்க...ஒரு ஊர்ல வியாபாரி ஒருத்தர் இருந்தார்....''

''அப்பா... வியாபாரின்னா சேல்ஸ் மேன்தான''

''அப்படியே வச்சுக்கோ''

''அங்கயும், இங்கயும் அலையறதுதான் அவரு வேலை...கேட்டியா...ஒரு ஆக்சிடென்ட்ல அவருக்கு கால் நடக்க முடியாம ஆயிட்டு...அதனால,ஒரு கழுதையை தனக்கு போக்கு வரத்துக்கு வச்சுகிட்டார்... ஆனா,குண்டக்க,மண்டக்கன்னு ஒரு ஒழுங்கு இல்லாம அவரோட பிரயாணங்கள் இருந்துச்சு...இதைப் பார்த்த அவரோட நண்பர்கள்,ஒரு நாளு அவருகிட்ட,

''என்னப்பா இது...ஒரு நா கிழக்கே போற...ஒருநா மேற்க்கே போற...சில நாளு வேகமாப் போற...சில நாளு ரொம்ப மெதுவாப் போற....ஒண்ணும் விளங்கலையே....என்ன சேதின்னு கேட்டாங்க...

''அதாவது,இப்ப நான் இந்த கழுதையை நம்பித்தான் இருக்கேன்...நான் சொல்றது எதையும் அது கேக்கறதில்ல.... அதுக்காக விட்டுற முடியாது... எனக்கு வேலையாகணும்....அதே சமயம் கழுதை கூடல்லாம் மல்லுக் கட்ட முடியாது...அதனால நான் கொஞ்சம் மாறிகிட்டேன்....அது எந்த திசைக்குப் போகுதோ

அங்க உள்ள வேலைகளை முடிச்சுக்கறேன்...அதோட வேகத்துக்கு ஏத்தாப்புல நான் அனுசரிக்கிறதால,இப்ப எனக்கும் பிரச்சினை இல்ல...கழுதைக்கும் பிரச்சினை இல்ல...பொழப்பு நிம்மதியாப் போகுது''

''சரி..இந்த கதை மூலமாக தாங்கள் சொல்ல விரும்பும் உயர்ந்த கருத்து என்னவோ''----சுகந்தி...

''ஆங்...அப்பிடி கேளு...அது போல நாமளும் வீட்டுல,வெளியில பலகழுதைகளோட ட்ராவல் பண்றோம்..பண்ணவேண்டியிருக்கு... அதுகளுக்கு பல விஷயங்கள் புரியாது....புரியவைக்கவும் முடியாது...அதனால நாம கொஞ்சம் அட்ஜஸ்ட் பண்ணிகிட்டா வாழ்க்கை நிம்மதியாப் போகும்....அதான் மேட்டர்''

''யாரை சொல்றீங்க....ஒப்பனாதான் சொல்றது''

''இப்ப உதாரணத்துக்கு,உங்க அம்மாவை எடுத்துக்கயேன்''

''என்னங்க''

''இல்லம்மா...கழுதைன்னா நீ லிட்டரல் மீனிங் எடுத்துக்கக் கூடாது....அவங்க வயசுல பெரியவங்க''-----மூர்த்தி...

''வயசுல மட்டும்தான்''---கிருஷ்ணா.

''ஏன்..உங்க ரெண்டு பேரையும் அவங்க என்ன பண்ணிணாங்களாம்...கொஞ்சம் படபடன்னு பேசுவாங்க..'' என்று முகத்தை நொடித்தாள் சுகந்தி...

''கொஞ்சமா...நீ உடம்பு சரியில்லாம இருந்தியே,,,அப்ப உங்க அம்மா,இங்க வந்து உக்காந்துகிட்டு,ஹெல்ப் பண்றேன்கிற பேர்ல. என்னா அட்டகாசம் தெரியுமா...எனக்கும் கிருஷ்ணாவுக்கும் நாய் படாத பாடு...பிள்ளைகளைப் பாப்பமா....உன்னைப்பாப்பமா... இல்ல உங்க அம்மாவோட மல்லுக்கட்டிக்கிட்டு இருப்பமா...இந்த கதையில சொன்னாப்புல''

சுகந்தியின் முகம் சிறுத்து விட்டது,...அம்மாவுக்கு பரிந்து பேச வழியுமில்லை...வாயுமில்லை...ஏனெனில் அம்மா இதையும் செய்திருப்பாள்...இதற்கு மேலேயும் செய்யக் கூடியவள்தான்...

அண்ணியின் முகம் போன போக்கைக் காண சகியாமல் கிருஷ்ணாதான் பேச்சை மாற்றினாள்...

''அண்ணா,திஷாகுட்டி,பாதியிலே எழுந்து ஓடிருச்சி....புரியல

போல..''

''எதுக்கு சொல்ல வந்தேன்னா,இந்த ரேவதி மேட்டரையும் அப்படியே விடு...அவங்க விருப்பத்துக்கு என்னவோ பண்ணிக்கட்டும்....அந்த பொண்ணு நல்லா இருந்தா சரிதான்''

''ஆமாமா....நானும் அப்படித்தான் நினைச்சுகிட்டு இருக்கேன்'' என்று சொன்னாள்...ஆனால்,அடுத்த மாதம் ரேவதியின் திருமண நாள் வந்த போது,மனம் சுணங்கித்தான் போனாள் கிருஷ்ணா...அலைபேசியில் மாங்கல்ய தாரணத்தைப் பார்த்துவிட்டு,கம்பெனிக்கு வந்து விட்டாள்...அங்கு வேலை மும்முரத்தில் இருந்தபோதுதான்,அது நடந்தது....பவானி,திடீரென்று

''அக்கா..அக்கா''என்று கத்த...பில் போட்டுக் கொண்டிருந்த கிருஷ்ணா நிமிர்ந்து பார்க்க,புதுப் பெண்ணும் ,மாப்பிள்ளையும் படியேறி வந்து கொண்டு இருந்தார்கள்....தனது பிரியத்துக்குரிய தோழியை மணக்கோலத்தில் பார்த்து பூரித்துப் போனாள் கிருஷ்ணா...படபடப்பாக இருந்தது...

அமர வைத்து,இளநீர் வரவழைத்து குடிக்கக் கொடுத்தாள்.... இருவரையும் வாழ்த்தி தயாராக வைத்து இருந்த பரிசுப் பொருளைக் கொடுத்தாள்...

ரேவதி மாப்பிள்ளையுடன் தன்னைத்தேடி வருவாள் என்பது கிருஷ்ணாவுக்குத் தெரியும்....அக்காவுக்குத் தெரியும் என்பதும் ரேவதிக்குத் தெரியும்...சொற்களில் விளக்காத இந்த மெல்லிய மனநிலைதான் நட்பையும் அன்பையும் இறுக்குகிறது....

''இந்தா... அதிரசம் மாவு...இப்போ இல்லத்தரசியா ஆயிட்ட.... அதிரசம் சூப்பரா சுட்டு எனக்குக் குடுத்தனுப்பறே''-என்று கிருஷ்ணா சொல்லவும் இருவரும் சிரித்தனர்...

''தம்பி...உங்களுக்கு உடம்பு நல்லாயிருக்கா''

''ஆமாக்கா....நல்லா இருக்கேன்''

''இனி என் கையால அடி வாங்கணும்ல....தெளிய வச்சிதான் அடிப்போம்''----ரேவதி...

''என் தம்பி மேல கை வச்சே உதை விழும்''-கிருஷ்ணா'''

''நீங்க எனக்குத்தானே அக்கா''

''இல்ல..இன்னியிலேருந்து அவனுக்கு அக்கா''

''ஒரே நாள்...எல்லாம் தலை கீழா மாறிடுச்சு''

''ஆமா....அப்படித்தான் இருக்கும்....மாற்றங்களுக்கு தயாரா இரு...உள்ளதை உள்ளபடி ஏத்துகிட்டேன்னா வாழ்க்கை அமோகம்.... ஓகே....கிளம்புங்க....மேரேஜ் ஹால்ல உங்களைத் தேடிகிட்டு இருப்பாங்க'' என்று மன நிறைவுடன் ஜோடியை வாழ்த்தி அனுப்பி வைத்தாள் கிருஷ்ணா....சாதாரணமாய் சிலரை அவள் தொட்டது துலங்கும் என்று சொல்வார்கள்... அது கிருஷ்ணாவுக்கு ரொம்பவே பொருந்தும்...ஆனால்,அந்த ராசி அவளுக்கே பலித்ததா என்றால்,அது விவாதத்துக்குரிய ஒன்றுதான்...

## 10

மூர்த்தி மனைவி,மக்கள்,சகோதரியுடன் ஆடி அமாவாசையை முன்னிட்டு,சொரி முத்து ஐயனார் கோவில் வந்து இருந்தான்....மனைவிக்கு உடல் நலமில்லாது இருந்தபோது,மனதளவில் இந்த கோவிலுக்கு ஒரு நேர்ச்சையைப் போட்டு இருந்தான்..அதற்காக இந்த ஆன்மீகப் பயணம்....காரை விட்டு இறங்கி சிறிது தூரம் நடந்துதான் போக வேண்டும்....

''எதுக்குப்பா இங்க வந்து இருக்கோம்''---நிஷா

''குலதெய்வம்''

''டிவி சீரியலாப்பா''அவள் திருப்பிக் கேட்ட கேள்வியில்,உடன் பயணம் செய்த சில பக்தர்கள் அவளைத் திரும்பிப் பார்த்து சிரித்து விட்டுப் போனார்கள்....

''திஷா...என் சார்புல அவ மண்டையில ஒரு குட்டுப் போடு''

திஷா ஏக மகிழ்ச்சியுடன் அந்த வேலையை செய்தாள்...

''இதுக்குத்தான் உங்க அம்மாகூட உக்காந்து டிவி பாக்காதீங்கன்னு சொல்றது''

''ம்ம்ம்...நான் ஒரு டைம்பாசுக்கு பாத்தா... இதுகளுக்கென்ன''---என்று சுகந்தி முறைக்க...

''நம்ம குல தெய்வம் டா....''---விளக்கினாள் கிருஷ்ணா....

''இந்த கோவில்ல ஆடிஅமாவாசை விசேஷம்னு கேள்விப்பட்டு இருக்கேன்.... இன்னிக்குத்தான் பாக்கறேன்''---சுகந்தி

''ஆமா....ஏறக்குறைய ரெண்டு லட்சம் பக்தர்கள் வருவாங்கன்னு சொல்வாங்க...இது தலைமை சாஸ்தா கோவில்லா'

''இருக்கும்...என்னா கூட்டம்...''

''பிள்ளைங்களைப் பத்திரமாப் பிடிங்க''

ஒருபக்கம் சாமியாடிக்கொண்டு இருக்க, மற்றொரு பக்கம் குறி பார்க்க,அங்கு ஒருவர் சங்கிலியால் தன்முதுகை அடித்துக் கொண்டு இருக்க....அங்கு இருந்த இலுப்பை மரத்தில் ஏராள மணிகள் தொங்க விடப்பட்டு இருந்தன...ஒவ்வொரு சன்னதியாக மூன்று தெய்வங்களையும் தரிசித்து வந்தார்கள்... இளம் பிள்ளைகள் நிறைய எண்ணிக்கையில் பால் குடம் எடுத்து வந்தனர்.. தளவாய் மாடசாமி அபிஷேகம் அலங்காரம் முடிந்து,முறுக்கு மீசையுடன்,பூமாலைகளுடன் கம்பீரமாக காட்சி தந்தார்...அங்கிருந்த கற்களை அடுக்கி ஓலைகள் எரித்து பொங்கல் வைத்தாள் சுகந்தி...அவளுக்கு கிருஷ்ணாவும்,பிள்ளைகளும் உதவி செய்தனர்...பொங்கல் பானையை அப்படியே தூக்கிக்கொண்டு போய் சங்கிலி பூதத்தார் சன்னதியில் வைத்து அர்ச்சனை செய்து வழிபட்டு ,வெளியில் வந்து பட்டவராயன் சுவாமிக்கு செருப்பு காணிக்கை செய்தனர்...கடைகளை வாய் பார்த்துக் கொண்டு இருந்த பிள்ளைகளை அழைத்து,

''இதா இப்ப நாம செருப்பு வாங்கி இந்த சாமிக்கு நேர்ச்சை பண்றோம்லா....அடுத்தவருசம் வந்து பார்த்தா,இந்த செருப்புங்கள்லாம் தேஞ்சி போயிருக்கும்....''

''அந்த சாமி போட்டுட்டு நடப்பாரா''

''அப்பிடித்தான் சொல்றாங்க''

''ஏங்க...அதுங்களை பயமுறுத்தறீங்க''

மனைவியிடம் நிமிர்ந்தான்...

''பயம் நல்லதுடி...அதுதான் நம்மளை தப்பு தவறு பக்கம் போகாமப் பாதுகாக்கும்....இந்தத் தலைமுறைக்கு பயம்னா என்னன்னே தெரியல...''

என்று விளக்கம் சொல்ல...சுகந்திக்கு அது சரியென்றே பட்டது...

இருந்தும் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை...மனைவிகள் கணவர்களை இறக்கி சொல்வதில் காட்டும் ஆர்வத்தை,அவனை ஏற்றி சொல்வதில் காட்டுவதில்லை...அதனை கணவன்மார்கள் சட்டை செய்வதுமில்லை....எதிர்பார்ப்பு இருக்குமிடத்தில் தானே ஏமாற்றத்துக்கு வாய்ப்பு....

சுகந்தி தேங்காய் துவையல்,அப்பளம் ஆகியவை தயார் செய்து வந்து இருந்தாள்..அவள் செய்து இருந்த பொங்கல் சாதத்துடன்,நன்றாக பொருந்தி வந்தன.....அனைவருக்கும் நல்ல பசி...வட்டமாக அமர்ந்து உண்டார்கள்....முகம் தெரியாத யாரோ இருவர் வந்து,சாம்பார் ஊற்ற,மற்றொருவர் சக்கரைப் பொங்கல் தர.....பசியும்,ருசியும்,அந்த சூழலும்,தெய்வீகமான அலை வரிசையும் சேர...திவ்யமான சாப்பாடு...

சிறிது நேரம் அமர்ந்து போவோர்,வருவோரைப் பார்த்துக் கொண்டு இருந்து விட்டு வீடு கிளம்பினர்....

''ஏங்க....இவ்ளோ பேருக்குமா,இந்த கோவில் குலதெய்வம்?''- சுகந்தி...

''இல்லண்ணி....குலதெய்வம் எது எங்க இருக்குன்னே தெரியாதவங்களும்,இந்த அய்யனாரைத்தான் கும்பிடுவாங்கன்னு சொல்லுவாங்க''

''ஆமா...'' -மூர்த்தி

''இங்க நைட் ஸ்டேகூட பண்ணுவாங்க இல்ல''

''ஆமா....இந்த காடும்,ஆத்து தண்ணியும்,கோவிலும்,பாக்கவே ரம்மியமா இருக்குலா....அதான் நாளுநா தங்கிட்டுப் போவாங்க''

''சாப்பாடு''

''இதோ..இப்ப பொங்கல் வச்சோம்லா....இது போல காய்கறிகளைப் போட்டு ஒரே சாம்பாரா வச்சா வேலை முடிஞ்சுது....தண்ணிக்கு ஆறு ஓடுது...குடிச்சுக்கலாம்... குளிச்சுக்கலாம் ...கும்பிட்டுக்கலாம்....வேறென்ன வேணும்....''

''அது சரிதான்....''

''இப்ப ப்ளாஸ்டிக்கை தடை பண்ணியிருக்காங்க.... இல்லேன்னா.... இதோட அழகு...பாழாயிடும்''

''ஆமா...நம்ம மக்களுக்கு போற இடத்தையெல்லாம் வீடு

மாதிரிப் பயன்படுத்தணும்''

பேசிக்கொண்டே நடந்தார்கள்...கடையில் பொருட்கள் வாங்கா விட்டால் பொங்கல் செரிக்குமா....பிள்ளைகள் விளையாட்டு சாமான்கள் வாங்க...சுகந்தியும் வேண்டியதை வாங்கினாள்...

''கிருஷ்ணா...நீயும் எதையாவது வாங்கேம்மா ''என்றான் மூர்த்தி தங்கையிடம்...

தலையாட்டி மறுத்து விட்டாள்...அவள் வழக்கமாக வாங்கும் பெரிய கடைகளைத் தவிர்த்து வேறு எங்கும் ஷாப்பிங் செய்யமாட்டாள்...தெரிந்ததுதான்....பெருமூச்சு விட்டுக் கொண்டான் மூர்த்தி....இவ்வளவு ரசனையான பெண்ணுக்கு கடவுள் ஒரு துணைதேடி தரக் கூடாதா என்று வருந்தினான்...

''ஏல...கூறு கெட்டவன...எதுக்குல பொலம்பிப் போற...கையில வெண்ணைய வச்சுகிட்டு யாராவது நெய்க்கு அலைவாகளா? அய்யனாரு காலடியில நின்னுகிட்டு எதுக்கு விசனம்? அவருகிட்ட வேண்டிக்க...நேரா பத்தாவது மாசம் பிள்ளை மடியில இருக்கும்''

யாரோ இருவர் பேசிக்கொண்டு போகிறார்கள்...அது தனக்கு சொன்னது போலவே இருந்தது மூர்த்திக்கு...நின்ற இடத்திலேயே கண் மூடி தங்கையின் திருமணத்திற்காக அய்யனாரிடம் மனமுருகி வேண்டிக்கொண்டான்...எந்த யுகத்திலும்,தனக்கு மிஞ்சிய ஒரு காரியத்திற்காக,மனிதன் கடவுள் காலடியைத்தானே தஞ்சம் அடைகிறான்....அப்படி ஒரு மூக்கணாங் கயிறு கடவுளிடம் இல்லையென்றாலும் மனிதனை கையில் பிடிக்க முடியுமா என்ன?

காரில் ஏறினார்கள்...

''வாராரு....வாராரு....பட்டவராயன் வாராரு..
கறுப்புக் குதிரையேறி வேட்டையாடி வாராரு...
தொட்டதையெல்லாம் விளங்க வைக்கும்
தூய வீரக் கதை கேட்டால்,
கல்லும் கனியும்..கரும்பாறை விலகும்..
வெல்லும் வீரனை வேண்டிப் பெறுவோம்''

பாட்டும் தாளமும் பிள்ளைகளை ஆட வைத்தன....அய்யனாரின் நினைவுகளும் அவர் பாடலும் பின்தொடர்ந்தது அவர்களது காரை...

11

அன்று நிஷா திஷாவின் எட்டாவது பிறந்தநாள்..... கிருஷ்ணா இருவருக்கும் ஒரே நிறத்தில்,உடை ஆர்டர் செய்திருந்தாள்....சுகந்தி பிள்ளைகளுக்குப் பிடிக்குமென்று,உருளைக்கிழங்கு கட்லெட்டும்,ரோஸ் மில்க்கும் செய்திருந்தாள்...மூர்த்தி,ப்ளாக் பாரெஸ்ட் கேக் வரவழைத்து இருந்தான்....நிஷா திஷாவின் தெரு நண்பர்கள்,பள்ளி நண்பர்கள் அழைக்கப்பட்டு இருந்தனர்....எல்லோரும் உடை மாற்றி தயாராக,அதே நேரம் விருந்தினர்களும் வந்து விட...மெழுகு திரி ஏற்றி வைத்து,கேக் வெட்டினார்கள்...

''அன்பு நிலைபெற.
ஆசை நிறைவேற..
இன்பம் நிறைந்திட,
ஈடில்லா இந்நாளில்
உள்ளத்தில் குழந்தையாய்ஊக்கத்தில் குமரியாய்
எண்ணத்தில் இனிமையாய்ஏற்றத்தில் பெருமையாய்
ஐயம் நீங்கி,
ஒற்றுமை காத்து
ஒரு நூற்றாண்டு
ஔவை வழியில்,
நீ வாழிய வாழிய....''
இனிய பிறந்த நாள் வாழ்த்துகள்...''

உயிரெழுத்துகளில்,தனது உயிருக்கு உயிரான மருமகள்களுக்கு கிருஷ்ணா வாழ்த்துப்பா பாட...

..இருவரும் அத்தைக்கு முதலில் ஊட்ட,மற்றவர்களுக்கும் சிறு தீனி,பால்,பழச் சாறுகள் வழங்கப்பட்டது..விருந்தினர்கள் கிளம்பியதும், ஏற்கெனவே திட்டமிட்டபடி,அனைவரும் உணவகம் சென்றனர்....வேண்டிய உணவுகளை ஆர்டர் செய்து சாப்பிட்டு விட்டு உணவகத்தின் பார்க்கில்,ஓய்வாக அமர்ந்தனர்..... அம்மாவும் பெண்களும் ஊஞ்சலில் பிசியாக இருக்க....

''கம்பெனி எப்படிம்மா போகுது''---மூர்த்தி...

''நல்லாப் போகுது.....அடுத்த ஸ்டெப்புக்கு போகலாம்னு

இருக்கேன்....அதாவது பிராண்டை ரெஜிஸ்டர் பண்ணலாம்னு முடிவு பண்ணியிருக்கேன்....வேலை நடந்துட்டு இருக்கு.... இந்த வாரத்துல முடிஞ்சுரும்....அதனால கண்டிப்பா ஆடிட்டர் வச்சுதான் ஆகணும்...உனக்குத் தெரிஞ்ச யாராவது இருந்தா சொல்லு'' கிருஷ்ணா

''சரி....விசாரிச்சுட்டு,நல்ல ஆளாப் பார்த்து சொல்றேன்... சரி.... கடை சாவி யாருகிட்டம்மா இருக்கும்''

''இன்னிக்கா''

''இல்ல பொதுவா''

''என்கிட்டே ஒண்ணும்,சங்கர்கிட்ட ஒரு சாவியும் இருக்கும்....யாரு முதல்ல போறோமோ திறந்துக்குவோம்...ஏன் கேக்கறே...''

''இல்ல...உங்க காம்ப்ளக்ஸ்சுல சிறுதானியக் கடைன்னு வச்சு இருக்கானே பூரண லிங்கம்''

''ஆமா...கருப்பா..உயரமா இருப்பாரே''

''ம்ம்ம்...அவனேதான்....இன்னிக்கி பஜாருக்கு வந்து இருந்தான்....என்னைய தனியாக் கூப்பிட்டுப் போயி,அண்ணன் உங்க தங்கச்சி கடை பத்தி உங்ககிட்ட ஒரு விஷயம் சொல்லணும்னான்....சொல்லுன்னேன்... அவங்க இல்லாதப்ப,வேலை பாக்கற பையனும் பொண்ணும் வெளிய கதவைப் பூட்டிட்டு,பின் வாசல் வழியா உள்ள இருக்குதுங்க....பாக்கறதுக்கு நல்லா இல்ல....உங்க தங்கச்சிகிட்ட சொல்ல சங்கடமா இருந்தது....அதான் உங்ககிட்ட சொல்றேன் அப்படின்னான்''

முகம் சுழித்து அதிர்ந்தாள் கிருஷ்ணா...

''அண்ணா... என்ன சொல்றே''

''தெரியல..அவன் சொல்றான்''

''உனக்கு எப்ப தெரியும்''

''அதான்..இன்னிக்கு காலையிலதான் சொன்னான்...சரி..நம்ம வீட்டுல பிறந்தநாள் ஏற்பாடா ஆயிட்டு இருந்துதுல்லா... அதான் உன்னைய மூட் அவுட் பண்ண வேண்டாம்னு எதுவும் பேசலை....சரி...டென்சன் ஆகாத....நாளைக்குக் காலையில

கடைக்குப் போயி விசாரிப்போம்...''

''இல்லண்ணா...அதுக ரெண்டும் எலியும் பூனையும் மாதிரிதான்...எப்பவும் சண்டை....''

''அது நீ இருக்கறப்ப...''

''ஐயோ...கடவுளே..''

''உன் கடைக்கு பின் வாசல் இருக்கா''

''ஆமாண்ணா...பின் தெரு நல்ல விசாலமா இருக்கும்ல... சாமான்கள் வந்தா மூடையோட அப்பிடி இறக்குவோம்...''

''அதத்தான் பய யூஸ் பண்ணி இருக்கான்....சரி..பாத்துக்கலாம்....ப்ரீயா விடு'' என்று அண்ணன் ஆறுதல் சொன்னாலும் ,கிருஷ்ணாவுக்கு மனம் ஒருநிலையில் இல்லை....இரவு சரியான உறக்கமும் இல்லை...எப்பொழுதடா விடியும் என்று இருந்தாள்....பிள்ளைகளை பள்ளிக்கு அனுப்பி விட்டு அண்ணனும் தங்கையும் கிளம்ப,தானும் வருவதாகச் செ ால்லி சுகந்தியும் இணைந்து கொண்டாள்...கடையை அடைந்ததும் கிருஷ்ணாவுக்கு படபடப்பு ஆகிவிட்டது....உள்ளே என்ன நிலை இருக்குமோ என்ற பயத்தில் மூர்த்தி கதவைத்திறந்து உள்ளே போக விரும்பவில்லை....அந்தப் புனித காரியத்தை தைரியமாகச் செய்தாள் சுகந்தி....உள்ளே.....இருவரும் ஒருவருக்கொருவர் காலை உணவை ஊட்டிக் கொண்டு இருந்தனர்....கையும் களவுமாகப் பிடிபட்டாயிற்று....

சுகந்திதான் அவர்களை வெளியே இழுத்து வந்தாள்.... கூட்டம் கூடி விட்டது....கிருஷ்ணா அவமானத்தில் கூசிக் குறுகினாள்...மணமாகாத எனக்கு இந்த கண்றாவியை எல்லாம் பார்க்க வேண்டும் என்பது தலைஎழுத்துதானே என்ற எண்ணம் ஏற்பட்டது... தலையில் கை வைத்து ஒதுங்கி விட்டாள்....சுகந்தி நிலைமையைக் கையில் எடுத்துக் கொண்டாள்...மூர்த்தி சங்கரை ஒரு அறை விட்டான்...

''வேலை பாக்க வந்த இடத்துல புத்தி போகுது பாரு''

பவானியின் தலையில் குட்டு வைத்தாள்...

''என்ன தைரியம்டி உனக்கு...பூட்டுன ரூமுக்குள்ள ஒரு பையனோட இருக்கற...ஏதாவது எசகுபிசகா ஆயிட்டுதுன்னா,அவன் கை வீசிட்டு போயிருவான்...நீ வயித்துல வாங்கிகிட்டு,கண்ணைக்

கசக்கி உக்காந்துருக்க வேண்டியதுதான்''

''ஐயோ..அப்படியெல்லாம் எதுவுமில்ல....சும்மா பேசிக்கிட்டுதான் இருப்போம்...அவன் என்னைய கல்யாணம் பண்ணிகிறேன்னு சொல்லியிருக்கான்''

''எத்தனை நாளா இது நடக்குது''

''ஆறு மாசமா''

கிருஷ்ணாவின் காதுகளில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றியது போலிருந்தது....இவர்கள் இருவரையும் எவ்வளவு நம்பினேன்.... அப்பாவிகளுக்கும்,நேர்மையாளர்களுக்கும் இவ்வுலகில் இடமில்லை போலுமென மனம் நொந்தாள் ....கண்கள் கலங்கியது...எப்பேர்ப்பட்ட மன உறுதியாளரையும் அசைத்துப் பார்த்து விடும் அசிங்க மனிதர்கள் இங்கு அதிகமுண்டு.... அண்ணியை அழைத்தாள்..

''என்ன செய்யணுமோ செய்ங்க....எல்லாரும் வேடிக்கை பாக்கறாங்க...கஷ்டப்பட்ட வீட்டுப் பிள்ள'' என்றாள்...

''அதை அவ நினைக்கலையே...என்ன காரியம் பண்ணியிருக்கா பாரு....கூடப் பொறந்ததுக மாதிரி நினைச்சு நீ எப்படிப் பாத்துகிட்ட...நன்றி கெட்டதுக'' என்று பொங்கிப் போனாள் சுகந்தி...

''சரி...விடுங்க...ஆக வேண்டியதைப் பாருங்க''

''என்னடா..அந்தப்பொண்ணைக் கல்யாணம் பண்ணிக்கிறியா''

''எப்ப''

''இப்பவேதான்''

''வீட்டுல சொல்லி..''

''வீட்டுல சொல்லிட்டா மத்ததெல்லாம் பண்ணினே.இப்ப மட்டும் வீட்டு நினைவு வந்துட்டாக்கும்....கடை பேரு கெட்டுப் போயிரும்....உடனே கல்யாணம் பண்ணிடுங்க''

அவளுக்குப் பிறந்தநாளாம்..எனவே ஏற்கெனவே நல்ல புடவையில் தான் வந்து இருந்தாள் பவானி....பக்கத்து கடைகளில் தாலியும் மாலையும் வாங்கினார்கள்...

''அண்ணி,அவங்க ரெண்டு வீட்டுலயும்,தகவல் சொல்லிடுங்க.- போன்ல....வந்து பாத்துக்கட்டும்.... செய்யறதுன்னு ஆயிட்டு... முறையா செஞ்சுடுவோம்''

நாத்தனாரின் நல்ல மனதை எண்ணி மனம் நெகிழ்ந்தாள் சுகந்தி....

பவானியை பொண்ணாக்கி ,சங்கரை மாப்பிள்ளையாக்கி .எந்தக் கடைக்குள் காதலை வளர்த்தார்களோ ,அதே கட்டிடமே அவர்களது கல்யாண மண்டபமாயிற்று....கணவன் மனைவி ஆனார்கள்....

எல்லோரும் ஆசீர்வதித்தார்கள்...கிருஷ்ணா ஆளுக்குப் பத்தாயிரம் ரூபாய் செக் எழுதிக் கொடுத்தாள்...

''பத்துநாள் லீவு எடுத்துக்கங்க''என்று சொல்லி விட்டு அண்ணன் அண்ணியுடன் வீடு நோக்கி சென்றாள்....பவானிக்கு அன்று மாலை கட்டப்பட்டு விட்டது....யாரால் நிறுத்தமுடியும் ?

## 12

மறு நாள் இயல்புக்கு வந்து விட்டாள் கிருஷ்ணா... எல்லாம் அதுவாக நடக்கிறது..இதில் வருந்துவதற்கு என்ன இருக்கிறது..

..என்ன..நம் கணிப்பும்,நினைப்பும் எவ்விடத்திலும் தகர்ந்து போகலாம் என்ற முன் தயாரிப்பிலேயே நாம் வளைய வர வேண்டும்....அதுதான் சமீபத்திய நிகழ்வுகளில் கற்றுக்கொண்ட பாடம் என்ற சிந்தனையுடன் கடைக்குக் கிளம்பினாள் கிருஷ்ணா...

''அப்பாவி மாதிரி முகத்தை வச்சுகிட்டுஅந்தப் பையன் ,சங்கர் என்ன காரியம் பண்ணிட்டான் பாத்தியா....நல்ல வேளை தகவல் தெரிஞ்சு சுதாரிச்சுட்டோம்''என மூர்த்தி பேச....

''வேண்டாம் ....அந்தப் பேச்சை விட்டுருண்ணா''

''அதுவும் சரிதான்...உனக்கு உதவிக்கு நம்ம கடைப்பையனை ஒரு பத்து நாளைக்கு அனுப்பட்டாம்மா''

''பையன்கள்னாலே எனக்கு அலர்ஜியா இருக்கு...வேண்டாம்''

''சரி....நம்ம கடைக்கு மூடை தூக்கிப் போட ஒரு பெரியவர் வருவார்... அவருகிட்ட பேசி அனுப்பி வைக்கிறேன்....அதோட ஆடிட்டர் வேணும்னு கேட்டேயில்ல....அதையும் இன்னிக்கு ஏற்பாடு பண்ணிடறேன்...''-மூர்த்தி.. ..கடைக்கு வந்து கதவு திறந்ததும்,என்னவோ போல் இருந்தது...

..ஜன்னல்களை திறந்துவிட்டு, விளக்கேற்றி, ஊதுபத்தி

கொளுத்தி வைத்து,படங்களுக்கு பூ மாற்றினாள்...மதியம் வரை வேலைக் கழுத்தை நெரித்தது....கையில் கொண்டு வந்து இருந்த மதிய உணவை முடித்து விட்டு,நாற்காலியில் சாய்ந்து அமர்ந்து சிறிது ஓய்வெடுத்து விட்டு,முகம் கழுவி வேலையை மீண்டும் தொடர்ந்தபோது அலைபேசி அடித்தது....

''யா....கிருஷ்ண வேணி ஸ்பீக்கிங்..''

''வணக்கம்...என் பேரு செல்வகணபதி....ஆடிட்டர்....''

''ஓகே... ஓகே... வணக்கம் சார்.அண்ணா சொன்னாப்புல...... எனக்கு சாப்ட்வர் போயிருச்சி....அதோட எனக்கு கடை கணக்குகளை பாத்துத் தரணும்''

''நேர்ல உங்க கடைக்கு வரலாமா....அப்போதான் நம்ம ரெண்டு பேருக்கும் சுலபமா இருக்கும்''

''கண்டிப்பா....ப்ளீஸ் வெல்கம்...''என்று தனது கடை விலாசத்தை சொல்ல,பத்தாவது நிமிடத்தில் கிருஷ்ணாவின் எதிரில் நாற்காலியில் அமர்ந்து இருந்தான் செல்வ கணபதி...

''சார்..உங்களுக்கு இந்த ஊர்தானா''

''இல்ல மேடம்... எனக்கு சொந்த ஊரு சேரன்மகாதேவி.... எம்.காம் முடிச்சுட்டு,ஒரு ஆடிட்டர்கிட்ட அஞ்சு வருஷம் வொர்க் பண்ணிட்டு,இப்ப தனியாப் பண்றேன்...அக்காவுக்கு கல்யாணமாகி சங்கரன்கோவில்ல இருக்கா....அப்பா இல்ல....நானும் அம்மாவும்தான்....இதுதான் என்னோட முன்கதை சுருக்கம்''

சிரித்து விட்டாள் கிருஷ்ணா....காபி வரவழைத்துத் தந்தாள்....

''என்னோட வாட்ஸ் ஆப் நம்பர்க்கு டீடைல்ஸ் அனுப்புங்க....பாக்கறேன்'' என்றவாறு விடை பெற்றுப் போனான்.

...அவன் போனதும், நடுத்தர வயது மனிதர் ஒருவர் மூர்த்தி அனுப்பி வைத்ததாகச் சொல்லி வரவும்,அவரை பாக்கெட் போட,ஆர்டர் செய்த சரக்குகளை இறக்க,அரிசிகளைக் கை பார்க்க வைத்துக் கொண்டாள்.அவர் பெயர் சுயம்புவாம்..... எனினும்,இயந்திரங்களை இயக்குதல்,ஆர்டர் டெலிவரி, சரக்குகளை சரிபார்த்து அடுக்குதல்,காலியான பொருட்களை ஆர்டர் செய்தல்,..அது போக கணினி வேலைகள் என்று அவளுக்கு பெண்டு நிமிர்ந்தது....எப்படியோ சமாளித்தாள்....இப்பொழுது

அண்ணியிடம் முழுமையாக வீட்டுப் பொறுப்பை விட்டு,கடையில் கூடுதலாக இரண்டு மணி நேரம் செலவு செய்தாள்.....நான்காம் நாள் செல்வ கணபதி வந்தான்...

''இந்தாங்க...இந்த பைல் பாருங்க....எல்லா டீடைல்சும் இருக்கு....உங்க சாப்ட்வர் சரி பண்ணியாச்சு''

''ஆமா...அது காலையில பார்த்தேன்...நல்ல ஸ்பீட்...அது க்குள்ள எல்லா வேலையையும் முடிச்சுட்டீங்க'' என வியந்தாள் கிருஷ்ணா...

''என்னிக்கிருந்தாலும் நாமதான் பாக்கப் போறோம்....அதை சுறு சுறுப்பா முடிச்சா நல்லதுதானே....வேற ஏதாவது வேலை இருந்தாலும் குடுங்க...''

''மிஷின்ல,பத்து கிலோ சத்து மாவு வறுத்து அரைக்கணும்...செய்றீங்களா?''என்றாள் கிண்டலாக...

''சொல்லுங்க...செஞ்சுட்டாப் போச்சு....நாங்கள்லாம் எதுக்கும் அசர மாட்டோம்...''என்று பதில் வந்தது...

''ச்சே..அது நியாயமில்ல....சிஸ்டம்ல பில் போடற வேலை இருக்கு...அதை செஞ்சு குடுங்க போதும்...''

''ரெடிதான்...நகருங்க....நான் இந்த செக்சனை பாத்துக்கறேன்.... கவலையை விடுங்க''என்று தாமதிக்காமல் கோதாவில் இறங்கினான் செல்வகணபதி....

''ஆங்....மிஸ்டர் செல்வா''

''அவன் சடக்கென்று திரும்பிப் பார்க்க...

''அப்பிடி கூப்பிடலாம்தானே''

''கூப்பிடத்தானேங்க பேரு....மனம் போல கூப்பிடுங்க....''

''நான் உள்ள மிஷின் வேலையைப் பாக்கறேன்....முடிச்சுட்டு சொல்லுங்க''

''ஓகே''

கிருஷ்ணா சத்து மாவுக்கு வறுத்து அரைத்து ,சுயம்புவிடம் தந்துவிட்டு,இடியாப்ப,மாவு தயார் செய்யும் பணியில் ஈடுபட்டாள்...

செல்வா அழைக்கவும் முன்னறைக்கு வந்தாள்...கணினி வேலைகள் அனைத்தும் முடிக்கப்பட்டு,பில்கள்,நோட்டுகள்,நோ டீசுகலனைத்தும் ஒரு ஒழுங்கில் அடுக்கி வைக்கப்பட்டு இருந்தன...

அந்த இடமே கண்களில் ஒற்றிக்கொள்ளலாம் போலிருந்தது..

''முடிஞ்சுதுங்க....கிளம்பறேன்''

''ஓகே...தேங்க்யு....உங்க ஆடிட்டிங் பேமென்ட் சொல்லுங்க''

''வாட்ஸ்அப்ல அனுப்பறேன்...நீங்க போன் பே-ல போட்டு விட்டுடுங்க...''

''ஓகே,,டன்..''

''உங்களுக்கு ஹெல்புக்கு நாளைக்கும் வரணுமா''

''வந்தா எனக்கு நல்லதுதான்...உங்களுக்கு முடியுமான்னு பாத்துகோங்க''

''முடியும்கிறதாலதானே கேக்கறேன்''

''ஓகே....வாங்க''

சொன்னது போலவே மறுநாள் காலை பத்து மணி போல வந்தவன் பன்னிரெண்டு மணி வரை இருந்து கணக்கு வழக்குகள்,ஜிஎஸ்டி விவகாரங்களைப் பார்த்துக் கொடுத்தான்....கிருஷ்ணாவின் பிராண்ட் ரெஜிஸ்டர் பணி வெற்றிகரமாக முடியவும் ,அதிக உற்சாகமானாள் கிருஷ்ணா ....அதன் காரணமாக ,வேறு பல பெரிய கடைகளில் இருந்தும் அவளுக்கு ஆர்டர் கிடைத்தது.... கம்பெனியின் மொத்தவரவு செலவும் வேறு ஒரு லெவலுக்குப் போகவும்,சமீப காலங்களில் ஒரு சில சம்பவங்களால் மன சஞ்சலமடைந்து இருந்த கிருஷ்ணா, மன மகிழ்ச்சி அடைந்தாள் .....கடைக்கு செல்வாவின் வருகை ,பொருத்தமான,தேவையான ஒரு நிகழ்வாக அமைந்து விட்டது எனத் தோன்றியது.... ஆகையால்தான்,சங்கர்,பவானி வேலைக்குத்திரும்பிய போதும், செல்வாவின் தினப்படி வருகையை நிறுத்த வில்லை கிருஷ்ணா... எனக்கு உதவிக்கு ஆள் வந்து விட்டது நான் பார்த்துக் கொள்கிறேன் என்று சொல்வதை,ஏதோ ஒன்று தடுத்துவிட்டது....ஆகவே செல்வா தினம் இரண்டு மணி நேரம் வந்து பல பணிகளை முடித்துக் கொடுத்து விட்டே செல்கிறான்....

அன்று செல்வாவின் அலை பேசியிலிருந்து கிருஷ்ணாவுக்கு ஒரு கவிதை அனுப்பப்பட்டு இருந்தது....

''ஒத்தும் உதவியும்

வாழ்வதே வாழும் வகை...

அதுவே முடியும்..அதனால்தான் விடியும்...

உலகச் சங்கிலியில்
உயிர்கள் ஒரு கண்ணி..
கண்ணிகளிடம்
கடமை கண்ணியம் கட்டுப்பாடு வேண்டியதே...
ஒருவர் பலருக்காகவும்..
பலர் ஒருவருக்காகவும்...
வாழ்வில் தவம் இனிது...
வாழ்வே தவமாவது அரிது..
ஆனாலும் அவரே
மானுடம் தழைத்தலின்
மகத்தான மந்திரம்..''

மீண்டும் மீண்டும் வாசித்துப் பார்த்தாள்..பொருள் புரிந்தது... செல்வாவை அலைபேசியில் அழைத்தாள்...

''சொல்லுங்க''

''நீங்கதான் சொல்லணும்...கணக்கு வர வேண்டிய வாட்சப்புல கவிதை வந்திருக்கே...என்ன கதைன்னு நீங்கதான் சொல்லணும்''

''ஓ....சாரி...தவறுதலா அனுப்பிட்டேன் போல''

''அழகான தவறு''

''புரியல....எனக்கும் முதல்ல கவிதை புரியல...அப்புறமா புரிஞ்சிடுச்சு....அருமை''

''நன்றி''

''கணக்கு பண்றவருக்கும் கவிதை வருமா''

''கணக்கு பொழப்பு..கவிதை வாழ்க்கை ரசனை...''

''பார்ரா...பதில் கூட கவிதையா வருது....முதல்ல ஒரு டவுட் இருந்துச்சு...இப்ப உங்களோட சொந்த கவிதையா தான் இருக்கும்னு நம்பிக்கை வந்துடுச்சு''

சிரித்தான் செல்வா....

''ம்ம்....உங்களுக்கு என்னைப் பாத்தா எப்பிடித் தெரியுது.... கவித்தென்றல்னு ஒரு வாட்சாப் க்ரூப்ல இருக்கேன்...அதுல டெய்லி ஒரு டாப்பிக்ல போட்டிக் கவிதை எழுதறேன்....நிறைய வின் பண்றேன்....எனக்கேவா''

''ஓ... அப்படியா....சரிதான்...பாராட்டுகள்...நான் லாம் தண்டமாவே காலத்தை ஓட்டிகிட்டு இருக்கேன்...

இடியாப்பம்,இட்லிப் பொடின்னே காலம் ஓடுது''

''இதெல்லாம் ஓவரான தன்னடக்கம்....பிசினஸ் னா அவனவன் தெறிச்சு ஓடறான்....நீங்க அசால்டா ஒரு கம்பெனியை ரன் பண்ணிட்டு இருக்கீங்க....அம்பது வயசு லேடிக்கு இதெல்லாம் அசாத்திய சாதனைங்க....''

''பாராட்டு ஓகே..அதென்ன சந்தடி சாக்குல அம்பது வயசு ங்கறீங்க...நாப்பதுதான்...நாப்பதாவது பொறந்த நாளே அடுத்த மாசம்தான் வரப்போகுது...இதுல''

''ஓகே..ஓகே...கூல்...பெண்கள்கிட்ட வயசை நேரடியாக் கேட்டா நல்லா இருக்காதுல்ல...அதான்...இப்படி ஒரு பிட்டைப் போட்டேன்''

''ஐயோ...நானாதான் உளறிட்டேனா''என்று சொல்லி சிரித்தபடி அலைபேசியை துண்டித்தவள் ,''ஸ்மார்ட் பெர்சன்'' என்று மனதில் நினைத்துக் கொண்டாள்...

## 13

அடுத்த மாதத்தின் ஒரு ஓய்வு நாளில்,கம்பெனி பற்றியும் செல்வா பற்றியும் பேச்சு வந்தது....

''அவரு நல்ல ஹெல்ப் அண்ணா....''

''இப்பவும் வந்துட்டு இருக்கானா கடைக்கு''

''இல்ல...இது இயர் என்டிங்க்ல.....பிசியா இருக்குனுட்டார்.... ஓகே..நோ..ப்ராப்ளம்..நான் பாத்துக்கறேன்....நீங்க பிரீயானப்புறம் வாங்கனுட்டேன்''

''...நானும் கேள்விப் பட்டு இருக்கேன்....அந்தப் பையனைப் பத்தி எல்லாரும் நல்ல மாதிரிதான் சொல்லியிருக்காங்க...''

''ஏங்க...அந்தப் பையனுக்கு கல்யாணமாகலியோ''----சுகந்தி

''ஆமா...அம்மா அப்பா கூடத்தான் இருக்கான்....ஏன் சுகந்தி எதுக்கு அக்கறையா விசாரிக்கற''

''அவன் அக்காவைக் கல்யாணம் பண்ணிக் குடுத்து இருக்காங்களே....அந்தப் பையன் எங்க அம்மா வழியில எனக்கு சொந்தம்''

''உங்க அம்மா வழியிலையா....அந்த மாப்பிளையாவது நல்ல குணமா''

‘ஏங்க....எங்க அம்மாவை வம்புக்கு இழுக்காட்டா,உங்களுக்கு சோறு தண்ணி இறங்காதே...’’

‘‘சும்மா இரு அண்ணா....ஆமா,செல்வா கல்யாணம் ஆகாதவருன்னா சொல்றே’’என்றாள் கிருஷ்ணா ஆச்சரியத்துடன்....

‘‘ஆமாம்மா...உனக்குத் தெரியாது’’

‘‘இல்ல...எனக்கு அந்த டவுட்டே வரல...அவரு கல்யாணம் ஆனவர் அப்படிங்கற ஐடியாவுலையே இருக்கேன்....ஆமா,அவரு ஏன் கல்யாணம் பண்ணிக்கலை’’

‘‘எனக்கெப்படி தெரியும்....உனக்கு நாப்பது வயசு ஆகியும் ஏன் கல்யாணமாகலேன்னு கேட்டா ,நம்மளால என்ன பதில் சொல்ல முடியுது...அது போலத்தான்’’

‘‘இப்ப பிள்ளைகள் கல்யாணத்தைமுடிஞ்ச அளவு தள்ளிப் போடணும்னு நினைக்கறாங்க....அந்த எண்ணப் பதிவே,அவங்களுக்கு வினையா வந்து முன்னால நிக்குது.... அப்புறம் கல்யாணம் காட்சிஎல்லாம் கனவுதான்’’என்று மன வருத்தத்திலும்,ஆற்றாமையிலும்,மூர்த்தி பேசிக்கொண்டே போக...அது எதையும் காதில் வாங்காமல்,ஏதோ சிந்தனையுடன் தன்னறைக்கு ஒதுங்கினாள் கிருஷ்ணா.யோசனையுடன் நாற்காலியில் சாய்ந்தாள்..

என்னையே நான் ஆணுருவில் பார்ப்பது போல்,மனமும் குணமும் உள்ளவன் செல்வா......இத்தனை வருடங்களுக்குப் பிறகு,எனது மனச் சட்டத்துக்குள் பொருந்தக் கூடிய அளவிலான ஒரு மனிதரை,அதுவும் திருமணமாகாத நிலையில், என் கண் முன்பாக நிறுத்தியிருக்கும் கடவுளுக்கு,என்ன நோக்கம் இருக்க முடியும்...கடவுளுக்கு என்ன நோக்கமோ தெரியாது...ஆனால்,தன் மனம் அவனை நோக்க ஆரம்பித்து விட்டதை கிருஷ்ணாவால் உணர முடிந்தது...நல்ல திறமை,ரசனை,ஒழுக்கம்,உழைப்பு,உள்ள மனிதர்....அண்ணன் அண்ணிக்கும் ,தனக்கும் கூட பிடித்த மனிதராக இருக்கிறார்...இவரை டிக் அடித்தால் என்ன....உடனே அவனுடன் பேச வேண்டும் போலிருந்தது....அலைபேசியில் அழைத்தாள்....

‘‘சொல்லுங்க மேடம்’’என்றான் அவசரமாய்....

அதுவரை அவள் மனதுக்குள் முண்டியடித்துக் கொண்டு இருந்த

வார்த்தைகள் அனைத்தும்,அவனது கம்பீரமான குரல் கேட்டதும் காணாமல் போனது....எங்கோ ஓடி ஒளிந்து கொண்டது....என்ன சொல்வது?

''இல்ல ..அது..வந்து...ஜனவரி மாச அக்கவுண்ட்ல.....''

''சாரி மேடம்... நான் வண்டியிலஒரு இடத்துக்குப் போயிட்டு இருக்கேன்...வீட்டுக்குப் போயிட்டுக் கூப்பிடவா'' என்றான்...

ஓகே சொல்லி வைத்துவிட்டாள்....எரிச்சலாக வந்தது... 'ச்சே,....நாம பேசலாம்னு நினைக்கறப்ப,இவரு பிசியா இருக்காரே..'

..தனது மனம் அவன் என்ற நிலையில் இருந்து அவர் என்ற மதிப்புக் கூட்டல் செய்ததை உணர்ந்து தனக்குள்ளாக சிரித்துக் கொண்டாள்....திடீரென்று செல்வாவுக்கு வயது என்ன இருக்கும்?ஒரு வேளை தன்னை விட வயதில் குறைந்தவராக இருந்து விடுவாரோ என்ற அச்சம் ஏற்பட்டது....அலைபேசியில் முக நூலுக்கு சென்று செல்வாவின் பக்கத்துக்குப் போனாள்.... ஊர்,படிப்பு ஆகிய விபரங்களுடன் பிறந்த வருடமும் இருந்தது... அந்த கணக்கில் செல்வாவுக்கும் வயது நாற்பது...ஐயோ...எங்கள் இருவருக்கும் ஒரே வயதா.....நல்ல வேளை மாதத்தில் வித்தியாச மிருக்கிறது...என்னை விட ஆறு மாதங்கள் மூத்தவர்...

...கடவுள் காப்பாற்றினார்....அறிவு,அழகு,அன்பு பண்பு,கேரக்டர்....எல்லாம் ஓகே.என்று அவள் மனம் ஜெட் வேகத் தில் பொருத்தம் பார்த்துக் கொண்டு போனது.....திருமணத்தை வேப்பங்காயாக பார்த்தமனம்,விருப்பமும் வந்து,விரும்பியவனும் கிடைத்தவுடன்,எவ்வளவு வேகமாகவும்,விவேகமாகவும் யோசி க்கிறது ?அத்துடன் இந்த மென்மையான உணர்வுகளெல்லாம் இன்னும் தன்னிடத்தில் மிச்சமிருப்பது பெரிய வியப்புதான் என்று எண்ணிக் கொண்டாள் கிருஷ்ணா...மறு நாள் கடையில் இருக்கையில்,செல்வாவிடமிருந்து அலைபேசி அழைப்பு...

''சாரி...நேத்து வெளியே போயிட்டு வர லேட்டாயிட்டுது.... அன்டைம்ல பண்ண வேண்டாம்னு பேசலை....சொல்லுங்க... என்ன தெரியணும்''

''நிறைய தெரியணும்''

''வரிசையா சொல்லுங்க....கிளியர் பண்ணிடலாம்''
''நினைவுக்கு வரலை....''
''ஒண்ணும் அவசரமில்ல...வர்றப்போ சொல்லுங்க''
''நாளைக்கு பாபநாசம் கோவிலுக்கு வரலாமா''
''யாரு...''
''நீங்கதான்''
''வரலாமே....என்ன விசேஷம்''
''கோவிலுக்கு சாமி கும்பிடத்தானே போவாங்க''
''ஸ்ஸ் ...முடியலப்பா....கண்டிப்பா சாமி கும்பிடுவோம்..நீங்க என்ன காரணத்துக்கு வர சொன்னீங்கன்னு தெரிஞ்சா, கூடுதலா ஒரு சந்தோசம் இருக்கும்''
''இருக்கற சந்தோஷத்தோடயே வாங்க...அங்க வந்து மிச்சம் மிஞ்சாடியைத் தெரிஞ்சுக்கங்க''
மனதளவில் தான் செல்வாவுடன் அதிகம் நெருங்கி விட்டதாய் தோன்றிய பிறகு,அவனிடம் அதிக உரிமை எடுத்துக் கொண்டு பேசினாள் கிருஷ்ணா....தண்ணியில் தடம் பார்த்துவிடக்கூடிய ஆண்களுக்கு, ,அதிலும் அதிபுத்திசாலியான செல்வாவுக்கு புரியாமலா இருக்கும்...அப்படி ஒரு எண்ணம் பெண்களுக்கு
..மறுநாள்பாபநாசம்கோவிலில்வைத்துப்பார்த்தபோது,முந்தைய நாள் அலைபேசியில் பேசியபோது இருந்த ஒரு அசட்டு தைரியம் காணாமல் போயிருந்தது என்றுதான் சொல்ல வேண்டும்.... கிருஷ்ணா பிள்ளைகளையும் அழைத்துப் போயிருந்தாள்...அழகு சிலைகள் போல இரண்டு குழந்தைகளைப் பார்த்ததும் ஏக குஷியாகி விட்டான் செல்வா...
''ஒரே மாதிரி ரெண்டு பெண் குழந்தைகள்... சூப்பர்...சூப்பர்... என்ன கவலை இருந்தாலும் இவங்க முகத்தைப் பார்த்தா மறந்து போயிடுமே''
உண்மை..கிருஷ்ணாஅதனைஉணர்ந்தவளும்,அனுபவித்தவளும் ஆயிற்றே... கோவிலுக்குள் போனார்கள்....பாபநாசம் சிவனையும்,உலகம்மையையும் அர்ச்சனை செய்து வழிபட்டு விட்டு,அகஸ்தியர் ஜீவ சமாதிக்குப் போய் விளக்குப் போட்டார்கள்...
''தங்க விக்ரஹமாட்டம் ரெண்டு பெண் குழந்தைகள்

இருக்கா....ஆண் குழந்தை வேணும்னு இங்க வந்து விளக்குப் போடறியாம்மா....கண்டிப்பா கிடைக்கும்''என்று ஒரு பெருமாட்டி கிருஷ்ணாவைப் பார்த்து சொல்லிவிட்டுப் போக,.... செல்வா,கிருஷ்ணா இருவரும் ஒருவரையொருவர் பார்த்து சிரித்துக் கொண்டார்கள்....எதுவும் பேசாமல்,வழிபட்டு விட்டு,ஒரு மரத்தடியில் வந்து அமர்ந்தார்கள்.....செல்வா பிள்ளைகளுக்கு சாக்லேட் வாங்கி வந்து தர,...பிள்ளைகள் ஆர்வத்துடன் ஓரமாய் அமர்ந்து சாக்லேட் சாப்பிடுவதில் பிஸியாகிவிட....புன்னகையுடன் அர்ச்சனைத் தேங்காயை நகத்தால் கீறிக் கொண்டிருந்த கிருஷ்ணாவிடம்,'

''என்ன...சிரிப்பு'' செல்வா...

''அந்த பெரியம்மா சொல்லிட்டுப் போனாங்களே....அதை நினைச்சேன்...இங்க கல்யாணத்துக்கே வழியைக் காணோம்.... இதுல மூணாவது பிள்ளைக்கு யோசனை சொல்றாங்க''

''அவங்களுக்கு,முன்ன பின்ன தெரியாத நீங்க நல்லாயிருக்கணும்னு நினைக்கறாங்களே....அதுக்கே அவங்களைப் பாராட்டணும்''

''அது சரிதான்...''

சிறிது நேரம் அமைதி...

''அது சரி...நீங்க ஏன் கல்யாணம் பண்ணிக்கலை''-இருவரும் ஒரே நேரத்தில் ஒரே கேள்வியைக் கேட்க....வெட்கத்துடன் சிரித்தாள் கிருஷ்ணா....

''சரி...பதில் சொல்லுங்க''---கிருஷ்ணா...

''ம்ம்ம்....லேடீஸ் முதல்ல....நீங்க சொல்லுங்க''---செல்வா...

''வாயைக் குடுத்து மாட்டிக்கிட்டனா...ஓகே..

எல்லாப்பொண்ணுங்களையும் போல படிச்சு முடிச்சு ஒரு கம்பெனியில வேலை பார்த்துகிட்டு இருந்தப்ப,எனக்கும் மாப்பிள்ளை பாக்க ஆரம்பிச்சாங்கதான்....ஆனா,கல்யாணச் சந்தையின் அலங்கோலங்களை என்னால சகிச்சுக்க முடியல...மாப்ள,மண்ணாங்கட்டின்னு வீட்டுல பேச்சு எடு த்தாலே கடுப்படிச்சேன்..ஜாதகத்துல இவளுக்கு நேரம் சரியில்ல போலனுட்டு,எங்க அண்ணனுக்கு பாக்கத் தொடங்கிட்டாங்க...நான் அப்பிடியே ஒதுங்கிட்டேன்....அப்புறம் ஒரு கட்டத்துல அதுவே

பழக்கமாகி நல்லா இருந்துது.

..ப்ரீயா ஆயிட்டேன்...பாத்துகிட்டு இருந்த வேலையை விட்டுட்டு,கம்பெனி தொடங்கினேன்...அதை பிக்கப் பண்றது க்கு நான் வேலையிலேயே அதிக கவனம் செலுத்த வேண்டி இருந்துச்சு....இதுக்கு நடுவுல அண்ணனுக்கு கல்யாணமாகி பிள்ளைங்க பிறந்துட்டாங்க....அண்ணி வேற உடம்பு முடியாம இருந்தாங்களா...என் உலகமே இந்தப் பிள்ளைங்கன்னு ஆயிருச்சி...அவங்க என்னோட உயிர் ஆயிட்டாங்க..அண்ணன் குடும்பத்துக்கும்,கம்பெனிக்கும் நான் ரொம்பத் தேவைப்படற ஆளாயிட்டேன்....அந்த பாதையை கெட்டியாப் பிடிச்சுகிட்டு இவ்வளவு தூரம் வந்துட்டேன்'' என்று சொல்லி நிறுத்தி பெருமூச்சு வாங்கினாள் கிருஷ்ணா.

..பொறுமையுடன் கேட்டுக் கொண்டிருந்த செல்வா,திரும்பிக் கோவில் கோபுரத்தை பார்த்தான்....பிள்ளைகள் குடிக்க தண்ணீர் கேட்க,கைப்பையில் இருந்து தண்ணீர் எடுத்துக் கொடுத்து,தானும் குடித்தாள்.கிருஷ்ணா... செல்வா வேகமாக சென்று காபி,வடை வாங்கி வந்தான்....சாப்பிட்டு முடித்தார்கள்...

''கிளம்பலாமா'' என்றான் செல்வா..

''என்னது.... கிளம்பலாமாவா..உங்க கதை பாக்கி இருக்கு சார்.....சீட்டிங் பண்ணக்கூடாது... மரியாதையா சொல்லிடுங்க''

சிரித்தான்..

''மறந்துடுவீங்கன்னு நினைச்சேன்''

''சான்சே இல்ல....''

''ஓகே...பட் பிரமாதமா ஒண்ணுமில்லங்க...வீட்டுல அக்காவும் நானும்தான்... அப்பா பேருக்குத்தான்..கதை கிடையாது.... அவரைத் தாண்டி வருமானம் வீட்டுக்கே வராதுன்னா பாத்துக்கங்களேன்...அம்மாஎப்படியோ கஷ்டப்பட்டு,நகை நட்டு களை வித்து எங்களைப் படிக்க வச்சாங்க....நான் எம்.காம் முடிச்சு ட்டு,எகனாமி கோர்ஸ் சிலது படிச்சுட்டு,ஒரு ஆடிட்டர் கிட்ட சேர்ந்தேன்...இருந்த ஒரு வீட்டையும் வித்து அக்காவுக்கு கல்யாணம் பண்ணினோம்...எனக்கும் நம்பிக்கையோட அம்மா பொண்ணு பாத்தாங்க....ஆனா,வர்றவங்க,சொந்த வீடு இருக்கான்னுதான்

முதல்ல கேட்டாங்க...என் ஒருத்தன் வருமானம்தான் எங்க வீட்டுக்குன்னு,தெரிஞ்சுகிட்டு,நிறைய பேரு பேக் அடிச்சு ட்டாங்க....கிட்டத்தட்ட உங்களை மாதிரிதான்... ஒரு வெறுப்புல கல்யாணத்தைப் பத்தி யோசிக்கறதையே விட்டுட்டேன்... காலம் ஓடிப்போச்சு... இப்ப நான் சொந்த வீடு கட்டிட்டேன்.... கார் வாங்கிட்டேன்....என் கையில நாலு காசைப் பார்த்ததும் சொந்தங்கள் நெருங்கி வருது...எனக்கு அவங்களைப் பாத்தாலே அருவருப்பா இருக்கு....அவ்ளோதான்... நெட் ரிசல்ட்..நான் இப்ப முரட்டு சிங்கிள்....''

என்று வலி மறைத்து சிரிக்க முயன்றான் செல்வா... கிருஷ்ணாவுக்கு வருத்தமாக இருந்தது....நாட்டில் ஒவ்வொருவரும் மனதில் எத்தனை வலியோடு சுற்றிக் கொண்டு இருக்கிறார்கள் என்ற எண்ணமேற்பட்டது ....

கிருஷ்ணா என்ன கேட்க நினைத்தாளோ அதைக் கேட்க வாய் வரவில்லை...நான் என்ன பதினாறு வயசு பருவச்சி ட்டா...வெட்கத்தில் வேலியிட்டு ,அம்மாவின் முந்தானைக்குப் பின்னால் ஒளிந்து கொண்டு,கல்யாணம் செய்து கொள்ளப் போகிறவனைக் கடைக் கண்ணால் பார்க்க....என்று நினைத்து தான் வந்தாள்...ஆனால் அப்படியில்லை...எத்தனை வயதானாலும்தயங்குவதும்,மயங்குவதும்தான் பெண் மனம் என்று சொல்லிவிட்டது...

செல்வாவின் நிலை வேறு...கடந்த கால கசப்பான அனுபவங்களில் அவனுக்கு ஒரு தாழ்வு மனப்பான்மை இருந்தது... அது அவனது வாயைக் கட்டிப் போட்டு வைத்து இருந்தது...எது ஒன்றையும் வலியத் தொடங்கும் மனநிலையில் அவனில்லை... வாழ்க்கையை அதன் போக்கில் எதிர்நோக்குவது என்ற முடிவில் இருந்தான்....

இவர்களின் தவிப்பு புரிந்ததோ என்னவோ....நிஷா வாய் மலர்ந்தாள்.

''அத்தை.... டிவி சீரியல்ல வர்றாப்புல,இந்தக் கோவில்ல வச்சி நீங்க ரெண்டு பேரும் மேரேஜ் பண்ணிக்கப் போறீங்களா''

அதிகப் பிரசங்கித்தனம்தான்...ஆனால்,கண்டிக்காமல் ரசித்தாள்

கிருஷ்ணா....செல்வாவும்தான்....

''இல்ல,,நிஷா....அத்தையும் அந்த அங்கிளும் இன்னிக்கு பேசி வச்சுப்பாங்க,,,இன்னொருநாள் அப்பா அம்மாவைஎல்லாம் கூட்டிட்டு வந்து மாலை போட்டு கல்யாணம் பண்ணிப்பாங்க'' என்றாள் நிஷா...

''கிளம்பிடலாம்ங்க...இன்னும் கொஞ்சநேரம் இருந்தா,இவங்க ரெண்டு பேருமே மந்திரம் சொல்லி நமக்கு கல்யாணம் பண்ணி வச்சிடுவாங்க''என்று பொய்யாய் அலறினான் செல்வா...

குழந்தைகள் சிரிக்க....விருந்து சாப்பிட்ட மகிழ்ச்சி இருந்தாலும்,பாயாசத்தை தவற விட்ட ஏக்கத்துடன் செல்வா,கிருஷ்ணா இருவரும் ஆளுக்கொரு குழந்தையைக் கையில் பிடித்தவாறுசெல்வாவின் கார் நோக்கி நடந்தனர்...


## கண்மணி

**கண்மணி தபாலில் பெற ஓராண்டு (உள்நாடு) சந்தா-ரூ.900 6 மாதம்-ரூ.450 மணியார்டர் மற்றும் காசோலை MURASU PUBLICATIONS என்ற பெயரில் அனுப்ப வேண்டிய முகவரி: நிர்வாகி**

**கண்மணி**

**மாலைமுரசு பில்டிங், 246, அண்ணா சாலை, ஆயிரம் விளக்கு, சென்னை-600 006.**

**சந்தா தொகையை NEFT/RTGS மூலம் செலுத்த:-**

**MURASU PUBLICATIONS**
**A/C NO. 6034172999**
**Indian Bank, Peters Road Branch**
**IFSC:IDIB000R047**
**நிர்வாகப்பிரிவு:**
murasupublication@gmail.com
போன்: 044-28297225


## 14

தயார் செய்து கொண்டு போன பரீட்சையில், பாதியில் எழுந்து வந்தது போல் குற்ற உணர்வாக இருந்தது கிருஷ்ணாவுக்கு.... அவளுக்கு செல்வாவிடம் வெளிப்படையாகப்பேசஅப்படி ஒரு தயக்கம் ஏன் வந்தது என்றே புரியவில்லை....செல்வாவிடம் பேசவே இத்தனை தடுமாற்றம் என்றால், அண்ணனிடம் எப்படி சொல்லி,எப்படி இந்த விஷயத்தை முன்னெடுத்துச் செல்வது என்ற கவலை ஏற்பட்டது.

...சரி..காலங்கள் செல்லட்டும்...தானாக நடக்கும்

என்று சொல்லக்கூடிய வயதில் அவள் இல்லை....ஏற்கெனவே பருவம் தாண்டிய பயிர் இது....செல்வாவுக்கு தன் மனதைத் தெரிவிக்க வேறு என்ன வழி என்று சிந்தித்து ஒரு சினிமாப் பாடலை அவனுக்கு குறுஞ்செய்தி அனுப்பினாள்.......

''திருமண மலர்கள் தருவாயா
தோட்டத்தில் நான் வைத்த பூச்செடியே...
தினமொரு கனியைத் தருவாயா
வீட்டுக்குள் நான் வைத்த மாதுளையே ....
ஞாயிருக்கும் திங்களுக்கும் தூரமில்லை...''

செல்வா உடனே அலைபேசியில் அழைத்தான்...

''சொல்லுங்க''----என்றான்

''நான்தான் சொல்லிட்டேனே''-கிருஷ்ணா

''நானும் சொல்லணுமா''

''பின்ன''

''ஒருத்தர் சொன்னாப் போதாதா''

''இந்தக் கதையே வேண்டாம்....நீங்க சொல்லாம உங்களுக்கு என்ன ஐடியான்னு நான் எப்படி தெரிஞ்சுக்கறது''

''நாம டீன் ஏஜ்ல இல்லேல்ல...''

''அதனால''

''இந்த ஸ்டெப்பை ஸ்கிப் பண்ணிட்டு,அடுத்த கட்டத்துக்கு நகர்ந்துடுவோமே....''

''அவ்ளோ தயக்கமா''

சிரித்தான்...அவனைப் பார்க்கவும் பாவமாக இருந்தது கிருஷ்ணாவுக்கு....

''சரி.பொழச்சுப் போங்க....மன்னிச்சுட்டேன்,,...வீட்டுல எப்படி பேச்சைத் தொடங்கறது''

''இயர் எண்டிங் டென்சன்லாம் முடியட்டும்....அப்புறம் சொல்லலாம்.....''

''அது வரை....''

''இதே போலத்தான்....ஏதாவது ப்ளேடு போட்டுக்கிட்டு ,சம்பந்தமில்லாம பேசிகிட்டு இருப்போம்.அந்த எக்ஸ்பீரியன்சும் வேணும்ல.....நாள் ஓடிடும்...கல்யாணம் வந்துடும்.....

நோ ப்ராப்ளம்''

''கல்யாணம் பண்ணிகிட்ட அப்புறம் நோ ப்ராப்ளமா....என்ன ஒரு கான்விடன்ஸ் உங்களுக்கு''

''அப்பிடி நம்பித்தான் இறங்கணும்....''

''அது சரி...'பதினெட்டு வயசுப் பசங்களே கல்யாணம் பண்ணிக்கிட்டு குடும்பம்,குழந்தைன்னு பக்காவாய் செட்டில் ஆயிடறாங்க....இவ்ளோ எதிர் நீச்சல் போட்டு வந்த நமக்கு ,கல்யாண வாழ்க்கை ஈசியாத்தான் இருக்கும்..இருக்கணும்''

''தட்ஸிட்....அந்த பாசிடிவ் அப்ரோச் வேண்டாமா நமக்கு.....''

என்று தங்கள் எதிர்காலத்தை தயக்கத்துடனும்,அதீத எச்சரிக்கை உணர்வுடனும் பேசி முடிவு செய்து விட்டு அலைபேசியைத் துண்டி த்தன அந்த நடுத்தர வயது காதல் சிட்டுகள் அல்ல பட்டுகள்.....

மறு நாள் கம்பெனியில் இருந்தபோது,மலர்க் கொத்து வந்தது....

''உன் நிழலை

உன்னுடன் கூட்டிப் போகத்தெரிந்த உனக்கு

, உன் நினைவுகளையும் கூட்டிப் போகத்தெரியவில்லையா''

என்ற வாசகங்களுடன் வந்து இருந்தது....கிருஷ்ணாவுக்கு அதனைப் பார்த்ததும்,வரிகளைப் படித்ததும் பரவசமாக இருந்தது.....அடப் பாவி மனுசா.

...நேற்று அலைபேசியில் நேசிப்பை சொல்லுங்கள் என்று நான் கதறிக்கொண்டு இருந்தபோது,எப்படி நழுவி விட்டார்....இதோ இன்று எவ்வளவு அழகாகத் தன் மனதை அதன் ஆழமான பிரியத்தை சொல்லிவிட்டார்.....கிருஷ்ணாவுக்குப் பெருமையாக,பதட்டமாக ,மகிழ்ச்சியாக,இருந்தது.....அங்கிருந்த ஒரு சின்னக் கண்ணாடியில் தனது கேசத்தை சரி செய்து கொண்டாள்....தனது முகம் தனக்கே புதிதாகத் தெரிந்தது அவளுக்கு....எல்லாப் பெண்களையும் போல எனக்கும்,தாலி மாலை மணக்கோலம் குடும்ப வாழ்வு இதெல்லாம் உண்டு....முந்துதலில் பிந்தி,பிந்துதலில் முந்தி விட்டேன்... எல்லாம் நன்மைக்கே..

..நன்றி என்று குறுஞ்செய்தி அனுப்பினாள்....அடுத்து வந்த நாட்களில்கைப்பை,சுடிதார், பரிசுப் பொருட்கள் என நாளொன்றாய் வந்த வண்ணமிருந்தன....தான் தனது காதலை இலை

மறைவாக சொன்னபோது,பதில் சொல்லக்கூட தயங்கியவனா இவன் என்று வியந்து போனாள் கிருஷ்ணா..இவ்விஷயத்தில் துவக்கமெடுத்தது மட்டுமே கிருஷ்ணா..மற்றபடி செல்வாதான் பரிசுப்பொருள்,கவிதை வழி அன்பைப் பரிமாறிக் கொண்டு இருந்தான்...பசியை உணராமலும்,ஒரு காலகட்டத்தில் அதனை உணர்ந்தும் அலட்சியம் செய்தும் வாழ்ந்தவள்,செல்வாவின் அன்பில்,அதன் கதகதப்பில் பசியாறிக்கொண்டிருந்தாள் ...அதன் பின் இருவரது பக்குவக் காதலும் பலாச்சுளையாய் இனித்தது.... செல்வா வாரம் ஒரு முறை கம்பெனி பக்கம் வருவான்... இருவருக்கும்,அவரவரின் தொழிலே,காதல் சந்திப்புக்கான களம் அமைத்துக் கொடுத்தது...செல்வாவின் நடை, உடை,பாவனையில் மிகுந்த நம்பிக்கை ஏற்பட்டது கிருஷ்ணாவிற்கு.

.சமீப காலங்களில்,..கிருஷ்ணாவின் மலர்ந்த மகிழ்ச்சியான முகத்திற்கு.அவள் தொழிலில் அடைந்து வரும் மேம்பாடுதான் காரணமென்று கற்பித்துக் கொண்டான் மூர்த்தி,....,கேட்டால் மிகவும் சந்தோஷப்படுவான் என்றாலும் கூட.... அண்ணனிடம்,இந்த விஷயத்தை எப்படித் தொடங்கி எப்படி முடிப்பது என்ற குழப்பத்தில் இருந்தாள் கிருஷ்ணா...

## 15

அவரவர்கள் எடுக்கும் முடிவுகள் நமக்கு சாதகமாகவும்,தேவையாகவும் அமைவது நமக்கு யோகம்...கிருஷ்ணா கம்பெனியில் ஒரு முகமும்,வீட்டில் ஒரு முகமுமாய்,புதிய உறவின் சந்தோச த்திலும்,அண்ணனிடம் விஷயத்தை சொல்ல முடியாத சங்கடத்திலும் தவித்து வந்தபோதுதான் அது நடந்தது....நடத்தியது வேறு யாருமல்ல..சாட்சாத் சுகந்தியின் அம்மா அருணாதான்.

மகளையும் பேத்திகளையும் பார்ப்பதற்காக, வந்திருந்தாள்.... மறுநாள் பிள்ளைகள் பள்ளிக்கூடத்தில் மீட்டிங் இருப்பதால், சுகந்தி சென்றுவிட..... அருணா மெதுவாக மருமகனிடம் வந்தாள்....மூர்த்தி என்றும் மாமியாரிடம் நேருக்கு நேராக நின்று

பேசுபவனில்லை.....வாங்க ,போங்க என்ற மரியாதை நிமித்தமான ஓரிரண்டு உரையாடல்களோடு சரி....

''உங்ககிட்ட ஒரு விஷயம் சொல்லணும்.....''

''ம்ம்...சொல்லுங்க''----மூர்த்தி...

''சுகந்தி இருந்தா ஏம்மா அநாவசியமாப் பேசறேன்னு சத்தம் போடுவா....அதான் அவ இல்லாதப்ப....''என்று அருணா இழுக்க...

தெரிந்து கொண்டே தேர் இழுக்கக் கிளம்பும் இந்த அம்மாவை என்ன செய்வது....

''சொல்லுங்க...நான் கடைக்குக் கிளம்பிட்டு இருக்கேன்....''என்றான் தலை வாரிக்கொண்டே .....

''இல்ல....நீங்க கோபப்படாமப் பொறுமையாக் கேக்கணும்''

''கோபப்படறமாதிரி ஏன் பேசணும்''

''பேச வேண்டியதைப் பேசித்தானே ஆகணும்''திரும்பிப் பார்த்தான் மாமியாரை... 'சரிதான்...இந்த அம்மா இன்று ஒரு முடிவோடதான் இருக்கு போல...' எதுவும் பேசாமல் நெற்றிக்கு விபூதி இட்டான்...

''அது வந்து நம்ம கிருஷ்ணாவைப் பத்தி....''

''கிருஷ்ணாவுக்கென்ன''

''அவளுக்கு ஒண்ணுமில்ல....ஆனா,அவளைப் பத்தி.... எனக்குத்

தெரிஞ்சவங்க ஒரு விஷயம் சொன்னாங்க...மனசு கேக்காம உங்ககிட்ட சொல்ல வந்தேன்''

''இன்னும் நீங்க விஷயம் என்னன்னே சொல்லலியே''

''அதான்,அவ யாரோ ஒரு பையன் கூட கார்ல போறா வாரானுட்டு....''

வேகமாகத் திரும்பி தங்கையின் அறையைப் பார்த்தான்.... அவளும் கடைக்கு கிளம்பிக்கொண்டுதான் இருக்கிறாள்... காதில் விழுந்தால்,இந்த அம்மாவை சட்னி ஆக்கி விடுவாள் என்றெண்ணியவன்...

''இத பாருங்க...உங்களுக்கு அவளை எப்பவுமே பிடிக்காது...

அதனால அபாண்டமா எதுவும் பேசாதீங்க''

''உண்மையைத்தான் சொல்றேன்....சுதாரிச்சுட்டு கண்டிச்சு வைப்பீங்கன்னு''

''யாரு சொன்னா உங்களுக்கு''

''இந்த ஊர்ல எங்களுக்கும் நாலு பேரு இருக்காக''

''எவனோ பொழுது போகாம எதையோ உளறினா.... அதைகேட்டுட்டு வந்து பேசாதீங்க....உங்க வயசுக்கு இது அழகில்ல....நான்....'''

அதற்குள் வெளியே வந்த கிருஷ்ணா....

''அண்ணா... அவங்க சொல்றது உண்மைதான்'' என்றாள்.

..அண்ணனிடம் இந்த விஷயத்தைப் பற்றி சொல்வதற்கு,நேரம் பார்த்து,மனதுக்குள் மருகிக் கொண்டு இருந்தவளுக்கு இது ஒரு நல்ல வாய்ப்பாகப் பட்டது...பயன்படுத்திக் கொண்டாள்.... ஆனால் மூர்த்தியும் அசரவில்லை...

''இருக்கட்டும்மா...அதைப் பேசறதுக்கான நேரம் இது இல்ல...நீ கிளம்பு..பொறுமையாப் பேசிக்கலாம்''என்று சொல்லி விட்டு விறு விறுவென நடையிறங்கி விட்டான்....ஒரு களேபரத்தை எதிர்பார்த்து ஆவலுடன் காத்திருந்த அருணாவிற்கு சப்பென்று ஆகிவிட்டது....கிருஷ்ணாவை முறைத்து விட்டு உள்ளே போய் விட்டாள்.

...கிருஷ்ணாவிற்கு மனதிலிருந்த பெரிய பாரம் இறங்கிய உணர்வு....இனி அண்ணன் பார்த்துக் கொள்வான் என்று மகிழ்ந்து கொண்டாள்...ஒரு உடன்பிறப்பிற்கான சரியான அங்கீகாரம் இதுவே....பாசமும் நம்பிக்கையும் பரஸ்பரம் இருவருக்கும் இருக்க வேண்டும்....இவர்களுக்கு இருந்தது.... அன்று செல்வாவிடமிருந்து கவிதை வந்து இருந்தது....

''ஜோடி சேர்ந்தோர் மட்டுமல்ல ...
மனமுடை மனிதர் யாவரும்
மகத்தான காதலரே...
உள்ளுறை காதல்
உரமாகவும் வரமாகவும்
உருமாறி

வாழ்வின்
வளம் நலம் தரும் தங்கத்தைவாழ்த்தாமல் என் செய்ய''

அலைபேசியில் செல்வாவை அழித்து கவிதைக்குப் பாராட்டினாள்....

''வீட்டுல ஒப்பன் பண்ணியாச்சா மேட்டரை''

''இல்ல... இனிதான்''

''ஏன்''

''அண்ணன் என்னைய நினைச்சுத்தான் மனசுல உருகுதுன்னு எனக்குத் தெரியுது....எடுத்துப் பேசத்தான் தயக்கமா இருக்கு''

''இவ்ளோ நாள் கல்யாணத்தைத் தள்ளிப் போட்டு வந்த உங்களுக்கு,என்னைப் பார்த்ததும் ஒரு ஐடியா வந்துடுச்சு.... இல்லையா''

சிரித்தாள் கிருஷ்ணா...

''பொதுவா,கல்யாணத்தைப் பொறுத்த அளவில்,நேரம் வந்தா நிக்காதும்பாங்க....அந்த நேரம் வந்துடுச்சோ என்னவோ...அதான் நாம இப்ப நின்னு பேசிகிட்டு இருக்கறோம் போல''

''இல்ல...நான் நிக்கலை..உக்காந்து பேசிகிட்டு இருக்கேன்''

''சிரிப்பு வரல...வந்தா சொல்லியனுப்பறேன்''

ஆனால்,மறுநாள் அருணா ஊருக்குப்போன பின்பு,அண்ணன் இந்த பேச்சை ஆரம்பித்தபோது அழுகைதான் வந்தது கிருஷ்ணாவுக்கு....

''ஏம்மா....உனக்கு என் மேல நம்பிக்கையில்லையா... ஏன்,என்கிட்டே முதல்லயே சொல்லல''

அண்ணனின் பாசம் அடிநெஞ்சைத் தொட்டது..

''அண்ணா...நீ எத்தனையோ நாள் இந்த விஷயத்துக்காக கரைகரைன்னு கரைச்சுப் பாத்துருக்க....நான் காது குடுக்கலை... ஆனா.இப்ப அதுக்கான நேரமும்,ஆளும்,கிடைச்சதும்,அப்படி யோசிக்கிறேன்.. .செல்வா என்னோட சரியான சாய்ஸா இருப்பாருன்னு தோணுது... ...உன்கிட்ட சொல்ல யோசனையா இருந்துச்சு....அதுக்குள்ள அத்தை போட்டு உடைச்சிட்டாங்க''

''செல்வ கணபதியை நீ செல்வான்னு சுருக்கி சொன்னப்பவே நான் உன் மனசைப் புரிஞ்சுகிட்டேன் கிருஷ்ணா....கிட்ட

த்தட்ட இந்த ஒரு நாளுக்காகத்தான் நான் வெயிட் பண்ணிட்டு இருந்தேன்...ரொம்ப சந்தோசம்மா...நீயாவே மனமுவந்து ஒரு முடிவு எடுத்துட்டேன்னா,அதைக் கொண்டு செலுத்தறது எனக்கு சுலபமாப் போயிடும்''

''ஆமா கிருஷ்ணா... இருந்த பொண்ணுக்கு தகுந்த மாப்பிள்ளைன்னு உங்க களக்காட்டு அத்தை சொல்லுவாங்க.... அது போல இது சூப்பர் பையன்....எல்லாம் நல்லபடியா நடக்கணும்...உங்க அண்ணனுக்கு உன் கவலைதான் ராவும் பகலும்...நம்ம காலத்துக்குப் பெறவு அவ தனியா நின்னுருவாளோன்னு புலம்பிகிட்டே இருப்பாங்க...'' என்று சுகந்தியும் உணர்ச்சி வசப்பட....பெரியவர்கள் உரையாடலைக் கேட்டுக் கொண்டிருந்த பிள்ளைகள் அவர்கள் அளவில் புரிந்து கொண்டு,ஓடி வந்து அத்தையின்கழுத்தைக்கட்டிக்கொண்டார்கள்..

''அத்தை...கல்யாணமானதும் வேற வீட்டுக்குப் போயிடுவீங்களா''

''நோ....டார்லிங்....''என்று மருமக்களைக் கட்டிக் கொண்டாள்...

''என்னங்க...கிருஷ்ணா கல்யாணம் ஆனாலும் நம்ம வீட்டுலையே இருக்கட்டும்''

சிரித்துக் கொண்டான் மூர்த்தி...சுகந்தி அவசரமாய் கேசரி கிளறி எடுத்து வந்தாள்....அனைவரும் ஆனந்தமாய் சாப்பிட்டனர்.... ஏனெனில் இது வெறும் ஸ்வீட் இல்லையே....அதனுள்ளே இருக்கும் அதீத இனிப்பு அவர்கள் குடும்பத்துக்கு மட்டுமே தெரியும்....

''அன்பிலாடும் மனமே..
பண்பிலாடும் குணமே...
எந்தப் பூவிலும் வாசமுண்டு...
எந்தன் பாட்டிலும் ராகமுண்டு
எந்தன் வாழ்விலும் அர்த்தமுண்டு...
புது வரவு...புது நினைவு...
ல ல லா ல
தினம் தினம் ஆனந்தம் ஆனந்தமே''

16

பவானிக்கு ஆண்குழந்தை பிறந்த தகவல் கிடைத்ததும் சில உடைகள்,மெத்தை,துண்டுகள் வாங்கிகொண்டு போய் பார்த்து விட்டு வந்தாள் கிருஷ்ணா ....கம்பெனியில் வந்து அமர்ந்து வேலையில் ஈடுபட்ட பின்னரும் மனம் என்னவோ அந்த பிஞ்சுக் குழந்தையை விட்டு வர மறுத்தது....சிறிய கை கால்,உருட்டும் விழிகளுடன் ஆளை மயக்கு கிறது....அனைவரையும் ஈர்க்கிறது....குழந்தையைக் கையில் வைத்து இருந்தபொழுது,மனம் காரணமின்றி மகிழ்ச்சியாய் இருந்ததை அவளால் உணர முடிந்தது....உலகமே உள்ளே போய் விழக்கூடிய ஒரு மங்கள விஷயம்,எனக்கு மட்டும் தட்டித் தட்டிப் போய் ,காலம் கடந்து கை கூடியிருக்கிறது....லாஸ்ட்..பட் நாட் லீஸ்ட் என்பது போல் ஆகிவிட்டது...இவ்விதமாய்,வேகம், விவேகம்,அன்பு,அக்கறை,ஆனந்தம் இவற்றுடன் சென்று கொண்டு இருந்த செல்வா-கிருஷ்ணாவின் காதல் குதிரைக்கு கடிவாளம் போட்டு நிறுத்தினாள் ரேவதி-ஒரு போன் காலில்....

''சொல்லு ரேவதி....நல்லா இருக்கியா''

''ஆமாக்கா....உங்க கிட்ட ஒரு விஷயத்தை கிளியர் பண்றதுக்காகப் போட்டேன்''

''சொல்லுப்பா''

''அக்கா உங்க போன் டிபியில வச்சு இருக்கீங்களே ஒரு போட்டோ''

''ஆமா''

''அவங்க யாரு....உங்க உறவா''

''இப்ப இல்ல....ஆனா சீக்கிரமே உறவா ஆயிடுவாங்க''

''அக்கா..யு மீன்....கல்யாணம் பண்ணிக்கப் போறீங்க அப்பிடித்தானே''

''ஆமாண்டா....ஏன் பதர்றே...எனி ப்ராப்ளம்?''

''ப்ராப்ளம் ஆயிடக் கூடாதேன்னுதான் பதட்டப் படறேன்.... அக்கா...அவரு செல்வா கணபதி..ஆடிட்டர் தானே''

''கரெக்ட்''

''ஆனா,கரெக்டா இல்லியே உங்க செலக்சன்....அவருக்கு அவங்க சொந்தத்துல பொண்ணு பிக்ஸ் பண்ணியாச்சு''

அமைதி காத்தாள் கிருஷ்ணா…

''அக்கா…உங்களுக்கு ஷாக்கிங்காத்தான் இருக்கும்…தெரியும் எனக்கு..பட்,ஏற்கெனவே லேட் மேரேஜ் உங்களுக்கு…அதுவாவது சரியா அமையணும்ல…அதனாலதான் உங்ககிட்டயே விஷயத்தை சொல்றேன்….நான் பேங்குக்கு கிளம்பிட்டு இருக்கேன்…ஈவ்னிங் வந்து பேசறேன்''

அலைபேசியில் கூட வெடிகுண்டு போட முடியுமா…இதோ போட்டு விட்டாளே….பூங்கொத்துக்களின் மீது நெருப்பள்ளிக் கொட்டினாற்போல் துடித்து துவண்டு போனாள் கிருஷ்ணா..

அன்று யாரும் வேலைக்கு வராதது அவளுக்கு வசதியாய்ப் போயிற்று….கதவைப் பூட்டிவிட்டு கண்ணீர் விட்டாள்…தேவையா இது…ஒழுங்காகப் போய்கொண்டு இருந்த வாழ்க்கையை நானே குழப்பிக்கொண்டாற் போலாயிற்று…வீடு,குழந்தைகள்,கம்பெனி என்று நன்றாகத்தானே இருந்தேன்….எங்கே மனதை சலனப்பட விட்டேன்..

..கல்யாண வாழ்க்கை எனக்கு உண்டென்றால்,அது உரிய வயதிலேயே ஊர் உலகத்தைப் போல நடந்து இருக்குமே…. அந்த அறிவு கூட எனக்கு எட்டாமல் போய் விட்டதே…. பெண் புத்தி பின் போன்று கூர்மையாகவும்,சமயங்களில் இது போல் பின் தங்கியும் வேலை செய்யும் என்பது உண்மைதான் போலிருக்கிறது….ஆகையால்தான் பாபநாசம் கோவிலில் வைத்து ,நான் பெண் என்பதையும் மறந்து,ஒரு முதிர்ச்சியான அணுகுமுறை நமக்கு இந்த வயதில் வேண்டும் என்ற சுய சமாதானத்தில்,எனது காதலைச் சொல்லாமல் சொல்லி உருகியபோது அவன் பிடி கொடுக்கவேயில்லையே….அதற்கு இதுதான் காரணமாக இருக்குமோ

…அதன் பின் வலிய வந்து மடியில் விழும் மலர்க் கொத்தை முகர்ந்து விடலாம் என்று முடிவு செய்திருப்பானோ ?மனம் அவனைக் கண்டபடி கழுவி ஊற்றி,அதில்சுகம் கண்டு கொண்டு இருந்தது…அப்படியே எவ்வளவு நேரம் மனம் வருந்தியபடி அமர்ந்து இருந்தாளோ தெரியாது….

''கதவு தட்டப்பட்ட சத்தம் கேட்டுதான் அவள் இவ்வுலகு திரும்பினாள்…திறந்தாள்…மூர்த்தி பதட்டத்துடன் நின்று இருந்தான்…

''என்னம்மா.....மதியம் சாப்பிடவும் வரலியாம்..சாப்பாடும் கொண்டுவரல.....இப்பவும் இவ்வளவு லேட்....ஏன்''

அந்த வார்த்தைகள் அன்பும் அக்கறையும் தாங்கி வந்து அவளைத் தாக்கின....அவ்வளவு நேரம் குமைந்து அலை பாய்ந்து கொண்டு இருந்தவள் உடைந்து அழுது விட்டாள்....மூர்த்தியின் பதட்டம் இன்னும் கூடியது....மேலும்,தங்கை இப்படியெல்லாம் கண்ணீர் விட்டு அவன் பார்த்ததுமில்லை...

''சொல்லும்மா''

உள்ளே வந்து அமர்ந்தார்கள்...

கிருஷ்ணா ரேவதி அலைபேசியில் சொன்ன தகவலை சொன்னாள்....

அதிர்ச்சி,குழப்பம்,வருத்தம் எல்லாம் அவனுக்கு ஒன்று சேர்ந்து கொண்டது...யோசனையுடன் தரையைப் பார்த்தான்....காலம் கடந்து கண்டெடுத்த முத்தும் களவு போய் விடுமோ....இயலாமை அவனை வாட்டியது...

''அவளுக்கு எப்படித் தெரியுமாம்''

''செல்வா வீட்டுக்கு அடுத்த வீடுதான்,ரேவதியின் மாமியார் வீடாம்''

''ஓ''

''ஏண்ணா ,எனக்கு மட்டும் இப்படியெல்லாம் நடக்குது''---என்றாள் கிருஷ்ணா சக்தியற்ற குரலில்....

''நிறைய பேருக்கு மனசுல இந்த கேள்வி இருக்கும்மா....விடு... இப்ப என்ன நடந்துருச்சு...எல்லாமே வாய் வார்த்தையோடதானே நின்னுட்டு இருக்கு ....தலைக்கு வந்தது தலைப்பாகையோட போச்சுன்னு நினைச்சுக்க வேண்டியதுதான்''

இல்லை அண்ணா,,,சடங்குகள் மட்டுமே பாக்கி..மற்றபடி நான் அவரைக் கணவனாகவே மனதில் வரித்துக் கொண்டு விட்டேன் என்பதை எந்த வார்த்தைகளில் சொல்வது...எப்படி சொல்வது?

''சரி...வாம்மா..வீட்டுக்குப் போகலாம்...உன் வண்டி இங்கேயே நிக்கட்டும்..இந்த நிலைமையில நீ வண்டி ஓட்ட வேண்டாம்.... என் கூட பைக்ல வா ''

என்றபடி தங்கையை வீட்டுக்கு அழைத்துப் போனான்.... உணவை மறுத்துவிட்டு,பால் மட்டும் வாங்கிக் குடித்து விட்டுப் படுத்துக் கொண்டாள்....தூக்கம் எங்கே வருகிறது?பலவாறான

சிந்தனைகள்....அலை மோதல்கள்....

''தேரில் ஏறும் முன்னமே
தேவன் உள்ளம் தெரிந்தது...
நல்ல வேளை திருவுள்ளம்
நடக்கவில்லை திருமணம்..
நன்றி... நன்றி..தேவா...உன்னை மறக்க முடியுமா....
கலைந்திடும் கனவுகள்...
கண்ணீர் சிந்தும் நினைவுகள்....
வசந்த காலக் கோலங்கள்...
வானில் விழுந்த கோடுகள்...''

அலைபேசியில் சோகப்பாடல்களை ஓட விட்டு, தறி கெட்டு ஓடும் மனதை நிலை பெற செய்ய முயன்று கொண்டிருந்தாள் கிருஷ்ணா...

## 17

எவருக்கு எது நடந்தாலும்,இயற்கைக் கடிகாரம் கண்டு கொள்வதுமில்லை...கடமையாற்றத் தவறுவதுமில்லை....ஒரு வாரம் ஓடிவிட்டது.... கம்பெனிக்குக் கூட சரி வர செல்வதில்லை கிருஷ்ணா....தனிமையும்,அது தரும் சிந்தனைகளுமே அவளைத் தேற்றிக் கொண்டு இருந்தது....தண்ணீர் குடிக்க சமையலறை சென்ற போது,சுகந்தி

''கிருஷ்ணா.செல்வ கணபதி அதுக்கப்புறம் போன் எதுவும் பண்ணலையாம்மா''

''பண்ணார்....நான் எடுக்கலை''

''...என்னம்மா.யாரோ ஏதோ சொன்னாங்கன்னு.... இதை அப்படியே விட்டுர முடியுமா''

''எதை''...அண்ணி என்ன பேச வருகிறாள் என்று தெரியும் தான்....இருப்பினும் வெறுப்பிலும்வேதனையிலும் அப்படிக் கேட்டாள் ...

''செல்வகணபதி விஷயத்தைப் பத்திதான் சொல்றேன்''

''அதுக்கு...வீம்புக்கு கல்யாணம் பண்ணிட்டு,வீணாய்ப் போய் நிக்கவா''

''அப்பிடி சொல்லலம்மா....அவங்க வீட்டுல போயி உண்மையா

என்னனு பேசிப் பாத்தா என்ன?''

''எதுக்கு அந்த வேண்டாத வேலை...நாம விலகிட்டப்பறம் அவரு யாரைக் கல்யாணம் பண்ணிகிட்டா நமக்கு என்ன''

அண்ணி நாத்தனாரின் சத்தம் கேட்டு வந்தான் மூர்த்தி...

''இல்லம்மா...நாம எதையும் கண்ணாலப் பாக்கலை..காதாலக் கேக்கலை...விசாரிச்சுப் பாத்துட்டா என்னன்னு நினைக்கிறோம்''

''இந்த கொடுமையை இன்னும் காதால வேற கேட்கணுமா....''

''இந்த ஒரு முயற்சியை மட்டும் பண்ணிப் பாத்துரலாம்னு இருக்கறோம்.அவங்க வீடு தெரியும் எனக்கு..போய் பேசிப் பாக்கறதுல தப்பொன்றுமில்ல ...ப்ளீஸ் தடை சொல்லாதம்மா''

''சரி...என்னவோ பண்ணிக்குங்க...என்னைய இன்வால்வ் பண்ணிடாதீங்க''

''இல்லம்மா...நானும் அண்ணியும் போறோம்.... என்ன...சம்பந்தம் பேசலாம்னு ஆசையோட இருந்தேன்... இப்ப.பிரச்சினையைப் பேச போக வேண்டியிருக்கு''

கிருஷ்ணாவுக்கு கண்களில் கண்ணீர் கட்டியது... மறைத்தவாறு அறைக்குள் வந்துவிட்டாள்...கிருஷ்ணாவிடமிருந்து பெரிய அளவில் மறுப்பு வராததே,ஆறுதலாக இருக்க,தாமதிக்காமல், செல்வ கணபதி வீட்டுக்கு சென்றார்கள் மூர்த்தியும்,சு கந்தியும்...பங்களா இல்லையென்றாலும் கீழும் மாடியுமாய் ச ற்றுப் பெரிய வீடுதான்....உள்ளே போனார்கள்.....

''வாங்க....நான் செல்வாவோட அம்மா''----வரவேற்ற கனகலஷ்மிக்கு நல்ல களையான முகம்....உயரம் அதிகமில்லை....நல்ல சிவப்பு....சிறிய கருப்புபொட்டுடன்,திருநீ றிட்டு இருந்தாள்....

மூர்த்தி தன்னையும் மனைவியையும் அறிமுகப் படுத்திக் கொண்டான்....மோர் கொடுத்து உபசரித்து விட்டு பேச அமர்ந்தாள் கனகலட்சுமி....தங்கை கிருஷ்ணா பற்றியும்,அவளுக்கும் செல்வாவுக்கும் உள்ள பழக்கம்,தங்கள் குடும்பத்து நிலை ஆகியவற்றை மூர்த்தி சொல்லச் சொல்ல கனகலஷ்மியின் முகம் மெது மெதுவாக மலர்ச்சிக்குப் போனது...

''கடவுளே....இன்னிக்குப் பொழுது நல்லபடியா விடிஞ்சிருக்கு... நீங்க நல்ல செய்தியை கொண்டுட்டு படியேறி வந்து இருக்கீங்க''என்று பூரித்தாள்...

''நாங்களும் இப்பிடித்தான் சந்தோசப்பட்டோம்''

''அப்படின்னா...''

அடுத்து ரேவதி சொன்ன விஷயத்தை முன் வைத்தார்கள்...

''வெண்ணை திரண்டு வர்ற சமயம் தாழியை உடைச்சாப்புல ஆயிடுச்சு...இதனால,பேக் அடிச்சுட்டோம்''

''அய்யய்யோ...அவசரப்படாதீங்க....ஒரு சம்பந்தம் கூடி வரும் போது,யாராவது இப்பிடி கலைச்சு விடறது சகஜம்தான்....காதுல போட்டுக்காதீங்க''என்று அவள் பதற....

''அப்போ...என்னதான் நடந்துச்சு''

''ஒண்ணும் நடக்கலை...நெருப்பில்லாம புகையாது...அது என்னன்னா...எங்க அக்கா பேத்தி,குரும்பூர்ல இருக்கா...அவளை என் பையனுக்குப் பண்ணலாம்னு அவங்களுக்கு ஆசை..கேட்டு வந்தாங்க....நானும் தலையை ஆட்டி வச்சேன்...ஆனா,என் மகன்கிட்ட சொன்னதும்,அந்தப் பொண்ணுக்கும் எனக்கும் வயசு வித்தியாசம் அதிகம்னுட்டு வேண்டாம்னு சொல்லிட்டான்... அதையும் அக்கா வீட்டுல சொல்லியாச்சு''

''நீங்க சொல்றதைப் பாத்தா,இது உங்க குடும்பத்துக்குள்ள நடந்த விஷயம்...அது எப்படி மத்தவங்களுக்கு?''

''நீங்க சொல்ற பொண்ணோட மாமியார் ,அந்த அக்கா எனக்கு ரொம்ப நாளாத் தெரியும்....எங்களுக்குள்ள ஒளிவு மறைவே கிடையாது...அவங்ககிட்ட சொல்லிக்கிட்டு இருந்தேன்...அந்தப் பேச்சு அப்படியே வெளிய போயிருக்கு''

அப்பாடா என்று இருந்தது மூர்த்திக்கும்,சுகந்திக்கும்...

''சரிம்மா...சந்தோசம்...இப்ப என்ன சொல்றீங்க''

''நாம இந்த கல்யாணத்தைப் பேசி முடிக்கலாம்...அக்கா பொண்ணுக்கு ஆயிரம் வரன் வரும்....கல்யாணமே வேண்டாம்னு இருந்த என் மகனுக்கு இதை விட்டா வேற நல்ல சான்சு கிடைக்காது....என் மகன் கிட்ட பேசிட்டு,உங்க வீட்டுக்கு வரேன்''என்று சொல்லி அனுப்பி வைத்தாள் கனகலெஷ்மி.

சொன்னது போலவே நான்கு நாட்களில் பூ வாங்கிக் கொண்டு,உறவுப் பெண்ணுடன் வீட்டுக்கே வந்து விட்டாள் கனகலெஷ்மி....

ஞாயிறுஎன்பதால்வீட்டில்அனைவரும்இருந்தார்கள்...கிருஷ்ணா போட்டு இருந்த சுடிதாருடன் இயல்பாய் வந்தமர்ந்தாள்....கேட்டுப்

பெறுவதற்கு எந்தவாய்ப்புமின்றி,கனகலஷ்மியே நடந்தவை,நடந்து கொண்டு இருப்பவை,நடக்கப்போவது அனைத்தையும் அவளே விளக்கினாள்...அண்ணன் அண்ணி செல்வா வீட்டுக்குப் போய்விட்டு வந்து,சம்பவங்களை விவரித்தபோது கூட ஐம்பது சதம் சமாதானம்தான் கிருஷ்ணாவுக்கு வந்திருந்தது... ஆனால்,இன்று....துளி சந்தேகத்துக்கும் இடமின்றி,அனைத்தும் கிறிஸ்டல் கிளியர்..கடைசியாய் மூர்த்தி கேட்டான்....

''இப்ப உனக்கு ஓகேயாம்மா''

''டபிள் ஓகே அண்ணா''

''செல்வாவை பழைய மாதிரியே நம்பறியா''

''அதை விட அதிகமா''இதன் பின்னரும் ஒரு அண்ணன் கல்யாண ஏற்பாடுகளை தாமதிப்பானா என்ன...அவனைத் தூங்க விடாமல் செய்து வந்த இதயவலி சொல்லாமல் கொள்ளாமல் இறங்கி ஓடிப்போனது..

''வண்டி மாடு எட்டு வச்சி முன்னே போகுதம்மா..
வாக்கப்பட்ட பொண்ணு மனம் பின்னே போகுதம்மா..
வண்டி கட்டிப் போறவளே..
வாக்கப்பட்டு போறவளே''

கிழக்கு சீமையிலே படப்பாடல் மூர்த்தின் கனவில் வந்தது...

## 18

அன்றுஇரவுஎட்டுமணிபோலசெல்வாவிடமிருந்து அழைப்பு...தயக்கத்துடனும்,நாணத்துடனும்,

''ஹலோ'' என்றாள்...

''ஹலோ.... கிருஷ்ணா இருக்காங்களா''

தன்னை கேலி செய்வதைப் புரிந்து கொண்டு

''இருக்கேன்'' என்றாள்...

பலமாக சிரித்தான்

''என்ன...நடுவுல கொஞ்சம் பக்கத்தைக் காணோம்''

''ஆமா...வனவாசம் போயிருந்துச்சு....''

''வந்துடுச்சா''

''பத்திரமா வந்துடுச்சு....அது என்னன்னா''

''வேண்டாம்..எதுவும் சொல்ல வேண்டாம்....அரசல் புரசலா

காதுல விழுந்துச்சு....திருப்பி திருப்பி பிரச்சினைகளையே ஏன் அட்ரேக்ட் பண்ணுவானேன்....நல்லதைப் பேசுவோமே''

அவனது ஆர்ப்பாட்டமில்லாத அறிவார்ந்த பேச்சு ,மனதுக்கு சந்தோஷக் கிளு கிளுப்பைத் தந்தது....சட்டென்று செல்வா கோபுரமாய் உயர்ந்து தெரிந்தான்...அவன் என்றும் அப்படித்தான்..நான் தான் இறக்கிப் பார்த்து விட்டேன் என்ற குற்ற உணர்வு உண்டானது கிருஷ்ணாவுக்கு...

''அதாவதும்மா...பெண்கள் கூடவே பிறந்தது சந்தேகம்.... அதுக்கு நீங்க மட்டும் விதிவிலக்காயிட முடியுமா என்ன''

அவளது சுய மரியாதை இடித்தது...

''ஹலோ...வாய்ப்பு கிடைச்சதும் ,ஒரு சாதாரணப் பொண்ணு ரேஞ்சுக்கு வச்சிப் பேசறீங்க'''

''அப்படித்தானே நடந்துகிட்டீங்க.ஒரு செய்தி காதுல விழுந்ததும்,...என்னோட நிலைப்பாடு என்னன்னு என்கிட்டே கேட்டு இருக்கலாம்....என் நிலைமையை விளக்க எனக்கொரு சந்தர்ப்பம் தந்து இருக்கலாம்...எத்தனை இருக்கு...அதை விட்டுட்டு....குழம்பி...குழப்பி..உடம்பைக் கெடுத்துகிட்டு.... ஓகே...பாஸ்ட் இஸ் பாஸ்ட்...வாட் நெக்ஸ்ட்''

செல்வாவின் வார்த்தைகளில் மிகையில்லை.. அத்தனையும் உண்மை...

உப்பைத் தின்றவள் தண்ணீர் குடித்துதான் ஆகவேண்டும்...

''சரி....பீல் பண்ணினது போதும்''

''நேர்ல பாத்தா மாதிரி சொல்றீங்க''என்று வியந்தாள் கிருஷ்ணா

''கணக்கையே துளைக்கற எங்களால,கன்னிப் பொண்ணு மனசைப் பாக்க முடியாதா...சரி...போகட்டும்...கிருஷ்ணா டார்லிங்... கல்யாணத்தை எப்ப வச்சிக்கலாம்''

''எப்ப வேணாலும்...''

''ஆமா...உடனே வச்சிடறதுதான் நல்லது...திருப்பியும் யாராவது போன் போட்டு என் பாவத்துல விழுந்துரக் கூடாது''

அடக்க மாட்டாமல் சிரித்தாள் கிருஷ்ணா...

அது மகிழ்ச்சியினால் வந்த மலர்ச்சி...

''அப்புறம்...ஒன் மோர் ப்ராப்ளம் செல்வா...''

''சொல்லுங்க...கிளியர் பண்ணிடலாம்....தாலி

கட்டும்போது,ஹோமப் புகையைத் தவிர வேற எந்த புகைச்சலும் இருக்கக்கூடாது....ஓகேயா''

''சிறப்பு...சொல்றேன்...எங்க அண்ணி உடம்பு முடியாதவங்க. அண்ணன் குடும்பத்துக்கு,எப்பனாலும் என்னோட உதவி தேவைப்படலாம்......எனக்கு மாப்ள கிடைச்சாச்சு...பைபைன்னு சொல்லிட்டு வந்துட முடியாது....''

''அதனால''

''எனக்கும் என்ன பண்றதுன்னு தெரியல...உங்களை வீட்டோட மாப்ளையா கூப்பிடலாம்னு பாத்தா,அங்க உங்க அம்மா தனியா இருப்பாங்க...அதுவும் நியாயமில்ல....''

''ஆமா...இப்படிப் பண்ணலாம் கிருஷ்ணா''

''எப்படி''

''எங்க வீட்டு மாடியை வாடகைக்குத்தான் விட்டு இருக்கேன்... அவங்களைகாலி பண்ண சொல்லிட்டு,உங்க அண்ணா குடும்பத்தை குடி வச்சா என்ன...தேவைப்படறப்ப நாம உதவி பண்ணிக்கலாம்''

''ம்ம்...நல்ல ஐடியாதான்....செய்யலாம்...அண்ணா கிட்ட கேக்கறேன்...''

''வேற''

''வேற ஒண்ணுமில்ல''

''சரி...இப்ப பேசுங்க''

''இதென்ன கூத்து...இவ்ளோநேரம் பேசிட்டுதானே இருக்கேன்''

''ப்ச்...அது ஒரு ஆபீசர் மாதிரி கறாரா பேசினீங்க...கட்டிக்கப் போற பொண்ணா,அன்பா அருமையா ரெண்டு வார்த்தை''

''மெசேஜ் பண்றேன்...''

''ஓகே..ஒரு கவிதை..வாசிச்சுக் காமிக்கிறேன்....
கவிதை.குருவிக்கூடு பத்தி...ஓகேயா...''

''கூலி பேதமில்லை...
கொத்தனார் தகராறில்லை...
பால் காய்ச்சும் பட்டமில்லை'''
பட்டுடுத்த கட்டாயமில்லை
..சாமான்களடுக்கும் சங்கடமில்லை.
.அழகுறத் தயார்...
எமக்கான அடுக்ககம்... வாழ்க நிலமுடன்...''

கைத்தட்டினாள் கிருஷ்ணா....

''ம்ம்ம்...இது போல சிம்பிளா இருந்தாதான் எங்களைப் போல ஞான சூனியங்களுக்குப் புரியும்''

''யாரு...நீங்க ஞான சூனியமா....பத்துநாளா என்னைய லூசா ஆக்கிட்டு....''

சிரித்தாள் கிருஷ்ணா...எப்பேர்பட்ட புத்திசாலியானாலும் உரலுக்குள் தலை கொடுத்து விட்டால் இடிபட்டுத்தானே ஆகவேண்டும்....

## 19

அம்பை அருகே உள்ள கைலாச நாதர் கோவிலில் வைத்து செல்வா-கிருஷ்ணா திருமணத்தை நடத்த ஏற்பாடு ஆகியிருந்தது....கனகலட்சுமி தனது மகன் கல்யாணத்தை தள்ளிப் போட்டுக்கொண்டே போவதால்,அவன் கல்யாணத்தை கோவிலில் வைத்து நடத்த நேர்ந்து இருந்தாளாம்... களக்காட்டு அத்தை ஒரு வாரம் முன்பே வந்து டேரா போட்டு விட்டாள்....திருமணத்துக்குப் பின் செல்வா வீட்டு மாடியில் குடியேறுவது பற்றிதான் மிகுந்த தயக்கத்தில் இருந்தான் மூர்த்தி...

''அண்ணா....என்னண்ணா..இவ்ளோ யோசிக்கிறே''

''இல்லம்மா....அது நல்லா இரும்மான்னு''

''எல்லாம் நல்லாத்தான் இருக்கும்...''

''உள்ளூர்லதானம்மா இருக்கறோம்....நீ ஒரு குரல் குடுத்தா ஓடி வந்துடப் போறேன்...இதுக்கு எதுக்கும்மா வீடு மாத்திகிட்டு''

''இல்லண்ணா.....பிள்ளைகளைப் பாக்காம எனக்கு ஒரு நாள் பொழுது கூட செல்லாது....பிள்ளைங்க படிப்பு,ஹோம் வொர்க் இந்த விஷயங்களை எல்லாம் நான் பார்த்துக்குவேன்... திடீர்னு மொத்தமா எல்லா வேலையையும் அவங்க தலையில போட்டா,அண்ணி திணறிடுவாங்க.....மாத்திரை போடறவங்க... நல்லா ரெஸ்ட் எடுக்கணும்...

எல்லாத்தையும் யோசிச்சுத்தான் சொல்றேன்''

''ஆமாம்ப்பா....அத்தை கூட இருந்தாதான் ஜாலி..அடிக்கடி அவுட்டிங் கூட்டிப் போவாங்க''

''ஆமாங்க...நாளைக்கு கிருஷ்ணாவுக்கு குழந்தை பிறந்தாலும்,நாமளும் சேர்ந்து கவனிச்சுக்கலாம்''

''ம்ம்ம்...எல்லார்கிட்டேயும் பக்காவா ப்ளான் இருக்கு போல''. என்று சிரித்த மூர்த்தி,தனது குடும்பத்தின் பலமான சிபாரிசு இருந்ததால் ,அவனும் வீடு மாற ஒப்புக் கொண்டான்...கட்டாயப் படுத்தி வீட்டு வாடகை தந்து விடவேண்டும் என்றும் உறுதி கொண்டான்.

அண்ணியும்,நாத்தனாரும் சேர்ந்து நகைக்கடை,ஜவுளிக்கடை ஷாப்பிங்கை முடித்தனர்... வீட்டில் எல்லாம் இருக்கிறது என்று சொல்லி சீர் வரிசைகள் எதுவும் வேண்டாமென மறுத்து விட்டாள் கனகலட்சுமி....திருமணத்திற்கு முதல் நாள் வந்து,மருமகளுக்கு வைர நெக்லஸ் போட்டு விட்டுப் போனாள்...செல்வாவின் செலக்சனாம்.....பெருமையாக இருந்தது கிருஷ்ணாவுக்கு.... அத்தை மருமகளுக்கு சுற்றிப் போட்டாள்....

''மகராசி....கண்ணுக்கு நிறைவா வாழ்க்கை கிடைச்சுருக்கு....பூவோட,பொட்டோட பிள்ளை குட்டியோட,ஆண்டு அனுபவிச்சு நீ நல்லா இருக்கணும்... இதைப் பாக்க என்தம்பி இல்லாமப் போனான்...அந்த ஒரு குறைதான்''என்று மூக்கு சிந்தினாள்....

மூர்த்தி போக வர தன் தங்கையைப் பார்த்து பார்த்துப் பூரித்துக் கொண்டான்....தங்கை அழகும்,அறிவும்,ஒழுக்கமும்,செயல் திறனும் உடையவள்தான்....சுய தொழிலில் வென்று காட்டியவள்தான்...இருந்தாலும் முழுமை என்பது அவளது மண வாழ்வில் தான் இருக்கிறது என்று திருப்தி பட்டுக் கொண்டான்....முதல் நாள் மாலை சுகந்தியின் அம்மா அருணாவும் அவள் தங்கையும் வந்தனர்....உள்ளுக்குள் பொறாமைதான்... இருப்பினும்

''தங்கச்சி விஷயம் தெரிஞ்சாலும் மாப்பிள்ள யோசனையில இருந்தாக....நான்தான் நல்லது கெட்டது எடுத்து சொல்லி கல்யாணம் பண்ணி வைங்கன்னு சொல்லிட்டுப் போனேன்...''

என்று உறவுப் பெண்களிடம் பீற்றி கொண்டு இருந்தாள்... வலிக்காத மாதிரியே நடிக்க வேண்டிய கட்டாயத்தில் இருந்தாள் அவள்...

திருமண நாளும் வந்து சேர்ந்தது...அதிகாலை முகூர்த்தம்....

நீல நிறப் பருத்திப் பட்டு உடுத்தியிருந்தாள் கிருஷ்ணா.... எளிமையான நகைகள்....செல்வா பட்டு வேட்டி சட்டையில்,தலைப்பாகையில் இளம்வயது விஜயகுமார் போல அசத்தலாக இருந்தான்...இருவருக்கும் ஒரே மாதிரியான மணமாலைகள்....ரேவதி ஆறு மாத கர்ப்பிணியாக வந்து இருந்தாள் கணவனுடன்.....அவளைப்பார்த்ததும் ,சுகந்தி ஓடிப் போய் வரவேற்று,செல்லமாக தலையில் குட்டினாள்...

''எதையோ கேட்டு,எதையோ சொல்லி கிருஷ்ணாவை குழப்பி..''

''சாரி அக்கா....தெரியாம'' என தலை சொரிந்தாள்...

''பரவாயில்ல....நல்ல எண்ணம்தான் உனக்கும்..இப்ப எல்லாம் சுபமா ஆயிடுச்சு....கிருஷ்ணா கூடப் போயி நில்லு'

பவானியும்,சங்கரும் குழந்தையுடன் வந்திருந்தனர்..... செல்வாவின் அக்கா இரண்டு பிள்ளைகள் கணவருடன் வந்திருந்தாள்...

கொட்டு மேளத்துடன்,மாங்கல்ய தாரணம் இனிதே முடிந்தது... அடுத்து கல்யாண மகாலில் மற்ற சடங்கு சம்பிரதாயங்கள்.....

நிஷா,திஷா இருவரும் பரதநாட்டியம் ஆடினார்கள்''

''மார்கழித் திங்கள் அல்லவா...
மதி கொஞ்சும் நாளல்லவா....
ஒரு முறை உனது திருமுகம் பார்த்தால்
விடை பெறும் உயிரல்லவா'''

''கிருஷ்ணா... நீ தான் பசங்களுக்கு டான்ஸ் சொல்லிகுடுத்தியா'' ---செல்வா

''ஆமா...நல்லாயிருக்கா''

''நல்லாயிருக்கு...நீ ஆடினா இன்னும் நல்லா இருக்கும்'' சிரித்துக் கொண்டாள் கிருஷ்ணா...தங்கையும் மாப்பிள்ளையும் நாணத்தோடு பேசிக் கொள்வதை ஓரக்கண்ணால் பார்த்து,மகிழ்ந்து கொண்டான் மூர்த்தி...

களக்காடு அத்தை தனது வீட்டை கிருஷ்ணாவின் பேருக்கு எழுதி,அந்தப் பத்திரத்தை பரிசளித்தாள்....மூர்த்தி தங்கையை ஆசீர்வதித்துவிட்டு கண்கலங்கினான்....

அவளும் அழுது விட்டாள்...செல்வா இருவரையும் தேற்றினான்...பரவசமும்,பகிர்தலுமாய் பகல் பொழுது கழிந்தது.....மணமக்களுக்கான நேரமாய் வந்து சேர்ந்தது இரவு...

''கிருஷ்ணா....''

''சொல்லுங்க''

''சொல்லட்டா''

''தயவு செய்து கவிதை மட்டும் வேண்டாம்...''

சிரித்தான்...

''கவிதை இல்ல...பாட்டு...''

''எப்பிடியோ விடப் போறதில்ல....ம்ஹூம்....சொல்லுங்க''

''சரி....பாட்டு வேண்டாம்....பக்கத்துல வரவா''

சிரித்தாள்...

''பாட்டே பரவாயில்ல....பட் ஒன் கண்டிசன்....வாசிக்கக் கூடாது....பாடணும்''

''ட்ரை பண்றேன்''

''காலில போட்ட மிஞ்சிதான் காதுல பேசுதே...
கழுத்துல போட்ட தாலிதான் காவியம் பாடுதே..
நெத்திச் சுட்டி ஆடும் உச்சந்தலையில்
பொட்டு வச்சதாரு...நான்தானே...
மணி மாலை உன்னைத்தொட்டுத் தொட்டுத் தாலாட்ட...
வெக்கத்துல சேல...கொஞ்சம் விட்டு விட்டுப் போராட''


சூழலின் மயக்கத்தை பாட்டு இன்னும் கூட்ட....அதற்கு மேல் பொறுக்க மாட்டாமல்,கிருஷ்ணா ஓடிவந்து செல்வாவைக் கட்டிக் கொண்டாள்....காதலுடனும்,கனிவுடனும் மனைவியை தாங்கிக் கொண்டான் செல்வா...இவர்கள் ஒருவருக்காக ஒருவர் காத்திருந்தார்களா...அல்லது இவர்களை இணைக்கக் காலம் காத்திருந்ததா....தெரியவில்லை....எது எப்படியாயினும்,இனி நொடிப் பொழுதையும் வீணடிக்காமல்,தங்கள் வாழ்க்கையை துவங்கத் தயாரானார்கள் அந்த அன்புத் தம்பதியர்.....

**(முற்றும்)**



கொஞ்சம் மருத்துவம்...
நிறைய மனிதம்-44

# வளைகாப்புக்குப் போகலாம்! வயிறு நிறைய சாப்பிடலாம்!



சின்னதாக ஒரு சர்வே நடத்தினேன். நன்கு படித்த நண்பர்களிடம் தனித்தனியாக ஒரு கேள்வியை அனுப்பினேன். வளைகாப்பு நடத்துவது எதற்காக? என்பது தான் அந்தக் கேள்வி.

-டாக்டர் அகிலாண்ட பாரதி



வளையல் ஒலி குழந்தைகளுக்கு மகிழ்ச்சியை, புத்துணர்வையும் கொடுக்கும் என்று ஒரே மாதிரி எல்லாரும் கூறியிருந்தனர். கூடவே வளையின் ஒலியை வைத்து கர்ப்பிணிப் பெண்ணுக்கு வலிப்பு ஏதும் வந்தால் கண்டுபிடித்துவிடலாம், கழிப்பறைக்குள் அவள் இருக்கும் போது நீண்ட நேரம் வளை ஒலி கேட்கவில்லை என்றால் சந்தேகப்பட்டுப் போய்ப் பார்க்கலாம் என்றும் சிலர் கூறியிருந்தனர்.

ஒரு நண்பர் மட்டும் வளகாப்பு நடத்தினால் போய் 'திருப்தியா சாப்பிட்டுட்டு வரலாம்' என்று விளையாட்டாய்க் கூறியிருந்தார்.

பல ஆண்டுகளுக்கு முன்பாக ஒரு பெரியவர் பேச்சு வாக்கில் கூறிய ஒரு விஷயம் நீண்ட நாட்களாக என் மனதின் ஒரு ஓரத்தில் இருந்தது. 'பிரசவம் என்பதே ஒரு பெண்ணுக்கு மறுஜென்மம் தான். அதனால் கடைசியா நகை, பட்டு சேலை எல்லாம் கட்டி கல்யாண கோலத்தில்



டாக்டர்.அகிலாண்ட பாரதி

நிறைவா பார்க்கிறதுக்காகத் தான் வளைகாப்புன்னு அந்தக் காலத்தில் வச்சிருக்காங்க' என்று கூறியிருந்தார்.

அப்படியா என்ன, என்று அடிக்கடி தோன்றிக் கொண்டே இருக்கும். இப்போது நண்பர்கள் கூறிய பதிலில் ஒரு இளம்பெண் ஒரு பதிலை கூறியிருந்தார். நேர்மறையான விஷயம். வளைகாப்புக்கு வந்திருக்கும் மூத்த பெண்கள் பலர் தங்கள் அனுபவங்களைக் கூறுவதில், ஆசி வழங்குவதில், 'இத்தனை பேர் பெற்றுப் பிழைத்து வந்திருக்கிறோம் பார்! அதனால் நீயும் தைரியமாக பிரசவத்தை எதிர் கொள்' என்னும் சேதி இருக்கலாம் என்று கூறியிருந்தார்.

இந்த அத்தனை பதில்களிலும் ஒன்று நன்றாகத் தெரிகிறது. பிரசவத்தில் பல சிக்கல்கள் நேரலாம் என்பதுதான் அது. கருவுற்ற காலத்தில் இருந்து பிள்ளை பெற்று ஆறு வாரங்கள் வரையிலான காலம் ஒரு தாயை மிகத் தீவிரமான கவனத்துடன்

பார்த்துக்கொள்ள வேண்டிய காலம். இந்தக் கால கட்டத்தில் ஏற்படும் மரணங்களை கர்ப்பகால மரணங்கள் (Maternal deaths) என்று வரையறுக்கிறார்கள்.

ஒரு பெண் கருவுற்ற நாள் முதல் அவளது உடல் முழுவதிலும் உள்ள இயக்கங்கள் பல விதங்களில் மாறிவிடுகிறது. உடல் ஆற்றலை சேமித்து வைக்கத் துவங்குகிறது (positive nitrogen balance). தலைமுடி கர்ப்ப காலத்தில் வேகமாகவும் அடர்த்தியாகவும் வளர்வதை கவனித்திருப்பீர்கள். முக்கிய மாற்றங்கள் இதயம் மற்றும் நுரையீரலில் நடக்கின்றன. இதயத்தில் என்னென்ன மாற்றங்கள் நிகழ்கின்றன என்பதே மருத்துவக் கல்வியில் தனியான ஒரு பாடம்.

20 ஆம் வாரத்தில் தாயின் உடலில் வழக்கமாக இருக்கும் நான்கரை லிட்டர் அளவிலான இரத்தம் கிட்டத்தட்ட ஆறு லிட்டர் அளவிற்கு அதிகரிக்கிறது. இதயத்தின் வேலைத் திறனும் ஒன்றரைப் பங்கு அதிகரிக்கிறது. அதனால் எவ்வளவு ஆரோக்கியமான நபராக இருந்தாலும் அந்தக் காலகட்டத்தில் ரத்தசோகை ஏற்படுவது உலக நியதி.



அதற்கு ஏற்றாற்போல் சத்து மாத்திரைகள் அவசியம். இதயத்தில் ஏற்கனவே வால்வு பிரச்சனை போன்ற கோளாறுகள் இருந்தால் இந்தக் காலகட்டத்தில் இதயம் செயலிழந்து விடக்கூடிய அபாயமும் உண்டு.

முதல் பிரசவம், இளம் வயதில் கர்ப்பம், அல்லது முப்பத்தைந்து வயதுக்கு மேல் கர்ப்பமாகும் பெண்களுக்கு பிரசவ கால ரத்தக்கொதிப்பு (Pregnancy induced hypertension) நிலையும் வரக்கூடும். சமீப காலமாக இந்த ரத்தக்கொதிப்பு நிறைய





பேருக்கு ஏற்படுகிறது.

உடனடியாக கவனிக்கா விட்டால் நஞ்சுப்பை வழியே குழந்தைக்குச் செல்லும் ரத்த ஓட்டம் தடைபட்டு, குழந்தை எடை குறைவாக பிறப்பதில் துவங்கி தாய்க்கு கல்லீரல் பாதிப்பு, வலிப்பு போன்ற பிரச்சனைகள் ஏற்பட்டு உயிருக்கே உலையாக முடிவது வரை இந்த பிரசவகால ரத்தக்கொதிப்பு எத்தனையோ வேலைகளைச் செய்து விடக்கூடும்.

அதேபோல்தான் கர்ப்பகால சர்க்கரை நோயும் (gestational diabetes). இதுவரை சர்க்கரை நோய் இல்லாத தாய்க்கு கர்ப்ப காலத்தில் சர்க்கரை வர வாய்ப்பு அதிகம். சமீப காலங்களாக தைராய்டு குறைபாடும் அதிகரித்து வருகிறது. ஏற்கனவே தைராய்டு மாத்திரை உட்கொள்ளும் ஒரு தாய்க்கு கர்ப்பகாலம் மற்றும் பாலூட்டும் காலத்தில் ஒன்றரைப் பங்கு அதிகமான

**1900களில் பேறுகாலத்தின் போது தாயின் இறப்பு விகிதம் மிக அதிகமானதாக இருந்தது. உலக அளவில் எல்லா நாட்டு அரசுகளும் மேற்கொண்டிருக்கும் தீவிர நடவடிக்கைகளால் இந்த விகிதம் மிக மிகக் குறைந்திருக்கிறது. அப்படியிருந்தும் 2017ம் ஆண்டு கணக்கின்படி அந்த ஆண்டு மட்டுமே உலகெங்கும் 3 லட்சம் தாய்மார்கள் கர்ப்பகாலத்தில் உயிரிழந்திருக்கிறார்கள். இதில் 94 சதவீத மரணங்கள் எளிதாக தடுத்திருக்கக் கூடியவை முடியும் என்று உலக சுகாதார அமைப்பு கூறுகிறது.**

**இவ்வளவுக்கும் 2000ஆம் ஆண்டின் மரண விகிதத்தை விட இது 38 சதவீதம் குறைவு என்றும் அந்த அமைப்பு கூறுகிறது.**

டோஸ் தேவைப்படும். உதாரணமாக 100 மைக்ரோகிராம் தைராக்ஸின் மாத்திரை எடுக்கும் பெண்ணுக்கு இந்த சமயம் நூற்றைம்பது மில்லிகிராம் தேவைப்படும்.

சில தாய்மார்கள் இன்றும்கூட பிரசவ நேரம் வரை சர்க்கரை, தைராய்டு, இதயப் பரிசோதனை போன்ற பரிசோதனைகளைச் செய்து கொள்வதில்லை. இதனால் அந்த நேரத்தில் சில சிக்கல்களை சந்திக்கிறார்கள். தற்போதைய கால கட்டத்தில் இருக்கும் மன அழுத்தம், சூழல் மாசுபாடு, வாழ்க்கை முறை போன்ற காரணங்களால் இத்தகைய நோய்கள் அதிகரித்திருக்கின்றன என்று ஒரு சாராரும், எந்தக் காலத்திலும் இத்தகைய நோய்கள் இருந்தே வந்திருக்கின்றன அப்போது போதுமான பரிசோதனைகள் செய்யப்படவில்லை அதுதான் உண்மை என்று ஒரு சாராரும் கூறுகின்றனர்.

இன்றைய தேதியில் கர்ப்ப காலத்தில் ஒரு தாய் மரணம் அடைந்து விட்டால் அவளது சிகிச்சையில் நடந்த ஒவ்வொரு விஷயமும் கண்காணிப்புக்குள்ளும் விசாரணை வளையத்துக்குள்ளும் (maternal death audit) கொண்டுவரப்படுகிறது.

**பேறுகால மரணங்களைத் தவிர்க்க வேண்டும் என்ற முனைப்பு 60, 70 ஆண்டுகளுக்கும் மேலாக இருந்தாலும் முறையான கணக்கெடுப்பு 90கள் வாக்கில் தான் தோன்றியது. இந்திய அளவில் 1990ல் ஒரு லட்சம் பிரசவங்களில் 556 என்ற அளவில் இருந்த இறப்பு விகிதம் 2016ல் 130 என்று குறைந்திருப்பது வியக்கத்தக்கது.**

**இருந்தாலும் உலகெங்கும் இருக்கும் கர்ப்பகால மரணங்களில் ஐந்தில் ஒரு பங்கு இந்தியாவில் நிகழ்வதாக வரும் தகவல் அடிவயிற்றில் கலகத்தை உண்டு செய்கிறது. இந்தியாவில் என்றில்லை தெற்காசியாவிலும் ஆப்ரிக்கா கண்டத்திலும் வளர்ச்சி அடைந்த நாடுகளை விட பேறுகால மரணங்கள் அதிக அளவில் நிகழ்கின்றன.**



பெண்கள் குழந்தைகளை வளரிளம் பருவத்தில் இருந்தே பள்ளிக்கூடங்களில் வைத்து முறையான பரிசோதனை செய்து அவர்களது ஆரோக்கியத்தை மேம்படுத்துவது அரசு சுகாதாரத் துறை செய்யும் முக்கிய பணிகளில் ஒன்றாக இருக்கிறது.

ஹை ரிஸ்க் கேட்டகிரி என்று சில நோயாளிகள் வரையறுக்கப்பட்டு அவர்களுக்கு அனைத்து வசதிகளும் உள்ள பெரிய மருத்துவமனைகளில் (tertiary care) பேறுகாலம் பார்க்கப்படுகிறது.

36 வயதுப் பெண் அவர். கர்ப்பகாலத்தில் 32 வாரங்கள் நிரம்பிய நிலையில், வயிற்றில் இரட்டை குழந்தைகளுடன் சென்ற வாரம் எங்கள் மருத்துவமனைக்கு வந்தார். இரண்டு கால்களும் நன்றாக வீங்கியிருந்தன. வீக்கத்திலிருந்து நீர் வடியும் அளவிற்கு அதிகம். அந்த வீக்கம் அடிவயிற்றுக்கும் பரவியிருந்தது.

சிறுநீரைப் பரிசோதனை செய்து பார்த்ததில் அதில் உப்புச்சத்து வெளியேறியதும் தெரிந்தது. பல விதங்களிலும் 'ஹை ரிஸ்க்' என்று சொல்லக்கூடிய பட்டியலில் வருவார் அவர். எந்த நேரமானாலும் வலிப்பு வரலாம் என்ற நிலை. இந்த மாதிரி நேரங்களில் தாயின் உயிரைக் காக்கும் விதமாக உடனடியாக கர்ப்பத்தை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும். முதலுதவி அளித்து, உடனடியாக மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பினோம்.

அங்கு அவசர நிலை கருதி உடனடியாக அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. தலா 2 கிலோ எடையில் குழந்தைகள் பிறந்து இன்குபேட்டரில் வைக்கப்பட்டன. தற்போது மூவரும் நலமாக உள்ளனர். இன்னும் ஓரிரு நாட்கள் தாமதித்திருந்தால் அந்த பெண்ணின் கல்லீரலும்


சிறுநீரகமும் முற்றிலும் செயலிழந்து போயிருக்கலாம், குழந்தைகளுக்கும் ஆபத்து ஏற்பட்டிருக்கும். மூன்று உயிர்களை இழந்திருப்போம். நன்கு படித்த பெண் அவர். முந்தைய பிரசவத்திலும் இரத்தக்கொதிப்பு இருந்திருக்கிறது. எட்டாம் மாதம் வரை சரியாக பரிசோதனை செய்யாமல் விட்டிருக்கிறார்.

எவ்வளவோ முயற்சிகள் எடுத்தாலும் அங்கொன்றும் இங்கொன்றுமாக தவிர்க்க இயலாமல் பேறுகாலத்தின்போது மரணங்கள் நிகழ்கையில் மருத்துவமனை வட்டாரமே சோகத்தில் மூழ்கி விடும். அடுத்த சில நாட்களுக்கு மருத்துவக் குழுவினர் அனைவரும் மன உளைச்சலில் தவிப்பதைப் பார்க்கிறோம். தமிழ்நாட்டை விட வடமாநிலங்களில் இத்தகைய மரணங்களை மக்கள் எளிதாக எடுத்துக்கொள்வதாக சமீபத்தில் மருத்துவர் ஒருவர் கூறினார்.

சீரிய முயற்சிகளால் வெகுவாகக் குறைந்துவிட்ட பேறுகால மரணங்கள் இந்த கொரோனா காலத்தில் பல மடங்கு அதிகரித்தன. மற்றவர்களுக்கு நோய்க்கிருமி தாக்கி ஒரு வாரம் கழித்து நுரையீரல் பாதித்தால் கர்ப்பிணிப்பெண்களுக்கு மட்டும் மூன்றாம் நாளே மூச்சுத் திணறல் ஏற்பட்டது.

இதனால் இப்போது அனைத்து தாய்மார்களுக்கும் கொரோனா தடுப்பூசி கட்டாயம் செலுத்தப்பட வேண்டும் என்ற கருத்தும் வலியுறுத்தப்பட்டு வருகிறது. இந்திய அளவில் பொது சுகாதார சேவைகளில் முதலிடத்தில் இருக்கும் தமிழகம், கர்ப்பகால மரணங்களைக் குறைப்பதில் தனிகவனம் செலுத்துகிறது. அது குறித்து.. அடுத்த வாரம்..

**-மனிதம் காப்போம்**







விமர்சனம்

# கசட தபற

**ம**ருந்து கம்பெனிக்கு இண்டர்வியூவுக்கு வந்த திரிஷாவுக்கு அங்கு பணிபுரியும் பாலா எதேச்சையாக மூன்று முறை உதவ நேரிடுகிறது. நன்றியை கூட எதிர்பார்க்காமல் உதவி செய்யும் பாலாவின் குணம் பிடித்துப் போக அவரை விரும்புவதாக சொல்கிறார் திரிஷா.

ஆனால் இந்த காதல் திரிஷாவின் அப்பாவுக்கு பிடிக்காமல் போகிறது, ஒரு தருணத்தில் இருவரும் ஒன்றாகி விட, மறுநாள் திரிஷா ரெஜிஸ்டர் மேரேஜுக்கு தயாராகி வர, அவளுடைய 80 பவுன் நகையை எடுத்துக் கொண்டு பாலா எஸ்கேப் ஆனதாக லெட்டர் மட்டும் கிடைகிறது. அதன் பிறகு பாலாவுக்கு என்ன ஆனது?

**ம**கன் ஐசக்கின் காதலுக்கு தன் ரவுடி தொழிலே முட்டுக் கட்டையாக இருப்பதை தெரிந்து நொந்து போகிறார், அயோத்தி வேதா .தன் மகன் விரும்பும் பெண்ணின் அப்பா ஒரு ஜட்ஜ் என்று தெரிந்ததும் அவரிடம் சென்று 'நான் எல்லாத்தையும் விட்டுடுறேன், அவங்க ரெண்டு பேரையும் சேர்த்து வையுங்க' என்று கேட்கிறார்.

மறுநாள் போலீஸ் என்கவுண்டரில் வேதா கொல்லப்பட்ட, தன் அப்பாவை காட்டிக் கொடுத்தவனை கொலை செய்கிறான் ஐசக். ஆனால் உண்மையாக வேதாவை கொன்றது யார் என்பது சஸ்பென்ஸ்?

**கா**க்கைக் குருவி எங்கள் சாதி என பாரதி டைப்பில் பேசும் கண்மணிக்கு தன் கணவன் கந்தா, ரவுடி வேதாவை சுட்டுக் கொன்றான் என்ற செய்தி ரொம்ப ஷாக்காக இருக்கிறது. மேலதிகாரி தனக்கு வைத்த செக் காரணமாக என்கவுண்டருக்கு சென்றானே தவிர கந்தா,

வேதாவை கொல்லவில்லை என்பது அவனுக்கு மட்டுமே தெரிந்த ரகசியம்.

ஆனால் அடுத்த என்கவுண்டருக்கு பிளான் செய்த மேலதிகாரி சதுர்வேதாவே, தன் ஜூனியரான கந்தாவை போட்டுத் தள்ளப் பார்க்கிறான். பதிலுக்கு கந்தா, தன் சீனியர் ஆபீசருக்கு டிராப் வைக்க பலமான காரணம் இருக்கிறது, அது என்ன?

பணக்கார நபரை நண்பனாக்கிக் கொண்டு தன் சாதுர்யத்தால் ரெண்டே மாதத்தில் பல கோடி சம்பாதிக்கும் கிஸ், ஒரு நொடி செய்த தவறால், தான் சம்பாதித்த அனைத்தையும் இழக்கும் நிலை உண் டாகிறது. தான் உருவாக்கிய சதி வலையில் தானே சிக்கிக் கொண்ட அவன் மீண்டானா இல்லையா?



| | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|
| நடிகர்கள் | ● | ● | ● | ○ | ○ |
| கதை | ● | ● | ● | ○ | ○ |
| திரைக்கதை | ● | ● | ◐ | ○ | ○ |
| இயக்கம் | ● | ● | ● | ○ | ○ |
| ஒளிப்பதிவு | ● | ● | ● | ○ | ○ |
| இசை | ● | ● | ● | ○ | ○ |
| மொத்தத்தில் | ★ | ★ | ★ | ☆ | ☆ |

சத்துணவு ஆயா வேலை பார்க்கும் சுந்தரியின் மகன் திடீரென மூச்சிறைத்து ரத்த வாந்தி எடுக்க, சிகிச்சைக்காக சென்னைக்கு கூட்டிப் போய் தன் மகனை காப்பாற்ற போராடுகிறாள். அதே சமயம் தன் ஊரில் 33 குழந்தைகளுக்கள் ரத்த வாந்தி எடுத்து மயங்கிக் கிடப்பதாக தகவல் வர சுந்தரிக்கு தூக்கி வாரிப் போடுகிறது.

அவர்களுக்காக மருந்து கொண்டு போகிறாள் விஜயலட்சுமி. ஆனால், குழந்தைகளில் சிலர் இறந்து போகிறார்கள். மருந்து கம்பெனியில் வேலை செய்யும் பிரித்வி, சுந்தரிக்கு உதவ நினைத்து கொடுத்து விட்டதில் பாதி போலி மருந்துகள் என்று தெரிய வர ,அந்த பழி டிரைவர் சம்யுக்தன் மீது விழுகிறது. தூக்குக் கயிறில் இருந்து



சம்யுக்தன் உயிர் தப்பியதா?

இது போன்ற கேள்விகளை எழுப்பி வெவ்வேறு கதைகளை ஒன்றிணைத்து யூகிக்க முடியாத ட்விஸ்ட் மூலம் விறுவிறுப்பாக புதிருக்கான முடிச்சை அவிழ்க்கிறது மீதிக்கதை.

போலீஸ் அதிகாரியாக சந்தீப் கிஷன், அவரது மனைவியாக பிரியா பவானி சங்கர், எந்த எல்லைக்கும் துணியும் பண வேட்கைக் கொண்ட இளைஞனாக ஹரீஷ் கல்யாண், திடுக்கிட வைக்கும் சாந்தனு, வடிகட்டிய நல்லவனாக பிரேம்ஜி, அவரது தலையெழுத்தை மாற்றும் ரெஜினா கசான்ட்ரா, மெடிக்கல் கம்பெனி டிரைவராக வெங்கட்பிரபு, அவரது உயிரைக் காப்பாற்ற போராடும் மனைவியாக சிஜா ரோஸ், 33 குழந்தைகளின் உயிருக்காக போராடும் விஜயலட்சுமி, மனிதாபிமானத்துடன் உதவும் பிரித்வி, ஹரீஷின் பணக்கார நண்பனாக அரவிந்த் ஆகாஷ், கடவுளாக யூகி சேது, நம்பிக்கை துரோகம் செய்யும் சென்ட்ராயன் என டைட்டில் கார்டே தெறிக்கும் அளவுக்கு படத்தில் எக்கச்சக்க நடிகர் பட்டாளம். வெறுமனே ஸ்க்ரீனை நிறைக்க அல்லாமல், முக்கியத்துவம் வாய்ந்த கேரக்டர்களில் அனைவரும் சிறப்பான நடிப்பை கொடுத்துள்ளனர்.

யுவன், பிரேம்ஜி, ஷாம் சி.எஸ். சான் ரோல்டன், சந்தோஷ் நாராயணன், ஜிப்ரான் என 6 இசையமைப்பாளர்களின் பின்னணி இசையும்,

விஜய் மில்டன், பிரபு, பாலசுப்பிரமணியம், எஸ்.ஆர். கதிர், ஆர்.டி.ராஜசேகர், சக்தி சரணவன் உள்பட 6 ஒளிப்பதிவாளர்களின் காட்சிப் பதிவும், இயக்குநர் சிம்பு தேவனின்வித்தியாசமான முயற்சிக்கு வலுசேர்த்துள்ளது. ஆறு கிளைக் கதைகளை வைத்து அதை ஒன்றுகொன்று தொடர்புபடுத்தியது ப்ளஸ்.

திரைக்கதையில் உணர்வுப்பூர்வமாக காட்சிகளை அமைத்திருந்தாலும் லா ஜிக் ஓட்டையுடன் சிம்பு தேவனின் வழக்கமான ஹியூமரும் மிஸ் ஆவதால் அயற்சியை தருகிறது. வித்தியாச விரும்பிகளுக்கு கசட தபற.

## தமிழ் (ஈழத்) தலைவன் கதை-12

# இயங்க ஆரம்பித்த இயக்ககம்?



துரையப்பா கொலை தொடர்பாக தேடப்பட்ட பிரபாகரன் தலைமறைவு வாழ்க்கையில் சந்தித்தசவால்கள் கொஞ்ச நஞ்சமல்ல. ஆனாலும், ராகவன், ஐயர் உள்ளிட்ட புதிய தோழமைகளை சேத்துக்கொண்டு வீழ்ந்து விட்டாமல் இயக்கத்தின் வீரியத்தை காத்தார்.

அது ம ட்டுமல்ல, புதிய தமிழ்ப்புலிகள் அமைப்புடன் அந்த காலகட்டத்தில் பல்வேறு ஆயுதக்குழுக்கள் தொடர்பிலேயே இருந்தன.

குறிப்பாக,
குட்டிமணி
தங்கத்துரையின்
டெலோ
அமைப்புக்கு மிக
நெருக்கமான
உறவு இருந்தது.

ஆனாலும்,
இருபதும் நிரம்பாத
அந்த இளம்பிராயத்தில்
ஒழுக்கமும் கட்டுப்பாடும்
ஒருங்கே வாய்த்த பிரபாகரன்,
அதே கட்டமைப்பும்
சட்ட திட்டமும் கொண்ட
அமைப்பொன்றை கட்டிக்
காப்பதே தனது தலையாய
கடமையாக கருதினார்.

எனவே மன உளைச்சலுக்கு
மத்தியிலும் புதிய புலிகள்
அமைப்பை சிதைய
விட்டுவிடாமல் ஐவர்
கொண்ட மத்திய குழுவை
அமைத்தார். புத்தூர்
வங்கிப் பணத்தை வைத்து
புளியங்குளத்தில் பயிற்சி
முகாமை உருவாக்கினார்.
வவுனியா பூந்தோட்டத்தில்
ஒரு பண்ணையும் உருவானது.
அந்த பண்ணை நிலத்தை
வாங்கிக்கொடுத்தவர்
அப்போதைய காங்கேசன்
துறை பாராளுமன்ற உறுப்பினர்
திருநாவுக்கரசின் நண்பர்
கணேஷ் வாத்தியார்.

புதிதாக போராளிகளை



துரையப்பா

பண்ணையில் வேலை
வாங்கி, அவர்கள்
பக்குவப்பட்டதும் பயிற்சி
மையத்துக்கு அனுப்ப
வசதியாக இருந்தது.
அதுமட்டுமல்ல,
பார்ப்பவர்களுக்கு
பண்ணை வேலை
நடப்பதாகவே தெரியும்.
அதன் மறைவில் அமைப்பின்
பயிற்சி அற்புதமாக நடக்கும்.

பண்ணை வேலையோடு
இணைந்த பயிற்சி முகாமில்
சேர பத்துக்கு மேற்பட்டவர்கள்
ஒப்புக்கொண்டிருந்தனர்.
அவர்களை அழைத்துவர
ஐயரை வவுனியா ரயில்
நிலையத்துக்கு அனுப்பிய
நிலையில் ஞானம் என்பவர்
மட்டுமே அங்கு வந்தார்.
வருவதாக உறுதியளித்து
குடும்ப செலவுக்கு கொடுக்க
ஐயாயிரம் ரூபாய் பெற்றிருந்த
ஜெயவேல், ராஜ் உட்பட வேறு
ஒருவரும் வரவில்லை என்று
ஏமாற்றத்துடன்
சொல்கிறார் ஐயர்.

மிகுந்த ஏமாற்றத்துக்கு
ள்ளாகியிருந்த நிலையில்
எதிர்பாராத விருந்தாளியாக
நிர்மலன் வந்தார். ஆக,
ராகவன், குலம், ஐயர்,
நிர்மலன், ஞானம் ஆகியோர்
மட்டுமே பண்ணையில்
இருந்தனர். நாளடைவில்

பற்குணமும் வந்துசேர்ந்தார். பிரபாகரன் யாழ்ப்பாணத்தில் இருந்துகொண்டு அவ்வப்போது வந்துசென்றார்.

இந்த சூழலில் தான் உரும்பிராயைச் சேர்ந்த தமிரழசுக் கட்சி பிரமுகர் சந்திர சேகரம் மூலம் மட்டக்களப்பை சேர்ந்த மைக்கேல் என்பவர் இணைந்தார். மட்டக்களப்பில் அரசை எதிர்த்து போராட்டத்தில் ஈடுபட்டதால் அவரை காவல்துறையினர் தேடிவந்தனர். அதிலிருந்து தப்பிக்க மைக்கேலுக்கு புதிய புலிகளின் பண்ணை தோதாக அமைந்தது.

பண்ணைக்கு வந்தவரை நம்பிக்கை ஏற்பட்டதால் உடனடியாக புளியங்குளம் பயிற்சி முகாமில் அனுமதித்தனர். சில நாட்கள் அங்கு தங்கிய மைக்கேலை, சிங்கள அரசுக்கு விசுவாசமாக இருந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் ராஜன் செல்வநாயகத்தை கொலை செய்வதற்காக ஏற்பாடு செய்தனர்.

முதற்கட்டமாக அவரிடம் பணம் கொடுத்து ராஜன் செ ல்வநாயகத்தின் நடமாட்டத்தை உளவறிவது, அவரை தாக்குவதற்கு சரியான இடத்தை தேர்ந்தெடுப்பது போன்ற வேலைகளை செய்யச்சொல்லினர். ஆனால், பணம் பெற்றுச் சென்ற மைக்கேல் எவ்வித தொடர்பும் கொள்ளாமல் தலைமறைவானார்.

அதையடுத்து அவரை சேர்த்துவிட்ட தமிரழசுக் கட்சி பிரமுகர் சந்திர சேகரத்தை சந்தித்து விவரம் கேட்க, மைக்கேல் எங்கும் செல்லாமல் யாழ்ப்பணத்தில் தங்கிவிட்டது தெரியவந்தது. சொன்ன வேலையை செய்யாமல் சொந்த வேலையை செய்துகொண்டிருந்த மைக்கேலை முகாமுக்கு வந்து சந்திக்குமாறு பலமுறை அழைத்தும், வருவதாக கூறி தட்டிக்கழித்தார் .

கள்ள மாடு மந்தைக்கு வர தயங்குவது போல், இவர்கள் அழைப்பை தள்ளிப்போட்டுவந்த மைக்கேல் தொடர்ச்சியாக வற்புறுத்திய பின்பு ஒப்புக்கொண்டு புளியங்குளம் காட்டுக்கு வந்தார். பிரபாகரனும் குமரச் செல்வமும் மைக்கேலை தனியாக கூட்டிச்சென்று விசாரிக்கின்றனர். அவர் தகுந்த பதில் கூறாததோடு, காட்டி க்கொடுக்கவும் தயங்கமாட்டார் என்பது புலப்படவே,

**புதிய தமிழ் புலிகள் அமைப்பில் இருந்தாலும், குட்டிமணி, தங்கத்துரை குழுவுடன் பிரபாகரன் நல்ல தொடர்பில் இருந்தார். தங்கத்துரைக்கும் அவருடன் பின்னாளில் டெலோ (தமிழீழ விடுதலை இயக்கம்) இயக்கத்தில் இருந்த ராசப்பிள்ளைக்கும் புளியங்குளம் முகாமில் துப்பாக்கி சுடப்பழக்கியது பிரபாகரன் என்பதும் தகவலாக இருக்கிறது.**

**காசி அனந்தனின், 'அழகான அந்தப் பனைமரம், அடிக்கடி நினைவில் வரும்' என்ற பாடலை ஒலிக்கவிட்டு, அவர்களுக்கு துவக்கு பயிற்சி அளித்தார் பிரபாகரன் என்பார்கள்.**

**டெலோவும், விடுதலைப்புலிகள் இயக்கமும் தொடக்கத்தில் இரட்டைக் குழல் துப்பாக்கியாக இருந்தன.**

அவரை பிரபாகரன் சுட்டு வீழ்த்துகிறார். இது துரோகத்துக்கு புலிகள் இயக்கம் அளித்த முதல் பரிசாக இருந்தது.

புரட்சிகர இயக்கங்கள் வளரும்போது துரோகமும் கூடவே வளர்வது இயற்கை தான். தொடக்கத்தில் வீறு கொண்டு உடன்வருவோரும், எதிர்ப்படும் பல்வித இன்னல்களுக்கு பின்பு தலைமறைவாகிவிடுவது தவிர்க்க இயலாதது. அப்படித்தான் மைக்கேலை கொல்வதற்கு பிரபாகரனுடன் இருந்த குமரச் செல்வமும் இயக்கத்தின் நிதி இருபதாயிரம் ரூபாயுடன் முகாமிலிருந்து தப்பிவிட்டார்.

உடல்நலத்தை காரணம் காட்டி அவ்வப்போது அழைப்புகளை தவிர்த்தவர், கொண்டு சென்ற பணத்தை தான் முன்பு நடத்திய நாடக குழுவுக்கு முதலீடாக்கிவிட்டார்.

இந்நிலையில், புதிய தமிழ் புலிகளின் மத்திய குழு உறுப்பினர்கள் எண்ணிக்கை குறைந்துகொண்டே வந்தது. இயக்கத்தில் காதல், கல்யாணம் எதுவும் ஆகாது

**ஆப்கான்–தலிபான் தொடர்**
**அடுத்த வாரம் வெளிவரும்**



**குட்டிமணி – தங்கத்துரை**

என்ற நிலையில், தான் ஒரு பெண்ணை காதலிப்பதால் ஒதுங்கிக்கொள்ளப் போகிறேன் என்று கூறி உதயகுமார் தப்பிவிட்டார். பட்டு உடல்நலம் குன்றியதால் தொடர்பு துண்டிக்கப்படுகிறது.

ஆக, இயக்க உறுப்பினர் எண்ணிக்கை குறைந்து, இருந்த உறுப்பினர்களும் உறுதி குலைந்து வந்தனர். என்ன செய்வதென்று சிந்தித்துக்கொண்டிருந்த வேளையில்தான் சில இளைஞர்கள் உரும்பிராய் பெட்ரோல் பங்க் உரிமையாளர் நடராஜாவை கொலை செய்தனர். அந்த இளைஞர்களான பாலா, தங்கா , பேபி சுப்பிரமணியம் ஆகியோர் காவல்துறையால் தேடப்பட்ட நிலையில், புதிய புலிகளின் பண்ணை மற்றும் பயிற்சி நிலையத்தை அறிந்து அங்கு வந்தனர். அத்துடன் லண்டனிலிருந்து வந்த விஸ்வேஸ்வரனும் சேர்ந்துகொள்கிறார்.

அதுமட்டுமல்ல, அந்த காலகட்டத்தில் தான் துரையப்பா கொலையில் உதவிசெய்த நாகராஜா சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டார். அவர் கொழும்பில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தில் வேலை பார்த்துக் கொண்டே புதிய புலிகள் இயக்க தொடர்பில் இருந்தார்.

பூந்தோட்டம் பண்ணைக்கு நிலம் வாங்க உதவிய கணேஷ் வாத்தியாரும் பகுதி நேர இயக்கவாதியாகிறார்.

ஆக, மீண்டும் புதிய தமிழ் புலிகள் இயக்கம் துளிர்த்து வளர்ந்தது.

பிரபாகரன்,பேபி சுப்பிரமணியம், நாகராஜா, கணேஷ் வாத்தி, தங்கா, விச்சு, ஐயர், குலம், இந்தியாவிலிருந்து திரும்பி வந்த பற்குணம் ஆகியோர் அடங்கிய புதிய மத்திய குழு ஒன்று தேர்வானது.

**(தொடரும்)**

**-வரிப்பையூரான்**



# குருதி

## (மலையாளம்)

**கே**ரளாவைச் சேர்ந்த மலைக் கிராமம் ஒன்றில் கதை தொடங்குகிறது. நிலச்சரிவு ஏற்பட்டு பாலம் உடைந்த விபத்தில் தன்னுடைய மனைவி, மகளை இழந்த இம்ராகிம், தனது தம்பி ரசூல் மற்றும் முதிய வயதில் மூத்திரப் பையுடன் தடுமாறும் தந்தை மூசாவுடன் வசிக்கிறான்.

அவர்கள் பக்கத்து வீட்டில் வசிக்கும் பிரேமன் அதே நிலச்சரிவு விபத்தில் தனது மனைவியை பறிகொடுத்தவன். அவனது தங்கை சுமதி. இம்ராகிம் குடும்பத்திற்கு உணவு சமைத்துத் தருவது முதல் அந்த குடும்பத்தில் ஒருவளைப் போலவே நடந்து கொள்வாள்.

சுமதிக்கு இப்ராகிம் மீது காதலுண்டு. தன் குடும்பத்தை இழந்த வேதனையில் தவிக்கும் இப்ராகிம் பட்டும் படாமல் சுமதியிடம் பழகுகிறான்.

முஸ்லிம் மதத்தைச் சேர்ந்த தான் இந்து மதத்தைச் சேர்ந்த சுமதியை எப்படி திருமணம் செய்து கொள்வதுஎன்பதே இப்ராகிம் தயக்கத்திற்கு காரணம். எனினும், இயற்கைப் பேரழிவால் இழப்புகளை சந்தித்த இரு குடும்பமும் ஒருவருக்கொருவர் இணக்கமாக வாழ்ந்து வருகிறார்கள்.

அந்த ஊரில் மதவெறி காரணமாக ஒரு முஸ்லீம் பெரியவரை விஷ்ணு என்ற இந்து மத இளைஞன் வெட்டிக் கொலை செய்து விட்டு தப்பியோடி விட்டான் என்ற செய்தியால் பரபரப்பாகிறது. அன்றிரவு இப்ராகிம் வீட்டின் கதவு தட்டப்படுகிறது. கையில் விலங்கிடப்பட்ட ஒருவன் வீட்டுக்குள் வந்து விழ, அவனைத் தொடர்ந்து போலீஸ் அதிகாரி சத்யன் உள்ளே நுழைந்து கதவை சாத்திக் கொள்கிறார்.

உடனடியாக வீட்டில் இருப்பவர்களின் செல்போன்களை பறிமுதல் செய்து விட்டு வீட்டை முழுமையாக சோதனை போடுகிறார். வீட்டின் ஒரு மூலையில் துப்பாக்கி இருப்பதைப் பார்த்து, ''இதுக்கு லைசென்ஸ் இருக்கா'' என்ற கேட்க, ''அது ஒரு காலத்துக்கு காட்டுல ஜீப் டிரைவரா நான் வேலை செஞ்சப்போ பயன்படுத்தினது'' என்று விளக்கம் கொடுக்கிறார் மூசா.

கொலை கேஸில் கைதான விஷ்ணுவை போலீஸ் ஜீப்பில் கொண்டு போகும் வழியில் ஒரு முஸ்லிம் கும்பல், வாகனத்தை வழிமறித்து விஷ்ணுவை கொலை செய்ய ஸ்கெட்ச்



போட்டிருக்கிறது. அதில் சில போலீஸ்காரர்கள் சிக்கிக் கொள்ள, எஸ்.ஐ. சத்யன் போராடி தன் உயிரை பணயம் வைத்து கைதியுடன் தப்பி வந்திருக்கிறார்.

தான் இருக்குமிடத்தை போலீசுக்கு தெரியப்படுத்திய போதும், வெள்ளம் சூழ்ந்த பகுதியைத் தாண்டி அவர்கள் விடியற்காலை தான் வந்து சேர முடியும். அதுவரை தன்னை தாக்கிய கும்பலிடம் இருந்து தன் உயிரைக் காப்பாற்றிக் கொண்டு கைதியை ஸ்டேஷனில் ஒப்படைக்க வேண்டும் என்ற நிலையில் இப்ராகிம் வீட்டுக்குள் புகுந்திருக்கிறார் சத்யன்.

அந்த சமயம் பார்த்து பக்கத்து வீட்டு சுமதி, இம்ராகிம் குடும்பத்தினருக்கு இரவு உணவு எடுத்துக் கொண்டு வந்து கதவைத் தட்டுகிறாள். இப்போது அவளும் அந்த வீட்டை விட்டு வெளியேற முடியாத நிலை ஏற்படுகிறது.

இந்த நேரத்தில் மீண்டும் இப்ராகிம் வீட்டு கதவு தட்டப்படுகிறது. வெளியே கம்மு நிற்கிறான்.கம்மு இளம் பிராயத்தில் உள்ள சிறுவர்களை மூளைச் சலவை செய்து தவறான பாதைக்கு கூட்டிப் போகிறவன். அப்படி போனவர்களில் ரசூலும் ஒருவன்.

பேச்சுக் கொடுத்தபடியே உள்ளே வரும் கம்மு, வீட்டுக்குள் நோட்டம் விடுகிறான். இப்போது சத்யன், விஷ்ணு, சுமதி மூவரும் வீட்டின் அறைகளில் ஒளிந்திருக்கிறார்கள்.

''அது யாரோட பைக், யார் கூட நீ வந்திருக்க'' என்ற இப்ராகிம் கம்முவிடம் கேட்கும் போது தான் இருளில் இருந்து வெளிப்பட்டு உள்ளே வருகிறான் லயிக் (பிரித்திவிராஜ்). தன் அப்பாவை கொலை செய்த விஷ்ணுவை தேடிப் பிடித்து வெட்டிக் கொலை செய்ய கங்கனம் கட்டி அலையும் அவன், விடாமல் துரத்தி இப்போது இப்ராகிம் வீட்டில் வந்து நிற்கிறான்.

தன்னைத் துரத்தியது லயிக் தான் என்று தெரிந்து துப்பாக்கியுடன் வெளிப்படும் சத்யன், ''என் கூட வந்த மத்த போலீஸ்காரங்களை என்ன பண்ண'' என்று கேட்கிறார். ''என்னை தப்பா புரிஞ்சிட்டீங்க, தனிப்பட்ட முறையில் எனக்கு யார் மேலயும் வருத்தம் இல்ல, இது தனிப்பட்ட பகை இல்ல, ஒரு சமுதாயத்தோட கோபம்'' என்கிறான் லயிக்.

லயிக்கின் அடியாள் சலனமில்லாமல் உள்ளே வந்து பார்வையால் மிரட்ட, சற்றும் எதிர்பாராத அந்த தருணத்தில் சத்யனின் கழுத்தில் லயிக் வீசிய கத்தி பாய்கிறது. அடுத்து விஷ்ணுவைக் கொல்ல அவன் கத்தியுடன் உள்ளே நுழைய மூசாவின் துப்பாக்கியை எடுத்து

**ஜேக்ஸ் பெஜாயின் மிரட்டலான பின்னணி இசையும், இருளில் டிராவல் ஆகும் கதையில் அபிநந்தன் ராமானுஜத்தின் ஒளிப்பதிவும் அட்டகாசம்.**

**கொஞ்சம் பிசகியிருந்தாலும் படத்தை வைத்தே மத பிரச்சனை கிளம்ப வாய்ப்பிருந்தும், அதற்கு இடம் கொடுக்காமல் கச்சிதமான படைப்பாக கொடுத்திருக்கிறார் இயக்குனர் மனு வாரியர்.**

**அனிஷ் எழுதிய திரைக்கதை கதையோட்டத்திற்கு வலு சேர்த்திருக்கிறது.**

அரணாக நிற்கிறாள் சுமதி.

அதற்குள் சத்யனின் ரிவால்வர் இப்ராகிம் கைக்கு வர, கதை மாறுகிறது. முதல்ல இந்த வீட்டை விட்டு வெளியே போ என்ற உரக்கக் கத்துகிறான். வேறு வழியின்றி லயிக் வீட்டிலிருந்து பின்வாங்குகிறான்.

**தா**ழிடப்பட்ட வீட்டுக்குள் ரத்த வெள்ளத்தில் விழுந்து கிடக்கும் சத்யன், இப்ராகிமைக் கூப்பிட்டு, குரானை எடுத்து வரச் சொல்லி, ''இந்த பையனை போலீஸ்'ல ஒப்படைப்பேன்னு சத்தியம் பண்ணு'' என்கிறார்.

உயிர் போகும் நிலையில் ஒருவரின் கடைசி ஆசையை மறுக்கக் கூடாது என்ற தன் மதத்தின் கோட்பாட்டை அப்பா மூசா நினைவூட்ட, அவனும் சத்தியம் செய்கிறான். மதத்தின் பெயரால் ஒருவன் கொலை செய்ய அலைகிறான். அதே மதத்தின் பெயரால் ஒருவன் உயிரைக் காக்க வாக்கு கொடுக்கிறான்.

திடீரென வீட்டின் மின்சாரம் அணைகிறது. விளக்கின் ஒளி வருவதற்குள் விஷ்ணுவைக் கொலை செய்ய வீட்டுக்குள் இருக்கும் இப்ராகிமின் தம்பியே முயற்சிக்கிறான். அதிலிருந்து அவனை காப்பாற்றி ரசூலை சமாதானம் செய்வதற்குள், வெளியே இருந்து கம்மு



அலறுகிறான். ''நம்ம கூட்டத்துல ஒருத்தரை கொலை பண்ணவனுக்கு நீ அடைக்கலம் கொடுக்குறியா'' எனக் கேட்க, ''நம்ம கூட்டம்'னா அப்புறம் நான் யாரு?'' என் கூட்டத்துல ஒருத்தனைத் தானே நீங்க கொல்லப் பாக்குறீங்க என்கிறாள் சுமதி.

இப்ராகிமிடம் மத ரீதியான வாசகங்கள் பேசி அவன் மனதை மாற்ற நினைக்கிறான் லயிக்.

ஆனால், ''கோவிலை இழிவுபடுத்தினதால கோவப்பட்டு தான் இந்த பையன் தவறி கொலை செஞ்சிட்டான், இதுவே மசூதியில் நடந்திருந்தா ரசூல் என்ன பண்ணியிருப்பான். செத்துப் போன போலீஸ்காரருக்கு நீ கொடுத்த வாக்கு ஞாபகம் இருக்கட்டும்'' என்கிறாள் சுமதி.

''நான் பண்றது தப்புன்னா அந்த கடவுளே என்னை தண்டிக்கட்டும், இவனை உன்கிட்ட ஒப்படைக்க

மாட்டேன்'' என்று லயிக்கிடம் சொல்கிறான் இப்ராகிம். ''படைச்சவன் சார்பா தான் நான் இங்க வந்திருக்கேன், என் வழியில் யாராச்சும் வந்தா வெட்டி வீசிட்டு போயிட்டே இருப்பேன்'' என்று லயிக் மிரட்டிப் பார்க்கிறான்.

லயிக்கின் அடியாள் வீட்டின் ஓட்டைப் பிரித்து உள்ளே இறங்க முற்பட , அவன் மீது ஆசிட் வீசி துரத்தியடிக்கிறான் இப்ராகிம். ஆனால் பதிலுக்கு இப்ராகிமின் கையை குத்திக் கிழிக்கிறான் லயிக். அவனைக் கொல்ல போன சமயத்தில் துப்பாக்கி முனையில் சுமதி இப்ராகிமை காப்பாற்றுகிறாள். ஆனால் கொல்ல வாய்ப்பு கிடைத்தும் ஏனோ லயிக்கைத் தப்ப விடுகிறாள்.

இந்நேரத்தில் சுமதியைத் தேடி வந்த அவளது அண்ணன், லயிக் கோஷ்டியிடம் சிக்கி தப்புகிறான். இம்ராகிம் வீட்டுக்கு அவன் வந்து சேர்ந்த பிறகே அவனை பாம்பு கடித்திருப்பது தெரிய வருகிறது.

''என் அண்ணனை ஹாஸ்பிடலுக்கு கூட்டிப் போய் காப்பாத்து'' என்று இப்ராகிமிடம் கேட்கிறாள் சுமதி.

ஆனால் அவன் இப்ப இடத்தை விட்டு நகர்ந்தால் விஷ்ணு லயிக்கால் கொல்லப்படுவான். ரசூல் சுமதிக்கு உதவத் தயாராக இல்லை. அப்போது தான் சுமதியின் மற்றொரு முகம் வெளிப்படுகிறது.

விஷ்ணு போலீசில் மாட்டும் முன்பு அவனுக்கு 3 நாட்கள் அடைக்கலம் கொடுத்து உணவு கொடுத்தது சுமதி தான். அதை மறைத்து அவனை தெரியாதது போல் நடித்திருக்கிறாள். இப்போது தன் அண்ணனை காப்பாற்ற இப்ராகிமை அனுப்பி விட்டு விஷ்ணுவை தப்ப வைக்கப் பார்க்கிறாள்.

''உங்க ஆளுங்களுக்காக நீங்க கொலை செய்ய வரலாம், என் ஆளுங்களை காப்பாத்த நான் உதவி செய்யக் கூடாதா'' என அவள் ஆவேசமாய் சொன்னதில் மதவெறி கொஞ்சம் எட்டிப் பார்க்கவே செய்கிறது.

வீட்டின் கதவை உடைத்துக் கொண்டு உள்ளே வந்த கம்முவை சுமதி சுட்டு விட்டு, இப்ராகிமிடம் ''இப்ப நான் உன்னை விரும்பியிருக்கலாம், ஆனா மதம், விசுவாசம் எல்லாம் எங்களுக்கும் இருக்கு'' என்று சொல்லி துப்பாக்கி முனையில் எல்லோரையும் மிரட்டி, தன் அண்ணன் மற்றும் விஷ்ணுவுடன் அங்கிருந்து வெளியேறுகிறாள் சுமதி.

பைக்கில் தப்பிச்

**கொலை வெறியை கண்ணில் தேக்கி வைத்து பழி வாங்கக் காத்திருக்கும் ஒரு மிருகத்தின் சாயலை ஒத்த கேரக்டரில் பிரித்திவிராஜ் அதகளம் செய்திருக்கிறார்.**

**இழப்பின் பிடியில் இருந்து மீள அன்பின் துணை தேடும் இப்ராகிம் கேரக்டரில், மதத்தின் வலையில் சிக்கிக் கொண்டு தடுமாறுவதை ரோஷன் மேத்யூ உணர்ந்து நடித்திருக்கிறார்.**

**மூத்திரப் பையுடன் சாய்வு நாற்காலியில் அமரும் மூசா காதருக்கும் மூளையில் மதம் செத்துப் போவதில்லை என்பதை மமுகோயாவின் நடிப்பு புரிய வைக்கிறது.**

**சுமதியாக வரும் ஸ்ரிந்தா, எஸ்.ஐ. சத்யனாக முரளி கோபி, கம்முவாக ஷைன் டாம் சாக்கோ, ரசூலாக நஸ்லேன், விஷ்ணுவாக சாகர் சூர்யா உள்பட படத்தில் நடித்த அனைவரும் போட்டி போட்டு நடித்துள்ளனர்.**

சென்ற அவர்களை துரத்திப் பிடிக்க இந்த முறை மூசாவே டிரைவராக வந்து அமர்ந்து குறுக்குப் பாதை வழி கூட்டிச் செல்கிறார். காட்டில் நடக்கும் சேஸிங்கில் யார் உயிர் யார் கையால் போகும் என்ற நிலையில் ஒரு கட்டத்தில் இப்ராகிம் வசம் விஷ்ணு இருக்க, சுமதியின் கழுத்தில் கத்தி வைத்தபடி நிற்கிறான் ரசூல். லயிக்கின் மத போதனையில் அவனும் விழுந்து விட்டான்.

சுமதியின் அண்ணனால் அந்த காட்சியில் திருப்பம் நேர, தப்பியோடிய விஷ்ணுவை கொல்ல முயன்ற லயிக், இப்ராகிமால் கொல்லப்படுகிறான். ஆனால் அந்த தொங்கும் பாலத்தில் விஷ்ணுவும், ரசூலும் இரு முனையில் எதிரெதிரே இருக்க யார் கொல்லப்படுவார் என்பது விதியின் முடிவு. இனி சுமதியும், இப்ராகிமும் பழையபடி சகஜமாக பழக முடியுமா என்பதும் சந்தேகம் தான்.

மதவெறி, அடுத்தடுத்த நிமிடங்களில் ஒரு மனிதனின் குணத்தை எப்படியெல்லாம் மாற்றி ஆட்டுவிக்கிறது என்ற கோட்பாட்டை பேசி படம் முடிகிறது.

ரத்த வாடை கொஞ்சம் அதிகம் என்றாலும் கதை சொல்லும் உண்மைக்காக நிச்சயம் பார்க்க வேண்டிய படைப்பு ஓ.டி.டி.யில் வெளியாகி இருக்கும் இந்த குருதி.

**-தவா**




# வெற்றி - தோல்வி சகஜம்

அடுத்தவர் வாழ்வில் நடந்த சம்பவங்களை அனுபவமாக ஏற்று, நம்மை சிறந்த முறையில் வழி நடத்திச் செல்வது ஆரோக்கியமான வாழ்வுக்கு வழிகாட்டியாக அமையும். கூடுதலாக நற்பெயரையும், புகழையும் கொண்டு வந்து சேர்க்கும்.

இதற்கு உதாரணமாக சமீபத்தில் நடந்து முடிந்த ஒலிம்பிக்கிலிருந்து இரு வித்தியாசமான உதாரணங்களை நாம் அறியலாம்.

முதலில் பிரபல கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் வீரர் நோவிக் டிஜோவிக் கின் நடத்தை பற்றி பார்ப்போம்!

உலகின் முதல்நிலை ஆட்டக்காரராக இவர் உயர்ந்திருந்தாலும், ஒலிம்பிக்கில் ஆடவர் டென்னிஸில் ஜெர்மனியின் அலெக்சாண்டர் சுவரோவ்விடம் தோற்றுப் போனார். உடனே அவருக்கு வந்த கோபத்தில் தன்னுடைய டென்னிஸ் மட்டையை ஓங்கி தரையில் அடித்ததுடன் அடுத்து அதனை பார்வையாளர் கேலரி நோக்கி வீசினார்.

அடுத்து அவருக்கு கலப்பு இரட்டையர் போட்டி இருந்தது. அவருடன் விளையாட ரெடியாக பெண் வீராங்கனையும் தயாராக இருந்தார்! ஆனால் நோவிக் டிஜோவிக் அந்த போட்டியில் விளையாடமாட்டேன் எனக் கூறி சென்று விட்டார். இதனால் பாவம்... காத்திருந்த வீராங்கனை ஒலிம்பிக் பதக்க வாய்ப்பை இழக்க வேண்டியதாயிற்று.



நோவிக் டிஜோ விக் இப்படி

செயல்படுவது முதல் தடவையல்ல. ஏற்கனவே பல போட்டிகளில் இது போன்று, தன்னுடைய மோசமான குணாதிசயத்தை வெளிப்படுத்தி, அவருக்கும் போட்டியை நடத்துபவர்களுக்கும் தர்ம சங்கடத்தை ஏற்படுத்தியுள்ளார்.



முதல் நிலை வீரர், தான் ஒரு முன்னுதாரணமாக செயல்படாமல் இப்படி நடந்து கொள்ளலாமா? என்று கூட அவர் யோசிப்பதில்லை. காரணம் கோபம். அவருக்கு அதனை கட்டுப்படுத்த தெரியவில்லை.

இனி இரண்டாவது உதாரணத்துக்கு போவோம். ஒலிம்பிக்கில் ஆண்கள் உயரம் தாண்டுதல் போட்டியில் இறுதிப் போட்டி. இத்தாலியின் இயான் மார்கோ தாம்பரி மற்றும் கத்தாரின் முதாஸ் இசாபார்சிம் இடையே கடும்போட்டி.

இருவருமே இறுதியாக 2.39 மீட்டர் தாண்டி, முதல் இடத்தில் இருந்தனர். நடுவர் மேலும் ஒரு வாய்ப்பு தர முன் வந்தார்.



அப்போது இத்தாலியின் இயான் மார்கோ தாம்பரி, நடுவரிடம், சென்று 'தங்கத்தை இருவரும் பகிர்ந்து கொள்ள இயலுமா?' எனக் கேட்டார்.


இதற்கு ஒரு காரணம் உண்டு. கத்தாரின் முதாஸ் இசாபார்சிம் முந்தைய தாண்டுதல்களின் போது காயப்பட்டிருந்தார். இனி அவரால் முழுமையான முயற்சியில் ஈடுபட இயலுமா என சந்தேகம்!

இதனை உணர்ந்த இத்தாலி வீரர் பெருந்தன்மையுடன், தங்கப்பதக்கத்தை கத்தார் வீரருடன் பகிர்ந்து கொள்ள முன் வந்தார். அவருடைய பெருந்தன்மை அனைவராலும் பாராட்டப்பட்டது.

ஆக கோபம் இல்லாமல் வெற்றி தோல்விகளை ஏற்று, அதே சமயம், தேவைப்படும் இடத்தில் பெருந்தன்மையை வெளிப்படுத்துவதின் மூலம் நாம் பாராட்டையும், புகழையும் பெற இயலும் என்பதை புரிந்து கொள்வோம்.

தொகுப்பு: ராஜிராதா

# ஆப்கனுக்கு டாட்டா காட்டிய பிரபலம்




இந்தி பிக்பாஸ் தொடரில் கலந்து கொண்டு பிரபலமானவர் நடிகை அர்ஷி கான். இவருக்கும் ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் வீரருக்கும் வரும் அக்டோபர் மாதம் திருமணம் நிச்சயதார்த்தம் செய்ய பெற்றோர்கள் பிளான் செய்திருந்தனர்.

ஆனால் ஆப்கனில் நிலைமை தலைகீழாக மாறி தலிபான்கள் ஆட்சியை பிடித்து விட்டனர்.

இந்த சூழ்நிலையில் ஆப்கன் சிட்டிசனுடன் கல்யாணமா? என்று அச்சப்பட்ட பிரபலம், யோசிக்காமல் கல்யாணத்தை நிறுத்தி விட்டார். இதைப் பற்றி கேட்டால், அடுத்தடுத்து பல டி.வி. ஷோ'வில் பிஸியாக இருப்பதால் கல்யாணத்தை கேன்சல் செய்து விட்டதாக காதில் பூ சுற்றியிருக்கிறார்.

# ஆலியா பட் படத்துக்கு சிக்கல்



**பா**லிவுட் சினிமா நட்த்திரங்களின் விருப்பமான இயக்குனராக இருப்பவர் சஞ்சய் லீலா பன்சாலி. இவர் இயக்கியுள்ள 'கங்குபாய் கதியாவாதி' என்ற படத்தில் நடிகை ஆலியா பட் நடித்துள்ளார்.

அண்மையில் இந்த படத்தில் டீசர் வெளியாகி நல்ல வரவேற்பைப் பெற்றது. படத்தின் அனைத்துக் கட்ட பணிகள் முடிந்த நிலையில் விரைவில் ஓ.டி.டி.யில் வெளியாக உள்ளதாக கூறப்பட்டது.

ஆனால், மாபியா குயின்ஸ் ஆப் மும்பை என்ற நாவலை தழுவி எடுக்கப்பட்ட இந்தபடத்தில் தன்னுடைய அம்மாவை தவறாக சித்தரிக்கும் காட்சிகள் இருப்பதாக சம்மந்தப்பட்ட நபர் கோர்ட்டில் கேஸ் போட்டிருக்கிறார். இந்த வழக்கில் ஆலியா பட், பன்சாலி உள்ளிட்ட சிலருக்கு அவமதிப்பு வழக்கின் கீழ் நோட்டீஸ் அனுப்பியுள்ள நிலையில் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க மேல் கோர்ட்டு இடைக்கால தடை போட்டிருக்கிறது.

# பறிபோகும் சிறு கடைகள்... உஷார்!



உலகமயமாக்கலில் உள்ளூர் மயமாக்கல் அடிபட்டுப்போகும் என்பது பொருளாதார அடிப்படை உண்மை. உலக வர்த்தக ஒப்பந்தத்தின் விளைவாக நமது மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் என்பதற்கு நிகழ்கால எடுத்துக்காட்டாக தொழிற்துறையில் நுழைந்த பன்னாட்டு நிறுவனங்களை சொல்லலாம். தொழிற்துறையை கெடுத்தது போதாதென்று வர்த்தகத்திலும் புகுந்து விளையாடியது.



ஆனால், இதுவரை மொத்த விற்பனை நிலையங்கள்தாம் அவற்றின் ஆக்கிரமிப்பாக இருந்தது. இப்போது சிறு வணிகத்தையும் தூக்கி சாப்பிடப்போகிறது.

ஓராண்டுக்கு முன்பு கொரோனாவின் தொடக்க காலகட்டத்தில் சுரக்ஷா திட்டத்தின் கீழ் பெருநிறுவனங்களை சிறு வர்த்தகத்துக்குள் கொண்டுவர அரசு வழியமைத்து கொடுத்தது. அதன் அடிப்படையில் தற்போது நாட்டின் முன்னணி இ-காமர்ஸ் தளமான ஃபிளிப்கார்ட் நிறுவனம் கிரானா ஸ்டோர்களுக்கு உதவுவது போல் ஒரு திட்டத்தினை அறிவித்துள்ளது.

கிரானா ஸ்டோர்கள் என்பவை இந்தியாவின் ஒவ்வொரு நகரங்களிலும் இருக்கும் தெருவோர சில்லறை பெட்டிக் கடைகள். இந்த சிறிய கடைகள் பலவிதமான மளிகைப் பொருட்கள் மற்றும் சுகாதாரப் பொருட்கள், தின்பண்டங்கள் விற்பனைக்கு இருக்கும்.

வாடிக்கையாளர்கள் விரைவாக பொருட்களைப் பெறுவதற்காக (?) இந்த கடைகளுடன் இணைந்து தான் ஃபிளிப்கார்ட் நிறுவனம் தங்களின் சேவைகளை வழங்கத் தொடங்கியுள்ளது. இதற்காக கிரானா கடை உரிமையாளர்களுக்கு தகுந்த பயிற்சி அளித்து (?) தங்கள் நிறுவனத்துடன் பார்ட்னர்களாக இணைத்துக்கொள்கிறது.

அதாவது, தங்கள் நிறுவன முகவர்களாக சிறு கடைகளை பயன்படுத்துகிறது. டாக்சி ஓட்டுநர்களை கையில் எடுத்து ஓலா போன்ற நிறுவனங்கள் வளர்ந்த கதையின் புத்தம் புதிய காப்பி இது.

பயிற்சி, முயற்சி என்றெல்லாம் பேசினால் நமது வணிகர்களுக்கு எடுபடாது என்பதால் அவர்களுக்குரிய மொழியில் ஒரு விளம்பரம் செய்துள்ளது. அதாவது, கிரானா ஸ்டோர்கள் மற்றும் சில்லறை விற்பனையாளர்களுக்கு உதவும் வகையில் கடன் வழங்குவதற்கான புதிய கடன் திட்டத்தினை ஃபிளிப்கார்ட்

நிறுவனம் அறிவித்துள்ளது. இதற்காக பிளிப்கார்ட் நிறுவனம் ஐடிஎஃப்சி ஃபர்ஸ்ட் பேங்குடன் இணைந்துள்ளது. ஃபிளிப்கார்டின் இந்த கடன் திட்டத்தின் மூலம் 5,000 ரூபாய் முதல் 2 லட்சம் ரூபாய் வரையில் கடன் பெற்றுக் கொள்ளலாம். அதுவும் 14 நாட்கள் வரை வட்டி இல்லாத காலத்துடன் கடன் வழங்கப்படவுள்ளது.

இதுகுறித்து ஃபிளிப்கார்ட்டின் மொத்த விற்பனை தலைவர் ஆதர்ஷ் மேனன், 'ஃபிளிப்கார்ட் மொத்த விற்பனையில்

**நம் மளிகை கடைக்காரர்கள் ஆச்சி மசாலா, சக்தி மசாலா, லயன் பேரீச்சம்பழம் போன்ற நம்மை சார்ந்தவர்களிடமிருந்து பொருட்களை வாங்கி, விற்றுவருகின்றனர். வட இந்தியர்கள் மளிகை கடைகளை கைப்பற்றிய பின்பு வட மாநில நிறுவனக்களின் பொருட்களே கடை ரேக்குகளை ஆக்கிரமிக்கத் தொடங்கும். சில்லறை வர்த்தகத்தோடு, சிறு தொழில்களையும் நம்மவர்கள் இழக்கும் சூழல் உருவாகும்.**




எங்களது முக்கியக் குறிக்கோள் கிரானா மற்றும் சில்லறை விற்பனையாளர்களுக்கு வணிகத்தை எளிதாக்குவதும், அவர்களின் வளர்ச்சியினை ஊக்கப்படுத்துவதும் தான்' என்று அதற்கு புனித நோக்கம் கற்பிக்கிறார்.

ஆனால், அடுத்த அடியிலேயே அவர் சறுக்கி விடுகிறார். 'இது சிறு விற்பனையாளர்களின் பணப்புழக்கத்தை அதிகரிக்கும். எங்கள் தளத்தில் வாங்கும் அனுபவத்தை மேம்படுத்தவும் இது உதவும்' என்கிறார்.

அதாவது, அவர்களின் வணிக தளத்தில் பொருட்கள் விற்பனையை சில்லறை கடைகள் மூலம் அதிகரிக்க திட்டமிடுகிறார்கள்.

அமெரிக்காவின் மிகப்பெரிய சில்லறை நிறுவனமான வால்மார்ட் நிறுவனம் கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்பு ஃபிளிப்கார்ட்டின் பெரும்பான்மையான பங்கினை வாங்கியது. இந்த நிலையில் தற்போது ஃபிளிப்கார்ட் நாடு

முழுவதும் பதிவு செய்யப்பட்ட 350 மில்லியனும் அதிகமான பயனர்களை கொண்டுள்ளது. அதில் லட்சத்திற்கும் அதிகமான விற்பனையாளர்கள் இருக்கிறார்கள். தவிர , சந்தையில் 3 லட்சத்திற்கும் அதிகமான விற்பனையாளார்கள் ஃபிளிப்கார்டில் இணைந்துள்ளனர் என்று ஃபிளிப்கார்டின் தரவுகள் கூறுகின்றன.


**இ**வ்வாறு பன்னாட்டு நிறுவனங்கள் சிறு வணிகத்தில் நுழைவதற்கு வசதியாக 1991 முதல் தாராளமயம், தனியார்மயம், உலகமயம் என்கிற புதிய பொருளாதாரக் கொள்கையை ஏற்று இந்திய ஒன்றிய அரசு செயல்படுத்தி வருகிறது. இதன் ஒரு கட்டமாக அந்நிய முதலீட்டை வணிகத்தில் அனுமதிக்கிறது.

பன்னாட்டு நிறுவனங்கள் மட்டுமின்றி இந்தியாவின் பெரு முதலாளிய நிறுவனங்களான டாடா, பிர்லா, ரிலையன்ஸ் ஆகியவையும் சில்லறை வணிகத்தில் இறங்கி சிறு வியாபரிகளை கலங்கடித்து வருகின்றன.

இது தவிர, உணவுகளை டோர் டெலிவரி செய்த ஸ்விக்கி இப்போது புதிதாக மளிகை பொருட்களை விநியோகிக்கப் போகிறதாம். உணவுப் பொருட்களையாவது வாடிக்கையாளர்கள் ஆர்டர் செய்யும் ஓட்டல்களில் வாங்கி கொடுத்துவந்தது. இதனால் ஓட்டல்களுக்கு பிரச்சினையில்லை, வளர்ச்சித்தான்.

ஆனால், மளிகை, காய்கறி பொருட்களை இந்தெந்த கடை களில் தான் வாங்க வேண்டும் என்ற கட்டுப்பாடுகள் இல்லையே... இதனால் ஸ்விக்கி நிறுவனம் மேற்படி பொருட்களை மொத்தமாக வாங்கி இருப்பு வைத்து விநியோகித்து மளிகை, காய்கறி வியாபாரத்தில் தங்கள் ஆதிக்கத்தை நிலை நாட்ட வாய்ப்புள்ளது. இதனால் பாதிக்கப்படுவது சிறு வியாபாரிகள் தான்.

**அ**தே போல் முகேஷ் அம்பானி தலைமையிலான ஜியோ நிறுவனம், மளிகை கடை, காய்கறி மற்றும் பழக்கடை வணிகர்களை



**மொத்த வணிகத்தில் மட்டும் அந்நிய நிறுவனங்கள் முதலீடு செய்யவேண்டும் என்று விதிமுறை இருந்தாலும், அமெரிக்காவின் வால்மார்ட் உள்ளிட்ட நிறுவனங்கள் ரூ. 500, 1000க்கு அடையாள அட்டை கொடுத்துத் தனியாட்களுக்கும் பொருட்களை விற்பனை செய்கின்றன.**

**1997ல் மொத்த விற்பனைக்கு மட்டுமே அனுமதிக்கப்பட்ட நிலையில், 2006 ஏப்ரல் முதல், 51% அந்நிய நேரடி முதலீட்டைக் கொண்டுள்ள நிறுவனங்கள் ஒற்றை வணிக முத்திரை கொண்ட பொருள்களை சில்லறை வணிகத்தில் விற்றுக் கொள்ள அனுமதிக்கப்பட்டன. இதை சாதகமாக்கிக்கொண்டு பெரு நிறுவனங்கள் எல்லாப் பொருட்களையும் தங்கள் நிறுவனப் பொருட்களாக காட்டி விற்கத் தொடங்கி உள்ளன.**

**இப்போது சில்லாறை விற்பனை கடைகளை முகவர்களாக்கி மறைமுகமாக 100% சில்லறை வியாபாரத்தையும் பிடிக்கத் தொடங்கிவிட்டன.**

இலக்காக வைத்து கிரானா ஸ்டோர் என்ற தளத்தை அறிமுகம் செய்ய உள்ளது.

இதனை 'ஹைப்ரிட் ஆன்லைன்-டு-ஆஃப்லைன் தளம்' என அழைக்கிறது. மை ஜியோ மொபைல் அப்ளிகேஷனுடன் இதனை இணைக்கவிருக்கிறது. இதன் மூலம் ஜியோ ப்ரைம் வாடிக்கையாளர்கள் சாதாரண கடைக்காரர்களிடம் வாங்கும் பொருட்களின் விலையில் சலுகைகள் கிடைக்கும். அதோடு தள்ளுபடி விலை, கேஷ்பேக் எனப் பல பலாபலன்கள் கிடைக்கும் என ஆசை காட்டத் தொடங்கியுள்ளது.

சிறு மளிகைக் கடைகள், காய்கறி மற்றும் பழக்கடைகள் ஜியோ ப்ரைம் மூலம் கிரானா ஸ்டோரில் இணைய வேண்டும். இதன் மூலம் ப்ரைம் வாடிக்கையாளர்கள் அனைவரும் அந்த கடைக்காரர்களின் வாடிக்கையாளர்களாகும் வாய்ப்பு ஏற்படுத்தித் தரப்படுகிறது என்று கூறுகிறது. ஆனாலும், மறைமுகமாக அவர்கள் அம்பானி நிறுவன வாடிக்கையாளர்களாகவே ஆகிறார்கள்.

இது மட்டுமின்றி சரக்கு மேலாண்மை, ஜிஎஸ்டி மென்பொருள் போன்றவையும் கடைக்காரர்களுக்கு ஜியோ

மூலம் வழங்கப்படும் எனவும் இது கடைக்காரர்கள் தங்கள் மூலதனத்தை சிறப்பாக நிர்வகிக்க உதவியாக இருக்கும் எனவும் சொல்கிறார்கள்.

ஏற்கெனவே கடந்த 2016 டிசம்பர் 1ஆம் தேதி முகேஷ் அம்பானி, ரிலையன்ஸ் சார்பாக 'ஜியோ மணி' என்ற மின் பரிவர்த்தனை சேவையைத் தொடங்குவதாக அறிவித்தார். நாடெங்கும் உள்ள சுமார் ஒரு கோடி சிறு வணிகர்களை ஜியோ மணி வலைப் பின்னலுக்குள் கொண்டு வரப்படவுள்ளதாக தனது அறிவிப்பில் அவர் தெரிவித்தார்.

சில்லறை வர்த்தகத்துக்கான செயற்சூழல் ஒன்றை உருவாக்குவதே தங்களது லட்சியம் என வும் அறிவித்தார். அதாவது பொருள் - பண பரிவர்த்தனை நடக்க வாடிக்கையாளர்களுக்கும் வர்த்தகர்களுக்கும் தேவையான அனைத்தையும் உள்ளடக்கிய ஒரு மின்வெளியை (டிஜிட்டல் ஸ்பேஸ்) உருவாக்குவதன் மூலம் நுகர்வோருக்குத் தேவைப்படும் பொருள் அவர் வசிக்கும் இடத்தைச் சுற்றி எங்கே கிடைக்கும், என்னென்ன விலைகளில் கிடைக்கும் என்பதில் தொடங்கி,




அந்தப் பொருட்களோடு தொடர்புடைய பிற பொருட்களை வாங்குவது குறித்துமான சகல விவரங்களும் செல்பேசியில் செயல்படும் ரிலையன்சின் செயலியே வழிகாட்டும். அந்தப் பொருள் வாங்குவதற்கான பணப்பரிவர்த்தனை ரிலையன்சின் மற்றொரு செயலியின் மூலம் நடக்கும்.

இதன்மூலம் சில்லறை விற்பனை சங்கிலியை முழுமையாக கட்டுப்படுத்த அப்போதே வேலையை ஜியோ தொடங்கிவிட்டது. சில்லறை வர்த்தகம் இயங்கும் முறை மற்றும் மக்களின் வாங்கும் போக்கு போன்ற விவரங்கள் அனைத்தும் ரிலையன்சிடம் இருக்கும். இதன் மூலம் சில்லறை வணிகத்தை முழுவதுமாக அறிந்து இப்போது ஜியோ நிறுவனம் செயலில் இறங்கியுள்ளது.


இந்திய அளவில் சில்லரை வியாபாரிகளின் நிலை இப்படி

இருக்க, தமிழ்நாட்டுக்கேயான பல்வேறு சில்லறை வணிக சிக்கல்களும் தற்சமயம் அதிகம் உருவாகியிருக்கின்றன. சென்னை, கோயம்புத்தூர் போன்ற பெருநகரங்களில் மட்டுமல்லாமல், தமிழ்நாட்டில் குக்கிராமங்களில் கூட, செட்டியார்கள், நாடார்கள் உள்ளிட்ட தமிழ் குலத்தார் நடத்தும் மளிகை ஹார்டுவேர் ஸ்டோர் உள்ளிட்ட வியாபாரம் பலவற்றில் தற்போது வட இந்தியர்கள் இறங்கி விட்டனர். இதனால் தொழில் வாய்ப்பை நம் மாநிலத்தவர்கள் இழக்க தொடங்கிவிட்டனர்.

ஏற்கனவே நாம் இழந்து விட்ட மொத்த விற்பனை வாய்ப்பை போலவே, சில்லரை விற்பனை வாய்ப்பும் பெருமளவு அவர்கள் கைக்குப் போகும் நிலை ஏற்பட்டுள்ளது.

கொரோனா காலகட்டத்தில் மூடிய கடைகளுக்கு வாடகை, ஊழியர்களுக்கு குறைந்த பட்ச ஊதியம் என மளிகை கடைக்காரர்கள் கஷ்டப்பட்ட சூழலில் 30% கடைக்காரர்கள் கடைகளை மூடிவிடுவார்கள் என்ற பேச்சு அடிபட்டது. இந்த சூழலில் வட மாநிலத்தவர்கள் அந்த கடைகளை எடுத்து நடத்த அதிக வாய்ப்பு ஏற்படுகிறது.

ஏற்கனவே தமிழ்நாட்டின் மொத்த வணிகம்




பெரும்பாலும் வட இந்தியர்கள் வசம் போய்விட்டது. மளிகை கடைகள், பெட்டிக்கடைகள் மட்டுமே இப்பொது தமிழர்களின் கைவசம் இருக்கிறது. அவையும் கைவிட்டு போய்விட்டால் தமிழர்கள் வாழ வழியற்றவர்களாக மாறக்கூடும் என்று பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்.

அரசு அந்நிய நேரடி முதலீட்டு விவகாரத்திலும், சில்லறை விற்பனை விதிமுறைகளிலும் அக்கறை கொண்டு புதிய கட்டுப்பாடுகளை கொண்டுவந்தால் ஒழிய இந்த அவலம் மாறப்போவதில்லை.

அதோடு நம்மவர்களும், நம் தொழில் கைவிட்டு போகும் அபாயத்தை அறிந்து விழிப்புணர்வு அடைய வேண்டும் என்பதே தற்போதைய அவசர அவசிய கடமையாக இருக்கிறது.

**-பரிதி பாலன்**

# சிக்கலில் தனுஷ் பட நடிகை



தனுஷ் நடித்த ராஞ்சனா, மாதவன் நடித்த தானு வெட்ஸ் மானு போன்ற பல இந்தி படங்களில் நடித்தவர் நடிகை ஸ்வாரா பாஸ்கர். மனதில் பட்டதை வெளிப்படையாகப் பேசி சிக்கலில் மாட்டிக் கொள்ளும் இவர் தற்போது 'வீர் தே வெட்டிங்' படத்தில் நடித்த பலான காட்சிக்கு பலத்த எதிர்ப்பு உருவாகியுள்ளது. சோஷியல் மீடியாவில் பிஸியாக இருக்கும் ஸ்வாரா, ட்ரோல்களை எதிர்கொள்ள முடியாமல் திணறி வருகிறார்.

இது பற்றிய பேசிய அவர், ''சைபர் செக்ஸ் வம்முறை இப்போ ரொம்ப அதிகமாயிடுச்சு. சோஷியல் மீடியா நெட்டின்சன்களுக்கு ரெஸ்டாரண்ட் போல மாறிடுச்சு. இந்த மாதிரி மோசமான பேச்சை, மிரட்டல்களை எதிர்கொண்டு தான் ஆகணும். அதே சமயம், எனக்கு மூடு சரியில்லன்னா லெப்ட் அன்ட் ரைட் வாங்கி விட்டுடுவேன்'' என்கிறார்.

# ஸ்ரீதேவியின் 2-வது வாரிசு என்ட்ரி



மூத்த மகள் ஜான்வியின் முதல் படமான தடக் சூட்டிங்கின் போது உறுதுணையாக இருந்த ஸ்ரீதேவி, மகள் நடித்த படத்தைப் பார்க்காமலேயே இறந்து விட்டார்.

தற்போது ஸ்ரீதேவியின் 2வது மகளான குஷி கபூரும் சினிமாவில் என்ட்ரி கொடுத்துள்ளார்.

உலகப் புகழ் பெற்ற காமிக்சை மையமாக வைத்து இந்தியில் சோயா அக்தர் இயக்கும் வெப் சீரிஸில் குஷி கபூர் நடித்துள்ளார். இந்நிலையில் தன் அக்கா ஜான்வி கபூரையே மிஞ்சும் அளவுக்கு படுகவர்ச்சியான புகைப்படங்களை வெளியிட்டு சோஷியல் மீடியாவை தெறிக்க விட்டுள்ளார்.

தேவியின் கண்மணி
மலர்-33 vol- 33 மணி-33 Issue - 33

Published by R.Kannan Adityan on behalf of Murasu Publications from No.246, Anna Salai, Thousand Light Chennai-6 and Printed by R.Kannan Adityan at Deviyin Kanmani Achagam, 246, Anna Salai, Thousand Light, Chennai-6 Editor:R.Kannan Adityan


மாலை
முரசு
செய்திகள்
மாலைமுரசு
தொலைக்காட்சியில்
திங்கள் முதல் சனி வரை
காலை 8 மணிக்கு
கதிரவன்
புதிய-விடியல்
திணம் ஒரு திருக்குறள்
நலம் தரும் யோகா
தன்னம்பிக்கை தளம்
கதிர் வீச்சு
ஸ்டாக் மார்க்கெட் நிலவரம்
தங்கம் வெள்ளி நிலவரம்
வானிலை அறிக்கை
நாள் நல்ல நாள்
காணத்தவறாதீர்கள்!

Deviyin KANMANI-Tamil Weekly 15-09-2021 Registered With Registrar of News papers for India
Under No.49510/89 published every Wednesday of every Week.

